
எஸ்.எஸ்.தென்னரசு
எழுதிய
ஐந்தருவி
T
3542



3542

# ஐந்தருவி

3542

எஸ். எஸ். தென்னரசு

T003542
Sarasvati Mahal Library. Thanjavur

14, உஸ்மான் ரோடு, — சென்னை-17.

வெளியீடு: 49
முதற் பதிப்பு: பிப்ரவரி, 1970
உரிமை பெற்றது (c)
பதிப்பாசிரியர்: ச. சொக்கலிங்கம்

விலை ரூ. 10-00

AINTHARUVI
By : S. S. THENNARASU
Published by: Ilango Pathipagam, Madras-17.
Printed at: Maruthy Press, Madras-14.
Price: Rs. 10-00

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14.

3542

# குற்றாலம் செல்லும்......

இந்தத் தொகுப்பில் ஐந்து குறுநாவல்கள் அடங்கியுள்ளன. நடந்த கதைகளைச் சுவைபட எழுதவேண்டும் என்ற எனது கொள்கைப்படி எழுதப்பட்ட நாவல்தான் 'ஐந்தருவி' என்ற இந்தத் தொகுப்பு நூல்.

குற்றாலத்தில் இருக்கும் ஐந்தருவிக்குத் தனிச் சிறப்பு உண்டு. மருத்துவச் சிறப்புள்ள பச்சிலைகளைத் தழுவி அந்த மணத்துடன் தரையில் விழுகிறது. செல்வந்தர்களுக்கும், ஏழைகளுக்கும் பாகுபாடில்லாமல் சுகத்தையும், உணர்ச்சியையும் அது கொடுக்கிறது. அதைப்போல்தான் இந்த 'ஐந்தருவி'யும். கற்பனையைவிட நடந்ததைப் படிப்பதில் உணர்ச்சியும், இன்பமும் அதிகம் கிடைக்கும் எல்லோருக்கும் கிடைக்கும்; பட்டம் பெற்றவர்கள், கொஞ்சம் படித்தவர்கள் அனைவருக்குமே உண்மை நிகழ்ச்சிகளைத் தெரிந்து கொள்ள ஆவல் அதிகம் ஏற்படும். அதனால்தான் இந்த நூலுக்கு 'ஐந்தருவி' என்று பெயர் சூட்டினேன். குற்றாலம் சென்றவர்களும் படிக்கலாம், அங்கு போகாதவர்களும் படிக்கலாம்.

எழுத்துப்பணியை முதுமைப் பருவத்தில் தொடரலாம் என்றிருந்த என்னை எனது நண்பர் தேவகோட்டை திரு. ச. சொக்கலிங்கம் அவர்கள் மாற்றி, இப்போதே அந்த எழுத்துப் பணிக்கு ஆக்கம் தேட வைத்திருக்கிறார்கள். அவரது முயற்சியால் இத் தொகுப்பு வெளிவருகிறது.

நான், எழுத்துலகில் விட்ட இடத்தைப் பிடித்து மீண்டும் எழுத்தாளனாவதற்கு திரு. சொக்கலிங்கம் அவர்களின் முயற்சி எனக்குப் பயன்படும் என்று நினைக்கிறேன். அவருக்கு என் நன்றி!

அன்புள்ள,

தென்னரசு

# இந்நூல்பற்றி . . .

ஐந்து கதைகளைச் சேர்த்துப் புத்தகமாக்கும்போது 'ஐந்தருவி' என்றே பெயர் வைக்கலாம்'' என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஒருநாள் தென்னரசு அவர்களிடம் கூறிய சொல்லே இப்புத்தகத்திற்குத் தலைப்பாக அமைந்தது.

நண்பர் தென்னரசு அவர்கள் எழுதிய இந்நூலில் ஐந்து நீண்ட கதைகள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் உயர்ந்து நிற்பன.

கதைகள் அத்தனையுமே குறிப்பிட்ட— நடந்த — நிகழ்ச்சிகளின் அடிப்படையில் எழுந்தவை.

நடந்த சம்பவங்களை வைத்துக் கொண்டு சலிப்பின்றி கதை எழுதி வெற்றி பெற்றுள்ளார் தென்னரசு. அவருக்கு என் நன்றி!

நண்பர்கள் படித்துப் பயன்பெற வேண்டுகிறேன்.

ச. சொக்கலிங்கம்

# இந்தக் கதை

மதுரை சிறையில் உருவாகி திருச்சி சிறைச்சாலையிலே முடிந்தது.

முடிந்த கதை, திருச்சி சிறையில் 37-வது அறைக்குச் சென்றது. அந்த அறையில்தான் கலைஞர் மு. க. இருந்தார். இரண்டு நாட்கள் கழித்து அவர் இந்தக் கதையைத் தரும்போது "இந்தக் கதை இப்போது எழுதியிருப்பது போல் இரண்டு மடங்கு விரித்து எழுதினால், கதை சுவையாக இருக்கும்" என்று சொன்னார். பேராசிரியர் அன்பழகன் அவர்களும் அதே கருத்தை வலியுறுத்தினார். நான், கதையைத் திரும்ப விரித்து எழுதி முடிப்பதற்கும், சர்க்கார் எங்களைத் திடீரென்று விடுதலை செய்வதற்கும் சரியாக இருந்தது. விடுதலையாகும் பொழுது சிறை அதிகாரிகளால் எடுத்துக் கொள்ளப்பட்ட இக்கதை திரும்ப எனக்குக் கிடைக்கவே இல்லை.

அந்தக் கதையை மீண்டும் எழுதத் தூண்டினார் தினகரன். தோழர் தினகரன் ஆண்டில் இளைஞர், உறுதியான லட்சியவாதி. அவரது வேண்டுகோளுக்கிணங்கி மூன்றும் முறையாக எழுதப்பட்ட இக்கதை, தினகரனின் கிழமை இதழான 'தென்னகத் தலைவனில்' வெளி வந்தது.

படிப்பவர், சுவையும் பயனும் பெறுவர் என நம்புகிறேன்.

14-12-62 எஸ் எஸ். தென்னரசு

# வைராக்கியம்

## 1. குண்டு பாய்ந்தது

நெடுஞ் சாலையிலிருந்து பிரிந்து செல்லும் அந்த ஒற்றையடிப் பாதை, மூன்று கல் தொலைவு கடந்து ஒரு பழங்காலத்துக் கெட்டி மச்சு வீட்டின் முகப்பைத் தொட்டது. அந்தப் பெரிய வீட்டுக்கும், அந்த வீடு இணைந்திருந்த குக்கிராமத்திற்கும் கூப்பிடு தூரம். கண்டதேவி என்பது அந்தச் சிற்றூரின் பெயர்.

கண்டதேவியில் பெரிய வீடுகள் பல இருந்தன. அத்தனையும் பொலிவிழந்திருந்தன. வாழ்ந்து முடிந்த மூதாட்டிகளைப் போல் அந்த வீடுகளின் சுவர்கள் வெடிப்புகள் விழுந்து காணப்பட்டன. ஆனால், நெடுஞ் சாலையிலிருந்து விலகிச் செல்லும் அந்த ஒற்றையடிப் பாதை தொடும் பெரிய வீடு மட்டும் மராமத்துப் பார்க்கப்பட்டு, பார்ப்பதற்குக் குளிர்ச்சியாக இருந்தது. அந்த வீட்டு முகப்பில் 'சிங்கராயர்' என்று எழுதி யிருந்தது, பளிச்சென்று நன்றாகத் தெரிந்தது. பழைய வீட்டுக்குப் புதிதாக வண்ணம் பூசியிருக்க வேண்டும்.

முகப்பு வாசலில் இரண்டு வேப்பங் கன்றுகள்; அப்போதுதான் அவை இரண்டும் கிளை பிரிந்திருந்தன. அவைகளை வைத்து ஆறுமாதங்களுக்கு மேலிராது. வீட்டு வாசலில் மோட்டார் சக்கரங்களின் தடங்கள் இழையோடிக் காணப்பட்டன. அடிக்கடி அந்த வீட்டுக்குக் கார்கள் வந்து போய்க் கொண்டு இருந்திருக்க வேண்டும். வீட்டுக்குக் கொஞ்சம் தள்ளி நெடிதுயர்ந்த மதில்களையுடைய அம்மன் கோயிலுக்கு எதிரே இருந்த ஒரு பாழடைந்த மண்டபத்தில் போலீஸ் ஸ்டேசன் வைக்கப்பட்டிருந்தது. துப்பாக்கியைத் தரையில் நிறுத்திய வண்ணம் ஒரு போலீஸ்காரன் மண்டபத்து வாசலில் நின்று கொண்டிருந்தான். அவன் நிற்பதைப் பார்த்தால் எதையோ ரகசியமாகக் கண்காணித்துக் கொண்டிருப்பதுபோல் தோன்றியது.

பௌர்ணமி நாள் அது; மாலை வேளை. கீழ்ப்பால் நிலவு எழுந்தது. எதிர்த்து மேல் திசையில் நின்ற கதிரவன் மலைவாயிற் சென்றுவிட்டான். அப்போது பழையகாலத்து மோட்டார் ஒன்று சிங்கராயர் வீட்டு வாசலில் வந்து நின்றது. அரைக்கால் சட்டைபோட்ட வாலிபனொருவன் கம்பீரமாகக் காரை விட்டு இறங்கி வீட்டுக்குள் சென்றான். அவன் நடை மிடுக்கும், உடை ஒயிலும் அவன்தான் அந்த வீட்டுககுச் சொந்தக்காரனை சிங்கராயன் என்பதைக் கோடிட்டுக் காண்பித்தது. சிங்கராயனின் காலடிச் சத்தம் கேட்டதும் பணியாள் ஒருவன் ஓடிவந்து கதவைத் திறந்துவிட்டு அடக்கத்துடன் நின்றான்.

"என்னடா இன்று சாப்பாடு?"—வேட்டைக்குப் போய் களைத்து வந்தவனைப் போல் அதிகாரத்துடன் கேட்டான் சிங்கராயன்.

"சீரகச்சம்பா சோறு, புளிக்குழம்பு, வரால் இறைச்சி, வள்ளைக் கீரை மசியல்" என்று வேலையாள் பதில் சொன்னான்.

"சரி பரிமாறு!"...என்று சொல்லிவிட்டு சிங்க ராயன் குறிச்சியில் சாய்ந்தபடி பக்கத்திலிருந்த பத் திரிகை யொன்றைப் புரட்டிப் படித்தான். அவனுக்கு மனம் 'திக்' என்றது. செய்தியைத் திரும்பக் கூர்ந்து படித்தான்.

"பிரபல வழிப்பறிக் கொள்ளைக்காரனும், பல போலீஸ் அதிகாரிகளை அவமானப்படுத் தியவனும், காடுகளில் மரங்களை வெட்டி அழித்தவனுமான 'மரம் வெட்டி' என்ற மானகிரியைச் சுட்டுப் பிடிக்க சர்க்கார் உத்தர விட்டிருக்கிறது. அவனை உயிருடனே, சுட்டுக் கொன்றோ சர்க்காரிடம் ஒப்படைப்பவர்க ளுக்கு ரொக்கப் பரிசும், சர்க்காரின் நற்சாட் சிப் பத்திரமும் கொடுக்கப்படும்"

—இதைப் பார்த்ததும் சிங்கராயனுக்குக் கண் பஞ்சடைந்து விட்டது.

மானகிரி சிறு பிள்ளையிலிருந்தே எனக்கு நெருங் கிய நண்பன். நன்றாகப் படித்தவன். பள்ளிப் பரு வத்தில் மானகிரியிடம் காணப்பட்ட நடவடிக்கைகள் அவனொரு சிறந்த அரசியல்வாதியாக வருவான். சக்தி பெற்ற மேடைச் சொற்பொழிவாளனாகப் பெயர் பெறுவான் என்று பலரை கணக்குப்போட வைத்தன. ஆசிரியர்களெல்லாம் அவன்மீது அளவு கடந்த அன் பைச் சொரிந்தார்கள். குளித்து திருநீறு பூசாமல் பள்ளிக்கு வரமாட்டான். ஆனால், காலம் அவனைப்

பயங்கரக் கொள்ளைக்காரனுக்கிவிட்டது.—சிங்கராயன் ஒரு கணம் இப்படி எண்ணிப் பார்த்தான்.

சாப்பாடு வைக்கச் சொன்னதையும் மறந்து சிங்கராயன், தன் நண்பன் மானகிரியைப் பற்றிய சிந்தனையில் திளைத்து விட்டான்.

"இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒருமுறை நான் அவனைக் காளையார் கோயில் தெப்பத் திருவிழாவில் பார்த்தேன். அவன் நரிக்குறவன் வேடத்தில் திரு விழாவுக்கு வந்திருந்தான். அப்பொழுதே அவனைத் தேடி போலீஸ் வலைவிரித்துக் கொண்டிருந்தது. அவனைப் பெற்ற தாயாரும், கூடப்பிறந்த தங்கை செவந்தி மாலையும் ஒளிந்து மறைந்து கொண்டே அவனோடு பேசவேண்டியிருந்தது. போலீஸ் கெடுபிடி அப்படி! நான்கூட அவனைப் பார்க்கவில்லை. அவனாக என்னைக் கூப்பிட்டான். இருவருக்கும் மனம் கசிந்து விட்டது. 'மானகிரி, உனக்கு ஏன் இப்படி மனம் கெட்டுவிட்டது? உனக்கும் போலீசுக்கும் என்ன பகை?' என்று கேட்டேன். அவன் சிரித்தான்; அந்தச் சிரிப்பில் பழி வாங்கும் சக்தி இருந்தது. சபதம் வீரிட்டது, 'சிங்கராயா, மனிதனுக்குக் கோபம் வராதா? அது இயல்பு. அந்தக் கோபத்தை ஒருமுறையாவது மன்னிக்கக் கூடாதா? அந்த எண்ணம் போலீஸ் இலாகாவுக்கு அறவே இல்லை. கோபத்தால் விளைபவைதான் கொடிய குற்றங்கள் என்று அறிந்தும், குற்றங்கள் மலிவதற்குத் தான் அந்த இலாகா நாள்தோறும் விதை தூவுகிறது. என் தங்கச்சி செவந்திமாலையை ஒரு துடுக்குக்காரன் அடிக்கடி குளத்தங்கரையில் கேலி செய்து வந்திருக்கிறன். நான் அவனை இரண்டுமுறை கண்டித்துப் பார்த்தேன். அவன் கேட்கவில்லை. அவன் மனத்தில்

ஏதோ தவருன ஆசை பூத்திருக்கிறது. ஒரு நாள் என் தாயாரும், செவந்தியும் நாடகம் பார்த்துவிட்டுத் திரும்பும்போது, அதே துடுக்குக்காரன் நையாண்டி செய்திருக்கிருன். நான் அவனை மறுநாளே நேரில் கண்டு எச்சரித்தேன். அவன் பணிந்து போவதாகத் தெரியவில்லை. 'உன் தங்கை என்ன அந்தப்புரமா?' என்று கேட்டுவிட்டான். எனக்கு கோபம் வந்து விட்டது. வராதா? தங்கையென்று ஒருத்தி யிருந் தால், அண்ணன் அடிக்கடிகோபக்காரனுகத்தான் மாறு வான். அந்தக் கோபம் கூடாததாகக்கூட இருக்கலாம். அது வேறு பிரச்னை. இடுப்பில் பேனுக்கத்தி யிருந்தது. அவ்வளவுதான். அவனுடைய மூக்கை அறுத்து விட் டேன். இது பழைய கதை! இதற்கு நான் தண்டனையும் அனுபவித்து விட்டேன். அதற்கப்புறம் நான் சிறையி லிருந்து வெளி வந்ததிலிருந்து நமது வட்டாரத்தில் எந்த வழக்கானுலும், எந்தத் திருட்டானுலும் போலீஸ் இலாகா தவருமல் என்னை ஈடுபடுத்திவந்தது. நானும் மனிதன்தானே! எனக்கு உணர்ச்சி யிருக் காதா? மானம் இருக்காதா? அதற்குப் பிறகுதான் தனித்து சிக்கும் சப்இன்ஸ்பெக்டர்களையெல்லாம் என்னைக் குதிரை தூக்கவைத்தேன்: அவர்களது உடுப்பு களை கழற்றி என் காலடியிலே போட்டுவிட்டு, எனக்கு 'சலாம்' போடச் செய்தேன். கோயில் கொள்ளை வழக்கிலிருந்து கொப்பனுபட்டி சுப்ரமணிய செட்டி யாரின் தோட்டத்தை அழித்த வழக்குவரை என்னைத் தான் முதல் எதிரியாகப் புனைந்து போலீஸார் வழக்குப் போட்டார்கள். அதற்குப் பிறகு நான் என்ன செய் வது? கொள்ளைக்காரனுகித்தானே தீரவேண்டும். உல கத்தில் எனக்கு என்ன வேலை இருக்கிறது? நீயே சொல்லு! பெரிய பெரிய வீடுகளிலெல்லாம் கொள்ளை

அடித்தேன். எனக்கு என்று வீடு கட்டிக்கொண்டேனா? என் தங்கச்சிக்கு வைர மூக்குத்தி, செய்து கொடுத்திருக்கிறேனா? வரிகட்ட முடியாமல் மாடு, மனைகளை ஈடுகொடுக்கும் ஏழைகளின் இல்லங்களில் தூவினேன். இல்லாவிட்டால் ஏழைகளின் மத்தியில் 'மானகிரி வள்ளல்!' என்ற பட்டம் கிடைத்திருக்குமா? நீ கெட்டிக்காரன் திடீர்ப் பணக்காரனாகிவிட்டாய். உன்னைப் போல் புத்திசாலித்தனமாக திட்டமிட்டுக் கொள்ளையடிக்க எனக்குத் தெரியவில்லை. செட்டி நாட்டுக் கோயில்களில் உள்ள ஒரு தங்கக் கலசத்தைக்கூட விட்டு வைக்கவில்லையாமே? அவ்வளவு தங்கத்தையும் என்ன செய்தாய்? நீ கார் வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டேன், எனக்கு மெத்த சந்தோஷம்! நீயாவது சந்தோஷமாய் இரு! ஆனால் ஒன்று! எந்தப் போலீஸ் அதிகாரியையும் நம்பிவிடாதே நீ; அவர்களுக்கு உபகாரம் செய்வாய்? அவர்கள் உனக்கு உலை வைத்துவிடுவார்கள். எச்சரிக்கையாகப் பிழைத்துக் கொள். கொள்ளையடித்தது போதுமென்று நீ இருந்துவிட்டால் கூட என்னைப் பொறுத்தவரை உத்தமன்தான்! இன்னும் சொன்னால் கௌரவமாகக் கூட இருக்கும். நான் அப்படியல்ல; என் மனம் கெட்டு விட்டது. என் வாழ்க்கை முறிந்த பாலமாகிவிட்டது. இதோ எனது உயிர். என் முன்னால் நிற்கும் என் தங்கைக்கும் என் அன்னைக்குமாகத்தான் தொடுக்கிக் கொண்டிருக்கிறது"— சிங்கராயன் சிலையாகச் சமைந்து விட்டான்.

இரவு மணி பத்துக்கு மேலாகிவிட்டது. உணவுக்குப் பின் சிங்கராயன் கைக்கெடிகாரத்தை எடுத்து மேஜைமேல் வைத்துக் கொண்டு வடக்கு முகமாக உட்கார்ந்திருந்தான். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு நெடுந்தூரத்தில் ஒரு மோட்டார் உருவம் தெரிந்தது.

சிறுகச் சிறுக அந்த மோட்டார் விளக்குப் பெரிதாகிக் கொண்டே வந்து திடீரென்று அணைந்து விட்டது.

சிங்கராயன் வீட்டுக்குள் ஓடி கைத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு கார் விளக்குத் தெரிந்த திசை நோக்கி நடந்தான். சற்று தூரம் சென்றதும் எதிரே ஒருவன் கை விளக்கோடு ஓடிவந்தான். சிங்கராயன் அவனை நிறுத்தினான்.

"பஞ்சுப் புலி!"

"யாரது சிங்கராயரா? குடி கெட்டுவிட்டது. கோயில் சேவகன் பார்த்து விட்டான்."

"விவரமாகச் சொல்! என்ன நடந்தது?"

"திட்டப்படி பித்தளை நகைகளை வைத்துவிட்டு, தங்க நகைகளை மாற்றும்போது, இரண்டு பெரிய பெருச்சாளிகள் சண்டையிட்டுக் கொண்டு ஓடி வந்து கோயில் மணிக் கதவுகளில் மோதிவிட்டன. அவ்வளவு தான். அத்தனை மணிகளும் கணகணத்துக் கத்தி விட்டன. சேவகர்கள் விழித்துக் கொண்டார்கள். நாங்கள் தப்பித்தது பெரும்பாடாகிவிட்டது. சேவகர் நமது மோட்டாரை அடையாளம் கண்டிருப்பார் களோ என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. அதற்காகத்தான் நமது காரை பாதையை விட்டுக் கீழே இறக்கி நிறுத்திவிட்டு வந்திருக்கிறேன். ஒரு வேளை அவர்கள் நம்மைப் பின் தொடரலாம் அல்லது நாளை நமது ஊர் போலீஸ் ஸ்டேஷனுக்குத் தகவல் கொடுக்கலாம். இந்தத் தொல்லைக்குப் பயந்துதான் நான் அடிக்கடி என் தலையில் அடித்துக் கொள்கிறேன், நீங்கள் எப்படியாவது நம் ஊர் சப்இன்ஸ்பெக்டர் தங்கப்பாண்டியனை நயந்து வைத்துக் கொள்ள

வேண்டுமென்று; அவர் தயவிருந்தால் நமக்கு அச்சமே இல்லை.''—என்று அடுக்கிக் கொண்டே போனான் பஞ்சுப்புலி.

இருவரும் பேசிக்கொண்டே வீட்டுக்குப் போனார் கள்! இரவு படுக்கை கொள்ளவில்லை சிங்கராயனுக்கு! துப்பாக்கி ரவைகளை கிடுக்கி வைத்தபடியே படுக்கை யில் சாய்ந்தான். அவனுக்கு அது பழகிப்போன காரியம், தொழிலே அதுதானே!

கை கொட்டிச் சிரிக்கும் பள்ளிச் சிறுவர்களுக்கு மத்தியில் சிக்கித் தவிக்கும் பைத்தியக்காரனைப் போல், வானத்தில் நட்சத்திரங்கள் மத்தியில் நிராதரவாக நின்று தவித்துக் கொண்டிருக்கிறது நிலவு. அதன் குளுமையை அனுபவிக்கத் தரையில் யாருமில்லை. கானகத்தில் உதிர்ந்த முல்லைப் பூக்களைப்போல் நிலவின் குளுமை நாதியற்றுச் சிந்திக் கொண்டிருந்தது.

இரவின் எழில் மறைந்து விட்டது. பனிப் புன் னகை திரள் திரளாகப் படையெடுக்கும் நேரம் வந்து விட்டது. காட்டிலே அலைந்து விட்டு, வீட்டுத் தோட் டத்திலே களைப்பாறும் மானின் ஈர மயிரைப் போல் செடி, கொடிகள் நனைந்துவிட்டன. அதற்கும் கொஞ்ச நேரத்திற்குப் பிறகு கோயில் நந்தவனத்தில் ஒரு ஆள் அரவம் தென்பட்டது. அது ஆளல்ல! ஒரு பெண் மெள்ள மெள்ள நந்தவனத்து மண்சுவரைத் தாண்டிக் கொண்டு சிங்கராயன் வீடு நோக்கி வந்து கொண் டிருந்தாள். அந்தப் பெண் தாழம்பூ வைத்திருந்தாள். 'கம்'மென்று அது மணம் வீசிக் கொண்டிருந்தது. அவள்—அந்தப் பெண் நேராக சிங்கராயர் வீட்டுக் கொல்லைச் சுவரில் எறினாள். எப்படி உள்ளே இறங் கினாள் என்றே தெரியவில்லை. அவ்வளவு சீக்கிரத்தில்

அவள் உள்ளே குதித்து விட்டாள். வாசலிலே படுத்திருந்த பஞ்சுப்புலி மட்டும் விழித்துக் கொண்டான். அவன் காதுகள் பாம்பின் காதுகள். ஊசி விழுந்தாலும் விழித்துக் கொள்வான். அந்தப் பெண் வீட்டிற்குள் இறங்கி உள் முற்றத்திற்குள் வருவதற்குள்ளாகப் பஞ்சுப்புலி மெதுவாகப் போய் சிங்கராயரை எழுப்பிவிட்டான். போலீஸ் படை வருவது போலவும் தன்னைக் கைது செய்வது போலவும் கனவு கண்டு கொண்டிருந்த சிங்கராயன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான். பஞ்சுப்புலி செய்தியை விவரித்தான். சிங்கராயன் கைத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு நீலப் போர்வையால் முக்காடிட்ட வண்ணம் கதவோரத்தில் ஒளிந்து நின்றான். உருவம் சரியாகப் புலப்படவில்லை சிங்கராயனுக்கு. ஆனால் அந்த உருவத்தின் கையில் துப்பாக்கிபோல் ஓர் ஆயுதமிருந்ததை மட்டும் சிங்கராயன் கண்டு கொண்டான்.

ஆயுதம் தாங்கிய இருவர் மோதும்போது முந்திக் கொண்டவன்தான் தப்ப முடியும் என்று அவன் எண்ணினான். ஆகவே ஜன்னல் இடைவெளியில் குறி வைத்து எதிர்நோக்கி இருந்தான் சிங்கராயன். அந்த உருவம் சுவர் ஓரமாக அவன் படுத்திருந்த பகுதிப் பக்கம் தவழ்ந்து வந்து கொண்டிருந்தது. சிங்கராயன் முதலில் சுட்டுவிட்டான். "டுமீல், டுமீல்" என்று ஒலி கிளம்பியது. வீடு அதிர்ந்தது. அதன் எதிரொலி ஊரையே ஆட்டிவிட்டது. பஞ்சுப்புலியும் இன்னொரு பணியாளும் வேகமாகச் சென்று பிணத்தை ரத்த வெள்ளத்திலிருந்து தூக்கப் போனார்கள். அப்போது தான் அவர்கள் திகிலடைந்தார்கள்.

"சிங்கராயரே!"

"என்னடா?"

"நீங்கள் சுட்ட புலி, பெண் புலி."

"பெண்ணு!" என்று ஆச்சரியத்துடன் ஓடிவந்து பார்த்தான். அந்தப் பெண்ணுக்கு வெங்காயச் செடியின் தூறுபோல் கொத்து கொத்தாக மீசைகள் இருந்தன. விளக்கை ஏற்றிப் பார்த்தான். அவன் உடல் நடுங்கியது; பெருமூச்சு விட்டான். பெண் வேடம் தாங்கி வந்த தனது ஆருயிர் நண்பனை மானகிரியைத் தான் சிங்கராயன் சுட்டுவிட்டான். பணக்கார வீட்டுப் பெட்டகங்களில் பள்ளி கொண்டிருந்த வெள்ளி தோட்டாக்களை ஏழைகளுக்கு வழங்கிய வள்ளலை சிங்கராயனின் தோட்டா சவமாக்கி விட்டது. மானகிரி, அவன் இடுப்பில் சொருகியிருந்த கடிதத்தைக் கூட சிங்கராயன் முதலில் பார்க்கவில்லை. அவனது பணியாள் பஞ்சுப்புலி எடுத்துக் காண்பிக்கும்வரை அவன் பார்க்கவில்லை.

அன்புள்ள தோழனுக்கு,

என்னைச் சுடுவதற்கு அரசாங்கம் உத்தர விட்டிருப்பதை நீ அறிந்திருப்பாய். எவ்வகையிலும் நான் நிம்மதியாகச் சாவதற்கு மார்க்கமில்லை! எனக்கு இரண்டு ஆசைகள். என் தாய்க்குப் பிடித்த பெண்ணை நான் திருமணம் செய்துகொண்டு பெற்ற மனத்தைக் குளிர வைக்க வேண்டுமென்பது ஒன்று. அது இனி நிறைவேறாது. இன்னொன்று என் தங்கையின் திருமணம். அவள் இளமையில் நொந்து வளர்ந்தவள். குழந்தைப் பருவத்திலிருந்தே செவந்திமீது முழு அன்பை வைத்

திருந்தேன். ஒரே தங்கையல்லவா! ஏற்கனவே அவளுக்கு நான் திருமணத்தை முடித்திருக்க வேண்டும், அதில் தவறிவிட்டேன்.

நண்பா, நீ எனக்காக ஓர் உதவி செய்ய வேண்டும்; எதிர்பாராத வகையில் நான் சுட்டுக் கொல்லப்பட்டால் என் தாயாருக்கு ஆறுதல் கூறி என் தங்கைக்கு எப்படியும் திருமணத்தை முடித்து வைத்துவிட வேண்டும். உன்னுல் செய்யக் கூடிய உதவிதான்! நான் எத்தனேயோ பேருக்கு உதவி செய்திருக்கிறேன். சிரிக்கத் தெரியாதவர்களே யெல்லாம் சிரிக்க வைத்திருக்கிறேன். ஆனுல் என் குடும்பம் அழுது கொண்டிருக்கிறது; ஏதாவது பண உதவி தேவைப்பட்டாலும் அடுத்த முறை கொண்டுவந்து தருகிறேன். நான் உனக்கு எந்த உதவியும் செய்ததில்லே. ஆனுல் நீ எனக்குச் செய்தே தீரவேண்டிய கட்டம் வந்துவிட்டது. மன்னிக்கவும், உன்னிடம் இந்தக் கடிதத்தைத் தந்துவிட்டுப்போக வந்தேன். நீ வெளியூர் போயிருந்தால் என்ன செய்வது என்பதற்காகத்தான் கடிதம் எழுதி வைத்திருக்கிறேன்.

என்னிடம் மூன்று துப்பாக்கிகள் வைத் வைத்திருக்கிறேன். உனக்காக ஒரு துப்பாக்கி கொண்டு வந்திருக்கிறேன், பயன் படுத்திக் கொள். எனது அன்னேயையும், அருமைத் தங்கச்சி செவந்திமாலேயையும் கைவிட்டு விடாதே!

உண்மைத் தோழன்
மானகிரி.

—கடிதத்தைப் படிக்கும் போதே சிங்கராயனுக்குக் குலை நடுங்கியது. உடம்பெல்லாம் வியர்த்து பூத்து விட்டது. கையை நறுக்கிக் கொண்டவனைப் போல் துடித்தான். பஞ்சுப்புலி தாங்கிப் பிடிக்காவிட்டால் சிங்கராயன் மயக்கம் போட்டு விழுந்திருப்பான்!

சிங்கராயனைப் படுக்கையில் போட்டு பஞ்சுப்புலி விசிறிக் கொண்டிருந்தபின், அப்போது அவனுக்கொரு யோசனை தோன்றியது. அந்த யோசனைப்படி சிங்கராயன் செய்தால் உள்ளூர் சப்இன்ஸ்பெக்டரின் அன்பைப் பெறுவதோடு மட்டுமல்லாமல் அந்த வட்டாரத்தில் எதையும் துணிந்து செய்யத் தைரியம் பிறக்கும் என்று பஞ்சுப்புலி தனக்குள்ளே நினைத்துக் கொண்டு, சிங்கராயன் எழுந்தவுடன் அவனிடம் சொன்ஞன். சிங்கராயனுக்குப் பஞ்சுப்புலியின் திட்டம் மிகவும் பிடித்திருந்தது. அந்தத் திட்டத்திஞல் இரண்டு காரியங்கள் சித்தியாகுமென்று சிங்கராயன் தனக்குள்ளேயே எண்ணிக் கொண்டான்.

பொழுது விடிந்தது, இரண்டு பேரும் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போஞர்கள். சப்-இன்ஸ்பெக்டர் தங்கப்பாண்டியன் சிங்கராயனின் பிரவேசத்தைக் கண்டு வியப்படைந்தார்.

"தங்களிடம் கொஞ்சம் தனித்துப் பேச வேண்டும்!"

"என்னிடமா? நான் யாரிடமும் ரகசியம் வைத்துக் கொள்வதில்லை!"

"முக்கியமான தகவல், கேட்டால் குதூகலமடைவீர்கள்!"

"பரவாயில்லை, இங்கேயே சொல்லலாம் யார் இருக்கிறார்கள் தாராளமாகச் சொல்லுங்கள்"—சப் இன்ஸ்பெக்டர் அலட்சியமாகவே பேசினார்.

"இன்ஸ்பெக்டர் சார்! என்னை மன்னிக்கவேண்டும். விபரம் அறிந்தால் ஆச்சரியப்படுவீர்கள். அன்பு கூர்ந்து கொஞ்சம் உள்ளே வாருங்கள், இது உங்கள் முன்னேற்றப் பிரச்சினை" என்று சிங்கராயன் அணைத்துப் பேசினான்.

"என் இலாகாவைப் பொருத்த விஷயமாக இருந்தால் சொல்லுங்கள்; வேறு விஷயம் எனக்குப் பிடிக்காது, எழுந்து வாருங்கள்" என்று வேண்டா வெறுப்பாக எழுந்து தனி அறைக்குப் போனார் சப்இன்ஸ்பெக்டர். அவருடன் சிங்கராயனும் சென்றான். பஞ்சுப்புலி ஸ்டேஷன் முன் வெராந்தாவிலேயே அமர்ந்திருந்தான். அவனுக்குப் பக்கத்தில் ஒரு போலீஸ்காரன் நின்று கொண்டிருந்தான்.

வெளியில் நின்ற போலீஸ்காரன் பஞ்சுப்புலியைப் பார்த்து கண்ணைச் சுழித்தான். பஞ்சுப்புலி புருவத்தை நெறித்தான்.

"உங்கள் சப்இன்ஸ்பெக்டருக்கு சுக்கிரதிசை! பதவி உயரப்போகிறது." என்று ஜாடையாகச் சொல்லிக்கூட வைத்தான் பஞ்சுப்புலி.

இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு சிங்கராயன் வெளியில் வந்தான்.

"படு குழியில் விழுந்த யானைகூட தப்பிவிடலாம்; பேராசையில் சிக்கிய மனிதன் தப்பவே முடியாது!" -பஞ்சுப்புலி தத்துவம் பேசத் தொடங்கினான்.

"என்னடா பஞ்சுப்புலி! காலையிலே கஞ்சா கிடைத்துவிட்டதா?" என்று கிண்டல் செய்தான் சிங்கராயன்.

"ஸ்டேஷனுக்குள் போகும் போது என்ன என்று கூடக் கேட்காத சப்-இன்ஸ்பெக்டர் கொஞ்சநேரத்தில் எப்படி உருகிப் போனுர் பார்த்தீர்களா?" என்ருன் பஞ்சுப்புலி.

அப்போதுதான் பஞ்சுப்புலியின் தத்துவம் சிங்க ராயனுக்குப் புரிந்தது.

## 2. சபதம்

"தங்கப்பாண்டியனும்! பெற்ற வயிறு பற்றி யெறிய கொன்றுவிட்டான் சண்டாளன். சின்னவயதில் சிறைக்குப் போய், சிங்கத்தமிழன் எனப் புகழ் பெற்று என்னைக் கொல்லாமல் கொன்றுவிட்டு போய் விட் டான், என் செல்ல மகன் மானகிரி.

"இப்படி அற்ப சொற்ப வயதில் குடும்பம்-பிள்ளை என்ருல் என்னவென்று அறியாமல் துர்மரணம் ஆவான் என்று நான் நினைக்கவில்லை. குலதெய்வங் களுக்கெல்லாம் காணிக்கை செலுத்தியிருக்கிறேன். என் கையால் லஞ்சம் வாங்காத போலீஸ்காரர்களே இல்லாத அளவுக்கு மொத்தமாகவும் சில்லரையாகவும் கொடுத்து அழுதிருக்கிறேன். இத்தனையும் என் மகன் அச்சமில்லாமல் வீட்டோடு வாழ வழி செய்யவேண்டும் என்பதற்காகச் செய்தேன். என் மகன் வீட்டுச் சோறு சாப்பிட்டு ஆறு வருஷங்களுக்கு மேலாகிவிட்டது. யார் வைத்த தீயோ என் வீட்டைப் பற்றி எரிகிறது! குடி

கெடுத்த தெய்வங்களா! உங்களுக்கு அடுக்குமா? டேய் தங்கப்பாண்டியா! என் குடும்பத்தைப் போல் உன் குடும்பமும் அலைமோதிப் போகாதா? உன்னுடைய பெண்டு பிள்ளைகள் நிம்மதியாகவா சாகப்போகிறீர் கள்! வினை விதைத்தவன் தினை அறுத்ததில்லையடா."— மானகிரியின் கொலைச் செய்தி யறிந்த அவனது தாய் சிலம்பாயி பொறுமி அழுதாள். புழுதியில் புரண்டு புரண்டு கதறினாள். அவள் குடியிருந்த தெருவே வீட்டு முன் திரண்டு ஆறுதல் கூறியது. ஆறுதல் எடுபடக் கூடியதா? வீடு எரிந்தால் சமாதானம் கூறலாம்: திருடு போனால் ஆறுதல் சொல்லலாம். போனால் திரும்பாத ஊருக்கு—ஒரே மகன் போனதற்காக துடிக்கும் மனத்தை ஆற்ற முடியுமா? அந்த வயோதிகத்தாய் தனக்கு ஒரு மருமகள் வருவாள் என்று மனக்கோட்டை கட்டியிருக்கலாம். அவளுக்கொரு பிள்ளை பிறக்கும்; பிறந்தால் பாட்டன் பெயர் வைக்கவேண்டுமென ஆசைப்பட்டிருக்கலாம்.

ஏழை வீட்டில் ஏற்படும் சாவு; வெடிச்சரத்தில் தீ வைப்பது போன்றது. தொடர்ந்து பல ஆசை களுக்கு அது கொள்ளி வைத்துவிடுகிறது. எப்போதோ எடுத்த புகைப்படம்—மானகிரியுடையது. அந்தப் படத்திற்கு ரோஜா மாலை போட்டு விட்டு வாசலில் மாட்டி விட்டாள் சிலம்பாயி. தனக்காக எதையும் தரும் அண்ணன் மீது ஆரூத பற்றுக் கொண்டிருந்த செவந்தி மாலையும் கண்ணீர் சொரிந்தாள். வாய் விட்டுக் கதற அவளுக்கு வயது இடம் தரவில்லை. கன்னிப் பெண்! பதினெட்டு வயது!

சிலம்பாயிக்கு வயது ஐம்பதுக்குமேல் இருக்காது. திடகாத்திரமான உடற்கட்டு! ஆடவர்களைப் போல்

ஐந்தரையடி உயரமிருப்பாள். உயரத்திற்கேற்ற சதைப் பிடிப்பு. வெண்கலக் குரல்- வெடுவெடுவென்று பேசினலும், சுபாவம் என்னவோ சாந்தமானது தான். வெற்றிலைக் காவி படிந்த பற்கள். தெருவில் நடக்கும் குடும்பச் சண்டை, வாய்துடுக்கால் ஏற்படும் கன்னிப் பெண்களுள் கெடுபிடி போர் இவைகளுக்கெல்லாம் பரிகாரம் காணும் பொறுப்பு அவளிடம் இருந்தது. அவள் நியாயம் தவறி பஞ்சாயத்துச் செய்ததில்லை. இருப்பவர்களுக்கு ஒரு முடிவு, இல்லாதவர்களுக்கு ஒரு முடிவு என்ற பேச்சே அவளிடம் இருந்ததில்லை. சிலம்பாயி யாருக்கும் பயந்தவளல்ல; பார்ப்பதற்குப் பயிற்சி பெற்ற பயில்வானைப் போலிருப்பாள். வெள்ளைப் புடவைதான் அவள் உடுத்துவது. விதவை தானே!

மானகிரியிடமிருந்து சிலம்பாயி எதையும் எதிர் பார்த்திருந்ததில்லை. சாணம் தட்டி விற்பதுதான் அவளுக்குத் தொழில். அது அவளுக்கு நல்ல தொழில். குடும்பச் செலவு போக மீதம்கூடக் கண்டாள். அந்தத் தொழிலில் தெருப் பிள்ளைகள் சாணம் கொண்டுவந்து கொடுப்பார்கள். பதிலுக்குக் காசு கொடுப்பாள்; தவறினல் தவிடு கொடுப்பாள். மொத்தத்தில் அவள் அந்தத் தெருவுக்கு நாட்டாண்மைக்காரிபோல் கீர்த்தியுடன் வாழ்ந்தாள். எப்போதாவது போலீஸ்காரர்கள் நடுநிசியில் மானகிரியைத்தேடி ஆராவயலுக்கு வருவார்கள். தேவகோட்டைக்கும் ஆராவயலுக்கும் நாலுகல் தொலைவு. கண்டதேவிக்கும் ஆராவயலுக்கும் அதைவிடக் குறைவு. ஆராவயலில்தான் சிலம்பாயி குடியிருந்தாள்.

மானகிரியை சப்இன்ஸ்பெக்டர் சுட்டுக்கொன்று விட்டார் என்ற செய்தி மறுநாள் பகல்பொழுதி

லேயே சிலம்பாயிக்கு எட்டிவிட்டது. அவள் கோபப் பட்டதைப் பலர் பார்த்திருக்கிறார்கள்; அவள் முச்சந்தி யில் நின்று ஆடவர்களை அறை கூவி அழைத்து பேசிய தையும் பலமுறை கேட்டிருக்கிறார்கள். ஆனால் கண்ணீர் வடித்ததை—புலம்பி அழுததை—குய்யோ முறையோ என்று ஒப்பாரி வைத்துக் கதறியதை அது வரை யாரும் பார்த்ததில்லை. ரத்தபாசம் அவள் வீரத் தைக் கரைத்து, ஆணவத்தை புதைத்துப் புழுவாக துடிக்க வைத்த சோகக்கட்டத்தை அன்றுதான் மக்கள் பார்த்தார்கள். அவள் தனிப்பட்ட ஒரு வகுப்பைச் சேர்ந்தவளாக இருந்தாலும் ஊருக்கே உறவினளாக வாழ்க்கை நடத்தினாள். எல்லோரும் அவளை முறை வைத்து அழைத்துப் பழகி இருக்கிறார்கள். ஆகையால் அவளது துயரத்தைத் தாங்கமுடியாமல் கண்ணைத் துடைத்துக்கொண்டார்கள்.

கத்திக் கத்தி அவள் தொண்டை வற்றி விட்டது. தேம்பித் தேம்பி செவந்திமாலையின் முகம் விம்மி புடைத்து விட்டது.

பொழுது சாயப்போகும் நேரம். தரையில் சூடு தணிந்து விட்டது. கதிரொளி நெடுஞ்சுவர்களுக்குப் பழுப்பு வர்ணம் கொடுத்துக் கொண்டிருந்தது. அப்போது தெருக்கோடியில் 'டுப் டுப்' என்று சத்தம் கேட்டது. எல்லோரும் பதையை விட்டு விலகி நின்றார் கள். சிங்கராயனும் பஞ்சுப்புலியும் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கினார்கள். சிலம்பாயி அவர்களை லட்சியம் செய்யவில்லை. செவந்திமாலை மட்டும் நாணத் துடன் விலகிபோய் சுவர் ஓரத்தில் நின்றுகொண்டாள்.

"நடந்ததை நினைத்து வருந்தி என்ன ஆகப்போ கிறது! எழுந்திருங்கள்" என்று சிலம்பாயிக்கு சமா தானம் சொன்னான் சிங்கராயன்.

சிலம்பாயி பைத்தியம் பிடித்தவளைப்போல் ஒன்றும் பேசாமல் நின்ருள். அவள் முகம் சிவந்திருந்தது. அவளது கண்கள் கனிந்த நாவல்பழங்களைப்போல் கசிந்துருகின.

"என்னை தெரியவில்லையா உங்களுக்கு! நான் தான் சிங்கராயன். முதலில் உள்ளே வாருங்கள் போய்ப் பேசலாம்"—சிலம்பாயியை உரிமையுடன் கையைப் பற்றித் தூக்கினுன் சிங்கராயன்.

"என்னை எங்கே கூப்பிடுகிறீர்கள்? என் மகன் உள்ளேயா இருக்கிருன்? இதோ படம். அவன் உள்ளேயுமில்லை வெளியேயுமில்லை! அவன் எங்களைப் பிரிந்து போய் விட்டான். யாருக்கும் வணங்காத மகன், என் மகன். மானம் காக்கும் மறவனுக்கு வாழ்க்கைப்பட்டு புலியைப்போல் பிள்ளையைப் பெற்றேன். மானகிரி! நீ எப்படிச் செத்தாயோ! சாகும்போது என்ன நினைத்தாயோ! விக்ரகம் போன்ற உன் தங்கையை விட்டுப் போய் விட்டாயடா!" என்று மீண்டும் புலம்ப ஆரம்பித்து விட்டாள் சிலம்பாயி.

"செவந்தி மாலையை நான் பார்த்துக் கொள்கிறேன். திருமணந்தானே, நீங்கள் கவலைப்படாதீர்கள்" என்று உருக்கமாகப் பேசினுன் சிங்கராயன்.

சிலம்பாயி வீறிட்டெழுந்தாள். "செவந்திமாலைக்குக் கல்யாணமா?" என்று கர்ஜித்தாள். அந்தக் கர்ஜனையைத் தொடர்ந்து ஒரு பயங்கரச் சிரிப்பு! உயர்ந்த படிக்கட்டிலிருந்து செப்புப் பாத்திரத்தை உருட்டிவிட்டதைபோல் அந்தச் சிரிப்பொலி கேட்டது.

"தம்பி!"

"என்ன வேண்டும் உங்களுக்கு!"

"எனக்கு இனி என்ன தேவைப்படப் போகிறது! வேண்டியதைத்தான் கொடுத்துவிட்டானே, அந்தத் தங்கப்பாண்டியன்! நான் தான் இனி அவனுக்குச் சன் மானம் கொடுக்கவேண்டும். அரசாங்கம் என் மகனைச் சுட்டதற்கு அவனுக்குச் சன்மானம் கொடுக்கப் போ கிறது. அதற்கு முதலில் நான் கொடுக்கும் பரிசைத் தான் தங்கப்பாண்டியன் பெற்றுக் கொள்ளப்போ கிறான்" என்று கூவினாள்.

சிலம்பாயிக்குப் புத்தி தடுமாறி விட்டதாக எல்லோ ரும் எண்ணிக்கொண்டார்கள். சிங்கராயனும், பஞ்சுப் புலியும்கூட அப்படித்தான் நினைத்து விட்டார்கள்.

சிலம்பாயின் குரல் அடங்கவில்லை. "தம்பி இதோ என் மகள்! வயது பதினெட்டு! சிங்கத்தின் மகள்! புலிக்குத் தங்கச்சி! நான் மறத்தி! வீரனுக்கு மனைவி யானேன்! வீரனையே பெற்றெடுத்தேன், எங்கள் குடும்பமே மானத்திற்காக வாழ்ந்த குடும்பம். போன யுத்தத்தில் என் புருஷனைப் பறிகொடுத்தேன். இன்று மகனை இழந்தேன். இருப்பது ஒரே மகள். அவள் பத்தரைமாற்றுத் தங்கம். மானத்தோடு வாழ்ந்த என் தெரு மக்களின் முன்பாகவே கூறுகிறேன். என் வாழ்க் கையில் இனி ஒரே ஒரு ஆசை! இந்த ஆசையை நிறை வேற்ற என் மகளையே நான் பணயப்பொருளாக வைக்கிறேன்.'

"அவசரப்பட்டு எதையும் பேசாதீர்கள்"—சிங்கரா யன் குறுக்கிட்டான்.

"தெரியும் தம்பீ! நான் பைத்தியக் காரியல்ல! விவரம் தெரிந்துதான் பேசுகிறேன். எவன் என் மகனைத் துடிக்கத் துடிக்க வைத்துக் கொன்றானோ அந்த சப் இன்ஸ்பெக்டர் தங்கப்பாண்டியனை எவன் கொன்று

வருகிறுனே, அவனுக்குத்தான் என் மகளை நான் மனப் பூர்வமாகத் தானம் செய்யப் போகிறேன். என் மக ளுக்குச் சுயம்வரம் இனிமேல் தங்கப்பாண்டியனின் பலி பீடத்தில்தான் தம்பி! இது என் சபதம்! இதில்மாற்றம் இல்லே. மகளே சிவந்திமாலே! உன் அண்ணனுக்காக உன் வாழ்க்கையை நீ தியாகம் செய்துதான் தீரவேண்டும்! உனது எதிர்காலத்தைப் பற்றி நீ கனவு காணுதே! நீ யாரையும் காதலிக்காதே! உனக்கு இனி காதல் இல்லே; சுகம் இல்லே! வாலிபத்தின் எண்ணங்களை உன் இதயத் திலிருந்து எடுத்து விடு! என் சபதத்தை நிறைவேற்று செவந்திமாலே! செவந்திமாலே!"

சிலம்பாயி கதறி ஒய்வதற்கும் செவந்திமாலே மயங்கி அவள்மேலே விழுவதற்கும் சரியாக இருந்தது.

சிங்கராயனும் பஞ்சுப்புலியும் அப்படியே சிலே யாகிப் போனுர்கள்; கூட்டத்தில் பேச்சு இல்லே.

சிங்கராயன் மட்டும் தனக்குள்ளேயே பேசிக் கொண்டான்: மானகிரியைச் சுட்ட பெயர் தங்கப் பாண்டியனுக்குச் சேராவிட்டால் தனக்கு இன்னெரு ஆபத்து சிலம்பாயி உருவில் வந்திருக்கக் கூடும் என்று சிங்கராயன் மனச்சாந்தி பெற்றுக் கொண்டான்.

## 3. மனப் போர்

அழகான பெண் என்ருல் இப்படித்தான் இருக்க வேண்டுமென்ற இலக்கணமில்லே கவர்ச்சி, பார்ப்பவர் களின் மனத்தைப் பொறுத்தது. ஆடவர்களுக்குப் பிடித்தமான அழகிய ரோஜா மலர் பெண்களுக்குப் பிடிப்பதில்லே. பெண்கள் விரும்பும் மல்லிகைப் பூவை ஆடவர்கள் ஏற்பதில்லே. இரண்டிலும் அழகுண்டு, வசீகரமுண்டு.

செவந்திமாலே கருத்தப் பெண் தான். ஆனுல் அவள் அழகுக் கறுப்பு வாலிபர் நடுவே காந்தக் கல்லாக உலவினுலும் காலிகளுக்கு நடுவே அவள் கனலாகத் திரிந்தாள்.

சிங்கராயன் அவளேப் பலமுறை பார்த்திருக்கிருன். பேசியுமிருக்கிருன். இதயம் மறைவிடத்திலிருப்பதால் எடுத்த எடுப்பில் யாரையும் புரிந்துகொள்ள முடிவதில்லே. பூக்களேப் பார்க்கும்போது பறித்துச் சூடிக் கொள்ள நினேக்கிருர்கள்; யுவதிப்பெண்களேப் பார்க்கும் போது அவளோடு மணக்கோலத்தில் இருப்பதுபோல் உணர்வு தட்டுகிறது, ஆடவர்களுக்கு. சிங்கராயன் அப்படித்தான் நினேத்துநினேத்து உருகுகிருன். கன்னிப் பெண் செவந்தி மாலேயைச் சந்தித்த போதெல்லாம் கவர்ச்சிக்கப் பட்டிருக்கிருன்; கனவு கண்டிருக்கிருன். ஆனுல் அவள் நண்பனின் தங்கை அல்லவா? பேர் பெற்ற பலசாலியுடன் பிறந்தவளல்லவா!—இந்த அச்சம் சிங்கராயனின் உள்ளத்தில் எழாமலில்லே. எழுந்தது. ஆசையை அச்சம் விலங்கியதால் சிங்கராயன் திகைத்துப் போயிருந்தான். இப்போது அவனுக்கு வழி திறந்து கிடந்தது. ஆனுல் சிலம்பாயி விடுத்த சபதம் அவன் உள்ளத்தை உலுக்கியது. அப்படியொரு வீரமான பெண்ணே அவன் அதற்குமுன் பார்த்தது இல்லே.

ஒருவேளே தாயின் சபதம் செவந்திக்குப் பிடிக்காதிருந்தால்? 'தன்னுடைய இளமைப் பருவத்தை பலியிட பார்க்கிருள் அன்னே' என்று அவள் உள்ளூர எண்ணிக் கொண்டிருந்தால்? சிங்கராயனுக்கு இப்படி ஒரு சபல நினேப்பும் இருந்தது.

'தவறு! செவந்தி அவள் அண்ணன் மீது உயிரையே வைத்திருக்கிருள். மரீனகிரிக்காக அவள் எதையும்

செய்வாள்.' அடுத்த கணம் அவன் மனம் இப்படித் திரும்பிக் கொண்டது. இரண்டிற்கும் இடையே அவன் மனம் குழம்பித் தவித்தது.

## 4. ஆணை

சிலம்பாயிக்கு மனம் அமைதி கொள்ளவில்லை. விநாடிக்கு விநாடி அவள் தனது சபதத்திற்கு உயிர் கொடுத்துக் கொண்டிருந்தாள். எங்கே மனம் மாறி விடுகிறதோ என்பதற்காக மகன் படத்தை அடிக்கடி பார்த்து வேகம் ஊட்டப் பெற்று வந்தாள்.

ஒருநாள் சிலம்பாயிக்கு ஓர் ஓலை வந்தது. அதில்...

> "மானகிரியின் அன்னை அறிவது. மானகிரியின் மரணச்சேதி என் உள்ளத்தை வேல் கொண்டு குடைகிறது. அவரது சாவு வீரர்களுக்குச் சவால் விடுகிறது. திங்கள் காலை அவ்விடம் வருகிறேன். நேரில் பேசலாம்.
>
> இங்ஙனம்,
> வீரணஞ் சேர்வை

...என்று வரையப்பட்டிருந்தது.

சிலம்பாயிக்கு இதுவரை வீரணனைப் பற்றிய நினைவே இல்லை. ஏழாண்டுகளாக வீரணனுக்கும் மானகிரி குடும்பத்திற்கும் அறவே தொடர்பில்லாமல் போய் விட்டது.

மானாமதுரையிலிருந்து மதுரைக்குச் செல்லும் நெடுவழியிலுள்ள திருப்பாச்சேத்திக்குத் தெற்கே

இரண்டு கல் தூரத்திலுள்ள அரவங்காடுதான் வீர ணனின் சொந்த ஊர்.

வீரணன் பல முறை தண்டிக்கப் பெற்றவன். அவனுக்கு உடம்பில் தழும்பில்லாத இடமில்லை. வீரணன், மானகிரிக்கு கைவாகனமாக இருந்திருக் கிறன். நீட்டிய இடத்தில் பாயும் வேட்டை நாயாகவும் திட்டிய இடத்தில் பற்றும் தீக்குச்சியாகவும் மான கிரியிக்குப் பயன் பட்டிருக்கிறன்.

ஒரு தடவை மானகிரியின் வீட்டிலிருந்து கைப் பற்றப்பட்ட தங்க நகைகளை நீதி மன்றத்தில் ஒப் படைக்காமல் தனக்கு எடுத்துக் கொண்ட ஒரு போலீஸ் அதிகாரியை பதம் பார்த்து வரும்படி வீரண னுக்கு ஆணையிட்டிருந்தார் மானகிரி. அதிகாரியின் தலையைக் கொண்டு வரப் போன வீரணன், அதிகாரி மனைவியின் கண்ணீருக்கு இணங்கி அவனது தலையைக் கொய்யாமல் நகையை மட்டும் மீட்டு வந்தான். மானகிரிக்கு இந்த மன்னிப்பு அறவே பிடிக்கவில்லை. வீரணன் போலீஸுக்கு வேவுக்காரனுக இருப்பானே என்ற சந்தேகம் வந்துவிட்டது. அந்தச் சந்தேகம் உறுதிப்படும் வகையில் மானகிரி மீது பொய் வழக்கைத் தொடுத்து இரண்டாண்டு கடுங்காவல் தண்டனை வாங்கிக் கொடுத்து விட்டார் அதே போலீஸ் அதிகாரி. இந்த சம்பவத்திலிருந்து வீரணனுக்கும் மானகிரிக்கும் உறவு கெட்டிருந்தது.

பல ஆண்டுகளாக மானகிரியின் குடும்பத்துடன் தொடர்பில்லாதிருந்தது வீரணனுக்கு பலக் குறைவாக வும் பார்ப்பவர்களுக்கு ஏளனமாகவும் தோன்றுவது போலவும் உறுத்திக் கொண்டிருந்தது. உள்ளத்தில் ஏற் பட்டிருந்த அந்தக் கிரலேப் போக்க இந்தச் சந்தர்ப்

பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வீரணன் விரும்பி யிருக்கக் கூடும். இல்லாவிட்டால் உணர்ச்சியும் உருக்க மும் நிறைந்த அப்படி ஒரு கடிதத்தைச் சிலம்பாயிக்கு எழுதி இருக்க மாட்டான்.

கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடி திங்கட் கிழமை யன்று வீரணன் ஆராவயலுக்கு வந்தான். சிலம்பாயி விம்மி, விம்மி அழுதாள். மானகிரியின் மரணத்தை இசை கூட்டிச் சொல்லுவது போல் துயரத்தைத் தொடுத்து வைத்தாள். வீரணனுக்கும் கண் கலங்கியது. வீட்டிற்குள் தேம்பும் குரல் கேட்டது. இருட்டுக்கும் ஓர் ஒளி உண்டல்லலவா? அந்த ஒளியில் உள்ளே செவந்திமாலையின் கண்கள் கண்ணீரில் மூழ்கி மின்னு வதைப்பார்த்தான் வீரணன். செவந்தி மாலையை எட்டு வயதில் ஓட்டுப் பள்ளிக்கூடத்திற்குப் போகும் போது பார்த்தவன் வீரணன். இப்போது அவள் தகதக வென சந்தனப் பொம்மை போல இருந்தாள்.

அன்று அவள் மாமா என்று வாஞ்சையோடு அழைத்துக் கொண்டு வீரணனிடம் ஓடிவருவாள். வீர ணன் இரண்டணுக் கொடுப்பான். சீனி மிட்டாய் வாங்கித்தின்று உதடுகளைச் சிவப்பாக்கிக் கொண்டு திண்ணைப்பள்ளிக் கூடத்திற்கு ஓடிப் போவாள். அந்த செவந்திமாலையா இப்போது இப்படி இருக்கிருள்? இன்று அவள் ஒரு நிலவு. அவளைச் சுற்றி நட்சத் திரங்களைப்போல் ஆயிரக்கணக்கான வாலிபர்கள். செவந்தியைப் பார்த்ததும் காலம் கொடியது என்று வீரணனுக்குப் பட்டது. பள்ளிச் சிறுமியை மலர வைத்துப் பூமணக்கச் செய்யும் அதே காலம், மின்ன லிடும் தங்கக் கட்டி போன்ற மேனியை உருக்கி ஓடாக்கிவிடுகிறது என்று அவன் நினைக்கலானுன். வீரணன் நினைத்ததில் தவறில்லை. மனித வளர்ச்சிக்கு

ஒரு நடுப்புள்ளி உண்டு. பருவம் அந்த நடுப் புள்ளியைத் தொடும்வரை எல்லாம் ஏற்றம் உள்ள தாக இருக்கும். வாழ்க்கையில் பொலிவும், புக ழும் வந்து வந்து அலேமோதும். பருவம் நடுப்புள் ளியைத் தாண்ட ஆரம்பித்ததும் நரம்புகள் தளரும். முயற்சிகள் குன்றும்; களேப்பும் பலவீனமும் ஏற்படும் அதுவே பெரும் நோயாகி விடும். இதெல்லாம் குறை பாடுகளா? காலச்சக்கரம், தாஞக ஓடும், சாரதி இல் லாத வண்டி. பலரது வாழ்க்கைச்சரித்திரங்கள் சுழன்று விளேயாடிக் களேத்துப் போய் அந்த வண்டிச் சக்கரத்தில் சிக்கி கூழாகி விடுகின்றன,

இப்போது சிலம்பாயி அந்தக் கட்டத்திற்கு வந்து விட்டாள். தெருவில் நின்று கொண்டு ஆவேசக் குர லில் அவள் போட்ட சபதத்தை வீரணனிடம் சொன் ஞள். வீரணனுக்கு உடம்பு சில்லிட்டது.

"என்னடா வீரண்ணு முகம் சுளிக்கிருய். நீ ரத்தத்தை சந்தனமாக்கி சிரித்த ஒரு வீரனின் சிநேகிதன் என்பதை மட்டும் மறந்து விடாதே!"

"நாஞ மறப்பேன். 'கையில் இப்போது ஆயுதம் இல்லேயே' என்று கவலேப்படுகிறேன்; வேருென்று மில்லே" என்ருன் வீரணன்.

"ஆயுதமா, என்ன ஆயுதம் வேண்டும் உனக்கு? மாஞகிரி வீட்டிலா ஆயுதம் இல்லேயே! இது ஆயுதக் கிடங்கு உனக்குத் தெரியாது!"—வெறி பிடித்தவளேப் போல் பேசிஞள் சிலம்பாயி.

வீரணன் யோசித்தான். ஏதோ ஒரு பழைய சம்ப வத்தை அவன் நினேவுக்குக் கொண்டு வர முயன்ருன்.

"வீரணு என்ன இன்னும் சிந்திக்கிருய்?" சிலம் பாயி கேட்டாள்.

"எங்காவது துப்பாக்கி கிடைக்குமா என்று யோசிக்கிறேன்" என்ருன் வீரணன்.

சிலம்பாயி பலமாகச் சிரித்தாள். அது ஏளனச் சிரிப்பு.

"துப்பாக்கியா வேண்டும்? எத்தனை வேண்டும்? வா என்னேடு" என்று எழுந்தாள் சிலம்பாயி.

எழுந்தவுடன் வீட்டுக்குள்ளே போய் ஒரு மண் வெட்டியை எடுத்து வந்தாள். சிலம்பாயின் நட வடிக்கைகளும் பேச்சும் வீரணனுக்கு விக்கிரமாதித்தன் கதை படிப்பது போல இருந்தது.

சிலம்பாயி உள்ளே போனுள். வீரணன் பின்னுடிச் சென்ருன். இருவரும் தோட்டத்திற்குள் சென்ருர்கள்.

அங்கே ஒரு சிவலிங்கத்தின் சிலை. சிலம்பாயி அந்தச் சிலையைத் தூக்கி வைத்துவிட்டு அந்த இடத்தில் வெட்டும்படி சொன்னுள். வீரணன் வெட்டினுன். ஒரு ஆள் மட்டத்திற்கு வெட்டிய பிறகு தகரப் பெட்டி ஒன்று வந்தது. அந்தப் பெட்டிக்குச் சாவி சிலம்பாயி வசமிருந்தது. சிலம்பாயி பெட்டியை திறந்தாள்: அதில் ஒரு சிறிய கைத் துப்பாக்கியை, துணியில் சுற்றி வைக்கப்பட்டிருந்தது. அது புது துப்பாக்கிதான், அதற்குரிய நூறு தோட்டாக்களும் பெட்டிக்குள்ளேயே இருந்தன. சிலம்பாயி அவைகளை வீரணனிடம் கொடுத்தாள்.

"வீரணு, இப்போது நீ கொலை செய்யப் போக வில்லை. ஒரு சபதத்தை நிறைவேற்றப் போகிருய். ஒரு யுவதி, வாழாமல் சாகப்போவதைத் தடுத்து அவளை வாழச் செய்யும் புனிதப் பணிக்குப் போகிருய். ஒரு தாயுள்ளம் நிராசையுடன் மூழ்கிப்போகாமல்

தூக்கி நிறுத்துவதற்காகப் போகிருய். எனக்கு நம் பிக்கை தெரிவித்து விட்டுப் போ! வீரணு, துப்பாக் கியை விட்டுவிடாதே! போன வருஷம்தான் மானகிரி இந்தத் துப்பாக்கியைக் கொண்டு வந்து கொடுத்தான். பத்திரமாக வைத்திருக்கச் செய்தான். தொண்டி ராவுத்தருடையது என்று அவன் சொன்னதாக எனக்கு நினைவு!" என்று உணர்ச்சியூரப் பேசினுள் சிலம்பாயி.

வீரணன் கண்கள் கலங்கின. அவனுக்கு உணர்ச்சி கொப்பளித்தது; குமுறினுன்.

"குலதெய்வத்தின் மீது ஆணை. மானகிரி மறவனின் வீரத்தின்மீது ஆணை. எனது தூய உள்ளத்திற்கு இது ஒரு சவால்! உங்களின் வீர சபதம் எனக்குத் துணை நிற்கட்டும்! விரைவில் வெற்றியுடன் வந்து மான கிரியைப் பெற்ற—புலிக்குகை போன்ற உங்கள் வயிற் றில் தேன் பாய்ச்சுகிறேன்" என்று வாக்குறுதியளித் தான் வீரணன்.

பொழுது சாய்ந்தது. சிவலிங்கத்தை மீண்டும் இருந்த இடத்தில் வைத்து விட்டுவருவதற்குள் இருட்டி விட்டது.

## 5. துவரிமான் துப்பாக்கி

மாணமதுரையில் இன்ஸ்பெக்டர் தங்கபாண் டியன் குடியிருந்த வீடு ஆற்ரேரத்தில் இருந்தது. மாளிகை போன்ற பெரிய வீடு அது.

வீரணன் அங்கு சென்று, இடம் கண்டு, திட்டம் போடுவதற்கே இரண்டு நாட்களாகி விட்டன. தங்கப்

பாண்டியனைச் சுட்டுக் கொன்று அவனது உத்தியோக உடைகளை சிலம்பாயியின் காலடியில் சமர்ப்பிப்பது வீரணன் போட்ட திட்டம்.

தங்கப்பாண்டியனுக்கு மானாமதுரைப் பிராந்தியத்தில் நல்ல புகழ் இருந்தது. போக்கிரிகள் பயந்து நடுங்கினார்கள். வழிப்பறியும் கலவரங்களும் சோர்ந்திருந்தன.

தங்கபாண்டியன் வழக்கமாக இரவு பத்துமணிக்கு மேல் தான் வீடு திரும்புவார் என்பதை அறிந்திருந்தான் வீரணன். தங்கப்பாண்டியன் வீட்டுக் கொல்லையிலிருந்த தென்னை மரத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டான். தலையில் கருப்புத் துணியால் தலைப்பாகை கட்டியிருந்தான். பார்ப்பவர்கள் அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடி ஒட்டுமீசை வைத்திருந்தான்.

தங்கப்பாண்டியன் களைத்துப்போய் வீட்டுக்கு வந்தார். அப்போது மணி பதினொன்று. இன்ஸ்பெக்டரோடு இன்னொருவரின் பேச்சுக் குரல் கேட்டது. வீரணன் உற்றுக் கேட்டுத் திகிலடைந்தான். அது சிங்கராயனின் குரல். சிங்கராயனை ஏற்கனவே வீரணன் அறிவான். இருவருக்கும் நல்ல பழக்கம் உண்டு. இன்ஸ்பெக்டரும் சிங்கராயரும் வெகுநேரம் வரை பேசிக்கொண்டிருந்தார்கள். இரவு ஒரு மணிக்கு மேல் சிங்கராயன் விடை பெற்றுக்கொண்டு போனான்.

தங்கப்பாண்டியன் இடுப்பில் இருந்த கைத் துப்பாக்கியை எடுத்து மேஜைக்குள் வைத்தார். விளக்குகள் அணைந்தன. எங்கும் ஒரே அமைதி. வீரணன் மரத்திலிருந்து இறங்கி படுக்கையறையை நெருங்கிவிட்டான். தங்கப்பாண்டியன் புரண்டு படுத்தார்.

வீரணன் கதவருகே போகும்போது படுக்கை அறைக்குள் பேச்சுக்குரல் கேட்டது!

"நல்ல நேரத்தில் கவனப் படுத்தினீர்கள் சிங்கராயரே! எனது பதவி உயர்வுக்கு எவ்வளவு காரணமாக இருந்தீர்களோ, அதைப் போல் என் உயிரைக் காப்பாற்றுவதற்குப் பெருந் துணையாக வந்திருக்கிறீர்கள். என்னைக் கொன்றவனுக்கு, மானகிரியின் தாயார் தன் மகளைக் கட்டிக் கொடுக்கப் போகிருளாக்கும்... நான் ஒரு மதயானை; குறி வைத்தால் எதிரி சாகும்வரை விடமாட்டேன். பேதைச் சிறுக்கி அவளுக்கென்ன தெரியும்!"—தங்கப்பாண்டியன் தூக்கக் கலக்கத்தில் புலம்பியதை வீரணன் கவனிக்காமலில்லை. மானகிரியின் சாவுக்கும் சிங்கராயனுக்கும் ஏதோ தொடர்பிருக்கிறது என்பது மட்டும் வீரணனுக்குப் புரிந்தது.

குற்றவாளிகள் அகப்பட்டுவிட்ட பிறகு ஊமைகளாகவும் ஒன்றும் தெரியாதவர்கள் போலவும் அடங்கி விடுகிருர்கள். அவர்கள் வெளியில் இருக்கும் போது அவர்களது புத்தி வெகுநூதனமாக வேலை செய்கிறது. இல்லாவிட்டால் தூங்கும் இன்ஸ்பெக்டரைச் சுட்டு வீழ்த்துவதற்கு மூன்று மணி நேரம் பிடிக்குமா? காலை மூன்று மணிக்குமேல்தான் வீரணன் இன்ஸ்பெக்டர் தங்கப்பாண்டியரை சுட்டான். அதுவரை வீரணன் புத்தி பல புதிய காரணங்களைக் கற்பித்துக்கொண்டிருந்தது.

காலையில் நகர் முழுவதும் செய்தி பரவியது. போலீஸ் மேலதிகாரிகள் வந்து விழுந்தார்கள். மாநு மதுரை முழுவதும் போலீஸ் மயமாகவே இருந்தது.

போலீஸ்• தலைமையதிகாரி மதுரையிலிருந்து வந்து ஷூட்டிங் நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்டார். தங்கப்பாண்டியனின் பிணத்திற்கருகில் கைத் துப் பாக்கி கிடந்தது. அது புதிய துப்பாக்கி! வீரணன் விட்டதுதான்! அந்தத் துப்பாக்கியில் அரசாங்க முத் திரை பதிந்திருந்தது. போலீஸ் அதிகாரி அந்தத் துப்பாக்கியை அரசாங்கத்தின் அனுமதி பெற்று வாங்கப்பட்டது என்று தீர்மானித்தார்; ஆனால் அது யாருடைய துப்பாக்கி என்று உடனறிய அவரால் இயலவில்லை.

ஒரு வாரத்திற்குப்பிறகு சென்னையிலிருந்து வெளி யாகும் ஒரு தினசரிப் பத்திரிகையில் தங்கப்பாண்டியன் கொலையைப் பற்றி ஒரு திடுக்கிடும் தகவல் வெளி யாயிற்று.

"இன்ஸ்பெக்டர் தங்கப்பாண்டியன் கொலை சம்மந் தமாக தொண்டி துவரிமான் ராவுத்தர் கைது செய்யப் பட்டிருக்கிறார். தங்கப்பாண்டியன் வீட்டில் போலீசார் கண்டுபிடித்த துப்பாக்கி துவரிமான் ராவுத்தருடை யது என்று சொல்லப்படுகிறது. தற்போது துவரி மான் ராவுத்தர் மதுரைச் சிறையில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கிறார். அவரைச் சந்திக்க எவரும் அனுமதிக்கப்படுவதில்லை."

—இந்தச் செய்தி அந்த வட்டாரத்தையே அதிரச் செய்தது. துவரிமான் ராவுத்தரின் குண தோஷங்கள் கடைவீதிகளில், தேனீர் கடையில் விமர் சிக்கப்பட்டன.

வீரணன் இரவோடு இரவாகவே மானாமதுரை விட்டுப் புறப்பட்டு விட்டான். ஆனால் மறுநாள் இரவு வந்த பிறகுதான் அவன் ஆராவயல் போக முடிந்தது.

ஏனென்ருல் போலீஸ் இலாகாவைப்பற்றி அவன் நன்கு அறிந்தவன். குறிப்பிட்ட வழக்கிற்காக கைதுசெய்யப் படும் ஒருவன், விசாரணையின் போது அவன் நிரபராதி யாகிவிடுவான் என்று ஜாடையாகத் தெரிந்தாலும் அவனை வெளியில்விட போலீஸ்காரர்களுக்கு மனம் வராது. அவன் கொட்டடிக்குள் இருக்கும் போதே அவன்மீது இன்ஞெரு வழக்குப் பதிவாகிவிடும். எதிரி யோடு சமமாக ஒடி ஆடி விளையாட முடியாத கால் பந்தாட்டக்காரர்கள் பந்தை உதைப்பதற்குப் பதி லாக எதிரிகளின் கால்களை உதைப்பதுண்டு; விளை யாட்டுப் போட்டியில் இதுவும் ஒரு வெற்றி முறை! ஆனுல் போலீஸ் இலாக்காவுக்கு இது ஒன்றுதான் வெற் றிக்கு வழி.

வீரணன், ஊர் அடங்கியவுடன் சிலம்பாயி வீட்டுக் கதவைத் தட்டினுன். சிலம்பாயி கதவைத் திறந்தாள். வீரணன் பரபரப்புடன் உள்ளே நுழைந்தான். சிலம் பாயி, ஏற்கனவே தங்கப்பாண்டியன் கொலைச் செய்தி யைக் கேள்விப்பட்டிருந்தாள். இருட்டில் மின் மினி தெரிவது போல், துன்பமான அவளது முகத்தில் சிறு புள்ளியளவு இன்பம் பொட்டிட்டு நின்றது.

''வீரணு!''

''முடித்துவிட்டேன்!''

''நெற்றியைக் காண்பி!''

''என்ன...என்ன அது?''

''ஆரத்தி''

''ஸ்...ஸ்! அதிக ஆரவாரம் வேண்டாம்! நான் ஊருக்குப் போய் விட்டுப் பத்து நாட்கள் கழித்து வருகிறேன்.''

"செவந்தி திருமணம்! கூட்டிக்கொண்டு போ!"

"அதைப் பற்றி யோசிக்க வேண்டும்! ஒரு விஷயம், தங்கப்பாண்டியனுக்கும், கண்டதேவி சிங்கராயனுக்கும் தொடர்பிருக்கிறது. மானகிரியின் சாவுக்கும், சிங்கராயனுக்கும்கூட சம்மந்தமிருக்கும் போல் தெரிகிறது. எச்சரிக்கையாக இருங்கள்! எதையும் வெளியில் காட்டிக் கொண்டு விடாதீர்கள். நான் போலீஸ் நடவடிக்கை அறிந்து வருகிறேன்"—என்று சொல்லி விட்டு வீரணன் புறப்பட்டு விட்டான்.

சிலம்பாயின் கடைக்கண் நனைந்திருந்தது. செவந்தி மாலை முகத்தைத் தலையணையில் புதைத்துக் கொண்டு கிடந்தாள்.

## 6. இரகசியத் திருமணம்

'தங்கப்பாண்டியன் கொலை வழக்கில்' உயிர் இல்லாமல் இருந்தது. போதிய சாட்சிகள் கிடைக்காததால் போலீஸ் இலாகா உற்சாகமில்லாமல் விழித்தது. துவரிமான் ராவுத்தர் அவர் நிலையைச் சொன்னார்.

"தங்கப்பாண்டியனைச் சுட்டு வீழ்த்திய துப்பாக்கி என்னுடைய துப்பாக்கியாக இருக்கும். ஆனால் அந்தக் கொலைக்கும் எனக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. யுத்த காலத்தின் போது தனிப்பட்டவர்கள் வைத்திருக்கும் துப்பாக்கிகளை அரசாங்கம் பறி முதல் செய்தது. அந்த நேரத்தில் என் வசமிருந்த துப்பாக்கி களவு போய்விட்டது குறித்து நான் ஏற்கனவே போலீசுக்கு அறிவித்திருக்கிறேன். அந்த அறிவிப்பின் நகல் என்னிடமிருக்கிறது. இதுவரை போலீஸ் இலாகா காணுமற்

போன என் துப்பாக்கியைக் கண்டுபிடிக்க எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவே இந்தத் துப்பாக்கியை வைத்து என்னைக் குற்றவாளியாக்க நினைப்பது நியாயமாகாது.'' என்று போலீஸ் அதிகாரியிடம் ராவுத்தர் சொன்னார். ராவுத்தர் மறுநாளே விடுதலை செய்யப்பட்டார். வழக்கு பிசுபிசுத்து விடும்போல் இருந்தது. புலன் விசாரணையின் பேரால் வழக்கு தொடர்ந்து பதிவில் இருந்து வந்தது. போலீசார் துப்புத் துலக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

ராவுத்தர் விடுதலையானது சிலம்பாயிக்கு சந்தோஷமாக இருந்தது. தன்னுடைய மகள் செவந்திமாலையின் திருமணம் அச்சமின்றி நடைபெறும் என்று அவள் உற்சாகமாக இருந்தாள். திருமண ஏற்பாடுகளை பையப் பையச் செய்ய ஆரம்பித்தாள். விரைவிலே வருவதாகச் சொல்லி விட்டுப் போன வீரணனை அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

வீரணனுக்குக் கொலை வழக்கு சுறு சுறுப்பில்லாமல் போனது நிம்மதியைத் தந்தாலும் போலீஸ் இலாகா எந்த நேரத்திலும் பிடித்துவிடக்கூடும் என்ற அதிர்ச்சி இருக்கத்தான் செய்தது.

ஆறு மாதங்கள் வரை திருமணத்திற்குச் சாக்குப் போக்குச் சொல்லிக் கொண்டு வந்தான் வீரணன். ஆனால் சிலம்பாயிக்கு மனம் நிலை கொள்ளவில்லை.

மானகிரி மறவன் அடிக்கடி கனவில் தோன்றி—தங்கை செவந்திமாலையைத் தட்டாமல் வீரணனுக்குக் கொடு—என்று வற்புறுத்துவது போல் அவள் நடந்து கொண்டாள்.

வீரணன் திருமணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டு போவதில் சிலம்பாயிக்கு ஒரு சந்தேகம் இருந்தது. அது நியாயமாக இருக்கவேண்டிய சந்தேகம். ஏனென்றால் அவனுக்கு ஒரு கை இல்லை அல்லவா! ஒருவேளை, அதற்காகத்தான் வீரணன் ஒதுங்கிக் கொண்டு இருக்கிறான். என்று சிலம்பாயி ஐயுற்றாள். ஒரு நாள் இரவு, வீரணன் வீட்டிற்கு வந்த பொழுது அவளது மனதில் ஏற்பட்டிருந்த சந்தேகத்தை அவிழ்த்துவிட்டாள். "செவந்திமாலை மலங்காட்டில் விளைந்த மணமுள்ள மரிக்கொழுந்து! அவளை நீ மணந்து கொள்வது பார்ப்பதற்கு பொருத்தமில்லாமல் தோன்றும் என்பதை நானும் உணர்கிறேன். தியாகம், சுகத்தை இழப்பது பாசம் சொத்தை இழப்பது மகன் மேல் உள்ள பாசத்திற்காக என்னுடைய பொருளை உன் கையிலே ஒப்படைக்கிறேன். அவ்வளவுதான்! ஆனால் ஒன்று என்னுடைய விருப்பத்திற்காக செவந்தி மாலையை நான் கசக்கவில்லை. அவள்தான் தன் அண்ணன் மீதுள்ள ஆசையினால் தன்னையே தியாகம் செய்து கொண்டாள். நீ இல்லாமல், தங்கப்பாண்டியனைக் கொன்றது ஒரு குஷ்டரோகியாக இருந்தாலும் செவந்திமாலை புன்னகையோடு அவனை ஏற்றுக் கொள்வாள். நீ எதையும் மனதில் வைத்துக் கொள்ளாதே. திருமணத்திற்கு நாள் குறித்தாகவேண்டும். நகைகளையும், நாணயங்களையும் பெட்டகத்தில் பூட்டிப் பாதுகாக்கலாம். பருவப் பெண்ணுக்கு பாதுகாப்பே இல்லை. அவர்களை கண்ணாடிப் பாத்திரத்தைப் போல் பாதுகாக்காவிடில், குடும்ப கௌரவமே உடைந்துவிடும்"—என்று சிலம்பாயி சிமிழ் விளக்கிற்குப் பக்கத்தில் நின்றுகொண்டு படபடவென்று பேசினாள். வீரணன் அறிவாளை பக்கத்

தில் வைத்தபடி அம்மியின்மேல் உட்கார்ந்திருந்தான். அவனுடைய நடவடிக்கைகளிலும் படபடப்பு இருந்தது.

வீரணன், சிலம்பாயி பேசிமுடிந்ததும் அமைதியாக பதில் சொன்னுன். "நீங்கள் பேசியதில் அர்த்தம் இருக்கிறது. செவந்திமாலே வயதில் எனக்கு மிகவும் இளேயவள். அவள் சிறுமியாக இருந்தபோது அவளுக்கு பலமுறை நான் சீனிமிட்டாய் வாங்கிக் கொடுத்திருக்கேன். கோயில் திருவிழாக்களுக்கு நான் கூட்டிப்போயிருக்கிறேன். அப்போது ஒச்சம் இல்லாமலிருந்தேன். ஆனுல் இப்போது எழிலும், வயதும் இருவருக்கும் முரண்பட்டிருக்கிறது. பார்ப்பவர்களுக்கும் முறையற்ற திருமணமாகத் தெரியும். இவைகளே எல்லாம் மறந்து உங்களுடைய விருப்பத்திற்கு உடன்பட நான் விரும்பினுலும், அது செவந்திமாலேக்குப் பேரிடியாக முடியும். நான் சொல்வதைக் கேட்டு வருத்தப்படாதீர்கள்! நீங்கள் ஆத்திரப்பட்டுப் பலர்பேர் முன்னிலேயில் வீர சபதம் செய்திருக்கிறீர்கள். அது போலீஸ் வரை எட்டி இருக்கிறது." என்று சபதம் போட்டு பேசிய வீரணன் திடீரென்று அந்த இடத்தில் மட்டும் குரலே அடக்கிப் பேசினுன்.

சிலம்பாயி திகைத்தாள். இருவரும் எழுந்து ஒதுப்புறமாகப் போனுர்கள். வீரணன் ரகசியமாக ஏதோ சொன்னுன்; சிலம்பாயி பெருமூச்சு விட்டாள். அவள் எதற்கும் திகைத்ததில்லே. அன்று திகைத்தாள். இருவருக்குமிடையே அமைதி நிலவியது. திரும்ப இருவரும் வீட்டிற்குள் நுழையும்போது இருவர் முகங்களிலும் களே இல்லே. பயமும், அதிர்ச்சியுமே முற்றுகையிட்டிருந்தன. சிலம்பாயி மூக்கில்மேல் விரல் வைக்கவில்லே. அயர்ந்து போய் உட்காரீந்து விட்டாள்.

வீரணன் விடை பெற்றுப்போக எழுந்தான். சிலம்பாயி எழுந்து பின்தொடர்ந்து தெரு வரைக்கும் போனாள். பிரியப்போகும் நேரத்தில் வீரணனிடத்தில் ஏதோ மெதுவாகச் சொன்னாள். வீரணன் தலையைச் சாய்த்துகேட்டுக்கொண்டு, ''உங்களுக்கு அவசரமானால் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை; ஆராவாரமில்லாமல் அங்கே வந்து விடுங்கள். தாலி வேண்டாம்! வெறும் மாலை போதும். நான் வெள்ளிக்கிழமை இரவு அங்கு வந்து விடுகிறேன்,'' என்று சொல்லிவிட்டுச் சேவல் கூவுவதற்குமுன் ஊரைத்தாண்டி விட்டான் வீரணன்.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு வீரணனுக்கு சிங்கராயனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் செவ்வாய்கிழமை அன்று சங்கரப்பதிக்கோட்டை, யானை மடுவில் தன்னைச் சந்திக்கும்படி சிங்கராயன் எழுதியிருந்தான். வீரணன் இப்படி ஒரு அழைப்பை எதிர்பார்க்கவில்லை; ஏதோ ஒரு சதி என்று கருதி ஆயுதங்களோடு எச்சரிக்கையாக அந்த இடத்திற்குப்போக ஆயத்தமானான் வீரணன்.

சங்கரப்பதிக்கோட்டை தேவகோட்டையிலிருந்து காரைக்குடிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் பாழடைந்து கிடக்கிறது. மருது சகோதரர்கள் காலத்தில் அது கட்டப்பட்டது. அந்தக் கோட்டைக்கு எதிரில் சிறிய குளம் இருக்கிறது. அந்தக் குளத்தில் தான் கோட்டைக்குச் சொந்தக்காரர்கள் யானைகளைக் குளிப்பாட்டி இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அந்தப் பள்ளத்திற்கு யானை மடு என்று பெயர் வரக்காரணம் இல்லை.

வீரணனும், சிங்கராயனும் அந்திசாய்ந்த பிறகு அந்த யானை மடுவில் சந்தித்தார்கள்; சிங்கராயனோடு,

அவனுடைய நிழல் பஞ்சுப்புலியும் வந்திருந்தான். சிங்கராயன் பேசினான்: "இங்கிருந்து பதினைந்து மைல் மேற்கே திருக்கோஷ்டியூர் என்ற கிராமம் இருக்கிறது. அங்கே உள்ள பெருமாள் கோயில், பாதி ஊரை அடைத்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கோயிலுக்கு ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன; மிகவும் பழமையான கோயில். பாடல் பெற்றது அந்தக் கோயில்; கோபுரத்தில் உள்ள கலசம் முழுவதும் தங்கத் தாலானது; ஐந்தடி உயரம். நெடுநாட்களாக அந்தக் கலசம் என்னை உறுத்திக்கொண்டிருக்கிறது. வீரணு, நான் எந்தச் சாமிக்கும் பயந்ததில்லை. பொன் என்றால் அது யாருக்கும் பயன்பட வேண்டும். பயன்படும் போதுதான் அதன் விலை மதிப்புத் தெரியும். பயன் படாத போது எந்தப் பொருளும் சக்தி இழந்து விடு கிறது.

கோயில் கோபுரத்தின்மேல் ஒளி வீசும் பொற் கல சம் எனக்குக் கிடைக்குமானால் அதன்மேம்பாட்டைக் கடலுக்கு அப்பாலுள்ள நாடுகளுக்கு எடுத்துக் காட்டு வேன். இதற்கு முன் எத்தனையோ சிற்பங்களை இங் கிருந்து கடத்தியிருக்கிறேன். திருப்புவனம் கோயில், சதுர்வேத மங்கலம் கோயில், கோட்டையூர் கோயில், கண்டனூர் கோயில், புதுவயல் கோயில்களிலும் நான் அழகு அழகான சிற்பங்களைப் பெயர்த்திருக்கிறேன். நமது நாட்டுச் சிற்பங்களுக்கு வெளி நாடுகளில் நல்ல விலை மதிப்பு! ஆனால் நான் இப்போது போட்டிருக்கும் திட்டம் மிகவும் விரிவானது. மானகிரி இருந்தால் அவனுடைய உதவியை நான் நிச்சயமாகப் பெற்றிருப் பேன். அவன் இறந்தது என் துர்பாக்கியம் தான். பரவாயில்லை, அந்தச் சோகத்தை இப்போது நினைக்க வேண்டாம். மானகிரிக்கு அடுத்தபடியாக உன்னைத்

தான் என் மனம் நினைத்தது. நீ எதற்கும் பயப்பட வேண்டியதில்லை. போலீஸ் இலாகாவில் எனக்கு வேண்டியவர்கள் பலபேர் இருக்கிறார்கள். வழக்குப் போட்டாலும், நமக்குத் தண்டனை கிடைக்காது; கோபுரத்தில் ஏறி எனக்கும் பழக்கமில்லை. நீ அதில் பெயர் பெற்றவன். இந்தத் திட்டம் நம் மூவருக்குள் மட்டுமே இருக்கட்டும்'' சிங்கராயன் சுவைத்துப் பேசினான்.

சிங்கராயன் பேச்சை அமைதியோடு கேட்டுக் கொண்டிருந்த வீரணன். கடைசியாக ஒரு நெடு மூச்சு விட்டான். இலேசாக இதழ் விரிய ஒரு சிரிப்பும் சிரித்தான். "தப்பாக நினைக்காதே! நான் திருட்டுத் தொழிலைக் கை கழுவி விட்டேன். வாழ்க்கையின் நடுப் பகுதியிலிருந்தாவது நிம்மதியாக இருக்கலாம் என்று முடிவு கட்டிவிட்டேன்; நான் குற்றவாளியாகவே பிறக்கவில்லை. அதேபோல் கொலைகாரர்களும் திருடர்களும் பிறக்கும் போதே அப்படிப் பிறப்பதில்லை. கோபம் ஒருவனைக் கொலைகாரனாக ஆக்கி விடுகிறது. ஆசை ஒருவனைத் திருடனாக மாற்றி விடுகிறது. இரண்டுக்கும் மூல காரணம் முட்டாள் தனம். பலமுறை சிறைக்குப் போய் தொல்லைகளை அனுபவித்து, உலகத்தில் சிறை ஒன்றைத் தவிர வேறுபுகலிடம் எனக்கு இல்லையென்று கருதி, திருடுவதும் பின் சிறைக்கு வருவதுமாகப் பாதிவாழ்க்கையைக் கழித்து விட்டேன். நடந்து முடிந்த என் வாழ்க்கையில் ஒரு நாள் கூட நான் வயிறு குலுங்கச் சிரித்ததில்லை. போலீசுக்குப் பயமின்றிப் படுத்ததில்லை. என்ன வாழ்க்கை! போலீஸ்காரன் கையால் அடிக்கடி குத்தப்பட்டு, கன்னிப்போன உடம்பு என் உடம்பு. உறவினர்களும், நண்பர்களும் பேசிய கேலிப் பேச்சுக்களைக் கேட்டு நைந்துபோன உள்ளம் என் உள்ளம். இதோபார்! கோபத்திற்கு அடிமையாகி

எனது இட்து கையை இழந்திருக்கிறேன். என் உடம்பெல்லாம் இரத்தவடுக்கள்! இந்த வடுக்களை ஒரு குறிக்கோளுக்காகப் பாடுபடக்கூடிய ஓர் அரசியல் கட்சிக்காக நான் ஏன் பெற்றிருக்கக்கூடாது என்று நினைத்து நினைத்து இப்போது அழுகிறேன். மனிதன் என்றால் அவனுக்கொரு நல்ல குறிக்கோள் இருக்கவேண்டும். அந்தக் குறிக்கோளின் வெற்றி—லாபம், தனக்குக் கால் பங்காகவும், மற்றவர்களுக்கு முக்கால் பங்காகவும் இருக்கவேண்டும். சிங்கராயா, நான் ஒரு கொள்ளைக்கு யோசனை கூறக்கூடியவனாக ஆகிவிட்டேனே என்று மிகவும் வருந்துகிறேன். நீ எனக்குப் பழைய நண்பன். நான் இப்போது உனக்குப் புதிய தோழனாக—உன் வாழ்க்கையில் புதிய பாதையை ஏற்படுத்த விரும்பும் உத்தமத் தோழனாகத் தோன்ற ஆசைப்படுகிறேன். நீ என்னை மன்னிப்பதானால் நான் உன்னிடம் சிறிது பேச விரும்புகிறேன், கேள்.

"நமக்கெல்லாம் மூத்தவன் மானகிரி. பேராற்றல் மிக்கவன். அவனை எதிர்க்க ஆளில்லாமலே இருந்தது. கடைசியில் அவன் வாழ்க்கை நிம்மதியாகவா முடிந்தது? பாவம்! சின்னஞ்சிறிய தங்கை! வயோதிகத்தாய். இருவரையும் துடிக்கவிட்டு அவன் செத்தான். அவனுக்கு நான் நண்பனாக இருந்ததின் பயனை இப்போதுதான் உணர முடிந்தது. அந்தக் காலத்தில் நாங்கள் புதைத்து வைத்த நகைகளை இப்போது தோண்டியெடுத்து அவர்களுக்குக் கொடுத்தேன். நான் மட்டும் இல்லாவிட்டால் மானகிரி குடும்பம் திகைத்துப்போயிருக்கும்."—வீரணன் உருக்கமாகப் பேசினான். சிங்கராயனுக்கு அது பிடிக்கவில்லை.

"நான் உன்னை இங்கு அழைத்தது உன்னிடம் உபதேசம் கேட்பதற்காக அல்ல, உன்னுடைய உதவி

எனக்குத் தேவையில்லை! ஆனால் ஒன்று. நான் சம்பந்தப்பட்டிருக்கும் இந்தக் கொள்ளையின் இரகசியம் எப்போதாவது வெளிவருமானால் அதற்கு நீ தான் பொறுப்பு. நீ எந்த லோகத்திற்குப் போனாலும் அங்கும் நான் உன்னைப் பின்தொடர்ந்து வருவேன்'' என்று ஆவேசத்துடன் சிங்கராயன் பொறிந்து தள்ளினான்.

வீரணன் பெருந்தன்மையோடு சிரித்தான். அந்தச் சிரிப்பில் மகத்தான வீரசக்தி அடங்கியிருந்தது. சிங்கராயனின் கோபக்கனல் வீச்சை, வீரணன் சிரித்துக் காட்டிய சிரிப்பு, சவாலுக்கு அழைப்பது போல் இருந்தது.

வீரணன் சுருட்டைப் பற்றவைத்துக்கொண்டு அடுத்தகணமே அந்த இடத்தைவிட்டு நகர்ந்து விட்டான்.

சிங்கராயனும், பஞ்சுப்புலியும் பள்ளத்திலிருந்து கிளம்பி கோட்டைக்குள் வந்தார்கள். கோட்டைக்குள் ஒருவன் அவர்களுக்காக முயல் கறி சமைத்துக் கொண்டிருந்தான். துணைக்கு சாராயம் இருந்தது. மூவரும் விடிய விடியப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"ஆபத்து வரும்வரை காத்திருப்பது அறிவீனம்'' என்றான் பஞ்சுபுலி.

"அவன்தான் சிக்க மறுத்துவிட்டானே! இதற்கு மேல் அவனை எப்படிக் கெஞ்சுவது''—சிங்கராயன்.

"புதிர் போடாதே! விளக்கமாகச் சொல்!'' என்றான் சிங்கராயன்.

"வீரணனை வலையில் சிக்க வைக்கவேண்டும் என்ற நமது முயற்சி தோற்று விட்டது'' என்றான் பஞ்சு புலி பதிலுக்கு!

"அவன் தான் சிக்க மறுத்து விட்டானே! இதற்கு மேல் அவனை எப்படிக் கெஞ்சுவது" சிங்கராயன் பதில் சொன்ஞன்.

"நான் இந்த வலையைச் செல்லவில்லை. சர்க்கார் சிறையைச் சொல்லுகிறேன். எப்படியாவது வீரணனை மீளமுடியாத வழக்கில் சிக்க வைக்கவேண்டும். நமது தொழிலிலிருந்து விடுபட்டு ஒருவன் நமக்குப் புத்தி சொல்ல வந்தது இதுதான் முதல் தடவை"—பஞ்சுப் புலி அழுத்தமாகப் பேசிஞன்.

"எனக்குக்கூட ஆத்திரமாகத்தான் இருக்கிறது" பஞ்சுப்புலி, "தங்கப்பாண்டியன், கொலை வழக்கில் இவனைச் சிக்க வைத்தால் என்ன?"—சிங்கராயன் உணர்ச்சியோடு சொன்ஞன்.

"வாய்ப்பேச்சை மறந்து விடாதீர்கள். நேற்று எனக்கு ஒரு தகவல் வந்தது. செவந்திமாலை மூன்று மாத கர்ப்பமாம்!" என்ருன், பஞ்சுபுலி. இதைக் கேட்டதும் சிங்கராயனுக்குத் தூக்கி வாரிப்போடட்து. இருந்தாலும் தன் உள்ளத்தைச் சரிப்படுத்திக் கொண் டான்.

"பஞ்சுபுலி, இது ஒரு நல்ல சேதிதான்! மானகிரி மறவனின் தாய் விடுத்த சபதம் நினைவிருக்கிறதா? அந்தச் சபதத்தோடு, மூன்று மாத கர்ப்பத்தை ஒட்டிஞல் ஏதாவது கதை கிடைக்குமா? நன்ருகச் சிந்தித்துப்பார்."

"கதை என்ன? அருமையான படமே கிடைக் கிறது" என்று சொல்லிக் கொண்டே குடிவெறியில் சிங்கராயனிடம் ஏதோ சொன்ஞன் பஞ்சுபுலி,

"தொலைந்தான்" என்று மூவருமாகக் கூவிக் கூவிச் சிரித்தார்கள்.

# 7. புதுத் திருப்பம்

ஆராவயலில் திருவிழாக் காலம் ஒரு நாள் இரவு இரண்டு மணி வீட்டுக் கதவு தட்டப் பட்டது. சிலம்பாயி தூக்கக் கலகத்தோடு எழுந்து வந்து கதவைத் திறந்தாள். மூன்று போலீசுஸ்காரர்களும், ஒரு சப் இன்ஸ்பெக்டரும் வாசலில் நின்ருர்கள்.

"உன் பெயரென்ன?"

"சிலம்பாயி!"

"உன் மகள் பெயரென்ன?"

"செவந்திமாலே"

"அவளேக் கூப்பிடு."

"அவள் தூங்குகிருள்".

குடிசையில் தூங்குவதைக் காட்டிலும், கெட்டிக் கட்டிடத்தில் தூங்கிஞல் சுகமாக இருக்கும்; எழுப்பு! போகலாம்"—போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் சொன்ஞர். ஆணவத்தோடு இறைந்தார்.

"என்னங்க! கேலியா செய்றீங்க!"- சிலம்பாயி அவள் சுபாவத்தில் பேசிஞள்.

"இவள் எழுப்ப மாட்டாள். மாணகிரியைப் பெற்றவளாச்சே! ஏ! கான்ஸ்டபிள் அவளே எழுப்பு!" என்ருர் சப் இன்ஸ்பெக்டர்.

ஒரு போலீஸ்காரன் வீட்டிற்குள் புகுந்தான். சிலம்பாயி அவனே வழி மறித்து நிறுத்தி விட்டு தானே போய் செவந்திமாலேயை எழுப்பி வந்தாள். போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் இருவரையும் கைது செய்வதாகச் சொல்லி கண்ட தேவி போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப் போஞர்.

மறு நாள் மத்தியானம் வரை சிலம்பாயிக்கு விவரம் தெரியவில்லை. அந்திக்குப் பிறகு வீரணன் ஒரு போலீஸ்காரன் மூலமாக தகவல் சொல்லி அனுப்பி யிருந்தான். பிறகு தான் கைது செய்யப்பட்ட விவரம் சிலம்பாயிக்குத் தெரிந்தது,

மறு நாள் பெரிய போலீஸ் அதிகாரி விசாரணைக்கு வந்தார். ஸ்டேஷனுக்கு வெளியே பெரிய கூட்டம்! கொலை வழக்கல்லவா! வீட்டில் எத்தனை பேர் பொழுது போக்க வழியில்லாதவர்கள் இருக்கிறார்கள்.

விசாரணை தொடங்கியது. சிலம்பாயி கண் கலங்கி நின்றாள். அவளுக்குப் பின்னால் வளர்கடாக் குட்டிபோல் வெறித்த பார்வையுடன் செவந்திமாலை நின்றாள்.

"சிலம்பாயி!"

"உனக்கு எத்தனை பிள்ளைகள்!"

"ஆண் ஒன்று, பெண் ஒன்று!"

"கூடப் பிறந்தவர்கள் இல்லையா?"

"ஒருவன் இருக்கிறான். அவன் பர்மாவில் இருக் கிறான். அங்கே அவனுக்கு கணக்கு வேலை. சித்திரவேலு அவன் பெயர்."

"உன் மகன் செத்தது எப்படி என்று தெரியுமா?"

"அந்த வயிற்றெரிச்சலைக் கேட்காதீர்கள்!"

"இது விசாரணை; கேட்பதற்குப் பதில்சொல்!"

"சுட்டுக் கொன்று விட்டான் ஒருபாதகன். பெயர் தங்கப்பாண்டியன் என்று சொன்னார்கள்!"

"அதற்காக நீ சபதம் செய்ததுண்டா?"

"ஆமாம் செய்தேன்! ஏன், செய்யக் கூடாதா?"

"கேட்பதற்கு மட்டும் பதில் சொல். நீ என்னைக் கேள்வி கேட்காதே!"

"இன்னும் கேட்கவில்லையே!"

"மூடு வாயை! நீ சபதம் செய்தாயே அதன்படி நிறைவேற்றி வைத்தாயா?"

"ஆகா சந்தேகமென்ன அதில்!"

"நீ செய்த சபதத்தை நிறை வேற்றவில்லை என்கிறேன்".

"யார் சொன்னது அப்படி! நான் மறத்தி! மானத்திற்காக வாழ்பவன்!"

சப் இன்ஸ்பெக்டர் ஏளனமாகச் சிரித்தார்.

"ஏன் சிரிக்கிறீர்கள்? பொய் சொல்கிறேன் என்று?"

"ஆம், நீ பொய்தான் சொல்கிறாய்! உன் மகள் கர்ப்பமாகிவிட்டாள் என்பதை மறைப்பதற்காக அப்படி சொல்கிறாய்!"—இன்ஸ்பெக்டர் ஏளனமாகச் சிரித்துக்கொண்டே கேட்டார்.

"எசமான்! கோபத்தைக் கிளறுகிறீர்கள்! நாக்கைப் பிடுங்கிக் கொண்டு இந்த இடத்திலேயே செத்து விடுவேன்."

"நடிக்காதே! அப்படியானால் உன் மகள் கழுத்தில் தாலி எங்கே?"—சப் இன்ஸ்பெக்டர் குறும்புத்தனமாக இந்தக் கேள்வியைப் போட்டார்.

சிலம்பாயிக்குத் தலை சுழல்வது போல்தான் இருந்தது. இருந்தாலும் விழித்துக் கொண்டாள்.

"என் மகள் செய்து கொண்டது காந்தர்வமணம்! அதற்கு ஏது தாலி?"

"காந்தர்வமணம் என்றால் புருஷன் பெயரைச் சொல்லலாமே?!"

"ஏன் தாராளமாகச் சொல்லலாம்! செவந்தி, ஏன் பயப்படுகிருய்? மாப்பிள்ளை பெயரைச் சொல்லம்மா! நமக்கு என்ன!"

செவந்திமாலை அட்டைபோல் ஊறிக் கொண்டே இன்ஸ்பெக்டரின் மேசையருகில் வந்து நின்ருள். இன்ஸ்பெக்டர் அவளை ஏறிட்டுப் பார்த்தார். செவந்தி முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டாள்.

"ஏன் விழிக்கிருய்? கொலை செய்து விட்டு யாராலும் தப்பிக்க முடியாது! சர்க்கார் ஒன்றும் தூங்கவில்லை. உன் புருஷன் பெயயென்ன?"

"சிங்கராயர்!"—குபீரென்று சொன்னுள் செவந்தி.

இன்ஸ்பெக்டருக்கு முகமெல்லாம் வியர்த்து விட்டது. வீரணன் ரகசியமாக போலீஸ்காரன் மூலம் சொல்லியனுப்பியபடிதான் செவந்திமாலை சொன்னுள் என்ருலும், அவளுக்குத் துயரம் நிலை கொள்ளவில்லை. அவளும் மயக்கமுற்றுத் தரையில் சாய்ந்தாள்.

சப் இன்ஸ்பெக்டர் கடிகாரத்தைப் பார்த்தார் மணி பன்னிரண்டு!

"இப்போது சிங்கராயன் வீட்டில்தான் இருப்பான். உடனே அவனைக் கைதுசெய்யுங்கள்! அவசரம்!" என்று சப் இன்ஸ்பெக்டர் உத்தரவு போட்டார்.

## 8. புதுக்கனல்

தங்கப்பாண்டியன் கொலை வழக்கு மீண்டும் தெம்பு பெற்றெழுந்தது. பத்திரிகைக் காரர்களுக்கு லட்ச ரூபாய் நன்கொடை கிடைத்தது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

கீழ்க்கோர்ட், வழக்கை விசாரித்து மேல் கோர்ட்டுக்கு அனுப்பி வைத்தது. நேற்றுவரை போலீசுக்கு நண்பனாக இருந்தசிங்கராயன் இப்போது இலாகாவுக்கு எதிரியாகிவிட்டான். போலீஸ் இலாகா ஒரு எலிப் பொறி போன்றது. அதில் எலிதான் விழவேண்டு மென்பதில்லை. தவறிப் போய் அணில் விழுந்தாலும் அது பிடித்துக் கொள்ளும்.

வழக்கிற்கு உயிர் கொடுத்தது ஒரே ஒரு சாட்சி. அந்தச் சாட்சி ஒரு போலீஸ்காரன். தங்கப்பாண்டியன் சுட்டுக் கொல்லப்பட்ட அன்று இரவு, நெடுநேரம் வரை தங்கப்பாண்டியனோடு அவரது வீட்டில் சிங்கராயன் ரகசியமாகப் பேசிக்கொண்டு இருந்தான் என்பதற்கு அந்தப் போலீஸ்காரன் ஒரு சாட்சியம்; தங்கப்பாண்டியன் மனைவி ஒரு சாட்சியம், இந்தச் சாட்சியங்களைக் கொண்டு தங்கப்பாண்டியன் சாவுக்கும் சிங்கராயனுக்கும் தொடர்பிருக்கிறது என்று நீதிபதி முடிவு கட்டிவிட்டார். சில வழக்குகளில், கொலை செய்தவன்—நான் தான் கொலை செய்தேன் என்று அறிவாளையே நீதிமன்றத்திற்குக் கொண்டு வந்து காண்பித்தாலும், சாட்சியங்களை நோக்கும்போது குற்றம் ருசுவாகவில்லை என்று நீதிபதிகள் வழக்கைத் தள்ளுபடி செய்து விடுகிறார்கள். அந்த வழக்குகளைப் போல் இதுவும் ஒரு விசித்திரமான வழக்கு! விசித்திரமான தீர்ப்பு! யாரும் எதிர் பார்க்கவில்லை—சிங்கராயனுக்குத் தூக்குத் தண்டனை!

சிங்கராயன் ஐகோர்ட்டுக்கு அப்பீல் செய்திருந்தான். அதுவரை அவன் சிறையில் வைக்கப்பட்டிருந்தான். அவன் வைக்கப்பட்ட இடத்திற்குப் பெயர் 'கண்டம்.' தூக்குத் தண்டனை பெற்ற கைதிகளை, தேதி குறிப்பிடும்வரை வைக்கப்படும் இடத்திற்குப் பெயர்

தான் 'கண்டம்' என்பது. சாவின் கோட்டை வாசல் அது. தூக்குக் கயிற்றை முத்தமிடும்போது துடிக்க வேண்டிய துடிப்பைக் காட்டிலும், பெரும்பாலோர் கண்டத்திலிருக்கும்போதே கைதிகள் துடித்து அயர்ந்து விடுகிறார்கள். சாவை அனுபவித்துச் சாகும் கட்டம் அது.

சிங்கராயன் கண்டத்தில் பத்து மாதங்கள் இருந்தான். முடிவில் அவன் எதிர்பாராத தீர்ப்புக் கிடைத்தது. தூக்குத் தண்டனை ரத்தாகி ஆயுள் தண்டனையாவது கிடைத்தால் போதும் என்று அவன் எண்ணிக் கொண்டிருந்தான். ஆனால் வழக்கில் அவன் விடுதலையே பெற்றுவிட்டான்,

"ஒரு கொலை எப்போதும் ஒரு சதிக்குப் பின்னர் தான் நடைபெறும். ஆனால் இந்த வழக்கில், கொலைக்குப் பின் போலீசின் துணையோடு சதி நடைபெற்றிருக்கிறது. ஷேக்ஸ்பியர் கதைகளில்கூட இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றதில்லை. இந்தச் சாட்சியங்களை வைத்துக் கீழ் கோர்ட் எப்படித்தான் தூக்குத் தண்டனை கொடுத்தது' என்று எனக்குப் புரியவில்லை" என்று உயர் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்தார்.

சிங்கராயனுக்கு மறுபிறப்பு கிடைத்தது போலாயிற்று. ஆனால், அந்த உணர்வு அவனுக்கு நீண்டு நிலைக்கவில்லை. அவன் மனதில் ஒரு வெறி கொழுந்து விடத் தொடங்கி விட்டது.

"ஒன்று என்னைத் தண்டனைக்குள்ளாக்கிய செவந்தியைத் தாரமாக்கி, அவளை வாழாவெட்டியாக்க வேண்டும்; அல்லது அவள் புருஷன் வீரணனுக்கு தூக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கவேண்டும்!"— இந்தச் சபதமே சிங்கராயன் உள்ளத்தில் வேரூன்றிப் புதுக் கனலாகச் சுடர் விட்டது.

சிங்கராயனுக்குச் சிறை ஒரு புதிய அனுபவத்தைக் கொடுத்தது. சிறை அவனுக்கு சீர்திருத்தப் பள்ளியாகத் தோன்றவில்லை. எந்தக் குற்றத்திற்காக ஒருவன் சிறைக்கு அனுப்பப்பட்டாலும், அவன் விடுதலைபெறும் போது மனம் மாறிவருவதில்லை; இவ்வளவுதானு சிறை—என்ற அலட்சியத்தோடுதான் வருகிருன் என்று சிங்கராயன் அறிந்து கொண்டான். சிறை வாழ்வைப் பற்றி சிங்கராயன் நிறையக் கேள்விப்பட்டிருப்பான். ஆனுல் உள்ளே அவன் எதிர்பார்த்தது நடந்திருக்காது. நல்லவன் உள்ளே போய் விட்டார்ல்கூட, கடலில் பாலைக் கலந்தது போல் அவன் மனமும் கெட்டுப் போய்விடுவதைச் சிங்கராயன் கண்டான். முதன் முறையாக மூன்று மாதத் தண்டனை அடைந்து விடுதலை பெற்றவன் மறுமுறை தண்டனையை உயர்த்திக் கொள்ள எண்ணி ஆறு மாதத்திற்குரிய குற்றம் புரிகிருன். இப்படி 'சிறைவாசத் தியாகம்' உயர்ந்து கொண்டேதான் போகிறது. சிறை அப்படி இருக்கிறது. மனமாற்றத்திற்கு உள்ளே சிகிச்சை இல்லை. சகல வியாதிகளுக்கும் ஒரே மிளகுத் தண்ணீரைக் கொடுக்கும் சித்த வைத்தியரைப் போல் சிறைச்சாலையில் எதற்கெடுத்தாலும் அடி, உதைதான் பரிகாரம்! இதையும் சிங்கராயன் உணர்ந்தான். குற்றவாளிகளையும் அடித்து திருத்த நினைப்பது குதிரைக்குச் சங்கீதம் கற்றுக் கொடுப்பதற்குச் சமம். இப்போது இருக்கும் சிறைச்சாலைகள் குற்றவாளிக்குக் குறிப்பிட்ட காலத்திற்கு ஒய்வு கொடுத்து அனுப்பும் அரசாங்க இலவச உணவு விடுதிகள் அவ்வளவுதான்!

சிங்கராயன் இதற்கு முன் தண்டிக்கப்பட வேண்டிய எத்தனையோ வழக்குகளில் ஈடுபட்டிருக்கிருன். ஆனுல் ஒரு முறை கூட சிறைக்குப் போனதில்லை. இப்

போதுதான் முதல் முறையாக சிறைக்குள் போனன். சிறைக்குள்ளேயும் கொள்ளையடிக்கப்பட வேண்டிய ஆட்கள் இருப்பது அதற்கு முன் அவன் அறிய மாட்டான். பொருள் சேகரிப்பதற்கே சிலபேர் சிறைக்கு வருகிருர்கள் என்பதும் அவனுக்குத் தெரியாது. ஒரு நிரபராதி திருட்டுக் குற்றத்தில் பொய்ச் சாட்சியத்தால் தண்டிக்கப்பட்டாலும் சிறைக்குள்ளே அவனுக்கு திருட்டுத் தொழிலைக் கற்றுக் கொடுக்க ஆசிரியர்கள் கிடைப்பார்கள் என்பதும் சிங்கராயன் அறியாத ஒன்று. சிறை ஓர் உலகம்; சிறிய உலகம்; பெண்ணில்லாத உலகம். பூச்செடியில் மலரும் அழகிய பூக்களைப் பார்த்ததும் அவனுக்கு வீட்டுக் கொடிக் கயிற்றில் ஊஞ்சலாடும் வர்ணப் புடவைகள் கவனத்திற்கு வந்தது; இசை ஒலி, வசந்தமான எண்ணங்களைத் தாண்டி அவன் உள்ளத்தை வலை பின்ன வைத்தது. சிறை உலகம் சிலரை சுயநலமிகளாக்கி விடுவதுண்டு! அரசியல்வாதிகளும் அதில் விதிவிலக்கல்ல! அவர்கள் வேண்டுமாளுல் சுயநலத்திற்கு 'சிக்கனம்' என்ற புனைப் பெயரைச் சூட்டலாம் பேசத் தெரிவதால்!

*　　　*　　　*

நெப்போலியனுக்கும், நெல்சனுக்கும் ஏற்பட்ட பகை சரித்திரத்தில் புகழ் பெற்றதைப்போல் வீரணனுக்கும் சிங்கராயனுக்கு மிடையே ஏற்பட்ட சபதங்களும், வீர உரைகளும் ஏரிக்கரைகளில் பாடப்பெறும் ஏற்றப் பாடல் வரை முற்றிவிட்டன. தென் பாண்டிச் சீமையில், செம்புலிங்கம், சடையன், சிங்கம் புணரி கருத்தச்சாமி, மதுரைக் கருவாயன்! மணிக்குறவன்,— இவர்களுக்குத்தான் நாட்டுப் பாடல்கள் வழக்கில் இருந்து வந்தன. புகழ் பெற்ற அந்தக் கொள்ளைக்

காரர்களின் புகழ்பாட்டுக்களுடன் 'செவந்திமாலை சிந்தும்' இடம் பெற்றுவிட்டது.

ஆனால் அந்தப் பாடலை பாடியவர்கள், இருவரில் யாரையும் ஆதரித்துப் பாடவில்லை. இரண்டு கதாநாயகர்களைக் கொண்ட வீரக் கதையாகவே அதை மதித்தார்கள். வாலிபர்கள் கூடும் இடங்களில், திருவிழாக் காலங்களில், கன்னிப் பெண்களின் கூட்டத்தில் கூட வீரணன் பெரியவனா, சிங்கராயன் பெரியவனா என்ற சச்சரவுகள் மூண்டுவிடுவதுண்டு. நேற்று நான் சிவகங்கையில் வீரணனைப் பார்த்தேன்? ஒரு கை இல்லாவிட்டால் தேங்காய்க் குடுமிபோன்ற அவனது மீசையே சிங்கராயனைச் சுழற்றிச் சுழற்றி அடித்துவிடும் போலிருக்கிறது—என்பான் ஒருவன்.

"பூ! நீ சிங்கராயனைப் பார்த்ததில்லை, அவனுக்குத் தழும்பில்லாத இடமே இல்லை. குதிக்காலில் சூடு வாங்கியிருக்கிறான். முதுகில் ஒரு முழத்திற்கு ஒரு பெரிய தையலே போட்டிருக்கிறது. இவைகளில் எல்லாம் சாகாமலா, வீரணன் கையால் சாகப்போகிறான். ஒருநாளும் நடக்காது—என்பான் மற்றொருவன். இப்படி இரண்டு கட்சிகளுக்குள்ளும் ஆள் கூடிவிடும். உடனே போலீஸ் வந்து கூட்டத்தைக் கலைக்க வேண்டும்! இதுபோல் எத்தனையோ தேரோட்டங்களில் குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அடிக்கடி ஏற்பட்ட இதுபோன்ற சில்லரைத் தகராறுகளுக்கு முடிவு காலம் அண்மையில் கிட்டவில்லை. இரண்டாண்டு காலத்திற்குப் பிறகுதான் கிடைத்தது.

தேவகோட்டை நகரையொட்டி இரவுசேரி என்ற ஒரு சிறு குடியிருப்பு இருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் ஆண்டுதோறும் தெருக்கூத்து நடத்தி மகிழ்வ

துண்டு. இராமநாதபுரம் மாவட்டத்திலேயே இரவு சேரிக்கூத்து பெயர் பெற்றது. அந்த ஆண்டில் புகழ் பெற்ற நாடக நடிகர்கள் இரவுசேரி நாடகத்தில் சந்திப் பது மரபாகிவிட்டது மட்டுமல்லாமல் பெருமையாக வும் கருதப்படலாயிற்று.

அந்த ஆண்டு நாடகத்திற்கு திருப்பரங்குன்றத் தைச் சேர்ந்த பாலகுரு வந்திருப்பதாக விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. மறுநாள் மயான காண்ட நாடகத்திற்குச் சக்திவேல் ஆசாரி வரப்போவதாகவும் பேசிக் கொள்ளப்பட்டது. கூட்டம் அளவுகடந்து காணப்பட்டது. மூன்றும் நாள், கண்ணகி நாடகம் நடந்து கொண்டிருந்தது. கோவலன் மாதவி வீட் டுக்கு வந்து கொண்டிருக்கிறுன். இளவரசனைப்போல் அங்கே அலங்காரமாக வீற்றிருந்தான் கோவலன். மாதவி உபசரணை செய்து கொண்டிருக்கிறுள். முன் வரிசையில் உட்கார்ந்திருந்த ஒரு நாட்டாண்மை காரருக்கு ஒரே கோபம்! ஊர்ப் பெரியவர்களெல்லாம் முன் வரிசையில் உட்கார்ந்திருக்கும்போது, ஒரு கூத் தாடிப் பயல் என்ன திமிரோட கால்மேல் கால் போட்டு உட்கார்ந்திருக்கிறுன்!—என்று கோவலன் இருந்த தர்பாரைப் பார்த்து அவர் கோபப்பட்டுப் பேசிவிட்டார். நாடகத்தில் பரபரப்பு ஏற்பட்டு விட்டது.

தாசி வீட்டுக்கு வந்திருக்கும் ஒரு பணக்கார இளைஞன் மாதவியிடத்தில் கைகட்டி வாய்பொத்தியா நிற்பான்? என்றெல்லாம் நாடகக்காரர்கள் சமா தானம் சொல்லிப் பார்த்தார்கள். நாட்டாண்மைக் காரர் அதிகார வெறியில் ஊறிப்போன மட்டை யல்லவா!

எந்தச் சமாதானமும் அவரிடம் எடுபடவில்லை. நாடகத்தில் குழப்பம் ஏற்பட்டது. அலையெனத் திரண்டிருந்த கூட்டம் பொறுமித் தத்தளித்தது. திடீரென சில குறும்புக்காரர்கள் கூட்டத்திற்குள் பாம்பை வீசி விட்டார்கள். அவ்வளவு தான்! ஒரே இறைச்சல்! தருணம் பார்த்து வேல் கம்புகள் வெளியேறிவிட்டன. வெட்டு! குத்து!! விடாதே!! அவன்தான் சிங்கராயன்! அவன் தான்!! அவன் தான்!! என்ற சத்தம் வானைப் பிளந்தது. அரை நாழிகைக்குள் நாடக மைதானம் உடைந்த முட்டைக் கூடுபோல் காலியாகிவிட்டது.

மறுநாள் பொழுது ஒரு பயங்கரமான கொலைச் சம்பவத்தோடு விடிந்தது. சிங்கராயன் படுகொலை!— என்று நகர் முழுவதும் பேசிக் கொண்டார்கள். கால் நடையிலும் சைக்கிள்களிலும், சிலர் வண்டிகளியிலும் கொலைக்களத்தை நோக்கப் போய்க் கொண்டிருந்தார்கள். தேவகோட்டையிலிருந்து கண்டதேவி செல்லும் பாதையிலுள்ள ஒரு மண்டபத்தில் சிங்கராயன் கொலை செய்யப்பட்டுக் கிடப்பதாகச் செய்தி உலவியது.

மண்டபத்தைச்சுற்றி பலத்த பாதுகாப்புப் போடப் பட்டிருந்தது. பொது மக்கள் நெருங்க முடியவில்லை. சிங்கராயன் பிணம் ஒரு கல் தூணில் சாய்த்து வைக்கப் பட்டிருந்தது.

ஆனால் தலையைக் காணவில்லை. தலையில்லாத முண்டம் அது. பஞ்சுப்புலி மட்டும் தேம்பித் தேம்பி அழுதுகொண்டு போலீஸார் பாதுகாப்பில் உட்கார வைக்கப்பட்டிருந்தான். பிணத்திற்குப் பக்கத்தில் செருப்புக்கள் சிதறிக்கிடந்தன. கூடியிருந்த ஆயிரக் கணக்கான மக்களும் ஒரே முடிவாகப் பேசிக்கொண்

டார்கள்—வீரணன் செய்த வேலைதான் இது என்று! வீரணன் ஆதரவாளர்கள் அதே இடத்தில் ரகசியமாக கைகளையும் குலுக்கிக் கொண்டார்கள். வழக்குப் பதிவாயிற்று!

கீழ்கோர்ட், மேல்கோர்ட் நீதிபதிகளும் தீர்ப்புகளை எழுதி விட்டார்கள்.

"கொலைகளத்தில் காணப்பட்ட செருப்பு வீரணனுடையது என்பதை வீரணனே ஒப்புக்கொள்கிறார். வீரணன் அன்று நாடகத்திற்குப் போயிருக்கிறார். வீரணனுக்கும் சிங்கராயனுக்கும் நெடுநாட் பகை. பகைக்குக் காரணமான செவந்திமாலையும் இந்தக் கொலைக்கு உடைந்தையாக இருந்திருக்கிறாள் என்பதற்குப் பஞ்சுப்புலியின் சாட்சியம் போதிய ருசுவாக இருக்கிறது. ஆகவே இந்தக் கொலை திட்டமிட்டுச் செய்யப்பட்டது என்று தீர்மானித்து வீரணனுக்கும் அவன் ஆசைநாயகி செவந்திமாலைக்கும் ஆயுள் தண்டனை விதிக்கிறேன்"—அன்று நீதிபதிகளின் தீர்ப்பு ஒரு முகமாகப் பேசின.

வீரணனும், செவந்தியும், நீதிபதியை வணங்கி விட்டுப் போலீசார் பொறுப்பிற்குப் போனார்கள். செவந்தியின் இடுப்பில் இருந்த அவளது கைக்குழந்தை சிரித்தது நீதிபதியைப் பார்த்து! 'என் பிறப்பையே கதையாக்கி விட்டு, பதினைந்தாண்டு காலத்தைச் சிறைக்குள் செலவிடப்போகிறேன்' என்று அந்தக் குழந்தை நினைத்தா சிரித்தது?

பொழுது விடிந்தால் தீபாவளி. வீரணனும் செவந்தியும் சிறைச்சாலைக்குள் நுழைந்தார்கள். கணவன், மனைவி என்ற உறவு முகப்பு வாசலுடன் இறந்துவிடும்! இருவரும் தனித் தனிக் கொட்டடிக்குள்

அழைத்துச் செல்லப்பட்டனர். இருவர் உள்ளங்களிலும் தெம்பு இல்லை; ஒளிகுன்றி இருள் கவ்வி இருந்தது.

வீரணனும், செவந்திமாலையும் வைக்கப்பட்டிருந்ததோ ஒரு மத்தியசிறைச்சாலை. அந்தச் சிறைக்கு யாரோ ஓர் அரசியல்வாதி மரண விலாஸ் மாளிகை என்று பெயர் வைத்துவிட்டுப் போய் இருக்கிறன். அந்தச் சிறையிலிருந்து எந்த ஆயுள்கைதியும் தண்டனை முடிந்து உயிரோடு வெளியே வந்ததில்லையாம்.

எல்லாச் சிறைகளிலும் மருத்துவமனைகள் உண்டு. வீரணன் அடைப்பட்டுக்கிடந்த அந்தச் சிறையில் எல்லா நோய்களுக்கும் கடல் நீர்தான் மருந்து. அழுச்கு உருண்டைதான் மாத்திரை. சிறை மருத்துவமனையில் கைதிகளை அவ்வளவு எச்சரிக்கையாகப் பாதுகாத்து வருகிறர்கள்.

## 9. கடலுக்கப்பால்

இரங்கூனில் முகல் சாலையில் ஒரு செட்டியார் கடையில் கணக்கு வேலைப்பார்த்து வந்தார் செவந்திமாலையின் மாமன் சித்திரவேலு. சிறுவனக இருந்த போதே அவர் பர்மாவுக்குப் போய் விட்டவர். பர்மிய ஆசிரியை ஒருத்தியை சித்திரவேலு அங்கேயே திருமணம் செய்துகொண்டார். பிழைப்புத்தேடி ஓடிய சிலபேர் பெற்ற தாயையும் பிறந்த நாட்டையுமே மறந்து விடுவதுண்டு. சித்திரவேலுவுக்குக் கோபமில்லாவிட்டாலும் தாய் நாட்டின் மீது கவனமில்லாமலிருந்தது. இந்த நேரத்தில் தான் சிங்கராயன் கொலை

வழக்கு பர்மிய பத்திரிக்கைகளில் சிறப்புடன் வெளி வந்தது.

சித்திரவேலு பர்மியப் பெண்ணை மணமுடித்துக் கொள்ளுமுன் செவந்திமாலையைத் தாரமாக்கிக் கொள்ள நினைத்தகாலமும் உண்டு. அது நடைபெருமல் போனதிற்கு ஒரே காரணம் மானகிரியின் நடவடிக்கைகள் சித்திரவேலுவுக்குப் பிடிக்காததுதான். எந்த நேரமும் போலீசின் கவனத்தை ஈர்த்துக் கொண்டிருக்கும் வகையில் ஒரு கன்னிப் பெண் உள்ள குடும்பத்தைக் கெடுத்து வைத்தது மானகிரியின் பெரிய முட்டாள் தனம் என்பது சித்திரவேலுவின் அசைக்க முடியாத நம்பிக்கை. தமிழ் நாட்டிலிருந்து பர்மாவுக்கு வரும் பலர் மானகிரியின் கீர்த்தி பற்றிப் பேசுவதுண்டு. அப்போதெல்லாம் சித்திரவேலு உக்கி உக்கிச்சாவார். மானகிரி தனக்கு மருமகன் என்று வெளியில் சொல்லிக் கொள்வதில்லை. அவ்வளவு ஒதுங்கி இருந்த சித்திர வேலுவின் இதயத்தை சிங்கராயன் கொலை வழக்கு மெதுவாகத் தடவிப் பார்த்தது. அந்தவழக்கு கண்ணுக்குத்தெரியாத அரும்பு முள்ளைப் போல் தூங்கும் போதும் தொழில் புரியும் போதும் சித்திரவேலுவை கருவிக்கொண்டே இருந்தது. அந்தக் கொலை வழக்குப் பற்றிய முழு விபரமும் அறிய சித்திரவேலுவுக்குத் தணியாத ஆசை. அந்தநேரத்தில் அதே முகல்சாலையில் புதிதாகத் தொழில் செய்வதற்குத் தமிழ் நாட்டிலிருந்து ஒருவர் வந்திருந்தார். அவர் பெயர் தீர்த்தப்ப செட்டியார். அவரை அணுகி மேற்கொண்டு விபரங்களைச் சேகரிக்கத் திட்டமிட்டார் சித்திரவேலு. இருவருக்கும் நெருங்கிய உறவு ஏற்பட்டுவிட்டது. சிங்கராயன்—வீரணன் பகை உணர்ச்சிபற்றி கதை கதையாகச் சொன்னர் தீர்த்தப்பர். இடை இடையே

செவந்தியின் பெயரும் அடிப்பட்டது. மொத்தத்தில் சிங்கராயன் கொலைக்குக் காரணமே செவந்திதான் என்று ஒவ்வொரு தட்வையும் கதையை முடித்தார் தீர்த்தப்பர். அப்போதெல்லாம் சித்திரவேலு நெஞ்சில் முள் தைத்தாற்போல் முகத்தைச் சுளிப்பார்.

இரங்கூனில் புத்தர் விழா வந்தது. தமிழர்களும் அந்த விழாவில் குதூகலத்தோடு கலந்து கொள்வதுண்டு. வீட்டுக்கு வீடு விருந்தும் வேடிக்கைகளும் நடந்தன. தீர்த்தப்பர் மதுபானப்பிரியர் என்பது அன்றுதான் சித்திரவேலுக்குத் தெரிந்தது. பகல் முழுவதும் தீர்த்தப்பர் போதையிலேயே இருந்தார். போதை உயர உயர, சிலருக்குப் பேச்சே பாட்டாகி இதயம் சூன்யமாகப் போய் விடுவதுண்டு! மனதில் ஒளித்து வைத்திருந்ததை எல்லாம் வெளியில் கொட்டும் போதுதான் மனம் காலியாகி விடுகிறது.

மனதில் தேக்கி வைத்திருப்பதைப் பேசும்போது மட்டும் குடிகாரன் பேசினாலும் சுவையாக இருக்கும்; சேமிப்புக் காலியாகி விட்ட பிறகு நிதானமுள்ளவன் பேசினாலும் கொடூரமாகத் தெரியும். பேச வேண்டும் என்பதற்காக எதையாவது பேசுவார்கள். அதில் சுவை இருக்காது. இனிமை இருக்காது. கட்டாந்தரையில் பதமில்லாத மண்வெட்டி கொண்டு வெட்டுவதுபோல் இருக்கும். ஆனால் தீர்த்தப்பர் சுவை ததும்பப் பேசினார். தாய் நாட்டுச் சேதிகள் அந்நிய நாட்டிலிருப்பவர்களுக்கு அதிக இன்பத்தைத் தந்தன.

தீர்த்தப்பர் பேச்சு சித்திரவேலுவுக்கு வேடிக்கையாக இருந்தது. தீர்த்தப்பரும் அடிக்கடி சிரித்துக் கொண்டே இருந்தார். அப்போது இரண்டு பர்மிய பிச்சைக்காரர்கள் இனும் கேட்பதற்காகத் தீர்த்தப்பரை

அணுகி வந்தார்கள். வந்தவர்கள் இருவரும் அந்தத் தெருவுக்கு பழகிப்போன பிச்சைக்காரர்கள்.

தீர்த்தப்பர் இரண்டு காசுகளைத் தூக்கி எறிந்தார். அவர்களுக்கு அது போதவில்லை; கோபமாகத் தூக்கி எறிந்தார்கள்.

"பிச்சைக்கார நாய்களா? வெளியே போங்கள்!" என்று விழுந்தார் தீர்த்தப்பர்.

"பிழைக்க வந்த எச்சிலைகள் நம்மையே எட்டி மிதிக்கின்றன" என்று பர்மிய மொழியில் பிச்சைக் காரர்கள் திரும்பித் திட்டினார்கள்.

தீர்த்தப்பருக்கு ஆவேசம் கிளம்பி விட்டது.

"நான் யார் தெரியுமடா? வட்டிக்கடைச் செட்டி பிள்ளையல்லடா? கம்பி எண்ணி காராகிரகம் வரை ஏறி இறங்கியவன். மரியாதையாக வெளியேறி விடுங் கள்!"—தீர்த்தப்பரின் கண்கள் அரளிப் பூக்கள் போல் சிவந்து விட்டன.

சித்திரவேலு திகைத்தார். சிறை காராகிருகம் என்பதெல்லாம் அவருக்கு கதைகளோடு சரி. தீர்த்தப் பரின் பேச்சு சித்திரவேலுக்குச் சண்டைப் படம் பார்ப்பது போலிருந்தது. அவர் தகருறை முற்ற விடாமல் தீர்த்தப்பரை அணைத்துக்கொண்டே வீட் டிற்குள் போய் விட்டார், போதை தெளிந்ததும் எல்லாவற்றையும் விவரமாக கேட்க வேண்டுமென்று சித்திரவேலுவுக்கு விருப்பம்! எப்பொழுது விடியும் என்று காத்திருந்தார்.

# 10. எதிர்பாராதது

விமானத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு மட்டும் சிறை பிருந்தாவனத்தைப் போல் வனப்புள்ளதாக தெரியும். கிளிக் கூண்டுகளைப் போல் சிறு சிறு தொட்டிகள், மாட்டுக் கொட்டகைகளைப் போன்ற நீண்ட சதுரமான சமயலறைகள் இவைகளுக்கு மத்தியில் வாயில்லாப் பூச்சிகளைப் போல் ஆயிரம் இரண்டாயிரம் உயிர்கள் எறும்புகள் மாதிரி வரிசை வரியையாக ஊர்ந்து கொண்டிருக்கும். இதுதான் விமானத்திலிருந்து பார்ப்பவர்களுக்குத் தெரியும் சிறைத் தோற்றம். ஆனால், உள்ளே மனிதன் மாடாக வேலை பார்க்கிறான்; சிறையிலுள்ள மாடுகள் வயிறு புடைக்க கஞ்சி குடித்து விட்டு கொட்டத்தில் சாய்ந்து கிடக்கின்றன. வெளி மாடுகளுக்கும், சிறை மாடுகளுக்கும் நிறைய வேற்றுமைகள் உண்டு. சிறை மாடுகளுக்கு எலும்பே இருக்காது! சதைகள் கொத்துக் கொத்தாகத் தொங்கும்; அவைகளுக்குதான் சிறையில் வேலையே இல்லையே! மாடுகள் இழுக்க வேண்டிய வண்டியைக் கைதிகள் தானே இழுக்கிறார்கள்! இப்படிப்பட்ட சிறைச் சாலையில்தான் வீரணன் இருந்தான். அவனுக்குச் சிறை புதிதா என்றால் இல்லை, ஆனால் அவனுக்குத் தரப்பட்ட வேலைதான் விநோதமானது. சமையலறையில் ஈ அடிக்கும் வேலை அவனுக்கு. ஒரு கிண்ணத்தில் கருப்பட்டிச் சாற்றை வைத்துக்கொள்ள வேண்டும். முதலில் கருப்பட்டிச் சாற்றை தரையில் தெளிக்க வேண்டும். ஈக்கள் அந்தத் துளிகளில் மொய்க்கும். உடனே கைகளில் உள்ள குச்சிகளால் அந்த ஈக்களை அடித்துக் கொல்ல வேண்டும். இப்படி அவன் ஒரு நாளைக்குப் பத்தாயிரம் ஈக்களை துவம்சம் செய்யவேண்டும்! குறைந்தால்

காலில் சங்கிலி போடுவார்கள். ஒற்றைக் கொட்டடியில் போட்டு அடைக்கும் தண்டனைதான் கொடியது. யாருடனும் பேச முடியாது. யாரும் அந்தப் பகுதிக்கே வர மாட்டார்கள். அணிலைப் பார்த்துச் சிரிக்கலாம். காகத்தைப் பார்த்துப் பேசலாம். புழு பூச்சிகளை உள்ளங்கைகளுள் எடுத்து வைத்துக்கொண்டு கொஞ்சலாம். இதுதான் முடியக் கூடியது.

செவந்திமாலைக்குத் தந்திருந்த வேலை அவளுக்கு ஏற்கனவே தெரிந்ததுதான். சிறை அதிகாரிகளின் மனைவி மக்களது உடுப்புக்களைத் துவைப்பது. குழந்தைகளைக் குளிப்பாட்டுவதுமுதலியன. சுருக்கமாகச் சொன்னால் தாதி வேலை. சிறைக் காவலர்களின் வரிசை வீடும், சிறையின் பெரிய அதிகாரியின் மாளிகையும் சிறையை ஒட்டியேதான் இருந்தன. கைதிகள் வளர்த்துவிட்ட அடர்த்தியான சோலைக்குள் அந்த வீடுகளும், மாளிகையும் புதையுண்டு கிடந்தன. உதிரும் இலைகளைப் பொறுக்குவதற்கும், விழுகின்ற காக்கை எச்சங்களை நீக்குவதற்கும் கைதிகள் காத்துக் கொண்டிருக்கும்போது, அந்த மாளிகைகள் அழகாக இருப்பது அதிசயமல்லவே! வீரணனுக்கு தெரிந்த சிறைத் துயரம் செவந்திக்குத் தெரியவில்லை. காலையில் ஈயும் எறும்பும் மிதக்கும் சிறைக் கஞ்சியைக் குடித்து விட்டு செவந்தி அதிகாரி வீட்டுக்கு வருவாள். பகல் உணவு குழந்தைக்கும் அவளுக்கும் அங்கேயே கிடைக்கும். மாலை ஆறு மணிக்கு அவள் சிறைக்குப் போய்விட வேண்டும். செவந்திக்கு பேச்சுத் துணைக்குக் குழந்தையிருந்ததால் அவள் தமிழை மறந்துவிடவில்லை. சிறை அதிகாரி வீட்டுப்பெண்கள் செவந்திக்குத் தாலாட்டுக் கூடப் பழகிக் கொடுத்தார்கள். அவள்,

கைப் பிள்ளைக்காரியா இருந்தபோதிலும், சிறையில் அவளுக்கு குறை தெரியவில்லை. ஆனல் மனக்குறை அவளை அரித்துக் கொண்டிருந்தது. மனக்குறை பசிப் பிணியைவிடக் கொடியது, உணவிலுள்ள சக்தியை மனக் குறை அரிக்க ஆரம்பித்தால், இரும்பு போன்ற உடலும் ஈசலிறகாகிவிடுமே!

செவந்திக்கு சுவை உணவுகள் கிடைத்தன. கொஞ்சுவதற்கு மழலை கிடைத்தது. அமர்வதற்கு குளிர்ந்த நிழல் இருந்தது. இருந்தும் அவள் முகத்தில் இன்பம் இல்லை. மனத்தில் அமைதியில்லாதபொழுது நிலவு கசக்கிறது. அதிலும் அவள் ஆயுள் கைதி. நிலவு அவளை எரித்தது; பூச்செடிகள் ஆடி அடி அவளை நையாண்டி செய்தன. அவைகளைக் கோபிக்க அவளுக்கு அதிகாரம் ஏது? தொடக்கூட அவளுக்கு மன வலிமை இல்லை. சிறையில் ‘பூ’ வைத்துக் கொள்ள கூடாது.

அடை மழைக்காலம் அது! மழை ‘சோ’ வென்று கொட்டிக் கொண்டிருந்தது! செவந்திமாலை ஜெயிலில் பெரிய அதிகாரி வீட்டிற்கு வந்திருந்தாள். அதிகாரி அன்னை இரக்கம் உள்ளவள். ஒய்வு பெற்ற போலீஸ் அதிகாரியின் மனைவி அவள்! அந்த அம்மையார் மகன் ஜெயிலுக்குப் புறப்படும் போதெல்லாம் வாசல்வரை வந்து அனுப்பிவைத்து விட்டுப் போவாள். “யாரையும் அடிக்காதே! வாயால் கண்டித்து வை! பாவம்! ஏழைப் பிள்ளைகள்!” என்று ஒவ்வொரு நாளும் மகனிடத்தில் கனிந்த குரலில் சொல்லிவைப்பாள். அந்த அம்மையாருக்கு செவந்திமாலை மீது அன்பு இருந்தது. வீட்டு உணவுகளெல்லாம் அதனல் செவந்திக்குத் தாராளமாகக் கிடைத்து வந்தன.

ஒருநாள் செவந்திக்குச் சிறை முகவரிக்கு ஒரு கடிதம் வந்தது. அது ரங்கூனிலிருந்து வந்த கடிதம். சிறை அதிகாரியின் பரிசோதனைக்குப்பின் அந்தக் கடிதம் செவந்தி கைக்கு வந்தது. செவந்தி கடிதத்தை திலகவதி அம்மையாரிடம் கொடுத்தாள். சிறை அதிகாரியின் அன்னையின் பெயர் அதுதான். திலகவதி அம்மையார் சோபாவில் படுத்தபடி மூக்குக் கண்ணாடியை மாட்டிக்கொண்டிருந்தார். செவந்தி அவரது கால்மாட்டில் உட்கார்ந்திருந்தாள். திலகவதியம்மைக்கு விருத்தாப்பியப் பருவம். குரலில் ஆயிரம் நெளிவுகள் தெரிந்தன. உடுக்கை அடிப்பவனிடம் எதிர்காலத்தைக் கேட்கும் பாவனையில் திலகவதியம்மையாரின் வாயசைவுகளையே உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தாள் செவந்தி.

"அன்புள்ள செவந்தி மாலைக்கு, உனது தாய் மாமன் சித்திரவேலு பிரியமுடன் எழுதும் மடல். உன்னுடைய வாழ்வு இப்படிக் கருகிப் போகும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நினைத்தாலே நெஞ்சம் வெடித்து விடும்போலிருக்கிறது. சரி போகட்டும்! உன் மீது தொடரப்பட்டிருந்த கொலைவழக்கு விசித்திரமாக இருக்கிறது. நீயும், வீரணன் என்பவரும் சேர்ந்து சிங்கராயன் என்பவரைக் கொன்றதாக உங்களுக்குத் தண்டனை தரப் பட்டிருக்கிறது. ஆனால், எந்தச் சிங்கராயன் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டதோ, அதே சிங்கராயன் இரங்கூனில் தீர்த்தப்பர் என்ற பெயரில் தொழில் புரிந்து வருகிறார். அவர் எனக்கு நெருங்கிய நண்பராக இருக்கிறார். எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது. இதற்கு

மேல் நான் என்ன செய்ய வேண்டும் என்ப தற்கு வீரணனை கலந்து ஆலோசித்து எழுத வேண்டியது.

இப்படிக்கு
**சித்திரவேலு, இரங்கூன்.**

திலகவதியம்மையார் படித்து முடித்ததும் செவந்தியைப் பார்த்தார். செவந்தி மயக்கம் போட்டுக் கிடந்தாள்; அவளது குழந்தை வெரந்தாவில் தவழ்ந்து கொண்டிருந்தது. திலகவதி அம்மாள் சிறைக்குத் தகவல் அனுப்பினர்: செவந்தி, சிறை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு மறுநாள் குணம் பெற்றுள்.

பதினைந்து நாட்கள் கழித்து சித்திரவேக்குப் பதில் கடிதம் எழுதினுள் செவந்தி. திலகவதி அம்மையாரே தன் கைப்பட கடிதம் எழுதிக் கொடுத்தார்.

"உயர்திரு மாமா அவர்களுக்கு, மருமகளின் அநேகக் கோடி வணக்கம்: தங்களது கடிதம் கிடைத்தது. அதில் மிகவும் அவசியமான தகவல் எழுதப்பட்டிருந்தது. நானும் வீரணனும் சேர்ந்து கொன்றதாகச் சொல்லப்பட்ட சிங்கராயர் இரங்கூனில் இருப்பது உண்மை தாஞ என்று இன்னும் நான் நம்பவில்லை. ஒரு வேளை, எங்கள்மீது தொடரப்பட்ட வழக்கு கண்கட்டு வித்தையாகவும் இருக்கலாம். சிங்கராயன், தமிழ்நாட்டுக்கு வந்து சொல்ல வேண்டிய இடத்தில் 'நான் சாகவில்லை' என்று சொன்னுல் எங்களுக்குப் புது வாழ்வு கிடைக்கலாம். முயற்சி செய்யுங்கள்.

பிரியமுள்ள மருமகள்,
**செவந்திமாலை**

# 11. அன்னையும் அதிகாரியும்

மூன்று மாதங்களுக்குப்பின் ஒரு நாள்!

அன்று மாலைப் பொழுது சாய்ந்து விட்டது. கைதிகள் கூண்டுக்குள் போகும் சமயம் மழை தூறிக் கொண்டிருந்தது. சிறையதிகாரி ஜகதீசன் கைப் பிரம்பைச் சுழற்றிக்கொண்டு வேகமாக அவரது அறைக்குள் நுழைந்தார். அவரது முகம் கம்பீரமாக இருந்தது. அப்பொழுதுதான் சிறைக்குள் யாரோ ஒரு கைதியைப் பதம் பார்த்துவிட்டு வந்திருக்கிறார், சிறை மதில்கள் கோயில் மதில்களைப்போல் உயர்ந்தவை; வெளியில் இருக்கும் மாடி வீடுகள்கூடக் கண்ணுக்குத் தெரியாது. அவ்வளவு உயரம்! குருவிப் பொந்துகளைக்கூட அந்தச் சுவர்களில் பார்க்க முடியாது. எங்காவது செதில் போயிருந்தாலும் உடனே பூசி விடுவார்கள் அதிகாரிகள்.

ஒரு கைதி—குல்லாயில் சிவப்புப் புள்ளி வைத்த ஆயுள் கைதி—மதில் ஓரமாக பயந்து பயந்து நடந்து வந்தான். அவன் அதிகாரியின் அறையை நோக்கித் தான் வந்தான். அவன் முகத்திலே பீதி இருந்தது. பார்ப்பவர்களுக்கு அந்த கைதி தப்பித்து ஓட எத்தனிப்பவன் போலத்தான் தெரிந்தது.

அதிகாரி மிகவும் நுணுக்கமான புத்தியுள்ளவர். எத்தனையோ ஆயிரக்கணக்கான மனோ நிலை யுடையவர்களுடன் பழகுபவரல்லவா! அவர் அறையிலிருந்தபடி ஜன்னல் வழியாக அந்தக் கைதியை கவனித்துக் கொண்டே இருந்தார். அந்தக் கைதி, ஒரு பூச்செடிக்குப் பக்கத்தில் போய் பூக்களைப் பறித்தான். பறித்த பூக்களை தன் குள்ளாவுக்குள் வைத்துக்கொண்டு

மீண்டும் நடந்தான். நடையின் வேகம் வரவர அதிகரித்தது. அதற்குள் அதிகாரியின் அறை வந்து விட்டது. ஒருவருக்கும் தெரியாமல் அதிகாரியின் அறைக்குள் நுழைந்துவிட வேண்டுமென்ற ஆசையில் குபீரென்று அறைக்குள் பாய்ந்தான். அவன் வேறு யாருமல்ல வீரணன் தான்.

உள்ளே ஜெகதீசன் கைத்துப்பாக்கியை நீட்டிய படி வாசற்படியில் நின்ருர்.

"எசமான் என்னை மன்னிக்கவேண்டும். நான் ஒரு ஆயுள் கைதி; செவந்தி மாலையின் கணவன். நான் தங்களிடம் பிச்சை கேட்க வந்திருக்கிறேன். உயிர் பிச்சை கேட்க வந்திருக்கிறேன். நான் யாரைக் கொன்றதாக தண்டிக்கப் பட்டேனே அவன் இரங்கூனுக்கு போய் விட்டு வந்திருப்பதாக தகவல் வந்திருக்கிறது. செவந்தி கொட்டடியிலிருந்து சொல்லியனுப்பி இருக்கிருள். அவன் நாளை இரவு சிறைமதில் ஓரமுள்ள தங்களது வீட்டுத் தோட்டத்திற்கு வருவதாகச் சொல்லி அனுப்பியிருக்கிருன். நான் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவன். மானத்திற்காக குற்றங்களைச் செய்தவன். கொலை எனது தொழில் அல்ல. கடவுளை வேண்டுவது போல் வேண்டுகிறேன். அவனோடு பேசுவதற்கு மட்டும் எனக்கு அனுமதி அளியுங்கள். என் மனைவியின் பெயரில், எனது குழந்தையின் பெயரில் ஆணையிட்டுக் கெஞ்சுகிறேன். நான் ஓட மாட்டேன் "என்று அழுது புலம்பி தொப்பிக்குள் இருந்த மலர்களை அதிகாரி ஜெகதீசன் பாதங்களில் கொட்டி, வணங்கி, கண்ணீரால் கழுவினுன் வீரணன்.

ஜெகதீசன் நெறி தவருதவர். கீழ் உத்தியோகத்திலிருந்து உயர்த்தப்பட்டவர். சிறைக்குள் துப்பாக்கிப்

பிரயோகம் செய்ய வேண்டிய கட்டங்களில் எல்லாம் அன்பினுலும், ஒழுக்கமான பேச்சுக்களாலும் அமைதி கண்டவர் என்ற புகழ் அவருக்கு இருந்தது. மனச் சான்றுக்குப் புறம்பாக அவர் எதையும் செய்வதில்லை. ஆனல், வீரணன் கூறிய வழக்கு விபரம் அவர் உள்ளத்தைக் குடைந்தது. ஜெகதீசன் பிரம்பைப் பிடித்தபடி ஒரு கணம் சிலையாக நின்ருர். உடலைப் போர்த்தியிருந்த உத்தியோகச் சட்டை அதில் தொங்கிக் கொண்டிருந்த புகழ்ப் பட்டையங்கள் முதலியவைகளை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டார். அதன் பிறகு அவர் வாய் அசைந்தது.

"வீரணு, இதெல்லாம் சட்ட விரோதம்! எனது உத்தியோகக் கெளரவத்திற்கு உகந்ததல்ல! போய்விடு! எழுந்து ஓடிவிடு!" என்று, சம்பிரதாயத்திற்காக முகத்தை நெருப்பாக்கிக் கொண்டு பேசி விட்டு, அந்த இடத்தைவிட்டகன்று விட்டார் செஜதீசன். அவர் உள்ளத்தில் மறு ஏற்பட்டது போன்ற ஒரு சிறு உணர்ச்சியுடன் அவர் பங்களாவுக்குப் போய்விட்டார்.

வீட்டில் திலகவதி அம்மையார் மகனுக்காக எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்.

"ஜெகதீசா!"

"அம்மா!"

"ஏன் இவ்வளவு தாமதம்?"

"அதிகாரிகள் எப்போதுமே கோபமாகத்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், பணியாளர்களிடத்தில் மரியாதையை எதிர்பார்க்கக்கூடாது."

"என்னப்பா அப்படி நடந்து விட்டது?"

"எனது, உத்தியோகக் காலத்தில் நடக்காத ஒன்று, இன்று நடந்துவிட்டது! ஒரு கைதி, வேறு யாருமில்லை, செவந்திமாலேயின் புருஷன், ஒரு மணி நேரம் ரகசியமாக வெளியே வந்து போக, அனுமதி கேட்டு விட்டான்."

"கேட்டால் என்ன? அவன் ஆயுள் கைதி! இனி அவனுக்கு வாழ்க்கை இல்லை! நீ இரக்கமுள்ளவன் என்று கேட்டிருக்கிருன். தவறு ஒன்றுமில்லையே, ஜெகதீசா!"

"அம்மா, நான் சட்டப்படி நடக்க மாட்டேன், வளைந்து கொடுத்துவிடுவேனென்று குறைத்து என்னை எண்ணியிருக்கிருன் அவன்!"

"ஐயோ ஜெகதீசா! அவன் அப்படி நினைத்து இருக்கவே மாட்டான். அவன் மனைவியைத் தெரியுமே உனக்கு! அவளும் அப்படிப்பட்டவளல்ல! வீரணன் உன்னைக் கேட்டிராவிட்டால் நான் உன்னைக் கேட்டிருப்பேன்."

"அம்மா!"

"ஆம்; அவர்களது விடுதலை, கண்ணுக்குத் தெரிகிறது. அதை நாம்தான் எடுத்துக் கொடுக்கவேண்டும். ஒரு மணி நேரம் வேண்டாம்! ஜெகதீசா, ஒரு நாழிகை போதும்!" -திலகவதி அம்மையார் மகன் தன் பேச்சைக் கேட்பானென்ற நம்பிக்கையில் சிரித்துக் கொண்டே பேசினுர்.

"அம்மா! அது மட்டும் நடக்காது! அரசாங்கம் என்மீது நம்பிக்கை வைத்து ஆயிரம் கொலைக் கைதிகளை ஒப்படைத்திருக்கிறது. நான் அரசாங்கத்திற்கு ஒரு போதும் துரோகம் செய்ய மாட்டேன்."

"தம்பீ, அவர்களது வழக்கு தெரியுமா உனக்கு! விசித்திரமான வழக்கு! உன்னைப் போல் எல்லா அதிகாரிகளும் நீதிமான்களாக இருந்திருந்தால் வீரணனுக்கும் செவந்திமாலைக்கும் தண்டனையே கிடைத்திருக்காது. செத்துப் போனதாகச் சொல்லப்பட்டவன், உயிரோடு இருக்கிறான். எந்த நீதிபதி இவர்களுக்குத் தண்டனை கொடுத்தார்? எப்படிக் கொடுத்தார், ஜெகதீசா! உன்னைப்போல் நான் பட்டப்படிப்புப் படிக்கவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் கவனத்தில் வைத்துக் கொள்! உன்னைப் போன்ற ஒரு பெரிய அரசாங்க அதிகாரி தவறாக நீதி சொன்னதை மாற்றி, உண்மையான நீதியை நிலை நாட்டவேண்டுமானால் நீ தவறாமல் இந்த உதவியைச் செய்யத்தான் வேண்டும்; அவன் தப்பமாட்டான் என்பதற்கு நான் பொறுப்பு!"
-திலகவதி அம்மையார் உருக்கமாகப் பேசினார்.

"அம்மா! 'கடமையில் தவறாதே' என்று அறிவுறுத்தும் நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்!"

"நான் தான்!-பேசவில்லை, பெற்ற மகனிடத்தில் மண்டியிட்டுக் கேட்கிறேன்."

"அம்மா!"

"பேசாதே ஜெகதீசா! எனக்காக அதைச் செய்!" என்றாள் திலகவதி அம்மையார்.

ஜெகதீசன் முகத்தைச் சுளித்துக் கொண்டே மாடிக்குப் போய்விட்டான்.

பங்களாவில் அமைதி நிலவியது! சாப்பிடுவதற்குக் கூட ஜெகதீசன் கீழே இறங்கவில்லை.

மறுநாள் இரவு. காவல்காரன் ஒன்பது மணி அடித்தான். காவலர்கள் மதிலோரமாக ரோந்து

சுற்றிக் கொண்டிருந்தார்கள். வீரணன் மட்டும் கொட்டடியிலிருந்து அழைத்து வரப்பட்டான். அவன் உள்ளம் குழம்பியிருந்தது. 'முதல்நாள் செய்த தவறுக்குத் தண்டனை கிடைக்கப் போகிறது' என்று பயந்து கொண்டே நடந்து வந்தான்.

''வீரணா!''

''எஜமான்!''

''பங்களாவுக்கு வெளியே போகக்கூடாது. சரியாகப் பத்துமணி அடிக்கும்போது நீ கோட்டைக்குள் இருக்கவேண்டும்! போ!'' என்று தலையைக் கவிழ்த்துக் கொண்டே சொன்னார் அதிகாரி. கடமையில் தவறி விட்டதாக அவருக்கு மனம் உறுத்தியது. கடிகாரத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

## 12. கனவல்ல !

அதிகாரியின் பங்களாத் தோட்டத்தில் மரங்கள் அடர்த்தியாக இருந்தன. தோட்டத்தைச் சுற்றிக், கைதிகள் மண்சுவர் எழுப்பியிருந்தார்கள். சுவர் உயரக்கட்டை; நிலவு மழை மேகத்தையும் துளைத்துக் கொண்டு மங்கலாகத் தெரிந்தது. திட்ட மிட்டபடி ராவுத்தரைப்போல் சிங்கராயன் கை கட்டிக்கொண்டு சுவருக்கு வெளியே நின்றுகொண்டிருந்தான். முதலில் வீரணனுக்கே அடையாளம் தெரியவில்லை. தலையிலிருந்த பட்டுத் தொப்பியைக் கையில் எடுத்த பின்னரே தான் வீரணனால் அவனைத்தெரிந்துகொள்ள முடிந்தது.

''வீரணா! சௌக்கியமா?''

"இதோ என்னைத்தான் பார்க்கிறாயே!"

"ஏதோ நடந்துவிட்டது! நடப்பதைக் கவனிப் போம்!"

"இனிமேல் நீ தான் எல்லாம் செய்யவேண்டும்."

"செய்வதைப் பற்றி ஒன்றும் இல்லை! என்னை அவ தூறாகக் குற்றம் சாட்டிய செவந்திமாலையை நினைத் தால் இன்னும் என்மனம் துடிக்கிறது வீரணா!"

"விட்டுத்தள்ளு! அவள் சின்னப்பெண்தானே!"

"வீரணா வருத்தப்படாதே! நான் இரங்கூனை விட்டுப் புறப்படும்போது சித்திரவேலு விடத்தில் ஒரு நிபந்தனை போட்டு விட்டுத்தான் வந்திருக்கிறேன்."

"என்ன அது! என்னிடம் சொல்லக் கூடாதா? எங்களை விடுதலை செய்யும் உனக்கு எது வேண்டு மானாலும் நாங்கள் செய்வோம்!"

"எனக்குப் பொன் வேண்டாம்! பொருள் வேண் டாம்! எனது வாழ்க்கையில் தணியாத வெறி! செவந்தி மாலை என் கைக்கு வரவேண்டும்! அவளைப் பழிவாங்க வேண்டும்."

"என்ன!"

"விடுதலை என்றால், சாமான்யமா, வீரணா?"

"சிங்கராயா!"

சிங்கராயன் சிரித்தான்.

"சிங்கராயா, இந்த பேரத்திற்காகவா இங்கு வந்தாய்?"

சிங்கராயன் மீண்டும் பலமாகச் சிரித்தான். வார்த் தைகள் பழுத்தன.

தோட்டத்திற்குள், மாலையில் கைதிகள் வேலை பார்த்து விட்டு வைத்துப்போன மண்வெட்டி ஒன்று கிடந்தது. வீரணன் அதைக்கொண்டு முழுபலத்தையும் தாங்கி சிங்கராயனைத் தாக்கிவிட்டான்.

சிறைக்காவலன் மணி பத்தடித்து விட்டான். வீரணன் மண்வெட்டியைப் போட்டுவிட்டு சிறைக்குள் ஓடினான். அதிகாரி ஜகதீசன் உலாத்திக்கொண்டே நின்றார். வீரணன் அவர் காலில் விழுந்தான். ஜெகதீசன் அந்த வணக்கத்தை ஏற்றுக்கொள்ளும் தோரணையில் புன் முறுவல் பூத்தார்.

இரவு முழுவதும் தூங்கவே இல்லை. ஏதோ பாடிக் கொண்டே இருந்தான் அவனையுமறியாமல் வந்த பாட்டுக்கள் அவை.

பொழுது விடிந்தது. வீரணன் பைத்தியம் பிடித்த வனைப்போல் வரிசையில் நின்றான். கஞ்சி ஊற்றப் பட்டது. உப்புக்கூட வாங்காமல் வழக்கமான மரத்தடிக்குப்போய் கண்ணை மூடிக்கொண்டு குடித் தான்.

கூட்டாளிகள் வந்து பேசினார்கள்.

பதில் பேசவில்லை, அவன். வேலைக்குப்போக அழைத்தார்கள்.

அதற்கும் அவன் பதில் பேசவில்லை. அவனுக்கென விடப்பட்டிருந்த ஒட்டுத் திண்ணையில் போய் தலையைச் சாய்த்துவிட்டான்.

பிற்பகலுக்குமேல், வெளித்தகவல்கள் படிப்படி யாக உள்ளே வந்தன!

நமது சிறைக்கு எதிரே உள்ள பாதையில் ஒரு பெரிய பணக்காரன் இறந்து கிடக்கிறான். கார் அடித்து

விட்டதாம், பாதிராத்திரியில் ஓலம் கேட்டதாம்!'' என்று ஒரு தகவல் வந்தது.

''இல்லை! ஒரு பெண்ணைக் கடத்திக்கொண்டு வந்தானும் ஒரு சேட்! பெண்ணுக்குச் சொந்தக்காரன், பெண்ணை மீட்டுக்கொண்டு, சேட்டை வெட்டிப் போட்டுவிட்டுப் போய்விட்டானும். அந்தப் பெண் இப்போது போலீஸ் ஸ்டேஷனில் இருக்கிருளாம்.'' -இப்படி ஒரு தகவல்.

ஒட்டுத் திண்ணையில் சாய்ந்து கிடந்த வீரணனுக்கு இந்த வதந்திகள் உலவுவது தெரியாமலில்லை. தெரியும்! ஒரு மாதகாலம் அந்த வதந்திகள் சிறைக்கூடத்தையே அரற்றிக்கொண்டிருந்தன.

ஒரு நாள் பகல், பெரிய பெரிய அதிகாரிகளெல்லாம் சிறைக்கு வந்திருந்தார்கள். சிறை மிகவும் சுத்தமாக வைக்கப்பட்டிருந்தது. சிறையதிகாரியின் பணியாள் ஒருவன் வந்து வீரணனை அழைத்துப்போனுன். வீரணன் உயிர் அவனிடத்தில் இல்லை. உயிர் போய் விட்டது போன்ற உணர்ச்சி!

சிறை அதிகாரியின் அறையில் பல பெரிய அதிகாரிகள் உட்கார்ந்திருந்தார்கள். வீரணனுக்கு முன்பே செவந்திமாலை அழைத்து வரப்பட்டிருந்தாள். கைக் குழந்தையும் அவள் இடுப்பில் இருந்தது.

யார் முகத்திலும் குணத்தைக் கண்டு பிடித்து விடலாம், போலீஸ் இலாக்கா அதிகாரிகளின் முகத்தில் மட்டும் எந்த அறிகுறியையும் காணமுடியாது. உத்தியோகத்திற்குப் போகும்போதே இருதயத்தைக் கழற்றி மனைவியிடம் கொடுத்து விடுகிருர்கள் என்பது வீரணனின் பழைய சித்தாந்தம். அன்றும் அந்தச் சித்தாந்தம் அவன் நினைவுக்கு வந்தது.

"வீரணு, உனக்கும் உன் மனைவிக்கும் அரசாங்கம் ஒரு தனி உத்தரவு பிறப்பித்திருக்கிறது. சிங்கராயன் என்ற பேர்பெற்ற கொள்ளைக்காரனை நீயும் உன் மனைவியும் சதி செய்து தேவகோட்டை யருகே கொன்றது ஏற்கனவே சர்க்காரின் கவனத்திற்கு வந்திருக்கிறது. ஆனால் சென்ற மாதம் இதே சிறைச்சாலைக்குச் சற்றுத் தொலைவில் நடைபெற்றுள்ள கொலையை அரசாங்கம் கவனித்து நோக்கிய பின்னர், இப்போது கொல்லப் பட்டவன் தான் சிங்கராயன் என்று சர்க்கார் தீர்மானித் திருக்கிறது. ஆசையால் பழைய வழக்கில் பல பொய்ச் சாட்சிகளைக்கொண்டு, உன்னையும் உன் மனைவியையும் தண்டிக்க நேர்ந்தமைக்கு சர்க்கார் வருந்தி உங்கள் இருவரையும் விடுதலை செய்து, உங்களுக்கு உதவித் தொகையாக ரூ. 10001-யும் தந்திருக்கிறது" என்று வந்திருந்த பெரிய அதிகாரி ஒருவர் எடுத்துச் சொன்னார்.

வீரணன் முதலில் நம்பவில்லை. சிறை அதிகாரி ஜெகதீசன் அவனருகில் வந்து வீரணன் முதுகைத் தட்டி "குற்றவாளிகள் பிறப்பதில்லை. முட்டாள் தனம் மனிதனைக் குற்றவாளியாக்கி விடுகிறது. கோபம் அவனைக் கொலைகாரனாக மாற்றி விடுகிறது. கோபப் படாமல் வாழக் கற்றுக்கொள், செவந்தி உனக்கும் தான்!" என்றார்.

ஜெகதீசன் கடைக் கண்ணில் நீர் அரும்பி நின்றது. ஆயிரக்கணக்கான கைதிகள் எட்டி நின்று, புது மணத் தம்பதிகளைப் பார்ப்பது போல் பார்த்தார்கள்.

* * *

ஜெகதீசன் மாளிகை அமைதியாக இருந்தது. வீரணன் செவந்தியை அழைத்துக்கொண்டு திலகவதி யம்மையாரைப் பார்க்கப்போனன். அவன் கையில் இரண்டு மாலைகள் இருந்தன.

திலகவதியம்மையார் வீட்டுக்குள்ளே சாம்பிராணி புகை போட்டுக் கொண்டிருந்தார்.

"அம்மா!"

"செவந்தி! வீரணு! எனக்கு ரொம்ப சந்தோஷம்! நீங்கள் புதுப்பிறவிகள்! அமைதியாகப் பிழைக்கப் பழகிக்கொள்ளுங்கள். செவந்தி இங்கேயே இருக்கலாம்! எனக்கும் துணையாக இருக்கும்" என்ருள்

செவந்தியின் கண்களில் நீர் பூத்தது.

செவந்தி, திலகவதியாரின் கழுத்தில் மாலையைப் போடப்போனுள்!

"எனக்கு ஏன் மாலை, உள்ளே வா! என் பிள்ளைக்குப் போடு! நல்ல பிள்ளைகளைப் பெற்றேன். கடமை தவருத வர்கள் என் பிள்ளைகள்! அவர்களுக்குப்போடு மாலையை!" என்று செவந்தியை உள்ளே அழைத்துப் போனுள் திலகவதி அம்மையார்.

உள்ளே இரண்டு படங்கள் இருந்தன. ஒன்று சிறை அதிகாரி ஜெகதீசன் படம்! இன்னென்று...செவந்திக்கு அடையாளம் தெரியவில்லை. திலகவதியார் முகத்தைப் பார்த்தாள்.

"இவன் தான் ஜெகதீசன்! இதோ இருக்கிருனே இவன் இளையவன். ஆனல் இப்போது இல்லை. சுட்டுக் கொன்றுவிட்டார்கள். பெயர் தங்கப் பாண்டியன்" என்று திலகவதியார் சொல்லி முடிப்பதற்கும் வீரணன் அந்த அறைக்குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது.

"ஐயோ, தாயே!" என்று கதறினன் வீரணன்.

என்ன "வீரணு! வீரணு! என்ன உடம்பிற்கு! சொல்லு!" திலகவதியார் கேட்டார்!

வீரணன் மயங்கிக்கிடந்தான். விழித்துப் பார்க்கும் பொழுது, திலகவதியாரும், செவந்திமாலையும் விசிறிக்கொண்டிருந்தார்கள். வீரணன் பெரியம்மாளை வணங்கினன். அடுத்து செவந்தியைப் பார்த்தான்.

"சாகும் வரை கண்கண்ட தெய்வமான இந்த நாச்சியாருக்கே உழைக்கப் போகிறேன்" என்ருள்.

"அதைத்தான் நானும் சொல்ல இருந்தேன்" என்ருன் வீரணன்.

கைக் குழந்தை—பெண் குழந்தை தவழ்ந்து வந்தது!

"தாயே, எனக்கு அனுமதி வழங்கவேண்டும்; என் குழந்தைக்கு திலகவதி என்று பெயர் வைக்கப்போகிறேன்" என்ருன் வீரணன்.

திலகவதியம்மையார் சிரித்தார். அந்தச் சிரிப்பில் பெருந்தன்மை, தியாகசீலம் எல்லாம் சேர்ந்து நின்றன.

———

## “சுவாமியே சரணம் ஐயப்பா”

முரசொலி இதழில் பணிபுரியும் அருமைத் தோழர் தினகரன் அவர்கள் என்மீது அதிக மான பிரியம் கொண்டவர். என்னைப் பிடித்து வைத்து இந்தக் கதையை எழுதி வாங்கினர். எனக்கு எளிதில் கருப்பொருள் கிடைக்க வில்லை. அதே நேரத்தில் தெருவில் ‘சுவாமியே சரணம் ஐயப்பா’ என்ற குரல் கேட்டது. அந்த கோஷம் சபரிமலையில் நடந்த ஒரு சம்ப வத்தை எனக்கு நினைவுபடுத்தியது. அது தான் இந்தக் கதை. ‘மறவன் மடல்’ இதழில் இந்தக் கதை தொடர்ந்து வெளி வந்தது.

தென்னரசு

# கருணைக்கு அழிவில்லை

என்னைத் தெரிகிறதா, உனக்கு? தெரியாது. நான்தான் அர்ஜுனராஜா. தமிழ் மொழி பரவாத நெடுந் தொலைவில்—மலைச் சரிவில்—பனிப் பாதைகளுக்கு மத்தியில் ஒரே டேராவுக்குள் உட்கார்ந்து கொண்டு ஒவ்வொரு நாளும் நாட்டைப் பற்றியே சிந்திக்கும் மேஜர் அர்ஜுனன் நான்தான். பாய்ந்து விளையும் சோழ தேசத்திற்கு அடுத்துள்ள காய்ந்து விளையும் பாண்டியர் தேசத்தைச் சேர்ந்தவன் நான். மதுரையையும் இராமநாதபுரத்தையும் இணைத்து கணவனும் மனைவியும் போல் ஒரு குடும்பமாக்கி மகிழ்ந்தோடு கிறதே வைகை நதி—அந்த நதியின் முகத்துவாரத்தில் இருக்கும் திருப்புல்லாணி என் சொந்த ஊர். நூற்றுக் கணக்கான மைல்களுக்கப்பால் இருந்துகொண்டு என் சொந்த ஊரை நினைக்கிறேன்.

தாயை நினைத்து மனம் நெகிழ்வது போல் ஊரை நினைக்கும்போது மனம் நெகிழ்கிறது. ஊரைத் தழுவி இருக்கும் மஞ்சப் பட்டுப்போன்ற கடற்கரை, அணி வகுத்து நிற்கும் பூவரசு மரங்கள், வெற்றிலைக் கொடிக் கால், வாழைத்தோட்டம், விண்ணோங்கி வளர்ந்து

சீனப்படை இந்தியாவை ஒரு மூலையில் முற்றுகையிட்டு விட்டது. இந்த நேரத்தில் போர்முனையில் இருக்கும் மேஜர்களுக்கு ஒரு குழப்பம்.

திடீரென்று எங்கள் முகாமிற்கு மாறுதல் உத்தரவு வந்தது. நாங்கள் உடனடியாகப் பத்தான் கோட்டிற்குப் போக வேண்டுமென்று உத்தரவு.

ராணுவத்தினர் போர்முனையில் போராடுவதைக் கூட உற்சாகமாகச் செய்வார்கள். ஆனால் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாறிப்போகும் கஷ்டமிருக்கிறதே அதுதான் எங்களுக்குப் பெரும் வேதனை. ஒரு குடும்பத்திற்குரிய பொருட்களை ஒரு வீரன் சுமந்து கொண்டு, அடுத்த முகாமிற்குப் போக வேண்டும். எந்தப்பொருளையும் உதறித் தள்ளிவிட்டுப் போய்விட முடியுமா? எல்லாமே அவனுக்கு முக்கியம்.

1965 செப்டம்பர் மாதம்—உணர்ச்சிகளின் உச்சக் கட்டம். எங்கள் பாடி வீடு ஆட்டம் கண்டு கொண்டிருந்தது. துப்பாக்கிச் சத்தமும் பீரங்கி முழக்கமும் நெருங்கிக் கொண்டிருந்தன. இந்த நெருக்கடிக்கு மத்தியில் ஊரிலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. கடிதத்தைப் படித்தவுடன் தமிழ் நாட்டின் இளையோர் திலகம் கலைஞர் கருணாநிதி அவர்களின் நாடகக் காட்சி தான் நினைவுக்கு வந்தன.

"எமதர்மன், என்னை அவன் முன்னால் நிறுத்தி, உனக்கு எறிதழல் வேண்டுமா? எண்ணெணக் கொப்பறை வேண்டுமா?" என்று கேட்பது போலிருந்தது. அவ்வளவு துயரம் நிறைந்த கடிதம், அது, ஊரிலிருந்து எனக்கு வந்த கடிதம். தந்தை எழுதியது.

—'ராஜம் விஷம் குடித்துவிட்டாள்; தக்க தருணத்தில் டாக்டர்கள் காப்பாற்றி விட்டார்கள்.' என்று கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

போர்முனையில் உள்ள நாங்கள் பேராபத்துக்களை யெல்லாம் தாய் நாட்டு உணர்ச்சியுடன் சமாளித்து வருகிறோம். சிறு பிள்ளைகள் பொம்மைகளை உடைத்து மகிழ்வது போல் எதிரிகளின் சிரங்களைக் கொய்து மகிழ் வோம். ஆனால் குடும்பத்திலிருந்து வரும் கடிதங்களின் கண்ணீரைத்தான் எங்களால் சமாளிக்க முடிவதில்லை.

ராஜம் என் கூடப் பிறந்த தங்கை; ஒரே சகோதரி! எனக்கு அவள் கதை ஒரு சோகப் புலம்பல். அந்தப் புலம்பலையும் அவளால் கூற இயலாது. அதை யும் நான்தான் சொல்ல வேண்டும். ராஜ குடும்பத்தில் மூத்த பிள்ளையாகப் பிறப்பவன் பாக்கியசாலி—அவ னுக்கு உரிமைகள் அதிகம். ஆனால் என்னைப் போல் சாதாரணக் குடும்பத்தில் மூத்த பிள்ளையாகப் பிறப்ப வனுக்குக் கடமைகள் தான் அதிகம்.

ராஜத்திற்கு நல்ல இடத்தில் சம்பந்தம் நடந்தது. மாப்பிள்ளை செல்வந்தர் வீட்டுப் பையன்; செல்லப் பிள்ளை. மகள் உற்சாகமாக இருக்கட்டும் என்று பணக் கார வீட்டில் கொடுத்தார் என் தந்தை. அதற்கு முன் பாகவே நான் ராணுவத்திற்கு வந்து விட்டேன்.

ராஜத்தின் திருமணத்திற்குக்கூடப் போக முடிய வில்லை. இரண்டு மாதங்களுக்குப்பின் ஒருமுறை போய் மாப்பிள்ளையைப் பார்த்தேன். அப்போதே எனக்கு ஒரு சந்தேகம். மாப்பிள்ளையின் பேச்சு சித்தப்பிரமை கொண்டவரைப் போலிருந்தது. சிரிக்கக்கூடாத இடங் களிலெல்லாம் சிரித்தார். என்னால் எதையும் வெளிக் காண்பித்துக் கொள்ள முடியவில்லை. பெண்ணிற்கு மாப்பிள்ளை பார்க்கும் பெற்றோர்கள் வீடு, வாசல், காடு கரை என்று மட்டும் பார்க்கிறார்களே தவிர, நடை முறைக்கு இணங்கி வரக்கூடிய மனவேற்றுமை, திடகாத் திரம் இவைகளைப் பார்ப்பதில்லை.

என் தங்கைக்கு அமைந்த மாமனுர் வீடு பெரிது; மிகப் பெரிது; காடுகள் அதிகம்; மிக அதிகம். ஆனுல் மாப்பிள்ளை...!

எனக்குப் பட்ட குறைகளை என் ராஜம் உணர்ந்திருக்கிருளா என்று என்னுல் ஊகித்துக்கூடப் பார்க்க முடியவில்லை. ராஜம் மகிழ்வாகத்தான் இருந்தாள். அவள் அணிந்திருந்த வைரக் கம்மலும் காப்பும், ஒளி வீசிக் கொண்டுதானிருந்தன. அவள் மனத்திற்குள் என்ன இருந்ததோ? இங்கேதானே தமிழ்ப் பெண்கள் சிறந்தவர்களாகி விடுகிருர்கள்.

பிரெஞ்சுக்காரனும், டச்சுக்காரனும், ஆங்கிலேயனும் தமிழ் நாட்டில் ஆடவர்களின் இயல்புகளையும் நடையுடைபாவனைகளைத்தான் மாற்றிஞர்களே தவிர, பெண்களின் பக்கமே அவர்களால் போக முடியாமல், போனதற்குத் தமிழ்ப் பெண்களின் ஆழ்ந்த கலாச்சாரப் பிடிப்புதான் காரணம் என்பதை, என்னுல் அப்போதுதான் புரிந்துகொள்ள முடிந்தது.

குடுமி வைத்தவர்கள், கிராப்புத் தலையராஞர்கள். கோவணம் கட்டியவர்கள் ட்வீட் பாண்ட் போட்டார்கள். கசங்கிய மேலாடை கலர் சட்டைகளாகின. ஆனுல் தமிழ்ப் பெண்களின் 12 முழப்புடவை அயல் நாட்டு அங்கிகளாயினவா? இந்தியாவில் அன்னியர் கலாச்சாரம் புகாமல் தடுக்கப்பட்டதற்கு தமிழ்ப் பெண்களின் கற்பும், பற்றும்தான் காரணமாக இருக்கும் என்பதை என்னுல் உணர முடிகிறது.

தங்கை ராஜம் ஓராண்டு காலம் கணவன் வீட்டில் இருந்தாள். அதற்கு அடுத்து அவளுக்கு முதல் அடி விழுந்தது. திடீரென்று ஒரு நாள் அவள் கணவன்

காணுமல் போய் விட்டான். கோபமாகப் போனுல் யாரும் திரும்பலாம்; திருடி விட்டுப் போனுல் சிறைச் சாலைகளிலாவது தேடிப் பார்க்கலாம்; புத்தி சரியில்லா மல் போனவனை எங்கே தேடுவது? தேடிப் பார்த்துச் சலித்துப் போய் விட்டார்கள். அதிலிருந்து என் தங்கை தந்தையுடனேயே இருந்தாள். மாலைப்பூக்கும் மல்லிகை யாருக்கும் பயன்படாமல் இருப்பது போல், என் தங்கையின் இளமையும் அழகும் வெதும்பிக் கொண்டிருந்தன.

சீன ஆக்கிரமிப்பு மேலும் அதிகமாகியது. ராணு வத்திற்குப் புதிய புதிய அணிகள் வந்தன. அதில் தமிழ் நாட்டிலிருந்து வந்த ரவீந்திரன் என் மனதைக் கவ்விப் பிடித்தான். நான் ஏங்கிக் கொண்டிருந்ததாலோ என்னமோ தெரியவில்லை, அவன் ராஜத்தின் கணவனைப் போலவே இருந்தான் சாயலில். அவனைவிரும்பியே என் கூடாரத்திற்கு அழைத்துக்கொண்டேன். ஒரே வகை யைச் சார்ந்த பூக்கள் ஒரே மாதிரி தோன்றுகின்றன; ஒரே மாதிரி மணக்கின்றன. ஆனுல், தோற்றத்தில் ஒரே மாதிரி இருக்கும் இரண்டு மனிதர்கள் ஒரே மாதிரி இருப்பதில்லை. குணத்திலும், அறிவிலும் மாறுபடு கின்றனர்.

ராணுவத்திலிருக்கும் ரவீந்திரன் சித்தக்கோளாறு உடையவனல்ல. சிந்திப்பவன்; ஆனுல் அதிகப்படியாகச் சிந்திப்பவன். என் தங்கையின் புருஷன் சிந்திக்கவே தெரியாதவன். ஆனுல் இருவரும் தோற்றத்தில் ஒரே மாதிரி இருந்தார்கள். இந்த அதிசயத்தை என் தங்கைக்கு எழுத வேண்டுமென்று கூட நினைத்தேன். அதனுலாவது என் தங்கை நிம்மதியடைய மாட் டாளா? என்று எனக்கொரு சபலம். இப்படிச் சில மாதங்கள் கழிந்தன.

ஒரு நாள் ரவீந்திரனுக்கு நல்ல காய்ச்சல். ஆனால் டாக்டர்கள் பரிசோதித்துவிட்டு ரவிக்குக் காய்ச்சலே இல்லை என்று கூறிவிட்டார்கள். எனக்கு அன்று ஓய்வு. எனக்கும் ரவிக்கும் மாறி மாறித்தான் வேலைகள்வரும். 'என்னால், இன்று வேலைக்குப் போக முடியாது' என்று ரவி கூறினான், போகாவிட்டால் அவனுக்குத் தண்டனை கிடைக்கும். அதனால் அவனைக் காப்பாற்றுவதற்காக அவனது வில்லையை நான் எடுத்துக்கொண்டு, அவன் பெயரில் நான் ஆஜர் கொடுத்தேன். நடு இரவு வரை அவனுக்காகப் பனிப்பகுதியில் இருந்துவிட்டு கூடாரத்திற்கு வந்தேன். கூடாரத்தில் ரவி இல்லை. காய்ச்சல்காரன் எங்கே போயிருக்கப் போகிறான் என்று நானும் இருந்துவிட்டேன். பொழுது விடியும் வரை அவன் வரவில்லை. மறுநாள் நான் வேலைக்குப் போவதற்காக என் உடைகளை மாற்றினேன். என் பையில் ஒரு கடிதத்தை எழுதி வைத்திருந்தான் ரவி.

'என்னைத் தேட வேண்டாம் நான் உன்னை விட்டுப் பிரிந்துவிட்டேன்'—இதுதான் கடிதத்தின் சாரம்.

எனக்கு மனம் குழம்பியது. நோயின் கொடுமை தாங்க முடியாமல் இறந்துவிட்டானா? அல்லது பனியின் கொடுமை தாங்காமல் ஊருக்கு ஓடிவிட்டானா? என்று எனக்குப் புலப்படவில்லை. நிம்மதி இல்லாமல் என் பணி தொடர்ந்தது. போலீஸ் விசாரணையில் ரவி சொந்த ஊருக்கு வரவில்லை என்று அறிவித்தார்கள். எனது ஆசை என்னவென்று தெரியுமா ரவியைச் சமாதானப்படுத்தி, என் தங்கையையும் சமாதானப்படுத்தி என் தங்கையை மறுமணம் செய்து வைத்துவிடலாம் என்பதுதான்—இத்திட்டத்தில் இருக்கும் போதுதான் ரவி மாயமாக மறைந்து விட்டான்.

'எனக்காக என் அண்ணன் ஏன் இவ்வளவு துன்பப்படவேண்டும்' என்று எண்ணினாளோ என்னவோ என் தங்கை—அவளும் கண்களை மூடிவிடலாம் என்று விஷத்தைக் குடித்திருக்கிறாள். டாக்டர்கள் காப்பாற்றி விட்டார்கள். டாக்டர்களுக்கு நோயாளிகளின் மனத் துன்பங்களைப் பற்றிக் கவலை இல்லை; தந்தையின் கடிதத்தைப் பார்த்ததும் ஊருக்குப் புறப்படவேண்டும் என்று எண்ணினேன். ஆனால் மறு திங்கள்தான் எனக்கு லீவு கிடைத்தது.

விமானத்தில் ஊருக்குப் புறப்பட்டேன். நான் நகை கட்டுகள் வாங்கி செல்வதற்கு மனைவியோ, விளையாட்டுச் சாமான்கள் வாங்கிச் செல்வதற்கு எனக்குக் குழந்தைகளோ கிடையாது. ஒரே ஒரு உடன் பிறப்பு—அதுவும் கசிந்த வாழைப்பழத்தைப்போல் கண்கலங்கி நிற்கும் இளம் சுமங்கிலி. மனம் நிறைய ஆறுதல் வார்த்தைகளைத்தான் நான் கொண்டு சென்றேன். துக்கம் தாளாமல் துவண்டு போயிருப்பவர்களுக்கு, தேறுதல் மொழிகளைவிடச் சிறந்த திரவியம் எதுவும் இருக்க முடியுமா!

விமானம் நாகபுரிதிடலில் இறங்கியது. டில்லி விமான நிலையத்தில் புறப்படும்போதே, விமானத்தில் தெரிந்த முகம் இருக்கிறதா என்று பார்த்தேன். சில பேர் பத்திரிக்கை படித்துக் கொண்டிருந்ததால் முகம் தெளிவாகத் தெரியவில்லை. கோட்டும் சூட்டும் அணிந்து உத்தியோகத் தோரணையில் உள்ளவர்களே அதிகம் இருந்தார்கள். வந்தவர்களில் பெரும்பகுதிப்பேர் நாகப்புரியில் இறங்கிவிட்டார்கள்.

அரை மணி நேரத்திற்குப் பிறகு நாகபுரியை விட்டு விமானம் புறப்பட்டது. இனி அடுத்த நிலை

ஐதராபாத்துதான். விமானம் தெலுங்குச் சீமையின் மீது பறக்கும்போதே தமிழ் நாட்டின் சாயலும் மணமும் நெஞ்சைத் தடவுகின்றன.

விமானம் ஐதாராபாத்தை அணுகிக்கொண்டிருக்கும் போது பணிப்பெண் எல்லோருக்கும் தேனீர் கொடுத்தாள். அப்போது ஒரு குரல் கேட்டது.

"எனக்கு டீ வேண்டாம்! காப்பி!"

—இது எனக்குத் தெரிந்த குரல்; நெருங்கிப் பழகிய தோழமைக் குரல்!

நான் திரும்பிப் பார்த்தேன் ஐரோப்பிய உடையில் ஒரு இளைஞர் கருப்புக் கண்ணாடியுடன் அமர்ந்திருந்தார். பார்த்த முகம்தான். பழகிய முகம்தான். ரவீந்திரன்.

ரவீந்திரனா நம்மோடு பேசாதிருக்கிறான்? அவனாக இருக்காது. உலகில் எத்தனையோ பேருக்கு ஒரேமாதிரிக் குரல் அமைந்திருக்கின்றன; எத்தனையோ பேருக்கு ஒரே மாதிரி உருவங்கள் அமைகின்றன!— இப்படி எனக்குள்ளே ஒரு சமாதானம்.

அந்த உருவம் குனிந்த தலை நிமிராமல் பத்திரிக்கை படித்துக்கொண்டிருந்தது.

விமானம் ஐதாரபாத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. அந்த உருவம் பரபரவென்று விழித்துக் கொண்டிருந்தது. ஒரு வேளை சீன ஒற்றனாக இருக்குமோ? என்று எனக்கொரு சந்தேகம்.

தமிழனா இந்தியாவைச் சீனாக்காரனுக்குக் காட்டிக் கொடுக்கப் போகிறான்? இடையில் இப்படியும் ஒரு சபலம்.

எனக்கு சந்தேகம் வலுத்துவிட்டது. விமானம் ஐதராபாத் விமான நிலையத்தில் இறங்கியது. எல்லாப் பிரயாணிகளும் ஓய்வுக்காக இறங்கினார்கள். அந்த உருவம் மட்டும் இறங்கவில்லை. சின்ன கைரேடியோ ஒன்றை வைத்துக் கேட்டுக் கொண்டிருந்தது அந்த உருவம். ஒற்றர்கள்தான் ஆளில்லாத நேரத்தில் ரேடியோவைத் திருகிக்கொண்டிருப்பார்கள் என்று ராணுவத்திற்கு நன்கு தெரியும். அதனால் எனக்குச் சந்தேகம் அதிகரித்து விட்டது.

பிரயாணிகள் மீண்டும் விமானத்தில் ஏறினார்கள். அந்த உருவம் ரேடியோவை அமர்த்திப் பைக்குள் போட்டுக்கொண்டது. எனக்குச் சந்தேகம் உறுதியாகி விட்டது. விமானம் புறப்படுமுன் விமானியிடம் போய் பேசினேன்.

"சார் என்னை மன்னிக்கவேண்டும்; இந்த விமானத்தில் சீன ஒற்றன் ஒருவன் இருப்பதுபோல் எனக்குப் படுகிறது. ஆகவே கொஞ்சம் எச்சரிக்கையாகவே நீங்கள் இருக்க வேண்டும்" என்றேன்.

விமானி என் பேச்சைக் கேட்பதாக இல்லை. விமானம் புறப்பட்டது. அந்த உருவம் பைக்குள்ளிருந்து ஒரு சிறிய தேசப்படத்தை எடுத்து ரகசியமாக விரித்துப் பார்த்தது. அந்தப் படத்தில் சில சிவப்புப் புள்ளிகள் தெரிந்தன. அவை அடையாளங்களாக இருக்கலாம் என்பது என் முடிவு. ஒரு புள்ளி மீது விரலை வைத்துக்கொண்டு அந்த உருவம் பூமியை நோக்கிக் கீழேப் பார்த்தது; நானும் பார்த்தேன். கீழே, திருப்பதி வெங்கடாஜலபதி ஆலயத்தின் தங்கக் கோபுரம் மின்னியது. அதன் பிறகு அந்தப் புள்ளிகள்

அமைந்த இடங்களை நுணுக்கமாகப் பார்த்தேன். காரைக்குடி அழகப்பர் ஆராய்ச்சி நிலையம், எண்ணூர் அணல் மின்சார நிலையம், தூத்துக்குடி துறைமுகத் திட்டம், மதுரை மீனாட்சியம்மன் கோயில், திருச்சி பாய்லர் தொழிற்சாலை—இப்படி முக்கிய கேந்திரங்கள் எல்லாம் குறிக்கப்பட்டிருந்தன.

நான் விமானியின் அறைக்குச்சென்று, நிலைமையை எடுத்துச் சொன்னேன். விமானி என் பேச்சை நம்புவதாகத் தெரியவில்லை.

விமானம் இறங்கியவுடன் எல்லோரும் பெட்டிகளுடன் இறங்கினார்கள். அந்த உருவம்மட்டும் இறங்கவில்லை. அந்த உருவம் திருவனந்தபுரத்திற்கு டிக்கட் வாங்கி இருப்பதாக அறிந்தேன். நான் மறைவாகப் போய் அவன் நிலையை அறியப் பார்த்தேன். அவன் ஒற்றனே தான். சீன தேசத்து சாமான்கள் எல்லாம் அவன் வைத்திருந்தான். ஆனால் அவன் ரவீந்திரனா? யாராக இருந்தால் என்ன? துரோகி துரோகிதானே?

பிரயாணிகள் ஏறுமுன் விமானத்தில் ஏறினேன். அவன் பதட்டமடைந்தான்.

"நாட்டைக் காட்டிக் கொடுக்கத் திட்டமிடும் நாசக்காரர்" என்று கதறிக்கொண்டே இடுப்பிலிருந்த துப்பாக்கியை எடுத்தேன்.

"டபார்!"

விமானம் அதிர்ந்தது. சுற்றி இருந்தவர்கள் ஓடி வந்தார்கள்.

"பதட்டமடைய வேண்டாம் நான்தான் சுட்டேன். அவன் சீன ஒற்றன் அதனால் சுட்டேன்" என்றேன்.

என்னைப் போலீஸில் ஒப்படைத்தார்கள். விசாரணை நடந்தது: இறந்துபோன ஒற்றனது பொருட்களின் மீது ஆராய்ச்சி நடந்தது. இறுதியில் அவன் ஒற்றந் தான் என்று தீர்மானிக்கப்பட்டது. எனக்குப் பரிசு களும் பாராட்டுகளும் கிடைத்தன.

விசாரணைக் கூடத்திலிருந்து விடுதலை பெற்று நான் ஊருக்குப் போனேன். என் தங்கை புருஷன் வீட்டிற்கு போயிருப்பதாகச் சொன்னார்கள்.

புருஷன் வீட்டிற்கா? அங்கே யார் இருக்கிறார்கள். எனக்குக் குழப்பம். அங்கேயும் போனேன். என் தங்கை யாரோ இளைஞன் காலுக்கு ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தாள். அருகில் சென்று பார்த்தேன்—சே! அதே ரவீந்திரன் உருவம்!

''அண்ணா என் அத்தான் வந்துவிட்டார். ஆனால் ஊனமாக வந்திருக்கிறார்'' என்றாள் தங்கை.

'என் மைத்துனரும் ரவீந்திரனும் ஒரே மாதிரி உருவம்தானே' என்று அப்போதுதான் நினைவுக்கு வந்தது.

''எப்படி ஊனமானது'' என்று கேட்டேன்.

அதற்கு, 'நான் தூங்கிக் கொண்டிருக்கும் போது பலர் என்னைத் தூக்கிச் சென்று ஐயப்பன் கோயில் மலையடி வாரத்தில் வைத்து என் கால்களில் ஒருவித எண்ணெயைத் தடவி நெருப்பில் வாட்டி கால்களை வளைத்து விட்டார்கள். கொள்ளைக்காரர்கள் பிச்சை யெடுப்பதற்கு இதுமாதிரி பல பெண்களையும், குழந்தைகளையும் கால் கைகளை ஊனமாக்கி அவர்கள் மூலம் பிச்சைக் கேட்கவைத்து அந்தப் பணத்தை இரவுநேரத்தில் சேகரித்துக் கொள்கிறார்கள். அப்படித்

தான் என்னைப் பயன் படுத்தினார்கள். நான் எப்படியோ நமது தமிழர்கள் மூலம் இங்கு வந்து சேர்ந்து விட்டேன்' என்றார்.

என் தங்கையின் கண்களில் நீர் துளிர்த்தது.

"கருணைக்கு என்றும் அழிவில்லை!" என்றேன்; நான் நாட்டின் மீது வைத்தேன். தங்கை புருஷன் மீது வைத்தாள். இருவரும் தப்பித்தோம்.

# மானுமதுரை-இராமேச்வரம்

நான் எத்தனை கதைகள் எழுதினாலும் இந்தக் கதை மீதுதான் எனக்குப் பிடித்தம் அதிகம். இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேச்வரம் தீவுப் பகுதியில் நடந்த கதை இது. இந்தக் கதை எழுதுமுன் சம்பவங்களுக்குத் தொடர்பான இடங்களை எல்லாம் நேரில் சென்று பார்த்த பின்புதான் எழுத ஆரம்பித்தேன் 'தங்கச்சி மடம்' என்பது ஒரு ரயில் நிலையத்தின் பெயர். மானுமதுரையிலிருந்து இராமேச்வரம் வரை செல்லும் ராமேச்வரம் எக்ஸ்பிரஸில்தான் (அந்த நாளில் இண்டோ சிலோன் எக்ஸ்பிரஸ்) பெரும் பகுதி சம்பவங்கள் நிகழ்ந்தன.

கதையைப் படித்து முடித்த பின்னர் இப்படியும் ஒரு சம்பவம் நடந்திருக்குமா என்று நினைக்கத் தோன்றும். உண்மையில் நடந்தது தான். சந்தேகம் தேவையில்லை.

தென்னரசு

# தங்கச்சி மடம்

டிக்கட் பரிசோதகர் தியாகராஜன் இராமேசுவரம் ரயில் நிலையத்தின் முகப்பில் நின்றுகொண்டு பழைய நினைவுகளில் மூழ்கி இருந்தார். அவர் கையில் சிகரெட் புகைந்து கொண்டிருந்தது. விரும்பத்தகாத இடத்திற்கு வந்து விட்டவரைப் போல் அவரது மூக்கும் விழிகளும் படாத பாடுபட்டன. விடுமுறை முடிந்து மீண்டும் பள்ளிக்கூடத்திற்கு வந்துவிட்ட மாணவனைப் போல் அவர் கலவரமடைந்திருந்தார். பேசத் துணையின்றி அவர் மனத்துக்குள்ளேயே பேசிக் கொண்டிருந்தார்:

அடேயப்பா, எவ்வளவு பெரிய மாற்றம்! ஐந்தாண்டுகளுக்கு முன்பு இந்த ஊர் இப்படியில்லை. இத்தனை கடைகள் அப்போது கிடையாது. இப்பேர்ப்பட்ட பரப்பான மக்கள் நடமாட்டம் குறைவு. இராமேசுவரம் கடலில் குளிப்பதற்காக வரும் வடநாட்டு யாத்ரீகர்களைத் தவிர வெளியூர் ஆட்களைப் பார்ப்பதே அன்றைக்கு அரிதான காரியம். என்னைப் போன்ற சின்ன அதிகாரிகள் இந்த ஊரில் பொழுதைக் கழிப்பதற்கு என்ன பாடுபட்டார்கள் தெரியுமா?

எங்கு பார்த்தாலும் விறகுக்கடை—மேகமண்டல முழுதும் கரிப்புகை. தெருவெல்லாம் மீன் வாடை; கண்பட்ட இடமெல்லாம், கார் கூந்தல் நிறைந்த கைம்பெண் கும்பலைப் போல் ஈச்சமரக்கூட்டம். ஒரு வருஷ காலம் இந்த ஊரில் தங்கியதே எனக்குப் பெரும் தண்டனை யாகிவிட்டது. இராமேசுவரத்திலிருந்து மானுமதுரை வரை எனக்கு வேலை. பஞ்சப்பிரதேசத்தின் மொத்தப் பரப்பு அனைத்தும் என் பொறுப்பில் இருந்தது! மானுமதுரைக்குப் பிறகு யாரும் ரயிலில் டிக்கட் எடுக்கமாட்டார்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்! அது உண்மைதான். பெரும்பாலும் டிக்கட் இல்லாமல்தான் எல்லோரும் பிரயாணம் செய்கிறார்கள். இந்த நோய் யாரால் எப்போது தொடங்கப்பெற்றது என்று தெரியவில்லை. எத்தனை பேரைத்தான் நானும் பிடிப்பது! எத்தனை பேரைத்தான் சிறைக்கு அனுப்புவது! ஏழைகள் சிறைக்குப் போனால் பணக்காரர்களாகி விடுகிறார்களா? வாழ வழியற்று, தண்டனைக்குப் பயந்து தன் மானக்காரர்கள் தற்கொலை புரிந்துகொண்டால்தான் சட்டம் விட்டு விடுகிறதா? இது ஒரு விசித்திரமான கட்டுத்திட்டம்; வாழத் துடிப்பவர்களும் சாகத்துடிப்பவர்களும் ஒரே இடத்தில் சந்திக்கிறார்கள்—அது சிறைக்கூடம்!

வரண்ட இந்தப் பகுதி எனக்குப் பிடிக்காமல், மேலதிகாரிகளுக்குப் பல முறை மனுச் செய்து கொண்டதின் பேரில் என்னைப் பெங்களூருக்கு மாற்றி வைத்தார்கள். ஏனோ தெரியவில்லை, ஐந்து வருஷங்களுக்குப் பிறகு என்னை இங்கேயே மறுபடியும் போட்டு விட்டார்கள். இந்த இராமேசுவரம் அந்தக் காலத்திலேயே இப்படி இருந்திருக்குமானால் நான் பெங்களூர் போயிருக்கமாட்டேன். அங்கே போய் மதுபானம் அருந்தப்

பழகியிருக்க மாட்டேன். கைப் பொருளையும் இழந்து கடன் பட்டுத் திரும்ப வேண்டியதில்லை.

டி. டி. ஆர். உத்தியோகத்தைப் போல் மோசமான உத்தியோகமில்லை. அன்பாகப் பேசுவதற்கு ஆள் கிடைக்க மாட்டார்கள். தப்பித் தவறி யாராவது கிடைத்தாலும் நெடு நேரம் பேச முடியாது. ஒன்று அடுத்து வரும் ஸ்டேஷனில் நான் இறங்கிவிடவேண்டும்; அல்லது அவர்கள் இறங்கிவிடுவார்கள். குறைந்தது ஒரு நாளைக்குப் பத்துப் பேருடன் சண்டை போட வேண்டும். எனது உத்தியோகம் இருதயமில்லாதவர்கள் பார்க்க வேண்டியது; அல்லது இருதயத்தை இறுக்கப்பூட்டி, திறவுகோலை வீட்டில் வைத்துவிட்டுப் போக வேண்டியவர்கள் பார்க்க வேண்டியது.

"ஐயா, நான் ஏழை! பரமக்குடி மருத்துவமனைக்குப் போகிறேன்."

"பிரபு! என்னைக் கைவிட்டு விடாதீர்கள்; நாலு நாள் பட்டினி!"

என்பன போன்ற ஏழ்மைக் குரல்களைக் கேட்டுக் கேட்டு என் மனம் மறத்துப் போய்விட்டது. சில வேளைகளில் பெற்றோர்களுக்குத் தெரியாமல் கடத்தி வரப்படும் காதல் சிட்டுகளின் இன்பக் கதைகளையும் எனது பிரயாணத்தில் கேட்டிருக்கிறேன். மனிதன் எந்த அதிசயத்தைக் கண்டாலும் அதை இன்னொருவனிடம் திரும்பச் சொல்லும்போதுதான் அவன் நிம்மதி பெறுகிறான்; குதூகலமடைகிறான். போன முறைகள் நான் இங்கு பணி புரிந்தபோது கண்டவைகளையும், கேட்டவைகளையும் இவ்வூர் யானைப்பாகனிடம் தான் சொல்லுவது வழக்கம். நான் வாடகைக்குப் பிடித்திருந்த அறைக்கு அடுத்த குடிசை அவனுடையது.

திருவிழாக் காலங்களைத் தவிர மற்ற நேரங்களில் அந்த யானைப்பாகனுக்கு ஓய்வு அதிகம் கிடைக்கும். அவனுக்கு எஜமானன் யாருமில்லை; யானைதான். அதே போல் அந்த யானைக்கும் வேறு எஜமானன் இல்லை, அவன்தான்.

ஒவ்வொரு நாளும் உலகம் மாறிக்கொண்டு வருகிறது. நாள் ஓடித்தான் அரும்பு மலராகிறது; மலர் காயாகிறது. இந்த ஐந்தாண்டுக் காலத்திற்குள் அந்த யானைப்பாகன் வாழ்க்கையில் எவ்வளவு பெரிய மாற்றம் தெரியுமா? அன்று பள்ளிக்கூடத்திற்குப் போய்க்கொண்டிருந்த அவனுடைய பெண்ணைப் பற்றி என்னென்ன கனவுகளைக் கண்டுகொண்டிருந்தான் என்பதை இப்போது நினைத்தாலும் மனம் சிலிர்க்கிறது. ஆசைக்கு பணக்காரன்—ஏழை என்ற பாகுபாடு கிடையாது. அது எல்லோர் மனதிலும் விளையாடுகிறது; எல்லோர் மூளையையும் குழப்புகிறது; பெரியவர்களைச் சிறியவர்களாக்கி, சிறியவர்களைப் பைத்தியக்காரர்களாக்கி மகிழ்கிறது. யானைப்பாகன் நரசிம்மன் பரம ஏழை; கோயிலில் தரும் சோற்றுக் கட்டியைத் தவிர வேறு வருமானம் அவனுக்கு இல்லை. திருவிழா நாட்களில் யாராவது பெரிய வீட்டுக்காரர்கள் வெளியூர்களிலிருந்து வந்திருந்தால் அவர்களது குழந்தைகளை யானைமீது வைத்து அழகு பார்ப்பார்கள். அப்போது அவர்கள் நரசிம்மன்மீது பரிதாபப் பட்டு ஏதாவது கொடுப்பார்கள். அதுதான் நரசிம்மனுக்கு மேல் வருமானம். அந்த ஏழை நரசிம்மனுக்குத் தன் மகள் அநுராதையை நிறையப் படிக்க வைத்து அவள் நெஞ்சம் நிறைந்த மாப்பிள்ளைக்குக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்பதுதான் அவனது தணியாத ஆசை! அப்போது அவளுக்கு பன்னிரண்டு வயது. சத்து

நிறைந்த உணவு கொள்ளும் சீமான் வீட்டுப் பிள்ளைகளைக் காட்டிலும் அவள் பொலிவுள்ளவளாக இருந்தாள். கவலைக்கு ஆளாகாத கண்ணாடி முகம். எண்ணங்களை மேயவிடாத எடுப்பான நடை. அவர்கள் குடும்பம் இந்தக் கதிக்கு வரும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. நரசிம்மனே எண்ணியிருக்க முடியாது; நேற்றுக் காலையில்தான் இந்த ஊருக்கு வந்து இறங்கினேன். வந்ததும் நரசிம்மனைப்பற்றித்தான் விசாரித்தேன். உலகத்தில் யாரைத்தான் நம்புவது? ஒவ்வொருவருக்கும் இரட்டை நாக்கு இருக்கிறது. வேண்டாதவர்களுக்கு ஒரு நாக்கு; நண்பர்களுக்கு ஒரு நாக்கு! நரசிம்மன் நல்லவன்தான் என்றாலும் அவனுக்கு ஒரு மகள் உண்டல்லவா! அதனால் எல்லோரும் அவன் குடும்பத்தைக் கூர்ந்து, கவனிப்பார்கள். அவன் புது வேட்டி கட்டினால் அதற்கு ஒரு அர்த்தம்; மார்பில் சந்தனம் பூசினால் அதற்கு வேறு அர்த்தம் தானாக முளைக்கும்! அதனால்தான் நரசிம்மனைப்பற்றி, ஒருவருக்குப் பத்து பேரிடம் வினவினேன். அடேயப்பா! எல்லோருடைய வாக்கு மூலங்களும் ஒரே மாதிரி பயங்கரமாக இருந்தது......

ஒரு நாள் வெள்ளைக்கார கவர்னர் ஒருவர் இங்கே—கோயிலுக்கு வந்தாராம். அவரை வரவேற்பதற்குக் கோயிலதிகாரிகளெல்லாம் ரயில் நிலையத்திற்குத் திரண்டு வந்திருந்தார்களாம். யானையின் துதிக்கையில் ஒரு பெரிய மாலையைக் கொடுத்து வைத்து இருந்தார்கள், கவர்னரின் கழுத்தில் போடுவதற்காக. நரசிம்மனும் ரயில்நிலையத்தில் காத்திருந்தானும். அந்த ஊரில் எப்போதுமில்லாத ஆர்ப்பாட்டம் அன்றிருந்ததாகச் சொல்கிறார்கள். இருந்திருக்கலாம், நியாயமுண்டு. கவர்னரின் தனி ரயில்

ஊரை நெருங்கிக் கொண்டிருக்கும் போது தூரத்தில்— ஒரு மணற்காட்டில் நின்று கொண்டிருந்த அதிர் வேட்டுக்காரன் கோயில் அதிகாரியின் கட்டளைப்படி வேட்டுக்குத் தீ வைத்து விட்டானாம்.

அந்த வானம் வேட்டுக் குழாயை உடைத்துக் கொண்டு அம்பைப் போல் கிளம்பி வந்து யானையின் முகத்தில் பாய்ந்து விட்டதாம்! அவ்வளவுதான். யானைக்கு மதம் பிடித்து விட்டால் கேட்கவேண்டுமா? ஊரையே அமர்க்களமாக்கிவிட்டதாம்! ரயில் நிலேத்தில் திரண்டிருந்த மக்கள், வெள்ளத்தைப் போல் புரண் டோடி உயிர்த் தப்பினார்களாம்; கவர்னர் ரயிலே விட்டு இறங்க வில்லையாம்! ஆனால் நரசிம்மன்? ஐநூறு ரூபாய்ச் சம்பளக்காரர்களெல்லாம் ஒடி ஒளிந்து கொண்டார்களாம்! கோயில் சோற்றைத் தின்று கொண்டு கும்பியை வளர்ந்து வந்த நரசிம்மன்தான் உயிரைப் பணயம் வைத்து யானையோடு போராடினா னும்! மரங்களில், மாடிவீடுகளில் நின்று அவனது தீரத்தைப் பார்த்தவர்கள் கண்கலங்கிச் சொல்லி அழு கிறார்கள். அவனும் மனிதன்தானே! மதங்கொண்ட யானையுடன் அவனும் எவ்வளவு நேரந்தான் போராடு வான்! வெறிபிடித்த அந்த யானை நரசிம்மனைத் துதிக்கையால் பிடித்துச் சுழற்றி தரையில் அடித்து விட்டதாம்! கோரம்! சாகும் போது அவன் மனம் எதை நினைத்ததோ? அருமை மகள் அநுராதையின் எதிர்காலம் பற்றி என்னென்ன திட்டமிட் டிருந்தானோ? நரசிம்மன் இறந்தான். அவன் மகள் அநுராதை போன இடம் தெரியவில்லை என்று அறிந்த பிறகு எனக்கு இந்த ஊரில் தங்கவே பிடிக்க வில்லை தான்! என்ன செய்வது?

மறுநாள் காலை ஒன்பது மணிக்கு இங்கிருந்து புறப்படும் ரயிலில் மண்டபம் முகாமிற்குப் புறப்பட்டேன். இடையிலே சில சிறிய ரயில் நிலையங்கள் இருக்கின்றன. தங்கச்சி மடம் என்பது அவைகளில் ஒன்று. அங்கே ஒரு பாழடைந்த சத்திரம் இருக்கிறது. அந்த ஊரின் பெயர்க் காணத்தைப் பற்றி யாருக்கும் தெரியவில்லை. உள்ளூர்காரர்களுக்கே அப்படி. அடுத்த ஊர்க்காரர்கள் எழுதியதைப் படித்த பிறகுதான் சொந்த ஊரின் சிறப்பை எல்லோரும் தெரிந்து கொள்கிறார்கள். தங்கச்சி மடத்துக்காரர்களுக்கு அந்த வாய்ப்பும் இதுவரை கிடைக்கவில்லை. வண்டி அந்த ரயில் நிலையத்தில் நின்றது. இரண்டு பேர் இறங்கினார்கள். இரண்டு பேர் ஏறினார்கள். ஏறியவர்கள் இரண்டு பேரும் பிச்சைக்காரர்கள்—ஆண் ஒன்று, பெண் ஒன்று. இந்தத் தொழிலுக்கு வந்த பிறகு பிச்சைக்காரர்கள் என்றால் எனக்குப் பிடிப்பதில்லை. அதுவும் ரயில்வே பிச்சைக்காரர்களைப் பார்த்தால் நஞ்சு! பட்டம் பெற்ற உத்தியோகஸ்தர்களைக் காட்டிலும் ரயிலில் பாடிப் பிழைப்பவர்கள் சம்பாதிக்கிறார்கள். அதுவும் மேலாள் இல்லாத சம்பாத்தியம். அவர்களுக்கு பிச்சைக்காரர்கள் என்ற பட்டம். நான் எனது பிரயாணத்தில் டிக்கட் இல்லாத பிச்சைக்காரர்களை மட்டும் மன்னிப்பதில்லை. காட்டுக்குள் உள்ள ஸ்டேஷனாக இருந்தாலும் அவர்களை இறக்கி விட்டு விடுவதுண்டு! அதனால்தான் தங்கச்சி மடத்தில் பிச்சைக்காரர்கள் ஏறியதைப் பார்த்ததும் எனக்குள்ளே உள்ளம் பற்றி எரியத் தொடங்கி விட்டது. வேகமாக அவர்கள் புகுந்த பெட்டிக்கு ஓடினேன். ஒரு நொண்டி கட்டை அடித்துக் கொண்டு பாடினான். அழகிய கிளை நதியின்

நீரோட்டத்தைப்போல் அவன் குரல்இனிமையாக இருந்தது. கோபப்படவேண்டிய இடத்தில் கோபப்படாமலிருந்தால் மனதில் குடியிருக்கும் கொள்கை நிலையற்றுப் போய் விடுமே என்பதற்காக அவனிடத்தில் ஆத்திரமாகப் பேசினேன். அவன் நடுங்கிப் போனுன்.

"உன்னேடு ஏறினுளே பிச்சைக்காரி, அவள் எங்கே?" என்று அதட்டினேன். அந்த நொண்டி, எதிரே இருந்த ஒரு யுவதியைக் காட்டினுன். எனக்குப் பகீர் என்றது. அவளை யாரும் பிச்சைக்காரி என்றே ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அவ்வளவு அழகாக இருந்தாள். கைபடாத புதிய பாத்திரத்தைப் போல் அவள் உடல் பளபளப்புடன் காணப்பட்டது. அவளிடம் டிக்கட் எங்கே என்று கேட்கவே எனக்கு வெட்கமாக இருந்தது. ஆனுல் அவளை நான் கேட்கும் முன்னரே அவள் எழுந்து நின்று விட்டாள்.

"டிக்கட் எங்கே?"

"வாங்க வில்லை!"

"ரயில் என்ன உன் அப்பன் வீட்டு பணத்திலேயா ஓடுகிறது? எவ்வளவு நாளாய் இந்த வேலை நடக்கிறது."

"நான்கு வருஷங்களாக நடக்கிறது!"

"உனக்குப் புத்தியிருக்கிறதா? நீபடித்திருக்கிருயா? பார்த்தால் பட்டுப் பூச்சியைப் போலிருக்கிருயே!"

"டிக்கட் பணத்தை வாங்கிக்கொள்ளுங்கள்; தேவையில்லாததைதயெல்லாம் பேசாதீர்கள்."

"எடுப்பது பிச்சையாக இருந்தாலும், வறட்டுக் கௌரவத்திற்கு ஒன்றும் குறைவில்லை!"

எங்களுடைய வாக்குவாதம் இப்படி வளரத் தொடங்கியது. என்னையுமறியாமல் அன்று நான்

அதிகப்படியான வார்த்தைகளைக் கொட்டிவிட்டேன்- அந்தப் பெண் அழுதுவிட்டாள். அவள் முகம் சிவந்து விட்டது. பழுத்துப் போயிருந்த அவள் கன்னங்களில் கண்ணீர் மின்னியது. அவளிடம் மன்னிப்புக் கேட்கக் கூட நான் நினைத்தேன். அவளைப் பற்றியிருந்த வறட்டுக் கௌரவம் உடனே என்னைப் பிடித்துக் கொண்டது.

நொண்டிப் பிச்சைக்காரன், இவையனைத்தையும் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். என்னிடம் அதிகாரம் மட்டும் இல்லாதிருந்தால் அவன் என்னைக் கடித்துத் தின்றிருப்பான்.

வண்டி, மண்டபம் சந்திப்புக்கு வந்து விட்டது. அந்தப் பெண்ணும், நொண்டியும் இறங்கி விட்டார்கள். நொண்டி முன்னே நடந்தான். அவள் பின் தொடர்ந்தாள். ஆனால் அவள் போகும்போது என்னைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தாள்; அவள் நடையில்தான் என்ன கவர்ச்சி!! என்னமிடுக்கு! ஏன் அவள் பிச்சை எடுக்கிறாள்! பிச்சை எடுத்தால்தான் பணக்கவலை இருக்காது என்று நினைக்கிறாளோ!

எனக்கு மண்டபம் சந்திப்பில் இரண்டுமணிநேரம் ஓய்வு இருந்தது. அந்த நேரம் முழுவதையும் அவளுடைய நடவடிக்கைகளைக் கவனிப்பதிலேயே செல விட்டு விட்டேன். மண்டபம் சந்திப்பில் அவளை எதிர் பார்த்துக்கொண்டே ஒரு நாய் நிற்கிறது: அவளைக் கண்டதும் வாலைக் குழைத்துக்கொண்டு ஓடிவருகிறது. அவள் உடனே பக்கத்திலிருக்கும் பெட்டிக் கடையில் காலணாவிற்கு ரொட்டி வாங்கிப் போடுகிறாள். நொண்டிப் பிச்சைக்காரன் கம்பை ஊன்றிக்கொண்டே சாப்பாட்டுக் கடைக்குப் போய் இரண்டு சாப்பாட்டுப்

பொட்டலங்களை வாங்கி வந்து அவளிடம் கொடுக்கிறான். மறுமொழி பேசாமல் அவளும் வாங்கிக் கொள்கிறாள். இருவரும் தென்னந்தோப்பிற்கு நடக்கிறார்கள். அப்போது அவள் என்னை அடிக்கடி பார்க்கிறாள். ஏன் பார்க்கிறாள்! எனக்கும் அவளுக்கும் என்ன? அடிக்கடி பார்த்தால் அந்த நொண்டி கோபித்துக்கொள்ள மாட்டானா? அவனுக்குத்தான் அவள் பயப்படுகிறவளைப் போல் நடந்து கொள்கிறாளே!

...'தியாகராசன் சிந்தனையிலிருந்து விடுபடுவதற்கு முன் ரயில் அவரைக் கூவி அழைத்துவிட்டது. பரபரப்புடன் சிகரெட்டை அணைத்துத் தூக்கி எறிந்துவிட்டு ரயிலில் ஏறிவிட்டார்.

வண்டியிலிருந்த ஒவ்வொரு பெண்ணும் அவனுக்கு நேற்றுப் பார்த்த பெண்ணாகவே தென்பட்டன. நிமிடத்திற்கு நிமிடம் அவளைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணந்தான் அவனை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது. அந்த அழகான பெண்ணால் அவன் எத்தனையோ தத்துவங்களைப் புரிந்து கொண்டான். பணக்காரர்கள் வீடுகளிலே மட்டும் அழகிகள் பிறப்பதில்லை என்பதை அநுராதையின் தோற்றம் அவனுக்கு உணர்த்திக் கொண்டிருந்தது. தங்கச்சிமடம் ரயில் நிலையம் எப்பொழுது வரும், எப்பொழுது வரும் என்று கதவைத் திறந்த வண்ணம் நின்று கொண்டிருந்தான். வண்டி வேகமாகப் போகாதா என்று எண்ணி அவன் மனம் ரயிலைவிட வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. தங்கச்சிமடம் ரயில் நிலையம் வந்தது; ஆனால் அவள் இல்லை. தியாகராசன் வண்டியை விட்டு இறங்கி எங்காவது மூலை முடுக்குகளில் ஒளிந்து கொண்டிருக்கிறாளா என்று

துருவித் துருவிப் பார்த்தான். ரயில் எஞ்ஜினுக்கு அடுத்த பெட்டியில் அந்தப் பிச்சைக்காரியின் தோழன் அந்த நொண்டிப் பிச்சைக்காரன் ஏறிக் கொண்டிருந்தான். தியாகராாசன் வேகமாக அந்தப் பெட்டிக்குப் போனான். அவனுடைய நடையில் அவன் எந்த நோக்கத்தோடு அங்கே போகிறான் என்று மற்ற வர்களால் தெரிந்துகொள்ள முடியாது. இருதயத்தின் குணத்தைப் புரிந்துகொள்வதற்குக் கால்களுக்கு சக்தி யில்லை. அதனால்தான் ஆசையாக ஓடுகிறவனும், கோபமாக ஓடுகிறவனும் சில இடங்களில் கால் இடறி விழுகிறார்கள்.

டி.டி. ஆர். தியாகராாசன் அந்த உத்தியோகத்தில் ஐந்தாண்டுகள் பயிற்சி பெற்றிருந்தாலும் அவ்வளவு வேகமாக நடக்க வேண்டிய அவசியம் இல்லை. ரயிலைப் போக வைப்பதற்கும் நிற்க வைப்பதற்கும் அதிகாரம் இல்லாத டி டி. ஆர். ரயிலின் ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடிக்கு ஓடுவது தவறுதான். ஆனால் அப்படி நடக்குமென்று அவர் எதிர் பார்க்கவேயில்லை, அல்லவா!

* * *

மண்டபம் முகாமில் ஏராளமான கூட்டம் திரண்டிருந்தது. ராமேசுவரத்திற்குப் போவதற்காகக் குழுமியிருந்த வடநாட்டு கும்பல் அந்த ஸ்டேசனையே கருவாட்டுக் கடையாக்கி வைத்திருந்தது. எல்லோரும் ராமேசுவரத்திலிருந்து வரவேண்டிய வண்டியையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். அந்தப் பிச்சைக்கார யுவதி கையில் ஒரு பாட்டுப் புத்தகத்தோடு இங்கும் அங்குமாக உலாத்திக்கொண்டிருந்தாள். அவளோடு அவளுடைய நாய் 'லொக்கு, லொக்கு' என்று ஓடிக் கொண்டிருந்தது. பிரயாணிகள் அனைவரும் அவளைப்

பற்றி ஏதோ மர்மக்கதை இருப்பதைப்போல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், அவள் இதையெல்லாம் பொருட்படுத்தவில்லை.

அவளுடைய வாய் எப்பொழுதும் முணகிக்கொண்டேயிருக்கும். தென்னாட்டுச் சிங்கம் வீரர் முத்து ராமலிங்கம் என்று பாடுவாள். கொடுமுடிக் கோகிலம் சுந்தராம்பாளுக்கும், செங்கோட்டை இசை வெள்ளம் கிட்டப்பாவுக்கும், ஏற்பட்ட காதல் உறவைப்பற்றிப் பாடுவாள். கரம் சந்திர மோஹன் தாஸ் காந்தி வாழ்க! என்று கீதம் இசைப்பாள்; பண்டிதமோதிலால் நேருவைப் பறி கொடுத்தோமே—என்பாள். இப்படித் தென்னாட்டில் கீர்த்திபெற்றிருந்த தேசீயப் பாடல்களையே அவள் அடிக்கடி பாடிக்கொண்டிருப்பாள். அன்றும் அவள் அப்படித்தான் ஒரு புதிய பாடலை மனப்பாடம் செய்துகொண்டு இங்கும் அங்கும் நடந்த வண்ணமிருந்தாள்.

ராமேசுவரத்திலிருந்து காலை பத்து மணிக்கு வர வேண்டிய ரயில், பிற்பகல் இரண்டு மணிக்கு வந்தது— ராதைக்குப் பசி உயிரை எடுத்தது. நேற்றைய வருமானம் நேற்றோடு தீர்ந்துவிட்டதால் கையிலே காசு இல்லாமல் தவித்துக்கொண்டிருந்தாள். ராமேசுவரத்திலிருந்து வரும் வண்டியிலிருந்து இறங்கப்போகும் தன்னுடைய தோழன் ஏதாவது சம்பாதித்திருப்பான் என்ற நம்பிக்கை அவளுக்கு.

வண்டி, நிலையத்தில் நிற்பதற்கு முன்னால், சாப்பாட்டுக் கடைக்கு ஓடிப்போய் இரண்டு பொட்டலங்களுக்குச் சொல்லி வைத்துவிட்டாள்!

வண்டி வந்தது! கார்டும்; இஞ்சின் டிரைவரும் வேகமாக இறங்கி மண்டபம் ரயில் நிலையப் பெரிய அதிகாரிகளிடம் ஓடினார்கள். அந்த வண்டியிலிருந்து

இறங்கிய பிரயாணிகளிடமும் பெருத்த பரபரப்புக் காணப்பட்டது. பிச்சைக்காரியின் தோழன்—நொண்டிப் பிச்சைக்காரன் அந்தக் காலத்தில் வாழ்ந்த தைமூரைப்போல் பரபரக்க விழித்துக்கொண்டு தன்னுடைய ஒற்றைக் காலால் குதிரையைப்போல் 'டக் டக்' என்று அவளுக்குப் பக்கத்தில் வந்தான்.

"அநுராதா!" என்று கூவினான்.

"என்ன துருவா! ஏன் வண்டி லேட்?"

ஸ்டேசன் மாஸ்டரைப்போல் அநுராதை அவனைக் கேட்டாள். துருவன் சிரித்தான். "கடவுள் நம் பக்கம் இருக்கிறார் ராதா. நேற்று உன்னை ஒருவன் மிரட்டினானே ஒரு டி. டி. ஆர். அவனுக்கு இன்றைக்குப் பலமான தண்டனை கிடைத்துவிட்டது. தங்கச்சிமடம் ரயில் நிலையத்தில் அவன் தவறி விழுந்துவிட்டான். முகமெல்லாம் காயம். ஒரே பயங்கரம்! வண்டி தாமதத்திற்கு அது தான் காரணம்" என்று துருவன் சொன்னான்.

அநுராதை அதைச் சுவைக்கவில்லை. பசி மயக்கத்தில் அவள் சோர்ந்து இருந்தாள்.

"என்ன ராதா நான் சொல்வது காதில் ஏறவில்லையா?" என்று அழுத்தந்திருத்தமாகக் கூறினான் துருவன். அப்போது ஒரு பெரியவர் துருவனுக்கு அருகில் ஓடிவந்து, "எங்கே அந்த டி. டி. ஆர்? எங்கே? எங்கே?" என்று கதறினார்.

துருவன், டி.டி.ஆர்.ஐ தூக்கிப் போயிருக்கும் இடத்தைச்சொன்னான். அந்தப் பெரியவர் வெறி பிடித்தவரைப்போல் பெட்டி படிக்கையுடன் ஓடினார்.

இரண்டு நாட்களுக்குப் பின் பத்திரிகையில் இது பற்றிய செய்தியை விரிவாக வெளியிட்டிருந்தார்கள். டி. டி. ஆர். தியாகராசனுக்குப் பலத்த காயமென்றும்,

தற்செயலாக அவரைக் காணவந்த அவரது தந்தை மண்டபம் முகாமில் மயங்கி விழ்ந்தாரென்றும், பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. இந்தத் தகவலும் துருவனுக்குத்தான் முதன் முதலாக எட்டியது. பத்திரிகையை வாங்கிக்கொண்டு அநுராதையிடம் ஓடி வந்தான்.

"அநுராதா பார்த்தாயா, பயல் பேரு பத்திரிகையில் வந்துவிட்டது. அன்று ஒரு பெரியவர் ஓடிவந்தாரே அவர் அந்த டி. டி. ஆரின் அப்பனும்!" என்று சப்தம் போட்டுக் கூவினுன் துருவன்.

அநுராதை பத்திரிகையைப் பார்த்தாள். முதல் நாளிலிருந்து அவள் உள்ளத்தில் உறுத்திக் கொண்டிருந்த விடுகதைக்கு விடை கிடைத்து விட்டது. அவள் பழைய தியாகராாசனை மறந்து விடவில்லை. பக்கத்திலிருந்து கணக்குச் சொல்லிக் கொடுத்த இளைஞனை அவளால் மறந்துவிட முடியுமா?

தன்னுடைய கணக்குச் சரியென்று தீர்மானித்துக் கொண்டாள்? பெண்கள் ஞாபக சக்தியில் ஆண்களை விடத் தேர்ந்தவர்கள். முதல் நாள் வைத்த குழம்பு ஆடவர்களுக்கு நினைவில் இருப்பதில்லை; ஆனுல் பெண்கள் தங்கள் புருஷன்மார் என்ன கிழமை என்ன நிறச் சட்டை போட்டார்கள் என்பதைக் கூட மறக்காமல் நினைவில் வைத்துக்கொண்டு விடுகிறுர்கள்.

தியாகராசன் மீது இவ்வளவு நேரம் இல்லாத கவலை இப்போது அநுராதாவுக்கு ஏற்பட்டு விட்டது. அவள் கண்கள் கலங்கின.

துருவன் நல்லவன்; கபடமில்லாதவன். அநுராதையின் உள்ளத்தை அவனுல் புரிந்து கொள்ள முடியவில்லை.

"என்ன அநுராதா இப்படி இருக்கிருய்? ஏன் உன் கண்கள் கலங்கி இருக்கின்றன?" என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை" என்று சொல்லுவதற்கே அவள் படாதபாடு பட்டுவிட்டாள்.

"இல்லை, நீ மறைக்கிருய்!"

"மறைக்கவில்லை துருவா! அப்பாவின் ஞாபகம் வந்துவிட்டது. அதுதான் கண்கள் கலங்கிவிட்டன. வேறென்றுமில்லை!"

"நான் நம்பமாட்டேன். இத்தனை நாளாய் வராத ஞாபகம் இப்போது மட்டும் வந்து விட்டதாக்கும்! அதுவும் இந்தப் பத்திரிகையைப் பார்த்து விட்டதுமா வருகிறது" என்று 'சிடு சிடு' வென்று பேசினன் துருவன்.

"அதெல்லாம் எதுவுமில்லை துருவா! இன்றுமட்டும் பொறுத்துக்கொள்; நாளை சொல்லுகிறேன்" என்ருள் அநுராதா.

"அநுராதா, என்னிடம் எதையும் மறைக்காதே! வாழ்க்கையில் யாரையாவது ஒருவரை நம்பத்தான் வேண்டும்! யாருடைய வாழ்க்கையும் இன்னொருவர் அனுதாபம் இல்லாமல் நடப்பதில்லை. சொல்லக்கூடியதைச் சொல்லாததால் ஏற்படும் விளைவு, சொல்லக் கூடாததைச் சொல்லியதால் ஏற்படும் விளைவைக் காட்டிலும் கொடிது" என்று அடக்கமான குரலில் கூறினன். அவன் தொனியில் நடுக்கம் இருந்தது. அந்த நடுக்கம் அவனுக்கு அநுராதாவின் மேலுள்ள களங்கமில்லாத அன்பைக் காட்டியது.

* * *

டி. டி. ஆர். தியாகராாசன் மண்டபம் முகாமில் தெரிந்தவர் ஒருவர் வீட்டிலிருந்து மருத்துவம் செய்து

கொண்டிருந்தான். அவனது தந்தை பாவம் மகனைப் பார்க்க வந்தார். அவனுக்கு அருகில் இருந்து கண்ணீரைச் சொரிந்த வண்ணமிருந்தார்.

"தியாகு!"

"என்னப்பா"

"அம்மாவுக்குத் தந்தி கொடுத்து வரவழைக் கட்டுமா?"

"வேண்டாம்ப்பா! அம்மாவந்தால் கதறுவார்கள்."

"அருகில் இருந்தால் ஆறுதலாக இருக்குமே என்று நினைத்தேன்" என்று கண்கலங்கச் சொன்னார் பெரியவர். அப்போது யாரோ அந்த வீட்டின் கதவைத் தட்டினார்கள்; எழுந்து வந்து கதவைத் திறந்தார்.

"யாரம்மா நீ!"

"அநுராதை!"

"யாரைப் பார்க்க வேண்டும்?" என்று பெரியவர் கேட்பதற்குள், தியாகராாசன் படுக்கையிலிருந்து எழுந்து வந்து ஆவலோடு அநுராதையுடன் பேசினான்.

"நீ அநுராதையா? நரசிம்மர் மகளா?" என்று கேட்டான் தியாகராசன்.

"ஆமாம், நான் தான் அந்தத் துர்ப்பாக்கியவதி. அனாதையாக அலைகிறேன்!" என்று கூறினாள்.

"அன்று உன்னைக் கடுமையாகப் பேசி விட்டேன், மன்னித்து விடு!"

"இல்லை, அன்று நீங்கள் உரத்திப் பேசியிரா விட்டால் நான் உங்கள் குரலைப் புரிந்து கொண்டிருக்க முடியாது!"—தலை குனிந்தபடி கூறினாள், அநுராதா.

"உட்கார் அநுராதா! நான்தான் மடையன். உன்னைக் கண்டு கொள்ளவே என்னால் முடியவில்லை.

ஆனால் என் மனதில் ஒரு மூலையில் சந்தேகம் மட்டும் இருந்தது. ஆண்களைப் பத்து வருடங்களுக்குப் பிறகு கூட அடையாளம் கண்டு பிடித்துவிடலாம்; ஆனால் பெண்களை அடுத்த வருஷம் அடையாளம் கண்டு கொள்வதே பெரிய காரியம்!''

''காயம் எப்படி இருக்கிறது? வேதனை குறைவாகத் தெரிகிறதா?''

''காயம் முகத்தில் மட்டுந்தான். தப்பி விட்டேன். இனி எனக்குச் சாவே கிடையாது ராதா!''

''நான் உங்களிடத்தில் ஒரு முக்கியமான தகவலைத் தெரிந்து கொள்ளலாமென்று வந்தேன்...''

''என்ன இப்படிச் சொல்கிறாய்? எதை வேண்டுமானாலும் கேள்!'' என்றான் தியாகராசன்.

அருகிலே இருந்த தியாகராசனின் தந்தைக்குத் தலை சுற்றியது. 'யார் இவள்? இவளுக்கும் தியாகராசனுக்கும் என்ன தொடர்பு?' என்று கணக்குப் போட்டு விடை காண்பதிலேயே அவர் திளைத்து விட்டார். அவர் முகத்தில் குழப்பம் கூடு கட்டிவிட்டது.

''என் அப்பா, ஓய்வு நேரத்தில் உங்களோடு பேசிக் கொண்டிருக்கும்போதெல்லாம், உங்களிடம் கொஞ்சம் பணம் சேர்த்து வைக்கிறேன் என்று அடிக்கடி சொன்னது எனக்கு நினைவிருக்கிறது.''

''ஆமாம்; சொன்னார். எத்தனையோ முறை சொல்லி யிருக்கிறார்.''

''அந்தப் பணத்தை யாரிடம் கொடுத்து வைத்திருக்கிறார் என்பதை என்னால் இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. உங்களுக்கு நினைவிருந்தால் தயவு செய்து எனக்குச் சொல்ல வேண்டும்!'' என்றாள் அநுராதா!

"இரு ராதா! நான்கூட மறந்துவிட்டேன். நீ கவலைப்படாதே!"

"எப்படியும் எனக்கு இன்னும் இரண்டு நாட்களுக்குள் சொல்லிவிடுங்கள். நான் நாளைக்கு வருகிறேன். இராமேசுவரம் வண்டி வரும் நேரம் வந்துவிட்டது" என்று கூறிவிட்டு அநுராதா வெளியே வந்தாள்.

ஸ்டேஷன் மேடையிலிருந்து 'அநுராதா' என்று சத்தம் போட்டான் துருவன். அநுராதா இரும்புக் குண்டைப் போல் குடுகுடுவென ஸ்டேஷனுக்கு ஓடினாள். அந்த இடத்தில் துருவனைக் காணவில்லை. ரயில் நிலையம் முழுதும் அவனைத் தேடினாள்; துருவன் தென்படவில்லை. சிறகொடிந்த பறவையைப் போல், அதிர்ச்சியுற்ற மானைப்போல் அநுராதை பரபரப்புடன் ஓடியாடித் தேடினாள். 'துருவா, துருவா!' என்று அவள் கதறியது சுவர்களில், ரயில் பெட்டிகளில் தகரக் கூடாரங்களில் மோதி எதிரொலித்தது. சலித்துப் போன அநுராதை நெற்றியில் பூத்திருந்த வியர்வைத் துளிகளை வழித்தெறிந்து விட்டு ரயில் நிலையத்தில் ஓர் ஓரத்தில் உட்கார்ந்தாள். விரக்தியடைந்திருந்த அவள் உள்ளத்திற்கு உலகமே சூன்யமாகத் தென்பட்டது. பயங்கரவாதிகளைப் பார்க்கும் குழந்தையைப் போல் கண்ணில் படுகின்றவர்களை எல்லாம் அவள் உற்றுப் பார்த்தாள். அவளுடைய ஒவ்வொரு நடவடிக்கையும் பார்ப்பவர்களுக்கு அவள்பேரில் ஏற்பட்ட சந்தேகத்தை வலுபெறச் செய்து கொண்டிருந்தது. எத்தனையோ பிரயாணிகள் அங்கே வருகிறார்கள். அவர்களில் பக்தர்கள் இருக்கிறார்கள்; ஊர் சுற்றிப் பார்க்கவரும் உல்லாசிகள் இருக்கிறார்கள்; வியாபாரிகள் இருக்கிறார்கள்—இவர்கள் அனைவரும் அவரவர்களின் கண்ணோட்டத்திலே அநுராதையைப் பார்க்கிறார்கள்.

தங்கள் தங்கள் தொழிலுக்கு அவளைப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கிறார்கள். மலரைப் பார்த்த பெண் அதனைச் சூடிக் கொள்ள நினைக்கிறாள்; ஆனால் கவிஞன் மலரைப் பார்த்து கவி பாடுகிறான். தத்துவஞானி மலருக்கு எப்படி வண்ணம் வந்தது, மணம் வந்தது என ஆராய்ச்சி செய்கிறான். அதைப்போல் அநுராதை அந்த ரயில் நிலயத்தில் பெண் மலராக இருந்து எல்லோர் இதயங்களிலும் ஊசிபோல் குத்திக் கொண்டிருந்தாள். அவள் நொண்டியல்ல; முடமல்ல. மயிலைப் போல் நடக்கிறாள். ஊமையல்ல; குருடியல்ல; உயிர்ச் சித்திரம்போல் உலவுகிறாள். ஆனால் 'ஏன் பிச்சை எடுக்கிறாள்? ஏன் பாடிப் பிழைக்க வேண்டும்? நன்றாக வாழவேண்டிய துடுக்கான பருவத்தில் பலபேருக்கு மத்தியில் ஏன் இந்த ஈன வாழ்க்கை நடத்த வேண்டும்?'— அநுராதையைப் பார்த்த எல்லோர் இதயங்களிலும் இந்தக் கேள்விகள் முளைக்கத்தான் செய்தன. ஆனால் எவரும் இவைகளுக்கு விடை காணவில்லை. அவளைப் பார்ப்பவர்கள் அவளுடைய அழகைப் பருகுவார்கள். ஆச்சரியப்பட்டு பெருமூச்சு விடுவார்கள். அவளுடைய நிலைக்குக் காரணத்தை யாரும் வினவவில்லை.

அதோ வருகிறான் பாருங்கள் துருவன்—அவன் தான் அந்த நல்ல செயலில் ஈடுபட்டவன். அவனிடம் தான் அவள் உண்மை பேசுகிறாள். அவனுக்குப் பயப்படுகிறாள். மரியாதை காட்டுகிறாள். அவன் எவ்வளவு கடுகடுப்பாக வருகிறான். ஆழ்ந்த கோபத்தைத் தேக்கி வைத்திருக்கும் அவன் கண்களைப் பாருங்கள். தீ பறக்கிறது. அவனைக் கண்டதும் அவள் எழுந்து விட்டாள். ஆனால் அந்த மரியாதையை அவன் லட்சியம் செய்யவில்லை! துரும்பெனக் கருதுகிறான்.

"துருவா எங்கே போயிருந்தாய்? கத்தி கத்தி என் தொண்டை வறண்டுவிட்டது."

துருவன் பதில் பேசவில்லை. இரவு நேரத்தில் வெளிச்சத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன துருவா; ஏன் இப்படியிருக்கிறாய்? குடும்பக் கவலையா?"

அநுராதை வழக்கமான வாஞ்சையோடு கேட்டாள். துருவன் அதற்குப் பதில் சொல்லவில்லை. அநுராதை ஆத்திரப்பட்டு 'துருவா' என்று அதட்டினாள். துருவன் எதுவும் பேசாமல் அவளுக்காக வாங்கி வைத்திருந்த இரண்டு சாப்பாட்டுப் பொட்டலங்களை அவள் முன்னால் போட்டுவிட்டு வேகமாக, வந்த பக்கமே திரும்பப் போனான். அனுராதா ஆத்திரப்பட்டிருந்தும் மனத்துக்குள்ளே சிரித்துக் கொண்டாள். சாப்பாட்டுப் பொட்டலத்தை எடுத்துக்கொண்டு அவளுடைய வழக்கமான தென்னந்தோப்புக்கு நடந்தாள். அங்கே அன்புள்ள அவளுடைய நாய் காத்துக் கிடந்தது. அநுராதா, நாயோடு பேசினாள்; நாய்க்குப் பேசத் தெரியாதெனத் தெரிந்தும் பேசினாள்.

"டைகர்! துருவனுக்கு என் மீது இன்றைக்குக் கடுங் கோபம்; நான் என்ன செய்தேன் டைகர்? டி. டி. ஆர். தியாகராசன் என் தந்தைக்கு வேண்டியவர் என்பது துருவனுக்குத் தெரியாது. தியாகராசன் எனக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்தவர் என்பதும் துருவனுக்குத் தெரியாது. அவரைப் போய்க் காணச் சென்றதற்குத் துருவன் புது அர்த்தம் கொண்டிருக்கிறார் போலிருக்கிறது. துருவன் என்மீது அக்கறை கொண்டிருக்கிறார் என்பதை மட்டும் அவர் கோபம் எனக்குப் புலப்படுத்துகிறது. நான் எதைச் சொன்னாலும் துருவன்

நம்பப் போவதில்லை. ஆடவர்கள் மனதில் தோன்றும் முதல் எண்ணம்தான் சரி என்று முடிவு கட்டும்வரை இவ்வுலகில் எல்லாப் பெண்களையும் ஒரேமாதிரி அவர்கள் தீர்மானிப்பார்கள்; இல்லையா டைகர்.''

இதை ஒதுங்கி நின்று கேட்டுக்கொண்டிருந்த துருவன் அவனுடைய வருகையை அநுராதைக்குத் தெரியப்படுத்துவதற்காகத் தொண்டையை கனைத்துக் கொண்டே நடந்து வந்தான். அநுராதை பேசவில்லை. அவனும் பேசவில்லை. ஆனால் நாய் மட்டும் அவன் பக்கம் போவதும் அவள் பக்கம் போவதுமாக இருந்தது. நேரம் போய்க்கொண்டிருந்தது. ரயில் நிலையத்தில் இரைச்சல் குறைந்து வந்தது. ரயில்களெல்லாம் போகவேண்டிய இடத்திற்குப் புறப்பட்டுப் போய் விட்டன. ஆனால் அநுராதை மட்டும் வழக்கத்திற்கு மாருக அந்த இடத்திலேயே இருந்தாள். துருவன் கூட ரயில் நிலையப் பக்கமாக வந்து விட்டான். நேரம் போவதேதெரியாமல் அநுராதை அந்த இடத்திலேயே அழுது கொண்டிருந்தாள். துன்பப்படும்போதும் வறுமைப் படும்போதும்தான் பெற்ரேர் இல்லாத குறையைப் பிள்ளைகள் உணர்கிருர்கள். பாவம் அபலை அநுராதை நடைவண்டி ஒட்டிய காலத்திலிருந்தே நெறி கெடாமல் வாழ்ந்தவள். அவள் தந்தை நேத்திரம்போல் அவளைப் பாதுகாத்தான். இப்போது அவள் தன்னந்தனியாய் தென்னந்தோப்பிலிருந்து கன்னங்களைக் கண்ணீரால் கழுவிக்கொண்டிருக்கிருள். பிரியமுள்ள அவளது நாய், அவள் பக்கத்திலேயே படுத்திருக்கிறது.

இரவு ஒன்பது மணிக்கு மேல் துருவன் அந்த இடத்திற்கு வந்தான். வழக்கம்போல் அவன் கைகளிலே சாப்பாட்டுப் பொட்டலங்கள் இருந்தன.

'டைகர், டைகர்' என்று சப்தம் போட்டான். நாய் விழித்துக்கொண்டுதானிருந்தது என்றாலும் துருவன் கத்தினான். அநுராதையை எழுப்புவதற்காக அவன் அப்படிச் செய்தான். அது அவளுக்கும் புரிந்தது. அவள் புரண்டு படுத்தாள். அவன் சாப்பாட்டுப் பொட்டலங்களைக் கீழே போட்டான். அநுராதை அடக்கமாக உட்கார்ந்து சாப்பிட்டு விட்டு அங்கேயே படுத்து விட்டாள். கொஞ்சம் தள்ளி உட்கார்ந்து பாதிச் சிகரெட்டைப்பிடித்துக்கொண்டிருந்த துருவன், அதை முடித்து விட்டு வேறொரு புதிய சிகரெட் பிடித்துக்கொண்டிருந்தான். அதற்குப்பிறகு அநுராதை தூங்கவே இல்லை. அவள் படுத்தபடியே விழித்துக் கொண்டே உட்கார்ந்திருந்தாள். இரண்டு பேருக்கும் நடுவில் நன்றியுள்ள சிப்பாயைப்போல் அந்த நாய் உட்கார்ந்திருந்தது. இப்படி மூன்று நாட்கள் ஒருவரோடு ஒருவர் பேசவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கவில்லை. தனித்தனியாக ரயிலில் போனார்கள். தனித் தனியாகப் பிச்சை எடுத்தார்கள். பகல்நேரங்களில் ஒருவரை ஒருவர் சந்திக்கவே வாய்ப்புக் கிடைக்காமல் போய்விட்டது. இந்த நிலைமை இப்படியே நீடித்தால்...? இருவருக்கும் இந்தக் கவலை இருந்தது. யார் இவர்களுக்குள்ளே பகையைத் தீர்த்து வைப்பது?

இரண்டு பேருக்கும் தெரிந்தவன்—வெறுக்கத்தக்க சூழ்நிலையில் அறிமுகமானவன் அவளுக்குப் பக்கத்தில் ஒருவன் தான் இருந்தான். அவன் தியாகராசன். வேறு கதி இல்லை. எப்படிப்பட்ட பிரச்சினையையும் காலம் மேவிவிடுமென்கிறார்கள். தவறு, எல்லாப் பிரச்சினைக்களுக்கும் இந்தச் சித்தாந்தம் பொருத்தமானதல்ல. சில சிக்கல்கள் உடனடியாகத் தீர்க்கப்படாவிட்டால் காலம் அதைப் பெரிதாக்கி உறவையே அறுத்து

விடுகிறது. கடனைக் கேட்காவிட்டால் கெட்டுவிடும். உறவுபோகாவிடட்டால் போய் விடும்.

அநுராதைக்கும் துருவனுக்கும் இடையில் துளிர் விட்ட சிறிய கீறல் காலத்தால் பெரும் பிளவாகி தொடர்பு முறிந்துவிடுமோ என்று துருவன் பயந்தான். அவனுக்கு மட்டுமே தெரிந்த காரண காரியத்தோடு அநுராதையின்மேல் வைத்திருந்த உயிர்ப்பாசம் அழிந்து விடுமோ என்று அவன் கலங்கினுன். பொழுது விடிந்ததும் எப்போதும் போல்தானே அவளை ரயிலுக்கு அழைப்பது என்ற முடிவோடு படுத்தான். தனக்கு முன்னுல் அவள் விழித்து விடக்கூடாது என்பதற்காக அவன் அடிக்கடி விழித்துப் பார்த்தான்.

நள்ளிரவு; துருவன் நான்காவது முறையாகத் தலையைத் தூக்கிப்பார்த்தான். அவனுக்குப் பகீர் என்றது. அநுராதையைக் காணவில்லை. நாயையும் காணவில்லை. பரபரப்புடன் எழுந்து தலையில் துண்டைக் கட்டிக் கொண்டு வேகமாக ரயில்நிலையப்பக்கமாக நடந்தான். அவன் தோப்பைத் தாண்டுவதற்குள்ளாகவே, நாய் மட்டும் வருவதைப் பார்த்துவிட்டான். ஆத்திரப்பட்ட துருவன் கையிலிருந்த கம்பால் நாயை ஓங்கி அடித்தான். நாய் கதறிக்கொண்டு அவனுக்கு முன்னே ஓடியது. நாயைப் பின்தொடர்ந்து துருவன் நடந்தான். நாய் நேராகத் தியாகராாசன் வீட்டிற்குத்தான் சென்றது. துருவன் வீட்டு வாசல்வரைப் போனுன். உள்ளே தியாகராாசனும் அநுராதையும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டான். அவன் தலையில் யாரோ நெருப்பு வைப்பதுபோல் உணர்ச்சி அவனுக்கு! முகத்தைச் சுழித்துக்கொண்டே புளித்துண்டை வாயிலடக்கிக் கொண்டவனைப்போல் தோப்புக்குத் திரும்பி விட்டான். அவனுடைய அடக்கமும் அமைதியும்

பொழுது விடிந்ததும் பெரிய புயலைக்கிளப்பப் போகிற வனாகப் படம் பிடித்துக்காட்டின. இரவெல்லாம் அவன் தூங்கவில்லை. தூங்குகிறவனைப்போல் பாசாங்கு செய்துக்கொண்டிருந்தான். பொழுது விடியப்போகிற சமயத்தில் அநுராதை வந்தாள். புற்றுக்குள்ளிருந்து அரவம் தலைகாட்டுவதைப்போல் துருவன் பேசினான். துருவன் குரலைக்கேட்டதும் அநுராதைக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"ராதா"

"என்ன!"

"இனிமேல் நான் இருக்குமிடத்திற்கு நீ வர வேண்டியதில்லை!"

"ஏன், நான் என்ன செய்தேன்?"

"சொன்னால் கேவலம், என்னால் அதைத் தாங்க முடியாது!"

"புரியும்படி சொல் துருவா! மூடி மூடிப் பேசினால் தவறுகள் மறைந்து விடாது!"

"ராதா நான் நொண்டி! பிச்சை எடுத்து வாழ வேண்டியவன்; உனக்கு அந்த நிலை இல்லை. நீ வாழ வேண்டிய பெண்!"

"துருவா ஜாடை பேசவேண்டாம். என் பிழை என்ன கூறு. நானும் உன்னைப்போல் பிச்சை எடுத்து வாழவேண்டியவள் தானே! புதிதாக எனக்கென்ன வாழ்வு வந்து விட்டது?"

"வாழ்வு வந்து விட்டதால்தான் சொல்கிறேன். என்னோடு சேர்ந்து நீ ஏன் வதங்கவேண்டும்? உன் போக்கு எனக்குத் தெரியும் ராதா! நீ இரண்டு வாரங்களாக நடந்துகொள்ளும் விதத்தை நான் கவனித்துக்கொண்டுதானிருக்கிறேன். இந்த நொண்டி

யோடு நீயும் கிடந்து ஏன் தொல்லைப்பட வேண்டும்? போய் விடு!''

"துருவா!''

''திரும்பத் திரும்பப் பேசிப் பயனில்லை ராதா! நான் நல்லவன்; கோபம் வந்து விட்டால் கொடியவன்.''

''நான் மட்டும் என்ன! என்மீது அபாண்டமாகப் பழி சுமத்தினுல் நான் யாரையும் விட்டு வைக்க மாட்டேன். இந்த நேரத்தில் எங்கே போய் வருகிருய் என்றுதானே கேட்கிருய்?''

''எனக்குத் தெரியுமே! நான் ஏன் கேட்கப் போகிறேன்! பெரிய இடத்துப் பொல்லாப்பு இந்த ஏழைக்கு எதற்கு?''

''என்னைப் பேயாக்காதே துருவா! தியாகராசனை நான் தேடிப்போனது தவருன எண்ணத்துடன் அல்ல! என் தந்தையின் ரகசியம் அவருக்குத் தெரியும் என்பதற்காகப் போனேன். தியாகராசன் ஒரு காலத்தில் —நான் சிறுமியாக இருந்தபோது எனது வீட்டுக்கு அடுத்த வீட்டில் குடியிருந்தார் என்பதை நீ அறிய மாட்டாய்!''

''ராதா துருப்பிடித்துப் போன பழைய கதைகளைப் பேசாதே!''

''என்னைப் பற்றி நன்கு தெரியும் என்பதற்காகச் சொன்னேன்; இவ்வளவு நாள் பழகியும் என் குணம் உனக்குத் தெரியவில்லை என்ருல், நான் எதைக் கூறியும் பயனில்லைதான்!''

''ராதா நீ நாடகமாடுகிருய்! தியாகராசன் உனக்கு அறிமுகம் ஆனவன் என்ருல், எனக்கு எதிரில் ஏன் நீ அவனுடன் பேசக் கூடாது? பருவமடைந்த

ஒரு பெண், பாதி ராத்திரி வேளையில் ஓர் இளைஞனைச் சந்தித்து வருவதென்றால்—அதற்கு நீ எத்தனை கதைகளைச் சொன்னாலும் உலகம் நம்பாது! ராதா, என்னைப் பார்! உனக்கும் எனக்கும் என்ன உறவு? நீ யார்? நான் யார்? உனக்காக நான் ஏன் பரிந்து பேச வேண்டும்? உனக்கும் சேர்த்து ஏன் சம்பாதிக்க வேண்டும்? இரண்டு ஆண்டுகாலமாகக் கூடப்பிறந்த தங்கையைப் போல் உன்னை நான் பாதுகாக்க வேண்டிய அவசியம் என்ன? நீ அழகாக இருக்கிறாய் என்பதற்காகவா? உன்னை வைத்து நான் பிழைக்க முடியும் என்பதற்காகவா?''

''துருவா! என்ன இதெல்லாம்! உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா?''

''இன்னும் கேள் ராதா! நீ என்னைப் பற்றி என்ன நினைத்திருக்கிறாய் என்று நான் துளியும் கவலைப் படவில்லை. ஆனால் நான் உன்னைப் பற்றி நினைத்தது ஒன்றுதான்-நீ பெண். உனக்கு ஆபத்துக்கள் அதிகம்! காட்டில் வாழும் மானைக் காட்டிலும், தோட்டத்தில் பூத்திருக்கும் பூவைக் காட்டிலும் உனக்குப் பாதுகாப்பு அதிகம் தேவை! அதை உணர்ந்தவன் நான்! நீ ஆச்சரியப்படுவாய். ஓர் இளம் பெண்ணைக் காப்பாற்ற ஓர் ஆடவன் முயற்சிக்கிறான் என்பது உனக்குக் கதையாக கூடப் படலாம். நான் என்னைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்து விட்டவன். என்னால் பிறருக்குச் சுகம் இல்லை என்று அறிந்தபின், நான் யாருக்கும் உதவியாக இருப்பதைத் தவிர வேறு மார்க்கமில்லை. எந்தச் சுகத்திற்கும் போட்டி யிட்டுப் பயனில்லை. போட்டியில் வெற்றி பெற்றாலும் அது எனக்கு உதவப்போவதில்லை. அதனால் நான் யாருக்கும் கெடுதல் செய்ய விரும்புவதில்லை. அதனால்தான் முதன் முதலில் உன்னைச்

சந்தித்தபோது 'சகோதரி' என்ற பாசத்தோடு சந்தித்தேன்? அன்றே உன்னைத் தவறான எண்ணத்தோடு சந்தித்திருந்தால் நமது உறவு இந்த நிலையில் இருக்காது. ஒன்று வளர்ந்திருக்கும்; அல்லது முறிந்திருக்கும். இப்படி ஒருவருக்கொருவர் கட்டுப் பட்டு வாழும் அன்பு வாழ்க்கை ஏற்பட்டிருக்காது. இன்னும் எனக்கு அந்த எண்ணம் மாறவில்லை. காரணம் தொடக்கத்திலேயே ஒரு முடிவோடு உன்னுடன் பழகியதுதான். மனித வாழ்க்கையில் ஒருவரை ஒருவர் முதன் முதலாகச் சந்திக்கும் போது ஏற்படும் எண்ணம்தான் அவர்களது நட்புக்கு அடித்தளமாக அமைகிறது. இதுவரை நான் ஒரு நாள்கூட சபலப் புத்தியோடு நடந்து கொண்டதில்லை. எத்தனையோ பேர் நம்மைப் பற்றி நம் காதில் விழும்படி கேலியாகப் பேசிக் கொண்டதைக் கேட்டிருக்கிறோம். பல பேர் என்னை அவமானப் படுத்த முயன்றிருக்கிறார்கள் என்பதும் உனக்குத் தெரியும்! நான் இதையெல்லாம் ஏன் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்? ஒரு நாளாவது என்னைப்பற்றி—எனது பூர்வீகத்தைப் பற்றி நீ கேட்டதுண்டா? அதுதான் எனக்குக் கவலை-துயரம் எல்லாம்! சொன்னால் நீ திகிலடைவாய்; சொல்லாவிட்டால் என் உள்ளம்வெடித்துவிடும் போலிருக்கிறது, சொல்லுகிறேன் கேள்:

'அநுராதா,நான் பள்ளியில் படித்த காலத்தில் எனக்கு முயல் என்ற பட்டப்பெயருண்டு, நான் அவ்வளவு வேகமாக ஓடுவேன். பள்ளியில் நடை பெறும் எல்லாப் பந்தயங்களிலும் நான் முதற் பதக்கம் வாங்குவது வழக்கம்.

'சென்னைக்கு அப்பால் முப்பது கல் தொலைவிலுள்ள 'கும்முடிப் பூண்டி' என்ற ஊரில்தான் என்

தந்தை வேலை பார்த்து வந்தார். போலீஸ்காரர் உத்தியோகம் என் தந்தைக்கு. ஊசிக் காதுக்குள் ஒட்டகத்தைத் திணிப்பதைப் போல் குறைந்த சம் பளத்தில் குடும்பத்தை நடத்தியாக வேண்டிய நிலைமை.

'கும்மிடிப் பூண்டி, வெள்ளையர்களின் ராணுவத் தளங்களில் ஒன்று—மிக முக்கியமானதும்கூட. கோட்டை கொத்தளங்களைக் கட்டிக்கொண்டு நாட் டையாளும் வெள்ளையர்களின் உயிரே அந்தத் தளத் தில் தான் இருக்கிறது. பெரிய பெரிய ராணுவ அதிகாரி களெல்லாம் அங்கே இறக்குமதி செய்யப்பட்டார்கள். பீரங்கிக்கென்று ஒரு அதிகாரி, துப்பாக்கிக்கென்று ஒரு அதிகாரி, கண்ணீர்ப் புகைக்கென்று ஒரு அதிகாரி என வித விதமாக இலண்டனிலிருந்து வந்தார்கள். பட்டுப் பூச்சிகளுக்கிடையே ஒரு சிறு வண்டைப் போல், எனது தந்தை அங்கே போலீஸ் உத்தியோகம் பார்த்து வந்தார்.

'நான் அவருக்கு ஒரே மகன்-செல்ல மகன். நான் சிறுவனாக இருக்கும் போதே என் அன்னையை இழந்து விட்டேன். அன்னை முகம் எனக்குத் தெரியாது. எனது தந்தை மறு ஆண்டிலேயே வேறொரு திருமணம் செய்து கொண்டார். எங்களுடைய பூர்வீக ஊரான கிரனூருக்கு அருகிலே தான் எனது சித்தி பிறந்த ஊர். சித்திக்கு நல்ல குணம்; அழகும் இளமையும் உண்டு. ஏறத்தாழ உன்னைப் போல்தான்! படிக்கத் தெரியாது. ஏழை விவசாயி வீட்டுப் பெண். எனது சித்தி, கும்மிடிப் பூண்டிக்கு வந்த பிறகு, நான் தந்தையின் ஆசைப்படி கண்டிப்பும் கண்காணிப்பும் மிக்க வேறொரு பள்ளிக்கு மாற்றப்பட்டு விட்டேன். அதிகமாக வீட்டில் தங்குவ தில்லை. அதற்கு நேரமில்லை. என்னுடைய புதிய பள்ளி யில் ஆங்கிலத்தின் தர்பார் அதிகமாக இருந்தது.

அந்த மொழிக்குத்தான் முக்கியத்துவமும் இருந்தது. பெரும்பாலும் ஆங்கிலோ இந்தியச் சிறுவர்—சிறுமியர் தான் அந்தப் பள்ளியில் இழைந்தார்கள். என்னுடைய ஏழைத் தந்தை எதை மனதில் எண்ணிக் கொண்டு என்னை அந்தப் பள்ளியில் தள்ளினரோ தெரியவில்லை! மொத்தத்தில் எனக்குக் கஷ்டமாகத்தானிருந்தது. கால் சட்டை போட வேண்டும்; காலில் செருப்புப் போட வேண்டும்; கொஞ்சங்கூடத் தளராமல் நிமிர்ந்தே நடக்க வேண்டும்—தேகப்பயிற்சிதான் வெள்ளைக்கார நாட்டில் கண்டிப்பான பாடமாயிற்றே! கண்களை மூடிக்கொண்டு கசப்பான மருந்தைக் குடிப்ப தைப் போல் நான் அந்தப் பள்ளியில் படித்தேன்.

'நான், பள்ளி இறுதி வகுப்பிற்குள் நுழையும் போது எனக்கு வயது பதினேழு." உத்தமர் காந்தியார் இந்திய உபகண்டத்தின் விடுதலைக்குப் புரட்சிகரமான திட்டங்களை வெளியிட்டுக் கொண்டிருந்த காலம். கதர்ச்சட்டை போட்ட தொண்டர்களையெல்லாம் போலீசார் வெறுப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார் கள். ராணுவ கெடுபிடி அதிகமாகவே தலை விரித்தா டியது. உள் நாட்டுப் போலீசார் எங்கே தேசீயக் கட்சிக்காரர்கள் மீது இரக்கம் காட்டி விடுவார்களோ என்று சந்தேகித்த வெள்ளை சர்க்கார், மேலும் மேலும் புதிய வெள்ளை அதிகாரிகளை இறக்கிக் கொண்டே இருந்தது. அப்படி வந்தவர்கள் அனைவரும் கும்மிடிப் பூண்டி ராணுவ முகாமில்தான் தங்கியிருந்தார்கள். அந்தச் சிறிய கிராமம் பெரும்பாலும் ஆங்கிலேயர் களின் குடியேற்ற நாட்டைப் போல் விளங்கியது.

'அந்த ஆண்டில் ஒரு புதிய ஆங்கிலோ—இந்திய மாணவி என் வகுப்பில் சேர்ந்தாள். அவள் பெயர் ரோசிலாந்து. தினந்தோறும் வசீகரமான சட்டை

கள் அணிந்து, வண்ணக்கிளிபோல் வகுப்புக்கு வரு வாள். நடை கம்பீரமாக இருக்கும். நம் நாட்டுப் பெண்கள் நிமிர்ந்து நடந்தால் குளிர்ச்சியாக இருக் காது; ஆனால் ஆங்கிலோ—இந்தியப் பெண்கள் நிமிர்ந்து நடக்காவிட்டால் கேவலம் என்று நினைப்ப வர்கள். அவர்கள் எல்லாத் துறைகளிலும் ஆடவர் களோடு போட்டியிட்டுப் பழக்கப்பட்டவர்கள். ஆட வர்களைப் போல் காலணி போட்டுக் கொள்வார்கள்! சிகரெட் பிடிப்பார்கள். ஓடி விளையாடுவார்கள். சத்தம் போட்டுச் சிரிப்பார்கள். யாருடனும் கூசாமல் பேசு வார்கள். இங்கே அப்படியா? இல்லை. பெண்கள் ஓடினால் உடம்புக்குக் கெடுதல் என்கிறது தமிழ்ச் சட்டம்.

'ரோசிலாந்து புதிதாக இந்தியாவுக்கு வந்தவள். பாசி படர்ந்த தண்ணீரைப் போல் அவளுடைய தமிழ், தூய்மைக் குறைவாக இருந்தது. ஆனால் பெண்ணின் குரலுக்கு இயற்கையிலேயே அமையப் பெற்ற குழை வும், இனிமையும் அந்தக் குறையை மூடி மறைத்துக் கொண்டிருந்தன.

'ரோசிலாந்து பள்ளிக்குப் புதியவளானாலும் விரை வில் எல்லா ஆசிரியர்களின் அன்புக்கும் பாத்திரமாகி விட்டாள். காரணம், படிப்பில் அவள் கெட்டிக்காரி என்பது ஒன்று; இன்னொரு முக்கிய காரணம் அவள் பெரிய போலீஸ் அதிகாரியின் மகள் என்பது. ரோசி லாந்தின் தந்தை கும்மிடிப் பூண்டி ராணுவ முகாமிற் குத் திடீரென்று கொண்டுவரப்பட்ட பெரிய ராணுவ அதிகாரி. பீரங்கிகளின் பொறுப்பிலிருந்து சின்னக் காரியங்கள் வரை அவருடைய கண்காணிப்பில்தான் அங்கே நடைபெற வேண்டும். அவ்வளவு அதிகாரம் அவருக்கு! மாதச் சம்பளம் ஆயிரத்திற்கு மேல்! அது

போக, எல்லா வசதிகளும் அரசாங்கத்தாரால் அவருக்குத் தரப்பட்டிருந்தன.

'எங்கள் பள்ளிக்கு ஆண்டு விழா வந்தது. எல்லாத் துறையிலும் போட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. நான் எதிர்பாராத வகையில், ஆங்கிலக்கவிதை ஒன்றை அபிநயத்துடன் நடித்துக் காட்டும் பந்தயத்தில் ரோசிலாந்துடன் போட்டியிட நேர்ந்துவிட்டது. அந்தப் போட்டிக்கு அதிகாரியாக ரோசிலாந்தின் தந்தையே நியமிக்கப்பட்டிருந்தார்.

'ஆங்கிலேயர்கள் சபலத்திற்கு ஆட்படாதவர்கள்; அவர்களது நடவடிக்கையில் நீதியின் சாயல் இருக்கும். அபிநயப் போட்டியில் ரோசிலாந்தைக் காட்டிலும் நான்தான் தெளிவாகவும், உணர்ச்சியுடனும் ஆங்கிலக் கவிதையை நடித்துக் காட்டியதாகத் தீர்ப்புக் கூறினர், ரோசிலாந்தின் தந்தை. எனக்கு மயிர் சிலிர்த்தது. என் தந்தை ஆனந்தக் கண்ணீர் வடித்தார். ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட சிறுமியை நான் தோற்கடித்து விட்டேன் என்பதற்காகப் பள்ளிக்கு வெளியே இருந்த எத்தனையோ பெரியவர்கள் என்னைப் பாராட்டினர்கள். ரோசிலாந்தின் தந்தை அவரது சட்டைப் பையிலிருந்த விலையுயர்ந்த பேனவை எனக்குப் பரிசாகத் தந்தார். மாணவர்கள் கையொலி செய்தார்கள். இதைக் காட்டிலும் இன்னொரு இன்பகரமான நிகழ்ச்சி நடந்தது. ரோசிலாந்து என் அருகில் வந்து எனது கையைக் குலுக்கி, 'எப்படியும் உங்களைத் தோற்கடிக்கிறேன்' என்று சிரித்துக் கொண்டே என்னிடம் சொன்னாள். ஒட்டகத்தின் கால்களைப்போன்ற அவளது பஞ்சுக்கரம், என் கைக்குள் பதிந்துவிட்டது. தமிழ் நாட்டில் இப்படி நடக்குமா? தந்தையைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு

அடுத்தவனோடு பேச நமது சமூதாயம் இடங்கொடுக்குமா? ரோசிலாந்து பேசினுள்; சிரித்தாள்; கை கொடுத்தாள்; சவால் விட்டாள். ஆனுல், அவளுக்கும், அவளது தந்தைக்கும் ஒருவித பொருமை உணர்ச்சி தோன்ருமல் இருக்க நியாயமில்லை. நமது தமிழ் மொழியில் ஆங்கிலோ—இந்தியப் பெண்ணொருத்தி போட்டியிட்டு வெற்றி பெற்ருல் நாம் என்ன செய்வோம்! சில பேர் நாக்கைப் பிடுங்கிக்கொண்டே செத்துவிடுவார்கள்.

'என் வீட்டில் என் தந்தைக்குப் பயம் ஒரு பக்கம், பரவசம் ஒரு பக்கம். பெரிய இடத்துக்குறி தவறுது என்று அடிக்கடி அவர் சொல்லிக்கொண்டே இருப்பார். எனது சித்தியும் அதற்கு ஒத்துப் பாடுவார்கள். நாளடைவில் பரவசத்தைக் காட்டிலும் பயம்தான் அவர்களை விழுங்கத் தொடங்கி விட்டது. மகன் திறமைசாலியாக இருந்தால் பெற்ருேர்கள் பெருமிதமடைவது உலக இயல்பு. ஆனுல் எனது பெற்ருேர்கள் அதற்கு நேர் விரோதம். எதிரிகளின் கண்கள் மகனை எரித்துச் சாம்பலாக்கி விடுமோ என்ற பயம் அவர்களுக்கு.

'ஒரு நாள்—திடிரென்று என் தந்தை எனக்கு ஒரு கட்டளை போட்டு விட்டார். 'துருவா, நீ படித்தது போதும்; பள்ளிப் படிப்புத் தேவையில்லை?' என்று சொல்லி விட்டார். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"அப்பா!"

"ஆம் உனக்குப் படிப்புத் தேவையில்லை. நீ படித்து எந்த உத்தியோகத்திற்கு போகப் போகிருய்?"

"இந்த வருஷம் மட்டும் படித்து விடுகிறேன். அடுத்த வருஷம் மேற்படிப்புத் தேவையில்லை."

'என் தந்தைக்குக் கண் கலங்கிவிட்டது. எதை மனதில் வைத்துக்கொண்டு இப்படிச் சொன்னுரோ தெரியவில்லை.

'எனது பள்ளிப் படிப்புத் தொடர்ந்தது. பள்ளியில் எனக்கு மதிப்பும் மரியாதையும் அதிகரித்தன. ஆசிரியர்கள் நான் ஏழை என்பதையும் மறந்து என்னிடம் அன்பாக நடந்து கொண்டார்கள். இவ்வளவு நாட்களாகப் பேசாத ரோசிலாந்து வகுப்பிலேயே என்னுடன் பேச ஆரம்பித்து விட்டாள். பள்ளியில் தொடங்கிய பேச்சு. பரந்தவெளியில் சந்திக்கும் சிறப்பாக மலர்ந்து, தனிமையில் சந்தித்து ரகசியம் பேசும் அளவிற்கு வந்து விட்டது. நான் தமிழன்; அவளோ ஆங்கிலோ இந்தியப் பெண். கந்தையைக் கசக்கிக் கட்டிக்கொண்டு நான் பள்ளிக்கு வருவேன். அவளோ, கண்பட்டால் கூசக்கூடிய அருமையான பட்டுத்துணிகளால் அலங்கரித்துக்கொண்டு வருவாள்.

சில நாட்களில்—

பூங்காவிலும், புகை வண்டி நிலையத்திலும் சந்தித்துப் பேச ஆரம்பித்தோம். பெரிய அதிகாரியின் மகளான அவள், என் மீதுள்ள அன்பால் எனது புத்தகங்களையும் தெருவில் சுமந்து வர ஆரம்பித்தாள். அவள் வீட்டு ரொட்டி என் வாயில் இருந்தது, என் வீட்டு அப்பம் அவள் வாயில் ஊறியது. பள்ளிப்பிள்ளைகளுக்கு, நாங்கள் கேலிச்சித்திரமாகி விட்டோம். பொருந்தாத ஜோடி என்று எல்லோரும் எங்களை நையாண்டிசெய்ய ஆரம்பித்தார்கள். எதற்கும் கோபப்படாத நான்கூட ஒரு நாள் ஒரு மாணவனை அடித்து விட்டேன். அடித்தபிறகுதான் தெரிந்தது. அவன் கும்மிடிப் பூண்டி சப்இன்ஸ்பெக்டர் மகன் என்று. எனக்கு உடல் நடுங்கி விட்டது. அந்த சப்இன்ஸ்

பெக்டருக்குக் கீழேதான் என் தந்தை வேலை பார்த்தார். அடிபட்ட அந்த மாணவன் கன்னத்தைத் தடவிக்கொண்டே வீட்டுக்கு ஓடினான். நான் பீதியுடன் ரோசிலாந்தைப் பார்த்தேன். அவள் 'கவலைப்படாதே' என்று கூறி, என்னை ராணுவத் தளத்திற்குள் அழைத்துப் போனாள். அந்த ராணுவத்தளம் பாழடைந்த பண்டை மன்னர் ஒருவரின் கோட்டைக்குள் இருந்தது. கோட்டை வாசலில் இரண்டு பீரங்கிகள் வாய் பிளந்து நின்றன. நாங்கள் இருவரும் பீரங்கி வண்டி மீது சாய்ந்து கொண்டிருந்தோம். ரோசிலாந்து அந்த பீரங்கிக் குழாய்க்குள் கையை விட்டாள். அதற்குள் ஒரு காதல் கடிதம் இருந்தது.

'என்னரோசி, அது காதல் கடிதமா? யார், யாருக்கு எழுதியது? படி பார்ப்போம்!' என்று கிண்டலாகப் பேசினேன் நான். 'ஆம் காதல் கடிதம் தான், போர் வீரர்களின் பிள்ளைகள் போலிருக்கிறது. இல்லாவிட்டால் அவர்கள் காதல் பீரங்கி வாயில் ஆரம்பமாகுமா?' என்று பதிலுக்குப் பேசினாள் ரோசிலாந்து. 'படி ரோசி கடிதத்தை! படிக்காதவர்களாக இருந்தாலும் காதல் கடிதம் எழுதினால் கற்பனையில் வளமிருக்குமாமே!'

ரோசிலாந்து கடிதத்தைப் படித்தாள்!

அன்புள்ள ராஜாளிக்கு,

வலிமையும் வசீகரமும் கொண்ட தங்களை நான் நேசிக்கிறேன். நான் வெள்ளைக் கிளி, நீங்கள் ராஜாளி. வெள்ளைக் கிளிக்கும் ராஜாளிக்கும் உறவில்லை என்றாலும் பகை இல்லை என்பதைத் தாங்கள் அறிவீர்கள். நாம் தினந்தோறும் இங்கே சந்திப்போம். இந்தப் பீரங்கி

வாய்தான் நமக்கு ரகசியத் தபால் பெட்டி. கடிதத் தொடர்புகள் இந்தப் பீரங்கி வாய் மூலமே நடைபெறட்டும். நாளை இதே நேரத்தில் இங்கே சந்திக்கலாம்.

இங்ஙனம்
வெள்ளைக்கிளி.

'ரோசிலாந்து கடிதத்தைப் படித்து முடித்தாள். காதலனுக்கு காதலி எழுதிய கடிதம் அது. எப்படிப் பட்ட புனைப்பெயருக்குள் ஒளிந்து கொண்டு எழுதினு லும் தமிழர்கள் கண்டு பிடித்து விடுவார்கள். பெண்ணுக்குத் தரும் உவமைகளையும், ஆணுக்குக் கொடுக்கும் உவமைகளையும் நெடுங்காலத்திற்கு முன்பே வரையறுத்துக் காட்டியது தமிழ் நாடு தானே! பூ, பூமி, நதி, கிளி, குயில், —இவை பெண்ணுக்கு உவ மைகள். புலி, சிங்கம், ராஜாளி முதலியன ஆணுக்கு உவமைகள்.

'ரோசியின் கையிலிருந்த கடிதத்தை வாங்கிப் பார்த்தேன். அது ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. ரோசி எவ்வளவு கெட்டிக்காரத்தனமாக அதை மொழி பெயர்த்துச் சொல்லியிருக்கிருள் என்பதை அதன் பிறகு தான் என்னுல் புரிந்து கொள்ளமுடிந்தது.

'நேரம் கழிந்து கொண்டிருந்தது. நானே ஒரே மகன். பொழுது போவதற்குள் நான் வீட்டுக்குப் போகாவிட்டால் என் தந்தை தேடி வந்து விடுவாரே! ரோசி கையிலிருந்த கடிதத்தைப்பறித்து பீரங்கி வாய்க் குள் வைத்தேன். ரோசி அதை விரும்பவில்லை. "ரோசி இவர்கள் யாரென்று கண்டு பிடிப்பதற்கு இந்தக் கடிதத்தைப் பீரங்கி வாய்க்குள் வைத்தால் தான் முடியும். நாம் இரண்டு பேரும் ஒளிந்திருந்து பார்க்

கலாம்'' என்றேன். நான் சொன்ன வழி ரோசியை மகிழ்வூட்டவில்லை. அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பு உலகத்து ரகசியங்களெல்லாம் எனக்குத் தெரியும், என்று கூறுவது போலிருந்தது.

''நானும் ரோசியும் அந்தக் கடிதத்தைப் பீரங்கிக்குள் ஒளித்து வைத்து விட்டு ஒதுங்கி, பக்கமாக இருப்பதற்காகக் கைகளைக் கோர்த்துக்கொண்டு கோட்டைச் சுவரை நோக்கி நடந்தோம். பத்தடி தூரம் தான் போயிருப்போம். கோட்டை பின் வாசல் வழியாக ஒரு இளம் பெண் வேகமாக வந்து கொண்டிருந்தாள். நான் நெற்றியைச் சுழித்துப்பார்த்தேன். அவள் வேறு யாருமல்ல; என் சித்திதான். என்னால் தாங்க முடியவில்லை.

''சித்தி!''

''சித்தி தான் வந்திருக்கிறேன், உனக்கு இது நன்ருக இருக்கிறதா? பிழைக்க வந்த இடத்தில் உனக்குப் பித்து பிடித்து விட்டதா? துருவா! நீ யார் அவள் யார்?'' என்ருள் என் சித்தி.

''சித்தி கவனத்தை வேறு பக்கம் திருப்பாதே! உன் பிழையை அம்பலப்படுத்துகிருயா? நீ மணமான பெண்; குடும்பம் நடத்த தொடங்கி விட்டாய்! உனக்கும் காதல் ஒரு கேடா சித்தி! என்னிடம் உன் நாடகம் பலிக்காது! நீ இங்கு எதற்கு வந்தாய் என்பது எனக்குத் தெரியும்! நீ எங்கள் குடும்பத்தின் கௌரவத்தை அழித்து விட்டாய். என் தந்தையின் மானத்தைத் தின்று விட்டாய், போய் விடு! உன் கதை எனக்குத் தெரிந்ததோடு இருக்கட்டும். என் ரோசிக்குத் தெரிந்ததோடு முடிந்து விடட்டும். போய்விடு!' என்றேன் நான். என் சித்தி அப்போதும் நெருப்பாகி விடவில்லை. ஆனுல்

அவள் கூந்தல் மட்டும் அவிழ்ந்து அவள் முதுகில் புரண்டது.

"துருவா என்னடா இதெல்லாம்! உனக்குப் பைத்தியமா? யாரிடம் பேசுகிறோம் என்ற நினைவு கூட இல்லாமல் போய்விட்டது! அந்த வெள்ளைக்காரியிடம் சேர்ந்து மது குடித்து விட்டாயா? நான் உன் சித்திய டா! தெரியவில்லையா உனக்கு? என்னிடம் எவ்வளவு பவ்யமாகப் பேசுவாய்; எவ்வளவு அன்பாக நடந்து கொள்வாய்; அந்தத் துருவனா நீ? அந்த உத்தமனா நீ? துருவா! என்னைப் பேசு. ஆனால் உன் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ளாதே! துருவா! துருவா!' என்று கதறினாள் சித்தி. எனக்கு அவளது அழுகுரலில் நம்பிக் கையில்லை. அவள் வடித்த கண்ணீரால் என் இதயத்தை குளிர வைக்க முடியவில்லை. என் வீட்டில் அவள் சுவை சுவையாக சமைத்துப்போட்டதை மறந்தேன். அரும்பு அரும்பாக பூத்தொடுத்து என் அன்னையின் படத்திற்கு மாட்டியதையும் மறந்தேன்.

"சித்தி வீண் மகுடி வேண்டாம். இன்றுடன் உன் தவறைத் திருத்திக்கொள். நான் ஒருபோதும் என் தந்தையிடம் சொல்ல மாட்டேன். அவர் காதுக்கு இது போனால் அவர் துடிதுடித்துச் சாவார். புலம்பிச் சாவார்! அணு அணுவாகச் சாவார்; போய் விடு சித்தி!' என்றேன் நான்.

"சண்டாளா! நீ படித்தவன் தானா? ஒருபெண்ணைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு இன்னொரு பெண்ணைக் கேலி செய்வதுண்டா? அதை விட வெட்டிக் கொல்வ தையே நான் மனதார விரும்புகிறேன். புருஷன் இருக்கும் போது சாவதைவிட ஒரு பெண்ணுக்கு வேறு

பாக்கியமே இல்லை. என்னைக் கொன்று விடு!' என்று புலம்பினுள் என் சித்தி.

என்ன தான் அவள் அழுதாலும் அவளுடைய காதலன் யார் என்று தெரிந்து கொள்ளத்தான் என் மனம் துடித்தது. இவ்வளவு குறுகிய காலத்திற்குள் என் சித்திக்குக் கிடைத்த காதலன் யார் என்று எனக்குத் தெரியவேண்டாமா?

"சித்தி! வேண்டாம் இந்த வேடிக்கைப் பேச்சு! நீ யாரைத் தேடி வந்தாய்? அவன் பெயரை மட்டும் சொல்லு! அவன் குடலை வகுந்து, என் கழுத்தில் மாலையாகப் போட்டுக் கொண்டு உன்னைச் சந்திக்கிறேன். குருவிக்கூடு போன்ற ஒரு குடும்பத்தை அலைக்கழித்து வேடிக்கை பார்ப்பவனைக் கொன்றுவிட்டு தூக்கு மேடை ஏறினுலும் தவறில்லை. சமுதாயத்திற்கு அது ஒரு பெருத்த தொண்டு! சொல்லு சித்தி! அவன் யார்? அவன் பெயரென்ன? உன்னை இங்கே சந்திக்கச் சொன்ன துன்மார்க்கன் யார்?' என்று உரத்த குரலில் அதட்டினேன் நான்.

'அப்போதுதான் என் சித்திக்கு ஆத்திரம் வந்தது. நிரபராதியான பெண்ணை நிந்திக்கும்போது—அதுவும் கற்பிழந்தவள் என்று பேசும்போது அவள் குமுறுகிருள். எங்கிருந்தோ அவள் புலியின் மனே திடத்தைப் பெறுகிருள். சிங்கத்தின் குரல் அவளிடம் வந்து விடுகிறது. என் சித்தி அழகானவள் என்று உனக்குச் சொல்லியிருக்கிறேன். அப்பேர்ப்பட்ட எழிலரசியின் முகத்தில் கனல் பறந்தது; பெண்மையின் சாயலே இல்லை; சீறினுள்!

"துருவா! நீ மனிதனில்லை! நீ படித்த முட்டாள்! என்னை அறியாமல் பேசிவிட்டாய்' என்று கதறி

ஓடிவந்து என் கன்னத்தில் ஓங்கி அறைந்தாள். என் கன்னம் 'விண்' என்று ஓசை கேட்டது. பெண் கரத்தை மலர்க்கரம் என்கிறார்கள்; இல்லை. மனம் சாந்தியாக இருக்கும்போதுதான் பெண்கள் மென்மையானவர்கள்; மற்ற நேரங்களில் அவர்கள் வேங்கை போன்றவர்கள்.

'சித்தி! உன் நாடகத்தை அம்பலப்படுத்துகிறேன். உன் லீலையை வீடு வீடாகச் சென்று சொல்லுகிறேன்' என்று இரைந்து பேசினேன் நான். அவள் இவை அனைத்தையும் கேட்டுக் கொண்டே ஓடி கோட்டை வாசல்வரை போய் அங்கிருந்து திரும்பிப் பார்த்தாள். எனக்கும் ஆத்திரம் வந்து விட்டது. அவளது நீலிக் கண்ணீரை உலகத்திற்குச் சொல்வதற்காகப் பீரங்கி வாய்க்குள் இருந்த கடிதத்தை எடுப்பதற்காக அதனருகில் சென்றேன். அங்கே ஒரு முரட்டு கரம் என்னைப் பிடித்து நிறுத்தியது. நிமிர்ந்து பார்த்தேன். எதிரே சப்இன்ஸ்பெக்டர் நின்று கொண்டிருந்தார்.

'துருவா, உன் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. உன் நடத்தையால் உன் தந்தையின் வேலையே போய் விடப் போகிறது' என்றார் சப்இன்ஸ்பெக்டர்.

'இன்ஸ்பெக்டர் சார், என் நடத்தையால் என் தந்தையின் வேலை போவதிருக்கட்டும். நீங்கள் நடப்பது நன்றாக இருக்கிறதா? என் அன்னை இறந்த பிறகு என் தந்தை இரண்டாவது தாரம் செய்துகொண்டார். என் சித்தி அழகான பெண்தான். அதற்காக அவளுக்குக் கடிதம் எழுதி, சந்திக்க முயற்சிக்கலாமா?' என்று பதிலுக்கு அவரிடம் கேட்டேன் நான்; அவர் திகைத்தார்.

'என்ன சொல்கிறாய் துருவா! நான் சப்இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறேன். நீ என்ன மதுபானம் அருந்தியிருக்கிறாயா?' என்று சப்இன்ஸ்பெக்டர் கேட்டார்.

'எனக்கு மனம் குழம்பியது. இப்படித்தான் என் சித்தியும் கேட்டாள்.

"ஏன் என்னை மிரட்டுகிறீர்கள்! இந்த லெட்டரை நீங்கள்தான் எழுதியிருக்கிறீர்கள் என்கிறேன். அதுவும் என் சித்திக்கு எழுதி யிருக்கிறீர்கள் என்கிறேன். இல்லாவிட்டால் நீங்களும் என் சித்தியும் ஒரே நேரத்தில் இங்கே சந்திக்க வரமாட்டீர்களே சார்!' என்றேன்.

'சப்இன்ஸ்பெக்டர் கடிதத்தை வாங்கிப் பார்த்தார்; படித்தார்.

"துருவா இந்தக் கடிதத்தை நானே எழுதியதாக இருக்கட்டும்; இதைப் படிப்பதற்கு உன் சித்திக்கு ஆங்கிலம் தெரியுமா?" என்று ஒரு போடு போட்டார்; நான் அயர்ந்து விட்டேன்.

'என் சித்திக்கு ஆங்கிலம் தெரியாதுதான்; இது எனக்குத் தெரியாததல்ல; நன்றாகத் தெரியும். ஆனால் அந்த நேரத்தில் எனக்குப் பிடிபடவில்லை. சப்இன்ஸ்பெக்டர் அந்தக் கேள்வியைக் கேட்டதும் என் உயிர் துடித்தது. பீரங்கி வாய்க்குள்ளிருந்த கடிதத்தை எடுத்துப் பார்க்கும்போதுதான் ரோசிலாந்துக்கு விவரமே தெரிந்திருக்கிறது. என்ன என்று கேட்டாள்; நான் நடந்ததைச் சொன்னேன். அவள் சிரித்தாள். 'அந்தக் கடிதத்தை நான்தான் எழுதி வைத்தேன்; நம்முடைய தொடர்பு இப்படித்தான் தொடங்க வேண்டும் என்பதைத் தங்களுக்குக் காண்பிக்கத்தான் இங்கே அழைத்து வந்தேன்,' என்றாள். அவள் பேச்சில் களங்கமில்லை; சூதில்லை. கடிதத்தை நான் கையிலெடுக்கும்போதுதான் அவள் விபரத்தைப் புரிந்து கொண்டிருக்கிறாள்.

'நான் இன்ஸ்பெக்டர் பக்கமாகத் திரும்பினேன். அவர் ஆழ்ந்த அனுதாபத்துடன் பேசினர்:

'துருவா, நீ விபரம் தெரிந்தவன். இன்று ஒரு பெண்ணின் இதயத்தைத் தூளாக்கிவிட்டாய். இனி ஒருபோதும் அந்தப் பெண் நிம்மதி பெறமாட்டாள். ஆனல் ஒன்று, நீ சந்தேகப்படும் வகையில் நான் ஏன் இங்கே வந்தேன் என்று நினைக்கலாம். நீயும், ரோசிலாந்தும் கோட்டைப் பக்கமாக வந்து கொண்டிருப்பதாக என் மகன் சொன்னன். உன்னைத் தடுத்து உன் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக நான் ஓடிவந்தேன். ஆனல் விளைவு வேறுமாதிரியாக வந்துவிட்டது. பரவாயில்லை; வீட்டுக்கு ஓடிப்போய் உன் சித்தியிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள். உன் நிலைமையைக் காட்டுவதற்காக நான்தான் உன் தந்தைக்கு ஆள் அனுப்பினேன். ஆனல் வீட்டில் அவர் இல்லை. அவருக்குப் பதிலாக உன் சித்தி இங்கே ஓடி வந்திருக்கிருள். உன்னைத் திருத்த எவ்வளவு ஆவலோடு ஓடிவந்திருப்பாள்; உன் மீது எவ்வளவு பிரியம் இருந்தால் அவள் இங்கே துடி துடித்து ஓடி வந்திருக்கவேண்டும்!'

'சப்இன்ஸ்பெக்டர் அன்பாகப் பேசுவதை அப்போதுதான் நான் முதன் முதலாகக் கேட்டேன். என் இதயம் வெடித்து விடுவது போல் தெரிந்தது: 'சித்தி!' என்று கத்தினேன். அந்தக் கோட்டை கிடு கிடுத்தது. என் அருகில் நின்ற ரோசிலாந்து தேம்பினுள். அவளை வீட்டுக்கு அனுப்பி விட்டு, நான் என் வீட்டுக்கு ஓடினேன்- வெறி பிடித்தவன் போல் தலைவிரி கோலத்துடன் ஓடினேன். நான் அந்த ஊரில் கௌரவத்துடன் வாழ்ந்தவன். போலீஸ்காரர் மகனுக இருந்தாலும் என்னைக் கண்ணியமாக நடத்தாத பெரியவர்

கள் அந்த ஊரில் இல்லை. ஆனால் அன்று நான் ஓடியது சிறு பிள்ளைத்தனமான செயலாக மற்றவர்களுக்குத் தெரிந்திருக்கக்கூடும். அப்படி ஓடுவதைத் தவிர வேறு எனக்கு வழி தெரியவில்லை.

'வீடு வந்து விட்டது. கதவைத் தட்டினேன். உள்ளே தாழ் போடப் பட்டிருக்கிறது என்று தெரிந்த பின்னர் கதவை இடித்தேன். கொடுமை! கொடுமை! தாழம்பூ கட்டுப் போல் என் சித்தி பிணமாகத் தொங்கினார்கள். எனக்கு நம்பிக்கை இல்லை. அவர்களது பாதங்களைத் தொட்டுப் பார்த்தேன். பனிக் கட்டி போல் இருந்தன. கைகளைப் பிசைந்து பார்த்தேன். கரையில் பிடுங்கிப் போட்ட அல்லிக் கொடி போல் துவண்டிருந்தன. இந்தக் காட்சியை என்னால் எப்படி தாங்கிக் கொண்டிருக்க முடியும்? கதறித் தீர்த்தேன். ஒப்பாரி வைக்கும் உரிமை பெண்களுக்கு மட்டும்தான் என்பதில்லை. தாங்க முடியாத போது உதிரும் சொற்கள்தானே ஒப்பாரி! நான் அன்று ஒப்பாரியே வைத்து விட்டேன். இவ்வளவு பெரிய துக்கத்திற்குள் ஒரு பயம் வேறு ஒளிந்துகொண்டு என்னைக் கேலி செய்த வண்ணமிருந்தது. திடீரென்று என் தந்தை வந்து விட்டால் என்ன செய்வது? அவரிடம் என்ன சொல்லி நான் தப்பித்துக் கொள்வேன்? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. சித்தியைப் போல் நானும் தற்கொலை செய்து கொள்வதைத் தவிர எனக்கு வேறு மார்க்கமே தெரியவில்லை. மனதைத் திடப்படுத்திக் கொண்டேன். தற்கொலை செய்து கொள்வது கோழைத்தனம் என்று பேசப் பட்டாலும் அந்தக் கட்டத்திற்கு மனிதன் வருவது துணிச்சலான செயல்தான். தற்கொலை செய்து கொள்வது கோழைத்தனமா இல்லையா என்பது அந்தக் காரியம் என்ன குறிக்கோளுடன் செய்யப்

பட்டது என்பதைப் பொருத்தது. தற்கொலைகள் எல்லாமே கோழைத்தனமான செயல்கள் அல்ல. புருஷன் இறந்த பின் வாழப் பிடிக்காத மனைவி விஷம் குடித்து இறப்பது கோழைத்தனமாகுமா? நான் சாகத் துணிந்த போது இப்படியெல்லாம் என்னை நானே கேட்டுக் கொண்டேன். வீட்டின் பின் பக்கமாகப் போய் பெரிய கயிறு ஒன்றைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்து என் சித்திக்குப் பக்கத்திலேயே கட்டினேன். கடைசி முறையாகக் காலஞ் சென்ற என் தாயாரை நினைத்துக்கொண்டேன். என் வாழ்க்கையின் கடைசி யென்று கருதிய அன்றைய சூழ்நிலையில் என்னை நம்பி என்னைக் காதலித்த எனது ரோசிலாந்தை மனதில் பதித்துக்கொண்டேன். என்னுடைய எதிர் காலத்தைப் பற்றி நான் என்னென்ன எண்ணியிருந் தேனே அவற்றையெல்லாம் இடித்துத் தள்ளி விட்டேன். அந்த நேரத்தில் எனக்கு எதிர்காலம் சாவைத் தவிர, நிம்மதியைத் தவிர வேறு எதுவும் தெரியவில்லை. உலகத்தில், சாகப் போவதை முன் கூட்டியே விளம்பரப்படுத்திக் கொண்டு செத்தவன் சாக்ரடீஸ் ஒருவன் தான். அவனைத்தான் சிறந்த தியாகி என்று சொல்ல வேண்டும். மற்ற தலைவர் களுக்கெல்லாம் சாவு எப்போது வருமென்று தெரி யாமல் திடீரென்று இறந்தவர்கள். சாவை அனு பவித்து, சாவு எப்படி இருக்குமென்று முன்கூட்டியே அணு அணுவாக ஆராய்ந்து இறந்தவன் சாக்ரடீஸ் தானே! நான் சாமான்யன்; நாட்டுக்காக எதுவும் செய்யாதவன்; என் வீட்டாருக்குத் தவிர மற்றவர் களுக்கு என்னைப் பற்றித் தெரியாது. அப்படிப்பட்ட எனக்கே சாகப்போகும் போது எப்படி இருந்தது தெரியுமா? சாதாரண காலத்தில் எதை எதைப் பற்றி

கவலைப் படாமல் இருந்தோமோ, அவை அனைத்தும் சாகப் போகும் போது சர்க்கரையாகத் தெரிகின்றன. கண்ணில் எது பட்டாலும் இனிமேல் இதை எப்போது பார்க்கப் போகிறோம் என்ற சபலம் தட்டுகிறது. அடுப்பங்கரையிலிருக்கும் காய்கறிக் கூடையிலிருந்து ஆடை அலங்காரப் பிரச்சனை வரை மனதை வாட்டத் தான் செய்கிறது. நான் ஒரு வழியாக எல்லாவற்றை யும் நினைத்து நினைத்துப் பெருமூச்சு விட்டு முடித்து சாவதற்குத் தயாராகி விட்டேன். கடைசியாக ஜன்னல் வழியாக வெளியில் பார்த்தேன். விளக்கு போடும் நேரம் வந்து கொண்டிருந்தது. அந்த மங்கிய மாலை வேளையில் என் தந்தை உடுப்புடன் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தார். எப்போதும் அவர் வீட்டுக்கு வரும்போது என் சித்தி வெந்நீர் போட்டு வைத்திருப் பார்கள். காபி தயாராக இருக்கும். யார் மீதும் பிரியத்தை வைப்பதைக் காட்டிலும், தன் மீது பிரிய மாக இருப்பவர்கள் மீது அன்பாக இருப்பதுதான் சிறந்தது-முறையானது என்று என் தந்தை அடிக்கடி கூறுவார். அதன் படியே சித்தியிடமும் நடந்து கொண்டார்.

'அவரது செருப்புச் சத்தம் கேட்டது. சாகத் துணிந்த நான் நடுங்க ஆரம்பித்தேன். என் தந்தையின் கண்ணில் படாமல் தப்பித்து விடுவதே எனக்குச் சிறந்த வழியாகத் தெரிந்தது. ஏனெனில் என் தந்தை வீட்டுக்குள் வருமுன் செத்துவிட முடியாதல்லவா? அதனால் தான் முகப்புக் கதவைத் தாளிட்டு விட்டுக் கொல்லைப்புறமாக ஓடி விட்டேன். அதற்குப் பிறகு வீட்டில் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. இரவோடு இரவாகச் சென்னைக்கு ஓடிவிட நினைத்தேன். போவதற்கு ரயிலுமில்லை. காருமில்லை. கடைசியில்

ஒரு சபலம்-ரோசிலாந்தை இறுதியாகப் பார்த்து விட்டுப் போகலாமென்று! அவளுடைய வீட்டுக்கு நடந்தேன். இதயத்திலே பெருஞ்சுமை—கண்களிலே இளமை வெறி! இருட்டு பேயாட்டம் போட்டுக் கொண்டிருந்தது. ரோசிலாந்தின் வீட்டைச் சுற்றி பயங்கரமான சூழ்நிலை! யாரைப் பார்த்தாலும் காங் கிரஸ்காரன் என்றல்லவா அதிகாரிகள் அலைந்து கொண்டிருக்கிறார்கள். நானும் அப்படிப் பட்ட நேரத்தில் தான் ரோசிலாந்தின் வீட்டை நெருங் கினேன். இரண்டு போலீஸ்காரர்கள் வாசலில் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள். உள்ளே வெளிநாட்டு இசைக் கருவியின் போர்ப்பரணிஇசை கேட்டுக் கொண்டிருந்தது. அந்த இசையொலியை எனது ரோசிலாந்துதான் இசைத்திருக்க வேண்டும். அவளைத் தவிர அந்த வீட்டில் வேறுயார் இருக்கிறார்கள்! எனக் கொரு புதுத்தெம்பு வந்தது! சாகத் துணிந்த பிறகு, ஏன் பம்மிக் கொண்டே இருக்க வேண்டும். கொல்லை பக்கமாகப் போய், கண்ணாடித் துண்டுகள் பதித்த சுவரில் பற்றி ஏறினேன். குளுமையான நீல விளக் கொளியில் ரோசிலாந்து உட்கார்ந்து இசைத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய தந்தை அந்த வெளி சத்தில் துப்பாக்கியைத் துடைத்துவிட்டு, புதிய தோட்டாக்களைப் போட முயற்சித்தார். எனக்குப் 'பகீர்' என்றது. ஏனெனில், அந்த அதிகாரிக்கு முன் கோபி என்ற பட்டம் வேறு உண்டு.

'சிறிது நேரத்துக்குப் பிறகு அங்கே சப்இன்ஸ்பெக் டர் வந்தார். இரவு நேரத்தில் அப்போதுதான் முதல் முறையாக வருகிறார். அதனாலே ராணுவ அதிகாரி பதட்டத்துடன் 'என்ன என்ன' வென்று கேட்டார். சப்இன்ஸ்பெக்டர் அவரை அழைத்துக்

கொண்டே நான் நின்று கொண்டிருந்த சுவரோரத்துக்கு வந்தார். இருட்டில் நான் நின்றுகொண்டிருந்தது அவர்களுக்குத் தெரியவில்லை. சப்இன்ஸ்பெக்டர் பணிவுடனும் அக்கரையுடனும் ராணுவ அதிகாரியிடம் பேசினுர். அவர்கள் பேசியது அரை குறையாக என் காதில் விழுந்தது. நான் உற்றுக் கேட்டேன்.

"ரோசிலாந்தை நாம் இப்படியே விட்டு விடக் கூடாது. நிலைமை முற்றி விட்டால் உங்களுடைய கௌரவமே பாழாகிவிடும். கேவலம் ஒரு போலீஸ்காரனின் மகன் ஒரு வெள்ளை அதிகாரியினுடைய மகளோடு தொடர்பு கொண்டிருப்பதாக மற்றவர்கள் அறிந்தால் கைகொட்டிச் சிரிப்பார்கள். அதுவும் மேல் நாடுகளுக்குத் தெரிந்தால் அதைக் காட்டிலும் மானக்கோடு வேறில்லை.' என்று சப்இன்ஸ்பெக்டர் வெள்ளை அதிகாரியுடைய மனதைக் கிளறினுர்.

'அவனுக்கு ஒரு சித்தி இருந்ததாகச் சொன்னீர்களே!' என்று ராணுவ அதிகாரி நாசூக்காகக் கேட்டார்.

'ஆமாம் அவள் ஒரு இளம் பெண். நல்ல அழகி அடக்கமான குணம்' என்று சப்இன்ஸ்பெக்டர் சொன்னுர்.

'இப்போது அவள் எங்கே இருக்கிருள்?'

'பரிதாபம், இந்நேரம் அவள் என்ன கதியாஞளோ?" என்று சப்இன்ஸ்பெக்டரும் இராணுவ அதிகாரியும் பேசிக்கொண்டிருக்கும்போது வெறி பிடித்தவன்போல் என் தந்தை அங்கே வந்தார். வழக்கமாக, அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த துப்பாக்கியை

கையில் வைத்திருந்தார். கண்களில் அழுக்கையும் முகத்தில் ஆத்திரமும் போட்டிப் போட்டுக்கொண்டிருந்தன. ஓய்வு பெறப் போகும் வயது என் தந்தைக்கு. ஆனால் முப்பது வயதே நிரம்பப்பெற்ற சப்இன்ஸ்பெக்டரிடம் பணிவோடு பேசினார். வயதுக்கு மதிப்புத்தராத கொடுமை போலீஸ் துறையைத் தவிர வேறெங்கும் தலை காட்டுவதில்லை.

'என் வீட்டில் அசம்பாவிதம் நடந்துவிட்டது. காரணம் தெரியாமல் திகைக்கிறேன். என் மகனைக் காணவில்லை. வழக்கமாக அவன் இருக்குமிடங்களிலெல்லாம் தேடிப் பார்த்து விட்டேன். அவன் அகப்படவில்லை. என்னுடைய மனைவி தூக்கிலிட்டுக் கொண்டாள். அவளுடைய சாவிற்கும், என்னுடைய மகன் காணாமல் போனதற்கும் ஏதாவது சம்பந்தமிருக்குமோ என்று சந்தேகப்படுகிறேன். உங்களைத் தவிர எனக்கு ஆறுதல் கூற யாருமில்லை.' என்று அழுது கொண்டே என்னுடைய தந்தை அவரது காலில் விழுந்தார். சுவர்மேல் நின்றுகொண்டிருந்த எனக்கு உடம்பு நடுங்கியது.

'சப்இன்ஸ்பெக்டர் என் தந்தையைத் தூக்கி நிறுத்தி, கோட்டைக்குள் நடந்ததை விபரமாகச் சொன்னார். சப்இன்ஸ்பெக்டர் கூறிய கதை என் தந்தையின் சந்தேகத்தைக் குறைத்து, கவலையை அதிகரிக்கச் செய்தது.

''ஐயையோ, ஒரு கொலை என்றுதான் நினைத்தேன். என் மகன் இறந்திருந்தால், நான் இருந்து பயனில்லை'' என்று சிறு பிள்ளையைப் போல் அழுதார், என் தந்தை.

'அதுவரை அமைதியாக இருந்த வெள்ளைக்கார அதிகாரி கோபமாகப் பேச ஆரம்பித்தார்.

"ஏ போலீஸ், போ வெளியே" என்று துப்பாக்கியைத் தட்டிக் காண்பித்தார்.

"சப்இன்ஸ்பெக்டர் கண் ஜாடை மூலம் என் தந்தையை வெளியே போகச் சொன்னார். என் தந்தைக்கு அது புரியவில்லை. அசையாமல் நின்றார்; மறுபடியும் வெள்ளை அதிகாரி உறுமினார்.

"என் குடும்பத்தைக் கெடுத்ததுமல்லாமல் இங்கு வேறு வந்து அழுகிறாயா?" என்று அதட்டினார் அதிகாரி. என் தந்தைக்கு ஒன்றும் புரியவில்லை.

"நான் உங்கள் குடும்பத்தைக் கெடுத்தேனா? ஏழை போலீஸ்காரன் உங்கள் குடும்பத்தை எப்படிக் கெடுக்க முடியும்? கொஞ்சம் விபரமாகச் சொல்லுங்கள். என் வீட்டில் நடந்த விபரீதங்களுக்கும் தங்கள் குடும்பத்துக்கும் என்ன உறவு இருக்கிறதோ தெரியவில்லை. காரணம் தெரிந்தால் நான் அமைதி பெறலாம்." என்று என் தந்தை அழுதுகொண்டே சொன்னார்.

"என் மகளைக் கெடுக்கப் பார்த்தான் உன் மகன். தன்னந் தனிமையில் வைத்துக் கொண்டு சிறு பெண்ணின் உள்ளத்தைப் பாழாக்கத் திட்டமிட்டிருக்கிறான். இப்போது அவன் என் கண்ணில் பட்டால் சுட்டுப் பொசுக்கிவிடுவேன். மரியாதையாக நீ வெளியே போய் விடு" என்று ராணுவ அதிகாரி அடுக்கிக் கொண்டே போனார். என் தந்தைக்குக் கொஞ்சம் உணர்வு வந்தது. ஏதோ சூது நடந்திருக்கிறது என்பதை மட்டும் அவரால் புரிந்து கொள்ள முடிந்தது. அவ்வளவு நேரமாகப் பயந்து கொண்டிருந்த அவர் முழு விபரங்களை அறிய ஆசைப்பட்டார். அவர் கையிலும் துப்பாக்கி இருக்கிறது என்ற நினைவு அவருக்கு வந்து

விட்டது. சப்இன்ஸ்பெக்டரிடம் மீண்டும் மன்றுட ஆரம்பித்தார்.

"நீங்களாவது என் மகன் போன இடத்தைச் சொல்லக்கூடாதா? உங்களுக்கு நான் என்ன செய்தேன்?" என்று கெஞ்சினர். சப்இன்ஸ்பெக்டர் கையை விரித்தார். அவருக்குத் தெரிந்தால்தானே சொல்வார்!

"ராணுவ அதிகாரி இடையில் குறுக்கிட்டு என் தந்தையை வெளியே தள்ளினர். அதுவரை உள்ளே இருந்த ரோசிலாந்து ஓடிவந்து குறுக்கே பாய்ந்தாள்.

"நான்தான் குற்றவாளி. என்னைச் சுடுங்கள்" என்று கதறினள். ராணுவ அதிகாரி ரோசிலாந்தை வேறொரு பக்கமாக இழுத்துத் தள்ளினர். ரோசிலாந்து அகலவில்லை. மீண்டும் மீண்டும் குறுக்கே பாய்ந்தாள். அதிகாரி துப்பாக்கியைக் கையிலெடுத்துக் கொண்டு மகளையே மிரட்டினர். அவள் அந்த மிரட்டலை எதிர் பார்த்திருந்தாள். அதிகாரி என் தந்தையைக் குறி வைத்துக் கொண்டு சுட்டு விடுவேனென்று மகளை மிரட்டினர். ஆனல் கெட்டிக்கார ரோசிலாந்து தகப்பனர் தன்னைச் சுடமாட்டாரென்ற நம்பிக்கையில் என் தந்தையை மறைத்துக் கொண்டு நின்றுள். அதிகாரி தன் இதயத்தைக் கல்லாக்கி கொண்டு சுட்டு விட்டார். விழுந்தது மகளுடைய பிரேதம். அவளைக் காட்டிலும் அதிகாரி துடித்தான். என்னுடைய தந்தையும் மிருகமானர். கையிலிருந்த துப்பாக்கியை எடுத்து தன்னுடைய வாழ்க்கைக்கும் முடிவு கட்டிக் கொண்டு தைரியமாக அதிகாரியைக் குறி வைத்தார். பெரும்பாலான போலீஸ்காரர்களுக்குச் சுடத் தெரிவதில்லை. சுடுவது போல பாவனை செய்யத்தான் அவர்கள் பயிற்சி பெற்றிருக்கிறுர்கள்! என்னுடைய தந்தை நடுங்கிய கரங்க

ளுடன் சுட்டார். சத்தம் கேட்டது. அந்தக் குறி யாரை வீழ்த்தியது என்று பிறகுதான் எனக்குத் தெரிந்தது.

"அரை மணி நேரத்துக்குப் பிறகு நான் உணர்வு பெற்றேன். என்னுடைய கால் ஒடிந்து கிடந்தது. துப்பாக்கிக் குண்டு பாய்ந்த என்னுடைய வலது கால் எந்தக் காரணந்தொட்டும் ஒட்ட வைக்கமுடியாத நிலை பெற்றுவிட்டது. சென்னை மருத்துவமனையில் என்னைச் சேர்ப்பித்தார்கள். ஒரு மாதகாலம் சிகிச்சை பெற்று வெளியே வரும்போது நான் ஒரு மரக்கட்டை காலுடன் வந்தேன். அப்போது எனக்கொரு சோகச் செய்தி காத்திருந்தது. ஆம்; என் தந்தைக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாக அறிந்தேன். இன்னும் அகப்பட வில்லை. இன்னும் தேடிக் கொண்டிருக்கிறேன்."

தன்னுடைய கதையை ஆரம்பத்தில் துடுக்கோடும் மிடுக்கோடும் சொல்லிக் கொண்டே வந்த துருவனுக்கு இறுதிக் கட்டத்தில் நாடி தளர்ந்துவிட்டது. குரலில் வலுவில்லை. தலையை கவிழ்த்துக் கொண்டே கதையைக் கேட்டுக் கொண்டு வந்த அநுராதை நிமிர்ந்து பார்த்தாள். துருவனின் கண்கள் பனிப் பூக்களைப் போல் நனைந்திருந்தன. அந்த உருக்கமான சூழ்நிலையில் சிக்கித் தவிக்காமல் தப்பித்துவிட மார்க்கமில்லாமல் தத்தளித்தாள் அநுராதை. அவள் களங்கமில்லாதவள்; வினயத்தோடு சித்தரிக்கும் திறன் பெற்றிராதவள். அவனால் அவளும் அழுதுவிட்டாள். நல்லவர்கள் இரண்டு பேர் சேர்ந்து அழுதுவிட்டால் மனக்குழப்பங்கள் அழிந்துவிடுகின்றன; சந்தேகங்கள் மறைந்துவிடுகின்றன. உறவு சுரந்து, புதிய நண்பர்களாகிவிடுகிறார்கள். ஆனால், இங்கே அப்படி நடை பெறவில்லை.

துருவனின் துன்பக்கதை அநுராதையை விம்ம வைத்தது. கண்ணீரைக் கொட்ட வைத்தது. ஆனல் அவளுடைய கண்ணீரை—தேம்பலை, துருவன் ஏற்றுக்கொள்ளவில்லை. அவளுக்கு அவன் ஆறுதல் கூறவில்லை. அவள் அதை எதிர்பார்த்திருந்தாள். எதிர்பார்ப்பதும் தவறில்லை. பெண்கள் காரணமில்லாமல் கண்ணீர் வடிக்கமாட்டார்கள். தீய பெண்கள் தப்பிப்பதற்காகக் கண்ணீர் வடிப்பார்கள். சாந்தமான பெண்கள் மன்னிப்பை எதிர்பார்த்து கண்ணீர் வடிப்பார்கள். நெறியுள்ள பெண்கள் நீதிக்காக கண்ணீர் வடிப்பார்கள். எந்தப் பெண்ணின் கண்ணீருக்கும் பொருளில்லாமல் இருக்காது. அனுராதை வடித்த கண்ணீர் அவளுடைய தூய்மைக்கு வாதாடியது. அதைத் துருவன் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. கல்லாக இருந்தான். அவன் கதையைச் சொல்லி விட்டு மீண்டும் வாயைத் திறக்க வெகு நேரம் பிடித்தது.

"நன்ருக யோசனை செய்து சொல். இவ்வளவு துயரத்திற்கிடையே நான் ஏன் சாகாமல் இருக்க வேண்டும்? யாரென்று தெரியாத உனக்காக நான் போராட வேண்டிய அவசியமென்ன?"

"நான் உன்னை நம்புகிறேன். ஆனல் நீ என்னை நம்பவில்லை; நம்பிக்கை, தீயவர்களையும் நல்லவர்களாக்கும் என்பார்கள்" என்று துக்கத்தோடு சொன்னாள் அநுராதை.

"உண்மைதான்! ஆனல் பருவப் பெண்கள் பாதிராத்திரி வேளையில் உலா போய்வருவதை யாரும் அனுமதிக்க மாட்டார்கள். உன் தந்தை இந்தக் காட்சியைப் பார்த்திருந்தால் உன் தலை உருண்டிருக்கும். உனக்கு ஒரு அண்ணன் இருந்திருந்தால் நீ யாரைச்

சந்தித்து வருகிருயோ அவனைப் பிணமாக்கி மகிழ்ந் திருப்பான். நான் என்ன செய்ய முடியும்? நீ யாரோ நான் யாரோ? மேலும் நான் நொண்டி. உரிமை எனக்கு இல்லை என்றுதானே நீ வெளியேறிப்போயிருக் கிருய்?'' என்று உரத்துப் பேசினுன் துருவன்.

''துருவா, நான் உன்னிடம் எதை மறைத்திருக் கிறேன்; ஒன்று சொல்லு! ரயில் நிலையத்தில் என்னையும் உன்னையும் நினைத்துப் பேசும் கேலிக் கூத்துகளிலிருந்து உருட்டி மிரட்டி என்னைக் கெடுக்க நினைக்கும் ஊதாரி களின் காட்டுத் தர்பார்வரை—ஒன்றுவிடாமல் கூறி யிருக்கிறேன். என்னிடம் என்ன ரகசியம் இருக்கிறது? அழகான பெண். இளமையான கன்னிப் பெண்—இரு தயத்தில் ரகசியத்தை வைத்துக் கொண்டு ஏன் இந்த வனுந்திரத்தில் தங்கியிருக்க வேண்டும்!'' என்று விறு விறுப்போடு பேசினுள் அநுராதை.

''ராதை, நான் நேரடியாகக் கேட்கிறேன். நீ ஏன் சுற்றி வளைத்துப் பேசுகிருய்?''

''துருவா, நீ என்மேல் நம்பிக்கை வைத்தால் நான் உத்தமியாக வாழ்வேன். இல்லாவிட்டால் எனது இளமையும் எதிர்காலமும் சருகாகிவிடும்'' என்று கூறி, இடுப்பில் சொருகி வைத்திருந்த ஒரு டைரியை துருவன் முன் எறிந்தாள்.

''இது என்ன?''—துருவன் கேட்டான்.

''அதில்தான் என் எதிர்காலம் இருக்கிறது; அதைப் பெறத்தான் நான் இரவில் எழுந்துபோனேன் என்று அடக்கமாகப் பதில் சொன்னுள் அனுராதை. துருவன் அந்த டைரியைப் பார்த்தான். சில பகுதி களைப் படித்துப் பார்த்தான். அனுராதையின் தந்தை

நரசிம்மன் திருவனந்தபுரத்திற்கு யானை வாங்கப் போன கதை, அவர் தஞ்சைமாவட்டத்தில் சோற்றுக்கில்லாமல் அலைந்தபோது அவருக்கு உதவியளித்த ஒரு பெரியதனக்காரனைப் பற்றிய குறிப்பு முதலியன அந்த டைரியில் அடங்கியிருந்தன. துருவன் டைரியைப் பார்த்து முடித்துவிட்டு அநுராதையைப் பார்த்தான்.

"இதில் என்ன இருக்கிறது? இதைப்பெற நீ ஏன் அவரைச் சந்திக்க வேண்டும்?" என்று குறுக்கு கேள்வியை கேட்டான் துருவன்.

அநுராதை டைரியை கையில் வாங்கி ஒரு முக வரியை எடுத்துக் காண்பித்தாள். துருவன் அதைப் படித்தான். "புதுக்கோட்டை சமஸ்தானம் தெற்கு நாலாம் வீதியிலுள்ள புலவர் செந்தாமரை கண்ணர் வசம் எனது மகளுடைய திருமணத்திற்காக இரண்டாயிரம் ரூபாய்களை ஒப்படைத்திருக்கிறேன். எனக்குப் பிற்காலத்தில் அந்தத் தொகையை என் மகளிடம் கொடுத்துவிட யாருக்கும் தடைவிதிக்க அதிகாரமில்லை" என்று அந்த டைரியில் குறிப்பிடப்பட்டிருந்தது. துருவன் முழுதையும் படித்து விட்டு அநுராதையைப் பார்த்தான். அவள் வானத்தைப் பார்த்துகொண்டிருந்தாள். அவளுடைய அமைதி துருவனை அறைவது போலிருந்தது. அவளிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்போல் தோன்றியது.

"என்ன துருவா?"

"என்னைப் பார்."

"பரவாயில்லை! நீ என்னைத் தவறாகப் புரிந்துகொள்ளாமலிருந்தால் போதும். எந்தக் கன்னிப் பெண்ணுக்கும் இந்த உலகத்தில் யாரேனும் ஒருவர் இருக்கத்

தான் வேண்டும். அப்போதுதான் அவள் அவர்களுக்காகவாவது நெறியுடன் வாழ நினைப்பாள். எல்லோருமே அறிமுகமாகாதவர்களாகவும் வேற்றூர்களாகவும் இருந்தால் அவர்கள் யாரும் அவளைக் கவனிக்க மாட்டார்கள்—பொருட்படுத்தமாட்டார்கள். அவளுக்கும் உலகத்தைப் பற்றி, அக்கறை இல்லாமல் போய்விடும். அதனால்தான் நான் உன்னிடம் மண்டியிடுகிறேன். உன்னிடமாவது நல்ல பெயர் வாங்க வேண்டும் என்று துடிக்கிறேன். நல்லபெண் என்ற பெயர் வாங்க ஆசைப்படாத பெண்கள் இருக்கமாட்டார்கள். என்னைப் புகழ யார் இருக்கிறார்கள் —உன்னைத் தவிர''—உருக்கமாகப் பேசினாள் அநுராதா.

துருவன் சிரித்தான். அநுராதையின்மேல் அவனுக்குப் பழைய அன்பு வந்துவிட்டது என்பதை அந்தச் சிரிப்பு உணர்த்தியது. பதிலுக்கு அவளும் சிரித்தாள். அவள் சிரித்தது வெற்றிச் சிரிப்பு. தரையில் துள்ளியமீன் குஞ்சு, திடீரென்று மழை பெய்து மீண்டும் குளத்தில் சேர்ந்து விட்டது போன்ற இன்ப உணர்ச்சி, அவளை ஒரே உலுக்காக உலுக்கிவிட்டது.

பொழுது புலர்ந்துவிட்டது. இராமேசுவரத்திலிருந்து மானாமதுரைக்குச் செல்லும் ரயில் வரும் வேளை வந்து கொண்டிருந்தது. துருவனும் அநுராதையும் ரயில் நிலையத்திற்குக் கிளம்பினார்கள். அதில் அவர்களுக்கு ஒருவகைப் பூரிப்பு. இருவரையும் கொஞ்ச நாட்களாகத் தனித்தனியாகப் பார்த்தவர்களுக்கும், அந்தத் தனிமை நீடிக்காதா என்று ஏங்கியவர்களுக்கும் அன்று அவர்கள் இருவரும் இணைந்து சென்ற காட்சி பேரிடியாக இருந்திருக்கக்கூடும். மூக்கில் விரல்வைத்த பத்திரிகைப் பையன்—முறுக்கு மசால்வடை வியா

பாரிகள்—பொட்டுக் கடலைவண்டிக்காரன், போர்ட்டர் அத்தனை பேருக்கும் அன்று ஒரு பெரிய தகவல் கிடைத்ததைப்போல் பேசிக் கொண்டார்கள். வாடிக்கையான சாப்பாட்டுக் கடைக்காரன் கிண்டல்கூடச் செய்யத் தொடங்கிவிட்டான். துருவன் பொறுமைசாலி, ஆனல் அவன் பொறுமை விலைபோவதில்லை. அவன் நொண்டி-எதுவும் செய்ய இயலாதவன் என்பது அந்த ரயில் நிலையத்தின் முடிவு.

* * *

ஒரு வாரத்திற்குப் பிறகு துருவன், ராதையிடம் அன்று காண்பித்த டைரியைப் பற்றி விசாரித்தான். புதுக்கோட்டைக்குப் போய் அந்தப் புலவரைக் கண்டு இரண்டாயிரம் ரூபாயை வாங்கி வந்துவிட அவன் நினைத்தான். அவனே நொண்டி; அவளோ கன்னிப் பெண்; தனியாகப் போகமுடியாது. இருவரும் சேர்ந்து போனல் இதில் ஏதோ சூழ்ச்சி இருக்குமென்று எண்ணி அந்தப் புலவர் தன்னிடம் பணமே இல்லையென்று சொல்லவும் கூடும்-என்றெல்லாம் நினைத்துப் பார்த்த துருவன், மரத்தில் சாய்ந்து கொண்டு நின்ற அநு ராதைக்கு அருகில் போய் புன்முறுவல் பூத்தபடி நின்றான்.

"அநுராதா!"

"என்ன துருவா!"

"தியாகராசனைப் பார்க்கப்போக வேண்டாமா?" என்றான்.

" அவர் எப்படிப்போனல் நமக்கென்ன! நமக்கும் அவருக்கும் என்ன உறவு இருக்கிறது?" என்று துண்டித்தாற்போல் பேசினள் அநுராதை.

"என்ன இருந்தாலும் நமது பணம் இருக்கு மிடத்தைக் காண்பித்தவரல்லவா!'' என்ருன் துருவன்.

அவள் விடவில்லை. ''பணம் இருக்குமிடத்தைக் காண்பிப்பதால் மட்டும் ஒரு பருவப் பெண் பாதி ராத்திரி வேளையில் எழுந்து போவது தவறில்லாமல் போய்விடுமா?'' என்று ஒருபோடு போட்டாள்.

துருவன் பதில் சொல்லத் திணறினுன். சிரித்துச் சிரித்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டான். இருவரு மாகச் சற்று நேரத்திற்குப் பிறகு தியாகராாசன் அறைக்குப் போனுர்கள்.

* * *

புலவர் செந்தாமரைக் கண்ணன் சிறந்த சிவபக்தர் சமஸ்தானத்தைச் சேர்ந்த உயர்நிலைப்பள்ளி ஒன்றில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். ஆனுல் அவர் புதுக் கோட்டைக்குப் புதியவர்தான். பத்தாண்டுகளுக்குள் தானிருக்கும், அவர் அங்கு குடியேறி!

செந்தாமரைக் கண்ணருக்குப் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் நல்ல செல்வாக்கு இருந்தது. மன் னரே அவரை அழைத்துப் பேசிக்கொண்டிருப்பார். தமிழ் இலக்கியம், தமிழ் இசை, வீர விளையாட்டுக்கள் இவைகளைப் பற்றியெல்லாம் மன்னர் அடுக்கடுக்கான கேள்விகளைக் கேட்பார். எல்லாவற்றிற்கும் புலவர் பொறுமையாகப் பதில் சொல்லுவார். எல்லாப் பதில் களுமே இனிமையாகத்தானிருக்கும்.

புலவரிடம் நல்ல பண்புகள் இருந்தன. எந்நேரம் கிடைத்தாலும் முன்னேற்றப் பணி புரிபவர். தானும் வாழ்ந்து, பிறரும் வாழவேண்டும் என்று எண்ணுபவர்.

அவர் எழுதிய புத்தகங்கள் நாட்டில் நல்ல பெயர் எடுத்திருந்தன. அரசியலார் கூட அவரது இரண்டு புத்தகங்களுக்குப் பரிசு வழங்கியிருந்தார்கள். சமஸ்தானப் பகுதியில் தமிழியக்கம் ஒன்றைத் தொடங்கி, வாலிபர்களிடையே, மாணவர்களிடை தமிழ் உணர்ச்சியைத் துளிர்விடச் செய்த பெருமை செந்தாமரைக் கண்ணரைத்தான் சாரும். அவருடைய உதவியால் வெகுபேர் படித்துத் தேர்ந்திருக்கிறார்கள். உயர் உத்தியோகம் பெற்றிருக்கிறார்கள். அன்பினாலும் அறிவாற்றலினாலும் புதுக்கோட்டையில் உள்ள பெருந் தனவந்தர்களுக்குக் கிடைக்காத மரியாதையைப் புலவர் பெற்றுவிட்டார். அவரது வளர்ச்சியைக்கண்டு பொறாமைப்பட்டவர்கள் இல்லை. தீங்கு நினைத்தவர்கள் கிடையாது. அந்த நெஞ்சங்களைப் பெற்றவர்களைக் கூட புலவரின் பணி கவர்ந்திருந்தது.

இவ்வளவு கீர்த்தியும் ஆள் பலமும் பெற்றிருந்த புலவர் உள்ளத்தில் ஒரு பெருங்குறை கிடந்து உருண்டு கொண்டே இருந்தது, உற்சாகமுள்ள நேரத்தில் எண்ணிப் பார்த்தால்கூட அந்தக் கவலை அவரைக் குன்ற வைத்துவிடும். அவருக்கு ஒரே ஒரு மகள் இருந்தாள். அழகான பெண்; படித்தவள்; பாடத் தெரியும். ஆனால் வாரிசுக்கு ஓர் ஆண் இல்லையே என்ற பெருங் குறைதான் அவரைத் தின்று கொண்டிருந்தது. சுவீகாரம் எடுக்க அவருக்கு விருப்பமில்லை. அந்த முறையே தவறு என்று வாதிப்பவர். பிள்ளைக்காக இன்னொரு மணம் செய்து கொள்ளும்படி பல பேர் அவரைத் தூண்டினார்கள். மனம் அதற்குத் துளியும் இடம் கொடுக்கவில்லை. முதல் மனைவியினிடம் அவர் அத்துணை அன்பை வைத்திருந்தார். சில வேளைகளில் புலவர் மனோதத்துவ ஆராய்ச்சியில் இறங்கிவிடுவ

துண்டு. ஏழைகள் இல்லங்களில், வாழ வளமில்லாத குடும்பங்களில் ஏன் குழந்தைகள் அதிகம் பிறக்கின்றன? பிள்ளை இல்லையே என்று ஏங்கித் திரிவோர் அனைவரும் பணக்காரர்களாகத்தானிருக்கிறார்கள். ஏன் இந்த அமைப்பு உருவாகியிருக்கிறது—என்று தீவிரமாகச் சிந்திக்க ஆரம்பிப்பார். நேரம் போவதே தெரியாமல் உட்கார்ந்திருப்பார். மகள் வந்து கவனப்படுத்தினால்தான் அவர் முகத்தைத் துடைத்துக்கொண்டு உணவு கொள்ளச் செல்வார்.

புலவர் செந்தாமரைக் கண்ணனார் புதுக்கோட்டைக்கு வருமுன்னர் தங்கச்சிமடத்தில் வாழ்ந்து வந்தார். அங்கு ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தை வைத்துக் கொண்டு காலங்கழித்தார், அவரும் ஏராளமான பிள்ளைகளுக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தார். ஆனால் வருவாய் குறைவு. அப்போதுதான் எழுதத் தொடங்கினார். அவரது ஆராய்ச்சி முதன் முதலாக தங்கச்சிமடத்தைச் சுழலத் தொடங்கியது. யாராவது தங்கச்சிமடத்தைப் பற்றிக் கேட்டால் புலவர் ஆரம்பித்து விடுவார். அந்தப் பகுதியைப் பார்த்த எந்தக் கற்பனை உள்ளங் கொண்டவனும் நூல் எழுத முயலாமல் இருக்க மாட்டான். ரயிலில் போகும்போது நம் நெஞ்சையே பறித்துவிடும் அளவுக்கு இயற்கைக் காட்சிகள் இருக்கின்றன. எங்கு பார்த்தாலும் மணற்திட்டுகள். பொங்கிவரும் நீரலைகள் கல்லாய்ச் சமைந்ததுபோல். சந்தனத்தை அறைத்து ஊற்றி ஊறவைத்தது போல், அந்த மணல் மேடுகள் காட்சி தருகின்றன. அந்த மேடுகள் சில இடங்களில் மிகவும் உயரமாகி விட்டிருக்கின்றன. பனைமரத்தின் கொண்டைவரை மணல் மேடுகள் உயர்ந்திருப்பதைத் தங்கச்சிமடம் பகுதியில்தான் பார்க்க முடியும்.

ரயில் பாதையின் இருமருங்கிலும் தென்னை மரங்கள் நிறைந்திருக்கின்றன. அதைப் போலவே, 'உடை மரங்கள்' என்ற இன்னொரு வகை மரங்களும் காணப்படுகின்றன. ஏராளமான கோட்டைகள், மண்டபங்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தெரிகின்றன. அனைத்தும் இடிந்து கிடக்கின்றன. எல்லோருக்கும் அவைகளைப்பற்றிய சரியான விவரங்கள் தெரியவில்லை.

பாம்பனிலிருந்து இராமேசுவரம் போகும் வழியில் மாத்திரம் ஆறு மண்டபங்கள் இருக்கின்றன. அக்காள் மடம், தங்கச்சி மடம்; உடையத்தேவர்மடம், பிள்ளை மடம், காட்டுப் பிள்ளையார் கோயில்மடம், என்று அவற்றிற்குப் பெயர்கள் வழங்கி வருகின்றன. இந்த மடங்களில் தங்கச்சி மடத்திற்குத்தான் அதிகப் பெருமை உண்டு. சரித்திர முக்கியத்துவமும் அதற்கே இருக்கிறது மங்கல தீர்த்தம்; ஏகாந்த ராமர் தீர்த்தம்—என்ற இரண்டு நீர்த் தடாகங்கள் இருக்கின்றன. இன்னொரு வியப்பிற்குரிய காட்சி அங்கே இருக்கிறது. அந்த இடத்திற்கு 'வில் ஊன்றி' என்று பெயர். கடலோரத்தில் ஒரு கிணறு. சில நேரங்களில் அந்தக் கிணற்றைக் கடல் மூடி விடுகிறது. அவ்வாறு கடல் மூடியிருக்கும்போது அந்தக் கிணற்று நீர் உப்புக் கரிப்பதில்லை. கடல் நீர் வற்றி கிணற்றின் மேல் மட்டம் தெரியும்போதும் அந்தக் கிணற்று நீர் உப்புக் கரிப்பதில்லை. சீதைக்குத் தாகமெடுத்ததும், இராமன் வில்லை எடுத்து, அந்த இடத்தில் அம்பைக் குறி வைத்தானும், அதுதான் அந்தக் கிணறும்! அதனால்தான் அந்தக் கிணற்றுக்கு 'வில் ஊன்றி' என்று பெயர் வந்ததாம். இப்படி ஒரு ஐதீகம் அந்தப் பகுதியில் உலவிக் கொண்டிருக்கிறது.

தங்கச்சி மடத்தில் இன்னொர் சத்திரம் உண்டு. இன்று அது இடிந்து உருக்குலைந்து காணப்படுகிறது. சத்திரம் என்று அதைக் குறிப்பிடுகிறார்கள். ஆனால் அது ஓர் அரண்மனை போலவே இருக்கிறது. மணிமண்டபம், கோணல் வாசல், உக்கிராணம், அந்தப்புரம் இவை அனைத்தும் அந்தச் சத்திரத்தில் இருக்கின்றன. மதுரை மகாராணி மங்கம்மாளின் காலத்தில் அந்தச் சத்திரம் கட்டப்பட்டதாக முதியவர்கள் தெரிவிக்கிறார்கள்.

தங்கச்சி மடத்திற்கு இவ்வளவு பெரிய தமிழ்ச் சரித்திர பெருமை இருந்ததால்தான் அங்கு குடியிருந்ததாகப் புலவர் அடிக்கடி கூறுவார். அவர் தங்கச்சி மடத்தில் இருந்தபோது கல்வெட்டுக்கள், பழைய ஏடுகளை ஆராய்வதையே பெரிதும் தினசரிப் பணியாகக் கொண்டிருந்தார். மனிதர்கள் தங்களுக்கு விருப்பமான செயலில் ஈடுபட்டிருக்கும்போது பசி தெரிவதில்லை. பணத்தைப் பற்றிக் கவலையே எழுவதில்லை. அதுவும், தமிழ்ப் புலவர் ஏட்டாராய்ச்சியில் ஈடுபட்டால் கேட்க வேண்டுமா! தலையில் குருவி உட்கார்ந்தால்கூடத் தெரியாமல் இருப்பார்கள். அவர் தங்கச்சிமடத்திலிருந்து புதுக்கோட்டைக்குப் போய் ஆண்டுகள் பல ஆகிவிட்டாலும், அவர் தங்கச்சிமடத்து நினைவுகளை மறந்து விடவில்லை. வகையான மீன்களை மறந்து விடவில்லை, வகை வகையான மீன்களைத் தந்து சிந்தனைக்கு வலுவேற்றிக் கொடுத்த பகுதி அல்லவா அது! யாராவது விருந்தினர் வந்துவிட்டால்கூட புலவர் அடிக்கடி கூறிக் கொள்வார்: "இவ்வளவு நேரம் தங்கச்சிமடமாக இருந்தால் பலவகை மீன்களைக்கொண்டு வந்திருப்பேன்!"—தங்கச்சிமடம் அப்படி ஆழப்பதிந்திருந்தது அவரது நெஞ்சில்!

அன்று வெள்ளிக் கிழமை!

புலவர் குளித்துக் குங்குமமிட்டு யாரையோ எதிர் பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது துருவனும், அநுராதையும் உள்ளே நுழைந்தார்கள்.

துருவனையும், அநுராதையையும் புலவருக்கு அடையாளம் தெரியவில்லை. அதைப் போலவே தான் இவர்களுக்கும். "நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர் கள்? யாரைப் பார்க்கவேண்டும்?'' என்று புலவர் கனி வோடு கேட்டார்.

"நாங்கள் மண்டபத்திலிருந்து வருகிறோம். என் பெயர் துருவன். அந்தப் பெண்ணின் பெயர் அநுராதை. தங்களைச் சந்திப்பதற்காகவே நெடுஞ் தொலைவிலிருந்து வந்திருக்கிறோம்" என்று துருவன் பதில் சொன்னான்.

"தாராளமாகச் சொல்லுங்கள்; என்னால் முடிந்த தைச் செய்து கொடுக்கிறேன். மனிதர்கள் தங்களால் செய்து கொடுக்கக் கூடிய காரியத்தைப் பிறருக்குச் செய்து கொடுக்காததால்தான் ஏராளமானவர்கள் இருக்கும் இடம் தெரியாமல் மறைந்து கிடக்கிறார்கள். பூமிக்குள் கிடக்கும் தங்கத்திற்கு மதிப்பு இல்லை. அது போலவே ஆற்றல் உள்ளவர்கள் நல்ல உள்ளம் இல்லாததால் யாருக்கும் பயன்படாமல் போய் விடுகிறார்கள்." என்று புலவர் அடுக்கிக்கொண்டே போனார்.

"உங்களை எனக்கு நன்றாகத் தெரியாது. ஆனால், இந்தப் பெண்ணிற்கு நன்றாகத் தெரியும்.

"நீங்கள் தங்கச்சிமடத்தில் இருந்தபோது ராமேஸ்வரத்தில் யானைப் பாகனாக இருந்த நரசிம்மனின் புதல்வி இந்தப்பெண். நரசிம்மனுடைய அகால மரணத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். யானையை அடக்குவதற்கு உயிரையே தியாகம் செய்த அந்தவீரமகனின் மகளுக்கு, ராமேசுவரம் கோயில் நிர்வாகிகள் எந்த உதவியும் செய்யவில்லை. இன்று அந்தப் பெண் வளர்ந்து உலகத்தை உணரும் பருவத்திற்கு வந்து விட்டாள்" என்று துருவன் சொல்லும்போது புலவரின் கண்களில் நீர் துளிர்த்தது.

"எனக்கு நன்றாகத் தெரியும், நரசிம்மன் உத்தமன். அடிக்கடி தங்கச்சிமடத்திற்கு வருவான் ஒவ்வொரு முறையும் சங்ககால வீரக்கதைகளை என்னிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு போவான். அவன் சில வேளைகளில் வினயமான கேள்விகளைக் கேட்பான். 'அந்த காலத்தில் ராஜாக்களெல்லாம் யானைகளில் ஏறியிருக்கிறார்கள்: ஒவ்வொரு இளவரசர்க்கும் யானை ஏற்றம் தெரிந்திருந்தது, ஆனால் இப்பொழுது யானை அடக்கும் பாகன் வேலை ஏன் அடிமைத்தனமாகக் கருதப்படுகிறது'— இப்படித் திடீர் திடீரென்று கேள்விகளைக் கேட்பான். குழந்தை உள்ளத்தில்தான் குதர்க்கமான கேள்விகள் எழும்புவது உண்டு. அவன் இறந்தது எனக்குப் பெரிய நட்டமாகும். ஆனால், அவனுடைய கடைசிக்காலத்தில் என்னிடம் தெரிவித்ததை நான் நிறைவேற்றி வைத்திருக்கிறேன். அவனுடைய சடலத்தை தங்கச்சி மடத்திற்கு அருகில் உள்ள 'உடன்காட்டில்' புதைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். அவன் நினைத்தது நடந்தது. இந்தப் பெண் அப்பொழுது சிறுமி" என்று புலவர் கூறினார். அநுராதை தேம்பித் தேம்பி அழுதாள்.

"உங்களைத்தான் அநுராதை மலைபோல் நம்பி யிருக்கிருள். யானைப் பாகன் நரசிம்மன் அவர்கள் அவர் சேகரித்து வைத்த பணத்தைத் தங்களிடம் சேர்ப்பித்திருப்பதாக அவர் எழுதி வைத்திருக்கும் டைரிமூலம் எங்களுக்குத் தெரிய வந்தது. அதைப்பற்றி விசாரித்து போகத்தான் வந்தோம்."

"உண்மைதான் அவன் பெயரால் என்னிடம் கொஞ்சம் பணம் இருக்கிறது. அநுராதை இவ்வளவு பெரியபெண்ணுகவளர்ந்து திருமணம் எல்லாம் முடியும் வரை என்ன செய்தீர்கள். அநுராதையின் திருமணத் திற்கு யார் பணம் கொடுத்தார்கள்." என்று களங்க மில்லாமல் ஒரு கேள்வியைப் போட்டார். துருவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. துருவன் அநுராதையின் முகத்தைப் பார்த்தான். அநுராதை சிரித்தாள். சிரித் தாலும் அவள் கண்களில் நீர் குறையவில்லை. மாலை வெய்யிலுடன் மழை தூறுவதுபோல் இருந்தது அந்தக் காட்சி.

துருவன் தலையைக் கவிழ்த்துக்கொண்டான்.

புலவர் விட்டபாடில்லை. "திருமணத்தைக் கடன் வாங்கிச் செய்தீர்களா?" என்று மீண்டும் கேட்டார்.

"மன்னிக்க வேண்டும்; அநுராதைக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை" என்று சிரித்துக்கொண்டே சொன்னுன்.

"அப்படியா? நீ யார்?" என்று ஒரு புதிரைக் கிளப் பினர்.

"நான் அனுதை, அநுராதையை எனக்குத் தெரி யும்" என்று அடக்கமாகச் சொன்னுன் துருவன்.

புலவர் முகத்தில் சந்தேகக்குறி தோன்றியது.

"எவ்வளவு நாட்களுக்குத்தான் இப்படி ஒளிந்து மறைந்து வாழப் போகிறீர்கள்? தமிழ் மக்களிடம் இந்தக் குறை இன்னும் அதிகமாக இருக்கிறது. பணங் கொடுத்து விலைமாதர் வீடுகளுக்குப் போகிறார்கள். அங்கே சாதி வித்தியாசம் பார்ப்பதில்லை. ஆனால் முறைப்படி திருமணம் செய்துகொள்வதற்கு மட்டும் உயர்வு, தாழ்வு, அந்தஸ்து, பணம் இதுபோன்ற தராதரங்களை அலசிக்கொண்டிருக்கிறார்கள். நீ ஏன் அநுராதையை தாலிகட்டிய மனைவியாக்கி கொள்ளக் கூடாது. கூடவேகூட்டிக்கொண்டு அலையமட்டும் மனம் வருகிறது, அந்தப் பெண்ணை மனைவி என்று கூற மட்டும் மனம் இல்லையாக்கும்" என்று ஒரு கிள்ளுக் கிள்ளினார்.

அநுராதை துணுக்குற்றாள்; துருவன் உள்ளம் துடித்தது. எதையும் வெளிக்காட்டிக்கொள்ளமுடியாத சூழ்நிலை. இருவரும் ஊமைகளாகவே இருந்தார்கள்.

புலவர் மீண்டும் பேசத்தலைப் பட்டார்: "உனக்கோ கால் ஊனமடைந்திருக்கிறது. நீ அவளை அழைத்துக் கொண்டே திரிவதில் எனக்குத் திருப்தியில்லை. இது போன்ற நட்புக்களை நான் விரும்புவதில்லை. உங்களால் தமிழ் நாட்டுக்கே பெரிய அபகீர்த்தி ஏற்பட்டு விட்டது. துருவா, நீ நல்லவனாக வரவேண்டும், உன்னை நம்பியிருக்கும் அநுராதையும் சுகமாக இருக்க வேண்டும். எனவே நீங்கள் இருவரும் முதலில் தம்பதிகளாகி விடுங்கள்; தரவேண்டிய பணத்தை நான் தருகிறேன்" என்றார் புலவர்.

"புலவரய்யா, எங்களைத் தவறாகப் புரிந்துகொண்டு விட்டீர்கள். நான் அநுராதையை அப்படி நினைக்கவே இல்லை. நாங்கள் இருவரும் சந்தித்தோம்: எப்படியோ

அன்பு வளர்ந்து விட்டது. அந்த அன்பு மாசு படாதது. எந்தக் கரும் புள்ளியும் அந்த அன்பில் இல்லை'' என்று உருக்கமாகச் சொன்னான் துருவன்.

புலவருக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. இரண்டு இளம் உள்ளங்கள் எந்தவிதமான பிரதி உபகாரத்தை யும் எதிர்பாராமல் இணைவதில்லை என்று அவர் திடமாக நம்பினார். அதனால் துருவன் வார்த்தைகளை அவர் பொருட்படுத்தாமல் இருந்தார்.

''துருவா, நான் முதியவன். எனக்கும் ஒரு பெண் உண்டு. உலக அனுபவம் பெற்றவன் நான். என்னை ஏமாற்றிப் பயனில்லை. நான் உங்கள் இருவருக்கும் வேண்டியவனாக, வழிகாட்டியாக இருக்கவேண்டு மானால் நீ இந்தப் பெண்ணை ஏமாற்றாமல் நடந்து கொள். அவள் கழுத்தில் மாங்கல்யத்தைப் போடு!'' என்றார் புலவர்.

துருவன் அழுதான்! ''ஐயா, புலவரே அநுராதை யைத் திடீரென்று எப்படி மனைவியாக்கிக் கொள்வது! நான் அனுராதையின் உதவிக்கு வந்தவனய்யா?'' என்றான் துருவன்.

''யாரும் நம்ப மாட்டார்கள் இளைஞனே! அவ ளுக்குப் பணம் இருப்பதால்தான் நீ அவளைப் பின் தொடர்ந்து வந்திருப்பதாகக் கருதுவார்கள். முன்பின் தெரியாமல் நீ அந்தப் பெண்ணோடு சுற்றிக் கொண் டிருப்பதை யாரும் தமிழ் நாட்டில் அனுமதிக்கமாட் டார்கள். என்னிடம் மறைத்துப் பயனில்லை'' என்று பிடிவாதமாகப் பேசினார், புலவர்.

''ஐயா என்னை நம்புங்கள், துருவன் எனக்கு மிகவும் வேண்டியவர்—எனக்கு வழிகாட்டி!'' என்றாள் ராதை.

"நீ பேதைப் பெண். நீ நம்பிக்கை மோசம் போகப் போகிருய்! இந்த இளைஞன் உன்னை ஏமாற்றப் போவதில்லை என்றால் ஏன் உன் கழுத்தில் தாலி கட்டக் கூடாது. நீயாவது உன் எதிர்காலத்தை நினைத்துப் பார்த்தாயா? பணம் இருக்கும்வரை உன் பின்னுல் பலர் வருவார்கள். உன் பணம் தீர்ந்ததும் அவர்கள் அனைவரும் உன்னை எதிர்த்து வருவார்கள். இதுதான் உலகம். கடைசியாகச் சொல்லுகிறேன், நீங்கள் இரு வரும் தம்பதிகளாக வாருங்கள். அல்லது அந்த இளை ஞனின் தொடர்பை அறுத்துக்கொண்டு நீ மட்டும் வரவேண்டும். பணம் எப்போதும் என்னிடம் தயாராக இருக்கும். இன்று என் வீட்டுக்கு மாப்பிள்ளை வீட்டுக் காரர்கள் வருகிறார்கள். என் பெண்ணுக்குத் திருமண நாள் வைக்கப் போகிறோம். நீங்கள் போய்விட்டு இன் னொரு முறை வாருங்கள். நான் சொன்னதை மட்டும் மறந்து விடாதீர்கள்" என்று சொல்லிவிட்டு, புலவர் உள்ளே போய்விட்டார். அந்த நேரத்தில் உள்ளே இருந்து ஒரு பெண் வந்தாள். அவள்தான் புலவரின் மகள். அவளைப் பார்த்ததும் அனுராதைக்குப் பழைய நினைவுகள் மனதுக்கு வந்தன. ஏனெனில் அந்த இளம் பெண் இராமேசுவரத்தில் அநுராதையோடு படித்தவள்.

"அநுராதா என்னை நினைவிருக்கிறதா? நான் உன் னோடு படித்தவள்" என்றுள் அந்தப் பெண்.

"எனக்கு நினைவிருக்கிறது, பாலர் வகுப்பி லிருந்து நாம் இரண்டுபேரும் ஓடியாடி விளையாடியதை நான் மறக்கவில்லை. தங்கச்சிமடத்திலிருந்து நீ இராமேசுவரத்திற்குப் படிக்க வந்த கதையை எத் தனையோ முறை என்னிடம் சொல்லியிருக்கிருய்" என்று, பழைய நினைவுகளை கிளறினுள் அநுராதை.

துருவனுக்கு அதற்குமேல் அங்கு நிற்கப் பிடிக்க வில்லை. அநுராதையைத் தூண்டிக்கொண்டே நின்ருன். அநுராதை அவளுடைய தோழிமூலமாக செந்தாமரைக் கண்ணரிடமிருந்து பணத்தைப் பெற்று விடலாம் என்று கருதினுள். ஆனல் அந்த யுக்தியை துருவன் புரிந்துகொள்ளவில்லை. ஒரே பிடிவாதமாக நின்ருன்.

அநுராதை தோழியிடம் விடைபெற்றுக் கொண்டாள். வாசற்படியை விட்டு இறங்கும்போது பெரியவர் ஒருவர் அந்த வீட்டிற்குள் நுழைந்தார். அவர் கையில் ஒரு சிறிய புத்தகம் இருந்தது. துருவனுக்கு அவரைத் தெரியவில்லை. அநுராதை கண்டுபிடித்து விட்டாள். டிக்கட் பரிசோதகர் தியாகராசனின் தந்தைதான் அவர்! தியாகராாசர் ஒருமுறை காயமுற்று படுக்கையில் கிடக்கும்போது அவரை பார்ப்பதற்காக வந்திருந்தார். அப்போது அநுராதை அவரைப் பார்த்திருக்கிருள்.

தியாகராசனின் தந்தை புலவர் வீட்டிற்கு ஏன் போகிருர்? புலவருக்கும் தியாகராசனுக்கும் என்ன உறவு?—இப்படி அநுராதை தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள். அதற்கு அவளுக்கு விடை கிடைத்தது. புலவர் தன் மகளைப் பெண் பார்ப்பதற்கு யாரோ வரப்போவதாகச் சொன்னது அவள் கவனத்திற்கு வந்தது.

ஆனல் இந்த விவரம் எதையும் துருவனிடத்தில் அவள் காட்டிக் கொள்ளவில்லை. இதுதான் பெண்மை என்பது—எதையும் அடக்கிக் கொள்வது, பொறுத்துக் கொள்வது. அந்த உணர்ச்சியைக் கண்

ணீரில் காட்டுவது. ஆடவர்களிடத்தில் அந்த பண்பைப் பார்க்க முடியாது.

*  *  *

பத்து நாட்களுக்குப் பிறகு துருவன் தியாகராசனை சந்தித்தான். தியாகராசன் முகத்தில் களையில்லை. நடையில் தெம்பு இல்லை. பேச்சில் வலுவில்லை. இருதயத்திற்கும் நாக்கிற்கும் தொடர்பில்லாமலேயே அவன் பேசினான். துருவன் எதையும் வெளிப்படையாகக் கேட்டுக் கொள்ளவில்லை. புதிய நட்பு. அரை குறையாகப் பேசிவிட்டு பித்துப்பிடித்தவனைப் போல் தியாகராசன் அவன் அறைக்குப் போனான். அங்கே அவனுக்காக ஒரு கடிதம் காத்திருந்தது. அந்தக் கடிதம் அவனுடைய தந்தை எழுதியது.

அன்புள்ள தியாகராசனுக்கு,

நலம். நலம் விரும்புகிறேன். காயங்களெல்லாம் மறைந்து பூரணசுகம் அடைந்திருப்பாய் என்று கருதுகிறேன். உன்னிடம் தெரிவித்துவந்தபடி சென்ற ஞாயிற்றுக் கிழமை உன்னைப் பார்க்க வரமுடியவில்லை. எதிர்பாராத விதத்தில் எனக்கு ஒரு நல்ல தகவல் கிடைத்தது. புதுக்கோட்டையில் நிறைய சொத்துக்களுடன் பொறுப்புள்ள குடும்பத்திற்குத் தகுதியுள்ள ஒரு பெண் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். பெண்ணின் தந்தை ஒரு தமிழறிஞர். அவருடைய ஒரே மகள்தான் அந்தப் பெண். எந்த வகையிலும் உனக்குப் பொருத்தமில்லை என்று சொல்ல முடியாது. ஜாதகப் பொருத்தம் பார்த்து விட்டோம். எதுவும் குறைவில்லை. உன்

னுடைய ஒப்புதல் கிடைத்தவுடன் திருமண ஏற்பாடுகளைச் செய்ய நான் தயாராக இருக்கிறேன். பெற்ற மனத்தின் பேராவல் என்னை உன்னுடைய அனுமதியின்றி பெண்பார்க்க ஓட வைத்தது. அதைப் பொருட்படுத்த மாட்டாய் என்ற நம்பிக்கையும் உண்டு. எந்த நேரத்திலும் பெண்ணைப் பார்த்துக் கொள்ளலாம் நீ. தெற்கு, நாலாம் வீதியில் புலவர் செந்தாமரைக் கண்ணன் என்றால் சிறு குழந்தைக்குக் கூடத் தெரியும். இதுதான் அவரது முகவரியும். கூடுமானவரை இந்த வார இறுதிக்குள்ளேயே உன்னிடமிருந்து விரிவான பதிலை எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள தந்தை,
சிவசண்முகம்.

கடிதம் தியாகராசனைக் குழப்பியது. அவன் எண்ணமெல்லாம் அநுராதையைச் சுற்றிக்கொண்டு அலைந்தன. ஆனால் அவளிடம் எப்படிக் கேட்பது என்றே அவன் தவித்துக் கொண்டிருந்தான். தந்தையின் கடிதத்தை மடியில் சுற்றிவைத்துக் கொண்டு ரயில் நிலையத்திற்கு விரைந்தான். அங்கே இராமேசுவரத்திற்குப் போகும் வண்டி வந்து நின்றது. அந்த நெருக்கடியில் துருவனும் அநுராதையும் சேர்ந்து பாடிக்கொண்டே பிச்சை எடுத்தார்கள். பார்த்தவர் அனைவரும் அவர்கள் இருவரையும் கணவன்—மனைவி என்றே கருதினார்கள். தியாகராசனும் அந்தக் காட்சியைப் பார்த்துக் கண்கலங்கிப் போனான். இவ்வளவு ஒற்றுமையோடு இருக்கிற இரு உள்ளங்களைப் பிரிப்பதற்கு அவனுக்குத் தைரியமில்லை. தீங்கு செய்ய நினைப்

பவர்கள் எதிர் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் போனால் எடுத்த காரியத்தில் வெற்றிப் பெறுவதில்லை. இதைத் தியாகராசன் நன்கு உணர்ந்திருந்தாலும் இளமையின் பிடியில் சிக்கித் தவித்ததின் கோளாறு கற்றதையும் மறக்க வைத்தது. துருவன் நொண்டி. காலப்போக்கில் அதை அநுராதை மறந்துவிடவும் கூடும் என்று தியாகராசன் தனக்குத்தானே சமாதானம் சொல்லிக்கொண்டு தன் அறைக்கு ஓடினான். அங்கு போயும் அவனுக்கு நிம்மதி கிடைக்கவில்லை. தந்தைக்குப் பதில் எழுதுவதிலேயே அவன் எண்ணமிட்டுக் கொண்டிருந்தான். அந்தக் கவலையிலிருந்து விடுபட்டு தெளி வருவதற்கு மூன்று நாட்களுக்கு மேலாகிவிட்டது.

புதுக்கோட்டையில் புலவர் செந்தாமரைக் கண்ணன், மாப்பிள்ளை வீட்டாரிடமிருந்து கடிதத்தை எதிர்பார்த்த வண்ணமாயிருந்தார். அவருக்கு எவ்வளவோ கடிதங்கள் வந்தன. ஒன்றுகூட அவர் நினைத்த இடத்திலிருந்து வரவில்லை. பத்து நாட்களுக்குப் பிறகு திருமண சம்பந்தமாக அவருக்கு ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதம் அவருக்குத் தலையில் தீயை வாரிக் கொட்டியது.

உயர்திரு புலவர் செந்தாமரைக் கண்ணன் அவர்களுக்கு,

வணக்கம். உங்கள் பாலும், உங்கள் குடும்பத்தின் பாலும் அன்பும் மரியாதையும் கொண்ட தங்கச்சி மடத்தில் உள்ள தங்களது பழைய மாணவன் ஒருவன் எழுதும் கடிதம் இது. தங்களுடைய ஒரே மகளும், எங்களுக்கெல்லாம் அக்காளுமாக இருந்த திலகத்திற்

குத் திருமணப் பேச்சு நடந்து வருவதாக எனக்குத் தெரிய வருகிறது. நீங்கள் விரும்பி முடிவு செய்ய விருக்கும் மணமகன் எங்களது பகுதியில் இப்போது ரயில்வே டிக்கட் பரிசோதகராகப் பணி புரிகிறுர். அவரை நீங்கள் நேரில் பார்த்தால் உங்களுக்கு மூளை குழம்பி பித்துப் பிடித்துவிடவும் கூடும். அவருக்கு வெண்குஷ்டம், முகமனைத்தும் குஷ்டத்தழும்புகள். கோரமான முக அமைப்பு. தயவு செய்து திலகத்தின் திருமண விஷயத்தில் நிதானமாக நின்று முடிவுக்கு வருவது உத்தமம். இந்தக் கடிததிதில் உங்களுக்கு அவநம்பிக்கை ஏற்படுமாஞல் தாங்களே ஒரு முறை மணமகனைப் பார்த்துக் கொள்ள கேட்டுக் கொள்கிறேன். தொல்லை தந்தமைக்கு மன்னிக்கவும்.

உங்கள் பழைய மாணவன்.

கடிதத்தைப் படித்து முடித்தார் புலவர். அவருடைய மனக்கோட்டைகள் தகர்ந்துவிட்டன என்றுதான் சொல்லவேண்டும். ஊரிலே நடக்கும் நூற்றுக் கணக்கான சச்சரவுக்குச் சமாதானம் கூறுகிறவர்கள் சொந்தவீட்டில் சிறு குழப்பமென்ருலும் துடிதுடித்துப் போகிருர்கள். இதற்காகத்தான் பாசம் கொடியது என்கிருர்கள் போலும்!

புலவர் கடிதத்தை எடுத்துக்கொண்டு வீட்டுக்குள்ளே ஓடினுர். உள்ளே இருந்த அவர் மனைவி ஆவலோடுகேட்டாள். "என்ன, மாப்பிள்ளை போட்டோ வந்திருக்கிறதா? சம்மதம் தெரிவித்து விட்டார்களா? முகூர்த்தம் வைத்துவிடவேண்டியதுதானே!"

"மாப்பிள்ளைப் புகைப்படம் வரவில்லை. அவருடைய முக அலங்காரத்தைப்பற்றிய வர்ணனை வந்திருக்கிறது. ஆழம் தெரியாமல் காலை விடப்பார்த்தோம். நல்ல வேளை, பெண் பிழைத்தது" என்று புலவர் சொல்லும்போதே புலவர் அழுதார். அவரது மனைவிக்கு ஒன்றும் புரியவில்லை. திரும்பத் திரும்பக்கேட்டாள். புலவர் கையில் இருந்த கடிதத்தை அவள் முன் வீசி எறிந்தார். புலவரின் மனைவி கடிதத்தைப் பிரித்துப் படித்தாள். அவளுக்குப் பக்கத்திலிருந்து திலகமும் படித்தாள். அவர்கள் இருவரும் கடிதத்தைப் படித்து முடிப்பதற்கும் வெளியில் யாரோ கதவைத் தட்டுவதற்கும் சரியாக இருந்தது.

திலகம் வெளியில் வந்து பார்த்தாள். அநுராதை வாசற்படியருகே நின்று கொண்டிருந்தாள். அவளுடன் துருவன் இல்லை. துணைக்கு வேறு யாருமில்லை. திலகத்தைப் பார்த்த அநுராதை திகைத்து நின்றாள். ஏனென்றால் திலகம் அழுதகண்களோடு எதிர்ப்பட்டாள்.

"என்ன திலகா! ஏன் கண்கலங்கி நிற்கிறாய்?" என்று அன்போடு வினவினாள் அநுராதை.

"ஒன்றுமில்லை ராதா, சிறு குழப்பம். உனக்குத்தான் தெரியுமே நான் எதற்கெடுத்தாலும் அழுவேன் என்று" என்று சமாளிக்கப் பார்த்தாள் திலகம்.

அநுராதை அவளை விட்டபாடில்லை. துருவிப் துருவிக்கேட்டாள். குழைந்து குழைந்து பேசினாள்.

"சொல்லு திலகம். நான் உன் உயிர்த்தோழி இல்லையா! மனச்சுமை இறக்கினாலன்றி தணிவதற்கு

மார்க்கமில்லை திலகா!'' என்று இரக்கத்துடன் பேசினாள் அநுராதை.

திலகம் தேம்பித் தேம்பி அழுதாள். வார்த்தைகள் பின்னிப் பின்னி விழுந்தன. அத்தனையும் நம்பிக்கை யில்லாத வார்த்தைகள்.

''சொல்லுகிறேன். ஆனால் இப்போது அதற்கு நேரமில்லை. நான் அழுதால் நீ ஆறுதல் கூறவேண்டும். அதற்கு இப்போது உனக்கும் நேரமில்லை. நீயும் இப் பொழுது என்னைப்போல் வேதனைப்பட்டு கொண்டிருக் கிறாய். இரண்டு பேரும் நொண்டிக்கிளிகள். நமக்கு மூன்றாவது ஆள் ஒருவர் தேவை. உன்னுடைய உதவி எனக்குத் தேவைப்படும்போது அதைச் செய்ய நீ ஒருபோதும் தவறமாட்டாய் என்பதை நான் அறிவேன். உள்ளே வா'' என்று அநுராதையை அழைத்து வந்தாள் திலகம். அநுராதை மிரண்ட மானைப்போல்—கலவரம் அடைந்த முயலைப்போல் உடம்பைச் சுருட்டிப் பந்தாக்கி ஒரு மூலையில் உட்கார்ந்தாள். அப்போது உள்ளே இருந்து செந்தா மரைக் கண்ணன் வந்தார். அவர் முகம் சிவப்பேறி இருந்தது; கண்கள் கொதித்தன வெளியிலே வந்த புலவர் அநுராதையை ஏறஇறங்கப் பார்த்தார். அநு ராதை பயந்து தலையை தொங்கப்போட்டாள், ''யாரு, நரசிம்மன் மகளா? நான் தான் அப்போதே சொல்லி விட்டேனே, என்னிடம் திரும்பத் திரும்பப் பேசும் பழக்கம் இல்லை. வெட்டு ஒன்று, துண்டு இரண்டுதான். உன் தந்தை உனக்காக என்னிடம் ஒப்படைத்த சொத் துக்களை ஒருபோதும் நான் மோசம் செய்யமாட்டேன். ஆனால் உன்னை நம்பி அதைத் தருவதற்கு எனக்கு இஷ்டமில்லை. நீ அழைத்து வந்த வாலிபன் மீதும்

எனக்கு நம்பிக்கை இல்லே. உன்னிடம் சொத்து இருக்கின்றது என்பதை அறிந்துதான் அவன் உன் பின்னே திரிகிருன். பெண்கள் யாரையும் எளிதில் நம்பி விடுகிருர்கள். அதுவும் உன்னேப்போன்ற இளம் பெண்கள் வெகு எளிதில் ஏமாந்து விடுகிருர்கள். ஒரு இளம் பெண்ணுடன் இன்ெெருரு வாலிபன் தொடர்ந்து வந்தால், ஒன்று கணவனுக இருக்க வேண்டும். அல்லது காதலனுக இருக்க வேண்டும். இரண்டுமில்லாமிட்டால் உடன் பிறந்த சகோதரனுக இருக்க வேண்டும். உன் கதை இதில் எதிலுமே சேரவில்லே. உன்னுடன் வந்தவனே நொண்டி. அவனே உனக்கு எந்த உறவும் இல்லாதவன் என்று நீ வாதிக்கிருய். உலகத்திலுள்ள எந்தவொரு நல்ல மனிதனும் இந்த வாதத்தை ஏற்றுக் கொள்ள மாட்டான். அவன் உன்னே ஏமாற்றப் பார்க்கிருன். உன் சொத்தை அபகரித்துக் கொண்டு ஓடிவிட நினேக்கிருன். நீ பலியாகப் போகிருய்" என்று புலவர் அடுக்கிக் கொண்டே போனுர். அநுராதை இடையிலே தடுக்க நினேத்தாள்; முடியவில்லே. அவள் மனதிலே இருந்த பெரும் பாரத்தை—துருவனுக்கும் தெரியாமல் மறைத்து வைத்திருந்த உள்ளத்தை அன்று அந்தத் தமிழ்ப் புலவரிடம் திறந்துகாட்டத் துணிந்தாள்.

பெண்கள் மெல்லியவர்கள்தான். ஆனுல் ஆடவர்களால் கூட அடக்கி வைக்க முடியாத பெரிய உணர்ச்சிகளே எல்லாம் அவர்கள் தங்கள் இதயங்களுக்குள்ளே புதைத்து வைத்திருக்கிருர்கள். கோபதாபங்களேயும், அச்சத்தையும், கிளர்ச்சியையும் எதிரொலிக்கக் கூடிய பெரும் சக்தி, மனிதர்களின் முகத்தில் இருக்கிறது. ஆனுல் ரகசியங்களே மறைத்து வைத்திருக்கும் உள்ளங்களே அம்பலமாக்கும் சக்தி முகத்திற்கு இல்லே.

அநுராதை விழுங்கி, விழுங்கிப் பேசினுள். வார்த்தைகள் உடைந்து உடைந்து விழுந்தன. "பெரியவரே, நான் உங்க மகளைப் போன்றவள். என்மீதும், என்னுடைய தந்தையின்மீதும் நீங்கள் வைத்திருக்கும் தணியாத பாசத்தினுல் என் மனதை உங்களுக்குத் திறந்து காண்பிக்கிறேன். என்னுடன் வந்த துருவன் என்னுடைய பிச்சைக்காரத் தொழிலால் கிடைத்த நண்பன். ஆடுமாடுகளைப் போல் ரயில் நிலையங்களில் தினசரி வந்து குவியும் பிரயாணிகளிடமிருந்து என்னைக் காப்பாற்றிக் கொள்ள துருவன் எனக்குப் பெரிதும் பயன்பட்டான். அவன் என்னோடு இல்லாவிட்டால் வெறிபிடித்த பலருக்கு நான் பலியாகி இருப்பேன். தருமத்திற்கும், நியாயத்திற்கும் கட்டுப்படும் அறவாழ்க்கையைத் தமிழர்கள் இன்னும் முற்றும் மறந்துவிடவில்லை. ஒரு பெண்ணுக்கு மணமாகிவிட்டதென்ருல் பெரும்பாலும் அவள் எந்தக் கூட்டத்திலிருந்தும் தப்பித்துக் கொள்ளப் பாதுகாப்புக் கிடைக்கிறது. துருவன் என்னுடன் இருப்பதால் எல்லோரும் என்னை மணமானவள் என்றே கருதினுர்கள். இதைத் தவிர எனக்கும் அவனுக்கும் எந்த உறவும் இல்லை. துருவனைப் பார்த்து நான் பிரியப்படக் கூடிய நிலையிலோ, காதலிக்கக்கூடிய நிலையிலோ அவன் இல்லை. அவன் அழகு இழந்தவன்; நடக்க முடியாதவன்; வாழ்க்கையை வெறுத்து—ஆனுல் சாவதற்கு திட்டம் தீட்டிக்கொண்டிருப்பவன். மனிதர்கள் அனைவருக்குமே இலட்சியம் உ/ண்டு. துருவனும் இலட்சியத்தை வைத்தும் கொண்டிருக்கிருன். அதை நிறைவேற்றிவிட்டுத் தான் அவன் கண்களை மூடுவான்" என்று அநுராதை அழுதுகொண்டே சொன்னுள்.

புலவர் குறுக்கிட்டார். "அப்படியானல் உன் எதிர்காலம் என்ன? வாழ்க்கை முழுதும் பிச்சைக்காரி யாக இருக்க எண்ணமா?"

"இல்லை, எனக்கு நீங்கள்தான் வழி காட்ட வேண்டும். ரயில்களிலும், ரயில் நிலையங்களிலும், தென்னந்தோப்புகளிலும் பிழைப்பு நடத்த விரும்ப வில்லை. நான் குடும்பமாக வாழ விரும்புகிறேன். எனக்குப் பிடித்தவரை உங்கள் முன்னிலையில் மண முடித்து வைக்க வேண்டும்" என்று தளதளத்த குரலில் அனுராதை சொன்னுள்.

புலவர் தன் சொந்த சுகதுக்கங்களை யெல்லாம் மறந்து புன்னகை பூத்தார். இலட்சத்தில் ஒருவர்தான் அவரைப் போல் பெருந்தன்மையுடன் வாழ முடியும் என்று அந்தப் புன்சிரிப்பு உணர்த்தியது.

"உனக்கு விருப்பம் என்ருல் எனக்கும் சரிதான். மாப்பிள்ளை யாரென்று சொல்! மணம் முடித்து வைக் கிறேன். புதுக்கோட்டை சமஸ்தானத்தில் உன் புருஷ னுக்கும் வேலை வாங்கித் தருகிறேன்" என்று அன் பொழுகச் சொன்னுர் புலவர்.

"நன்றி, அவர் இப்பொழுது வேலை பார்த்துக் கொண்டிருக்கிருர். உங்களுடைய ஒத்துழைப்பும், அன்பும் இருந்தால் நாங்கள் நீடூழிகாலம் வாழ்வோம்" என்று ஆனந்தக் கண்ணீர் வடித்துச் சொன்னுள் அநுராதை.

"எனக்கு ஒரு பெண்தான் என்றில்லை. இன்றி லிருந்து நீயும் என் பெண். என்னிடம் வெட்கப்பட வேண்டாம். நீ விரும்பும் கணவனைத் தைரியமாகச் சொல்," என்று உரிமையோடு கேட்டார் புலவர்.

"என்னைச் சிறு பிள்ளையிலிருந்து அறிந்தவர்; என் தந்தைக்கு ஓய்வு நேரங்களில் உலக நடவடிக்கைகளை எடுத்துச் சொல்பவர்; ஆங்கிலம் கற்றவர்; இடையில் பிரிந்திருந்தார். இப்போது இராமேஸ்வரத்திற்கே வந்திருக்கிறார்; பெயர் தியாகராஜன். இப்போது இராமேஸ்வர வட்டாரத்தில் டிக்கட் பரிசோதகராக இருக்கிறார்" என்று அவள் உற்சாகத்தோடு சொல்லி முடித்தாள். அவள் சொல்லி முடிப்பதற்கும் திலகம் மயக்கம் போட்டு விழுவதற்கும் சரியாக இருந்தது. ஆனால் அநுராதைக்கு ஒன்றும் புரியவில்லை. திலகம் தான் மயக்கம் போட்டு விழுந்தாள். புலவர் நெற்றி யெல்லாம் ஏன் வியர்த்துக் கொட்ட வேண்டும்? அதற்குப் பிறகு புலவர் பதில் சொல்லுவதற்கு அரை மணி நேரமாயிற்று. மயக்கம் தெளிந்தவரைப் போல் பேசினார்.

"அநுராதா, உனக்குக் கெட்டி ஆயுள். நான்தான் கடவுள் உருவம். எடுத்து உன்னைக் காப்பாற்றியிருக் கிறேன். அந்த சதிகாரன் எங்களை ஏமாற்றியது யல்லாமல் உன்னையும் கெடுத்திருக்கிறான். நல்லவேளை. உன் தந்தையின் நல்ல குணம் உன்னுடைய பெருந் தன்மை இவை இரண்டினால் மட்டுமே நீ தப்பித்து விட்டாய். நான் உனக்கு தந்தை. அன்புத்தந்தை, என் சொல்லை நீ மாற மாட்டாய். என்னால் உன் வாழ்க்கை நசிந்துபோகும். நீ குறிப்பிட்ட மாப்பிள்ளைக்கு வெண்குஷ்டம் என்பதை மறந்துவிடாதே. அதோ அழுது கொண்டிருக்கிறாளே உன் தோழி, அவளுக்கு பார்த்த மாப்பிள்ளை அவன். இன்றுதான் அவனுக்கு வெண்குஷ்டம் என்று அங்கிருந்து எனக்கு கடிதம் வந் திருக்கிறது. என் சொல்லைத் தட்டாதே நான் உன்னைக் கெடுப்பதற்காகச் சொல்லவில்லை. பெற்ற மகளையும்

அன்பு மகளையும் காப்பாற்றிவிட்ட பெருமையோடு கூறுகிறேன். எனக்காக நீ அவனை மறந்துவிடு என்று புலம்பி அழுதார் புலவர். அவர் குரல் மேலோங்கிக் கொண்டே சென்றது. அநுராதை அழு தாள்; மறுத்தாள். ஆனாலும் புலவரின் ஆணையை மீற முடியவில்லை. சோர்ந்து விழுந்தாள்.

தங்கச்சிமடத்தில் துருவனைச் சந்தித்தான் தியாக ராசன். இருவரும் பாம்பன்வரை ஒரே ரயிலில் போனார்கள். பழங்கதைகளையெல்லாம் பேசிக்கொண் டார்கள். அநுராதையின் துன்புள்ளத்தை இருவரும் பகிர்ந்தே பேசினார்கள். துருவனுக்கு அது பிடிக்கா விட்டாலும் அதைத் தடுத்து நிறுத்த விரும்பவில்லை. பொறுத்துக்கொண்டே இருந்தான். கடைசியாகத் தனது திருமண விஷயத்திற்கு வந்தான் தியாகராசன்.

“துருவா ஒரு அதிசயம் கேள். உனக்கு நீயே தீங்கு விளைவித்துக் கொண்டது உண்டா?” என்று கேட்டான் தியாகராசன்.

துருவன் பதில் சொல்லவில்லை.

“நான் அப்படிச் செய்து கொண்டிருக்கிறேன். எனக்குப் பிடிக்காத பெண்ணை தந்தை பேசி முடித் தார். என் தந்தைக்குத் தெரியாமல் எனக்கு வெண் குஷ்டம் என்று கடிதம் எழுதி இன்னொருவர் கையொப் பம் இட்டுப் பெண்வீட்டிற்கு அனுப்பிவிட்டேன். இந்த நேரம் அந்த வீட்டில் ஒரே குழப்பமாக இருக்கும். இதோ என் கன்னத்திலும், நெற்றியிலும் இருக்கும் வெள்ளைத் தழும்புகள் எனக்கு ரயில் விபத்தில் ஏற் பட்டவைகள் என்று உனக்குத் தெரியும். அவைகளை ஆதாரமாக வைத்துத்தான் என் கடிதம் பிறந்திருக் கிறது. யாராவது நேரில் வந்து பார்த்தால் கூட

என்னைக் குஷ்ட நோய்க்காரன் என்றுதான் நம்பு வார்கள்,'' என்று சிரித்துக் கொண்டே சொன்னான் தியாகராசன்.

அதுவரை அலட்சியமாக இருந்த துருவன் மனத்தி லேயும் சோகம் பிறந்தது.

''தியாகராசா, உண்மையிலேயே நீ யாருக்காகத் தியாகம் செய்யத் காத்திருக்கிறாய்? தமிழ் இளைஞர் களில் தங்களைத் தாங்களே குறைத்துக் கொண்டு மற்ற வர்களுக்கு இடமளிப்பவர்கள் ரொம்பக் குறைவு. நீ அந்தத் தியாகசீலர்களில் ஒருவன். இவ்வளவு நேரம் ராதை இங்கிருந்திருந்தால் உன்னைப்பற்றி இனிய பாடல் பாடியிருப்பாள். எதிர் வண்டியில் வருவாள். எல்லாவற்றையும் கூறி உன் மனதை நிறைவு செய் கிறேன். தியாகராசா! எனக்கு எல்லாம் தெரியும். அநுராதையின் உள்ளத்தையும் நான் அறிவேன். உங்கள் விருப்பத்தை யார் என்னிடம் முதலில் சொல் லப் போகிறார்கள் 'என்று பார்த்தேன். ஆடவர்கள் தான் தோற்றுப் போகிறார்கள். அநுராதை அவள் உள்ளத்தை மூடியே வைத்திருக்கிறாள். அதுதானே பெண்மை! வண்டி பாம்பன் வந்து சேர்ந்தது. மானா மதுரையிலிருந்து வரவேண்டிய ரயில் வந்துசேரவில்லை. நெடுநேரத்திற்குப் பிறகு பயங்கரமான தகவல் கிடைத்தது. இராமேசுவர வட்டாரத்து ரயில் நிலை யங்களில் பிச்சை எடுத்து வாழ்ந்து வந்த அழகிய அபலைப் பெண் ஒருத்தி சத்திரக் குடிகளுக்கருகே ரயில் முன் விழுந்து இறந்தாள். என்று பாம்பனுக்குத் தகவல் கிடைத்தது. எந்த வண்டியில் அழகாகப் பாடி தோகை மயிலைப்போல் நுழைந்து, நுழைந்து வந்தாளோ அந்த ரயில் துண்டிக்கப்பட்ட சடலத்தை சுமந்து கொண்டு

பிரேத வண்டியைப் போல் பாம்பனில் வந்து அழுது கொண்டே நின்றது. தியாகராசனும், துருவனும், சோர்ந்துபோய் மேடையில் விழுந்தார்கள். வண்டி பிரேதத்தைத் தூக்கிக் கொண்டு சத்தம் போட்ட வண்ணம் இராமேசுவரம் நோக்கி விரைந்தது. அவளது பிரேதம் தங்கச்சிமடத்திற்குப் பக்கத்தில் ஒரு மணல்மேட்டில் புதைக்கப்பட்டது. அவளுக்கு உறவினர் இல்லை. வேண்டியவர்கள் இல்லை. ஆதலால் அவளைப் புதைத்த இடத்தை கண்டுபிடிக்க முடியவில்லை. அந்தப் பகுதியில் ஓடுகிற ரயில்கள் எல்லாம் தங்கச்சி மடத்திற்கு அருகே வரும்போது கூவிக் கூவி அழுகின்றன. அநுராதையின் கதை தெரிந்தவர்கள் அதை வெறும் ரயில் சத்தமாகக் கருத மாட்டார்கள். அழு குரலாகத்தான் கருதுவார்கள்.

---

## இன்றில்லாவிட்டால்...நாளை

கலையும் அழகும் நிறைந்த ஒரு பேரழகியின் சரித்திரம் இது. கதை என்று சொல்லுவதைவிட இதைச் சரித்திரம் என்றுதான் சொல்ல வேண்டும். மிகுந்த உற்சாகத்தோடு இதை நான் எழுதினேன். வார இதழ் ஒன்றில் இந்தக் கதை வெளி வந்துகொண்டிருந்த போது இதனை அப்படியே இந்தியில் மொழி பெயர்த்து வடநாட்டுப் படத் தயாரிப்பாளர் சாந்தாராமுக்கு அனுப்புவதற்காக என்னிடம் சிலர் அனுமதி கேட்டார்கள். முதலில், இது தமிழ்ப் படமாகத்தான் வெளிவர வேண்டுமென்ற எனது விருப்பத்தைத் தெரிவித்தேன்.

இதுமாதிரிக் கதைகளை சாந்தாராம்தான் எடுக்க முடியும் என்ற தமிழ்ப் படத் தயாரிப்பாளர்களின் தாழ்வு மனப்பான்மையில் இந்தக் கதை இன்னும் தீண்டப்படாமலிருக்கிறது. நீங்கள் நம்பலாம். எப்போதாவது ஒரு காலத்தில் தமிழ்ப்பட உலகு இதைத் தயாரிக்கும்.

தென்னரசு

# மயிலாடும் பாறை

## 1

எந்தன் துரையே,

ஐயிரெண்டு திங்களாய் மையிடா விழிகளுடன் தனித்திருக்கிறேன். நெற்றித் திலகமிட்டு, நெடிய கருங்கூந்தலைச் சீவிமுடித்து, நெஞ்சைத் துளைக்கும் நறு மண மலர்சூடி என்ன பயன் என்று என் இளம் இதயம் உருகி வருகிறது. தங்கத் தட்டிலே உணவு கொள் கின்றேன். தக்காளிச் சாற்றை வெள்ளித் தொன்னை யில் ஊற்றி அருந்துகிறேன்; பழத்திற்கும் பசும்பாலுக் கும் குறைவில்லை—இருந்தும் என் மனம் நிறைவு பெற வில்லை; தவிக்கிறேன். அடுத்தவீட்டு அங்கயற்கண்ணி, ஆண்டு நிறைந்த அவள் பெண் மகவுக்கு அம்புலியைக் காட்டிப் பால்சோறு ஊட்டுகிருள். நினைவு பெருத அந்தப் பிஞ்சுக்கு நிலாவின் குளுமை தெரிகிறது. அழகு தெரிகிறது. சிரித்துக் கொண்டே சோற்றைத் தின்கிறது. அதே நிலா என்னைச் சுடுகிறது. ஏளனம் செய்கிறது. "பின்புத்திக்காரப் பெண்ணே, திங்களிலே பாதிநாள் உலா வருகிறேன். அந்தப் பாதியில் ஐந்து நாட்களில் நான் ஆசைதீர ஒளி சிந்துகிறேன்.

காவியம் பாடுகிறவர்கள், காதலியைச் சந்திக்க நேரம் குறிக்கிறவர்கள் எல்லாருமே அந்த நாட்களைப் பூரண மாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். நீ கொடுத்து வைக்காதவள். அனுபவிக்கத் தெரியாதவள்'' என்று அந்த நிலவு என்னை ஏசித் தீர்ப்பதுபோல் எனக்குப் படுகிறது.

பிரபுவே, தினம் தினம் நான் தண்டனையை அனு பவிக்கிறேன். இரவுக்கும் பகலுக்கும் இடைப்பட்ட பொல்லாத மாலை நேரம், ஒரு நாளைக்கு ஒருமுறை வரு கிறது. அந்த நேரத்தில்தான் நான் செத்துப் பிழைக் கிறேன். நீங்கள் வெளிநாட்டிற்குப் புறப்படுவதற்கு முதல் நாள் அந்த இரண்டும் கெட்ட வேளையில் ஏரிக் கரையில் எலுமிச்சை மரத்துக்குப் பக்கத்தில் தொட்டுத் தோள் தழுவி கட்டியணைத்துக் கனியிதழ் கிள்ளி இன் புற்றிருந்த நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. தினசரி பெட்டியைத் திறந்து புடவையை எடுக்கும்போதெல் லாம் அன்று உடுத்தி இருந்த பச்சைப் பட்டுப் புடவை என்னைச் சாகடித்துச் சாகடித்துப் பிழைக்க வைக் கிறது. தோட்டத்திற்குப் போனுல் அங்கே துவண்டு கிடக்கும் எலுமிச்சைக் கன்று கண்ணில் படுகிறது. அதன் வாடை என்னைத் தங்களிடத்திற்குத் தூக்கி வந்து விடுகிறது. இதயம் நிறைந்திருக்கும்போது பூண்டிருந்த அணிமணிகள், அருகிலிருந்த பொருள் கள், கண்ட காட்சிகள் வாழ்க்கை முழுதும் நீங்காத இடம் பெற்று விடுகின்றன.

''தாசிகள் நேசம் மோசமே''—என்ற பாடல்களைக் கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்ட பின்னும், சேலைகட்டிய மாதரை நம்பினுல் தெருவில் விட்டுத் தேங்கிடச் செல் வரே—என்னும் தோல்வியின் சாயல் படிந்த பலவீனக் குரல்கள் சக்கரவர்த்திகளின் சபா மண்டபங்களி

லிருந்து சந்தைக் கடை மைதானம் வரை ஒலிப்பதை அறிந்த பின்னும் தாங்கள் என்னில்லம் வந்ததை நினைத்து மகிழ்கின்ற ஒரு இன்பத்தைத் தவிர வேறு எனக்கு எதுவும் இல்லை. பொன்னொளி வீசும் புத்தகங்களும், மின்னலிடும் வைரக் கம்மல்களும், மோதிரங்களும், மேகலாபரணங்களும் எனக்கு வாழ்வின் இன்பத்தைத் தரவில்லை. புருஷனின் புன்னகைக்கு முன்னால் பொன்னகைகளின் பளபளப்பு அடிபட்டு விடுகிறது என்பதை என்னுடைய தனிமை எனக்கு மெய்ப்பித்துக் காட்டிவிட்டது. தனிமை கொடிதுதான். அதுவும் இளமையிற் தனிமை மிக மிகக் கொடிது.

கண்ணுக்கு நிறைந்தவரே,

தத்துவங்கள் வாழ்க்கைக்குப் பயன்படாது என்பார்கள். இன்பத்தில், துன்பத்தில் தத்துவங்களைக் கண்டவர்கள் கூறும்போது அது சில நேரங்களில் பசியையும் போக்கிடும் சுவை உணவாக—தளர்ச்சியைப் போக்கிடும் நம்பிக்கை மூலிகையாக இருக்கிறது.

நான் சிறுமியாக இருந்தபோது, எங்கள் வீட்டுக்குப் பெரும் பெரும் செல்வந்தர்களெல்லாம் வருவார்கள். அவர்களில் கல்வி கற்றவர்களுமுண்டு. ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதையைச் சொல்லுவார்கள். இப்படி எத்தனையோ கதைகளை நான் கேட்டிருக்கிறேன். புரிந்தோ புரியாமலோ நான் சிரிப்பேன். என் அன்னை என் தலையில் குட்டுவார்கள். அன்னையோ பேர்பெற்ற தாசி. நான் சிரித்தால் வந்திருக்கும் சீமான்களின் வதனங்கள் வாடிவிடுமோ என்று என் அன்னைக்குப் பயம்.

குழந்தைகளை விபரம் தெரியாதவர்கள் என்கிறார்கள். உண்மைதான். விபரம் தெரியாத அந்தப்

பூக்கள், விபரம் தெரிந்த பலரைப் பல இடங்களில் திணறடிக்க வைத்து விடுகின்றன.

யாராவது ஒரு பணக்காரரோடு என் அன்னை பேசிக் கொண்டிருப்பார்கள். நான் அந்த அறைக்குப் போவேன். வந்திருப்பவர் மாதுளை முத்துக்களை உதிர்த்து என் வாயில் போடுவார். பக்கத்தில் இருக்கும் என் அன்னை சும்மா இருக்காமல் "போம்மா, வேலைக்காரியிடம் சொல்லி அப்பாவுக்குப் பால் கொண்டு வரச்சொல்" என்பார்கள். முதன் முதலாக என் அன்னை இவ்வாறு சொன்னபோது எனக்கு ஒரு அப்பா இருக்கிறார் என்றுதான் நினைத்தேன். ஆனால் தினசரி வந்தவர்களை எல்லாம் என் அன்னை 'அப்பா அப்பா' என்ற பிறகு எனக்குக் குழப்பம் ஏற்பட்டு விட்டது. "பக்கத்து வீட்டுப் பங்கையர்செல்விக்கு ஒரு அப்பாதானே இருக்கிறார். எனக்கு மட்டும் என்ன பத்து அப்பா!" என்று ஒருநாள் கேட்டு விட்டேன். நான் புரியாமல்தான் கேட்டேன். இப்படியெல்லாம் கேட்டால், அன்னையார் அடுப்பிலே கரண்டியைக் காய வைத்து இடுப்பிலே சுடுவார்கள் என்றால் நான் வாயைக்கூடத் திறந்திருக்க மாட்டேன்.

நொண்டிக் குழந்தைகள், நோஞ்சல் குழந்தைகள் சமுதாயத்திலே புழங்கமுடியும்; அவர்களுக்கு இடமுண்டு. ஆனால் தாசிவீட்டுக் குழந்தைகள் நிம்மதியாக வாழ்ந்துவிட முடியுமா? நினைவு தெரிகின்றவரை வழிகாட்ட எவருமில்லாமல் பெண்கள் சாம்ராஜ்யத்திற்குள்ளேயே கிடந்து உழலவேண்டும். நினைவு வந்த பிறகோ ஊர்ப் பிள்ளைகளின் கேலிப் பேச்சு உயிரைத் தின்னத் தொடங்கி விடுகிறது. ஊமையாக இருப்பதற்குக் காரணம் சொல்லி விடலாம். உண்ண உண

வில்லாமல் வறுமையில் வாடுவதற்குக்கூட வகைகூற வழி இருக்கிறது. ஆனுல் 'அப்பன் பெயர் தெரியாத வள்' என்று சொல்பவர்களுக்கு என்ன பதிலேக்கூறி வருவது? "தவறு என்னுடையதல்ல; என் தாயாரு டைய தவறு. என் தாயாரை வளர்த்த சமுதாயத்தி னுடையது" என்று எளிதில் பதில் சொல்லி விடலாம். கேலி செய்பவர்கள் இந்தப் பதிலேப் புரிந்துகொள்ளக் கூடியவர்களாகவா இருக்கிருர்கள்? இல்லே! கொடுத்த கடனேத் தெருவில் கேட்கும்போது எதிர்த்துப் பேசக் கூட மனம் துணிகிறது. எடுத்த பொருளே இல்லே என்று வாதாடக்கூட நா எழும்புகிறது. ஆனுல் சின்னக் குழந்தைகள் "தந்தை பெயர் தெரியாதவர் கள்" என்று இகழப்படும்போது அவர்களுக்கு நா எழுவதில்லே. நெஞ்சம் துடிக்கிறது. நாடி தளர் கிறது இப்படிப்பட்ட சூழ்நிலேயில் வளர்ந்தவள் அத்தான் நான். இன்று ராணியைப்போல் வாழ் கிறேன். நாயகன் பக்கத்தில் இல்லேயே எனக் கண் கலங்கித் தவிக்கிறேன்.

பொழுது சாய்ந்தால் பொருமுவார்கள், தாசிப் பெண்கள். "கிழக்கு எப்பொழுது வெளுக்கும்—கணக் கைத் தீர்த்துவிட்டு எப்பொழுது போவான் வந்தவன்" என்று இரவைக் கண்டால் பயந்து நடுங்கும் தாசி குலத்தில் பிறந்த நான் இன்று "எப்பொழுது கதிரவன் மறைவான், மணவாளனேடு பேசி மகிழலாம்" என்று எண்ணும் குடும்பப் பெண்ணின் மனநிலேயைப் பெற்று விட்டேன். இந்தத் தலேமுறை தப்பிவிட்டது. என் னுடைய கரங்களிலே பூட்டப்பட்டிருந்த விலங்குகளே உடைத்த பெரும் கீர்த்தி என் மகாராஜாவையே சாரும். விடுதலே வாங்கித் தந்த இந்தப் புனிதப் பணிக்கு என் ஆயுள் பரியந்தம் எந்த நேரத்திலும்

எந்தப் பரிசையும் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். ஏற்றுக்கொள்ளத் தவறமாட்டீர்களே!

திருமயம் செங்கமலத்தின் மகள் பெருமையாக வாழ்கிருள் என்று என் சொந்தக்காரர்கள் பேசிக் கொள்வது என் செவிகளில் படுகிறது. ஊருக்கெல்லாம் என் நிலை மதிப்பாகத் தெரிகிறது. உடையவள் என்னவோ ஏங்கி நிற்கிறேன். அன்புள்ளவரே, தாய்நாட்டிற்கு எப்பொழுது திரும்பப் போகிறீர்கள்? கொண்டு சென்ற யானைத் தந்தங்கள் இன்னுமா விற்று முடியவில்லை? ஆயிரம் பொன் பெறக்கூடிய யானைத் தந்தம் என் வாழ்வை இலட்சம் கூறுகளாக்கிக் கொண்டிருக்கிறது!

நாட்டிலே புதுப்புது நாட்டியக்காரிகள் கிளம்பியிருக்கிருர்கள். கோயில்களிலே அவர்கள் ஆடுகிருர்கள். கொள்ளை, கொள்ளையாகப் புகழைச் சம்பாதித்துக் கொண்டு போகிருர்கள். என் ரத்தம் கொதிக்கிறது. பாதங்கள் அரிக்கின்றன. நான் தங்களுக்களித்த வாக்குறுதி என்னைத் தடுக்கிறது. நீங்கள் வந்தாலாவது நம்முடைய வீட்டு முற்றத்தில் ரத்தினக் கம்பளத்தை விரித்து உங்கள் முன்னிலையில் ஆடி வேட்கையைத் தீர்த்துக் கொள்ள முயலுவேன். நீங்களோ திரைகடல் தாண்டித் திரவியம் தேடும் பணியில் ஈடுபட்டு இருக்கிறீர்கள். இருக்கிற சொத்து ஏழு தலைமுறைக்குப் போதும். இனி யாருக்கு வேண்டும் பணம்? செல்வத்தைத் தேவைப்படும்போது சேகரித்துக் கொள்ளலாம்; இளமையைத் தேடிக் கொள்ள முடியாது. எந்தக் காலத்திலும் இதயத்திலே உணர்ச்சி ஊற்றெடுக்கலாம். ஆனல் எந்தக் காலத்திலும் கன்னத்திலே மின்னலையும், கண்களிலே ஒளியையும், முகத்திலே பளபளப்பையும் காண முடியுமா?

கண்களிலே ஆசைக்கனல் எரிந்து கொண்டிருக்கும் பருவத்தில், கன்னத்தில் இளமையின் கதுப்புகள் புடைத்து நிற்கும் வாலிப காலத்தில், வினயமுள்ள எண்ணங்களை அணைபோட்டுத் தடுக்க முடியாமல் சக்தி யற்றுத் தத்தளிக்கும் பசி மிகுந்த நாட்களில், நாம் காரணமில்லாமல் பிரிந்திருக்கிறோம். உங்களைச் சுற்றி ஒரு முறை பாருங்கள். புருஷனும் மனைவியும் புறாக் களைப் போல் இணைந்து போகவில்லையா? கொட்டும் மழையில் ஒரே கோணியைக் காதலால் இறுகப் போர்த் திக் கொண்டு ஓடுவதை நீங்கள் காண்பீர்கள். அப்போ தெல்லாம் என் நினைவு உங்களுக்கு வராமற் போகாது. நிச்சயமாக நினைப்பீர்கள். பெருமூச்சு விடுவீர்கள். அந்தப் பெருமூச்சு கடலைத் தாண்டி மிதந்து வந்து என் மேனியில் பட்டால் கூடப் போதும். அதிலே **நான்** பேரின்பம் காண்பேன். விரைவிலே பயணப் பட்டு வாருங்கள் அத்தான். விறலி துடிக்கிறேன். புறப் படும் முன் ஓலை அனுப்புங்கள். அடியாள் தொண்டித் துறைமுகத்தில் காத்திருக்கிறேன்.

ஆவித் துணைவி,
செ. ரஞ்சிதம்.

பத்துத் திங்களாக சுமத்ரா தீவில் தங்கி, யானைத் தந்தம் வியாபாரம் செய்து கொண்டிருந்த குமரப்பர் வசம் இந்த ஓலை சேர்ப்பிக்கப்பட்டபோது நன்றாக இருட்டிவிட்டது. அதே சுமத்ரா தீவிற்கு ஏலக்காய் வியாபாரத்திற்குப் புறப்பட்ட சோழபுரம் சொக்க லிங்கம் செட்டியார் மூலம் ஓலையைக் கொடுத்தனுப்பி யிருந்தாள் ரஞ்சிதம். அழகிய பட்டுத் துணியில் ஓலை சுற்றி வைக்கப்பட்டிருந்தது. பஞ்சைப் போன்ற மென்மை மிகுந்த பட்டுறையை அவர் பிரிக்கும்போது

ரஞ்சிதத்தோடு இருந்த அந்தக் கொஞ்ச நாள் இன்ப நினைவுகள் எல்லாம் பளிச் சென்று தோன்றி மறைந் தன. குமரப்பர் ஓலையை ஆசை பொங்க அனுபவித்துப் படித்தார். ரஞ்சிதத்தின் இருதயம் அவருக்குப் புரிந் தது; பொற்கூண்டில் அடைபட்டுக் கிடக்கிருள் என் பதை அவர் உணர்ந்தார். ஓலையைச் சுருட்டி கண் ணிலே ஒத்திக் கொண்டார். ரஞ்சிதத்தை அணைப்ப தாக—முத்தமிடுவதாக எண்ணிக் கொண்டேதான் அவர் அந்த ஓலையை ஒத்திக் கொண்டிருப்பார். அவர் முகத்தில் எவ்வளவு இன்பம், குறும்பு! ஓலையை இரும் புப் பெட்டிக்குள் வைத்துவிட்டு உள் முற்றத்தில்போய் அமர்ந்தார். ரஞ்சிதத்தை வாட்டும் அதே நிலவு சுமத்ரா தீவிலும் எரிந்து கொண்டிருந்தது. "நிலவே, நிலவே! நீ அங்கிருந்த படியே நான் சொல்வதைக் கேட்டு, தாய்த் தமிழகத்தில் இருக்கும் என் ரஞ்சிதத் திடம் சொல்லிவிடக்கூடாதா?" என்று கொஞ்ச வேண்டும் போல அவருக்குத் தோன்றியது.

'ரஞ்சிதம், நீ எனக்காக உனது கலையை அர்ப்ப ணித்தாய், உனது சுதந்தரத்தை தத்தம் செய்தாய், இருந்தும் நீ சுகம் பெறவில்லை. நல்ல காரியங்களைச் செய்து வாழ்வில் சுகம் பெற நினைத்தவள் நீ. பெண்கள் எல்லோரும் அப்படியில்லை. ஒரு பெண்ணை அழித்து மற்றொரு பெண் வாழ நினைப்பதுமுண்டு. வாழ்க் கையை வெற்றி நிறைந்ததாக்க, பெண்கள் எந்தக் காரியத்தையும் செய்யத் துணிவார்கள். அதற்கு நீ விதிவிலக்கு. நீ நினைத்திருந்தால் மகாராஜாக்களின் பக்கத்தில் ஒரு நாளைக்கு, சிற்றரசர்களின் மடியில் ஒரு நாளைக்கு என்று இன்பமாகக் காலத்தைக் கழித்திருக்க முடியும். உன்னை நான் முதன் முதலில் சந்தித்த சம்ப வமும், நீ எனக்கு அளித்த உறுதிமொழியும் என்

நினைவில் நின்று அழுதுகொண்டிருக்கின்றன.' என்று ரஞ்சிதத்தை எண்ணித் தன்னை மறந்த நிலையில் நின்றுகொண்டிருந்தார் குமரப்பர். அவரது ஓரக் கண்களிலே வியர்வைத்துளி போல் கண்ணீர் துளிர்விட்டு நின்றது. ஒரு நாழிகை அவர் அப்படியே நின்ருர். உணவு சமைப்பவன் அழைத்தபோதுதான் திரும்பிப் பார்த்தார்.

அவருக்கு உணவு கொள்ள மனமில்லை. தமிழ்நாட்டுக்குச் செல்லும் அடுத்த கப்பல் எப்போது என்று அறியவே அவர் துடித்தார். கை விளக்கை எடுத்துக்கொண்டு துறைமுகத்திற்குப் போனுர். அங்கே அதிகாரி கையை விரித்து விட்டார். "இன்னும் மூன்று திங்களுக்கிடையில் தமிழ் நாட்டிற்குக் கப்பல் இல்லை" என்று அதிகாரி சொன்னதும் அடிவயிற்றில் நெருப்புப் பற்றிக் கொண்டவரைப் போல் அழுது புலம்பியபடி வீட்டுக்கு வந்தார். அவருக்குப் பிடித்தமான பால் பணியாரம் செய்து வைத்திருந்தான் சமையற்காரன். அது குமரப்பருக்குப் புளித்தது. நெய்யில் போட்டுப் புரட்டியெடுத்த செட்டி நாட்டு இடியாப்பத்தைக்கூட அவர் தொடவில்லை. தமிழ்நாட்டின் புகழ்பெற்ற ஓவியனுல் தீட்டிக் கொண்டுவரப்பட்ட ரஞ்சிதத்தின் ஓவியம் தொங்கவிடப்பட்டிருந்த அவரது தனி அறைக்குப் போனுர். ரஞ்சிதம் அபிநயம் பிடிப்பதுபோல் வரையப்பட்டிருந்த அந்த அற்புதமான ஓவியத்திற்கு எதிரே குமரப்பர் அயர்ந்து உட்கார்ந்து விட்டார். ரஞ்சிதத்தை அடைந்த கதை அவர் நினைவுக்கு வந்தது...

தஞ்சைப் பெருநிலம், சரபோஜி மன்னன் காலத்தில் கலையிலும், கல்வியிலும் எழுச்சி பெற்று விளங்கியது. அந்தக் காலத்தில் ஆடற்கலைக்கு அளவு கடந்த

மதிப்புக் கொடுக்கப்பட்டது. ஆடற்பயிற்சி பெற்றவர்கள் எல்லாம் சரபோஜியின் அவையிலே அரங்கேற்றம் செய்விக்கப்பட்டனர். பரத நாட்டியத்தில் மிகுந்த பற்றுக் கொண்டிருந்த சரபோஜி, அதுபோன்ற அரங்கேற்ற விழாக்களை வெறும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளாக மட்டும் கருதவில்லை. தன்னுடைய ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் கலை வளர்ந்து வருகிறது என்பதற்கு ராஜ்யத்தில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகளெல்லாம் ஆதாரங்கள் எனக் கருதிப் பெருமைப்பட்டுக் கொண்டான். கலை ஞானம் மிகுந்த சரபோஜி மன்னன் பாரத நாட்டியத்திற்காக இரைத்த செல்வம் அளவிட முடியாதது. இன்று காண முடியாத நாட்டிய வகைகள் சரபோஜியின் காலத்தில் நிறைந்திருந்தன. தெற்குச்சீமையில்-பாண்டிய நாட்டில் ஆடத்தெரிந்தவர்களெல்லாம் சரபோஜியின் அவையிலே ஆடுவதற்குத் 'தவம்' கிடந்தார்கள். மன்னனோடு பேசும் தகுதியைப் பெற்றவர்களுக்குப் பொன்னும் பொருளும் இரைத்து ஆடுவதற்குச் சந்தர்ப்பம் வாங்கப் படாதபாடுபட்டார்கள்.

வில்லாய் வளைந்து, கொடியாய்த் துவண்டு வீடுகளில், கல்யாணப் பந்தல்களில் ஆடி 'அற்புதம்! அற்புதம்!' என்று புகழப்பட்டவர்களில் எத்தனையோ பேரழகிகள் சரபோஜியின் அவையிலே ஆடமுடியாமல் வியர்த்து விறு விறுத்து வீடு திரும்பியிருக்கிறார்கள். உடையழகால், உருவத்தின் எழிலால், கடையிதழின் இளஞ்சிரிப்பால் சரபோஜி மன்னனிடம் பதக்கம் பெற முயன்றவர்கள், அந்த எண்ணங்கள் கனவாகித் தத்தளித்திருக்கிறார்கள். ஆட்டத்தில் குறை கண்டால் எடுத்துக் கூறி அபிநயம் பிடித்துக் காட்டும் கலைச் செல்வன் சரபோஜி.

கலை ஞானத்தால், கனிந்த உள்ளத்தால் தென்னாட்டில் பெரும் புகழைச் சம்பாதித்திருந்த சரபோஜி மன்னன் ஒருமுறை பாண்டிய நாட்டுக்கு வந்தான். சின்ன வயதில் அவர் சிறையிருந்த காலத்தில் விடுவிப்பதற்குப் பெரும் பாடுபட்ட ஸ்வாட்ஸ் பாதிரிக்கு, சிவகெங்கைக்கு அருகில் ஒரு நினைவுச் சின்னம் எழுப்ப நெடுநாட்களாகத் திட்டமிட்டிருந்த ஆசையை நிறைவேற்ற சரபோஜி சிவகெங்கைக்கு வந்தான். பொது மக்களின் சார்பிலும் நாட்டுக் கோட்டைச் செட்டியார்களின் சார்பிலும் சரபோஜிக்கு மகத்தான வரவேற்பு ஒன்று நடத்தப்பட்டது.

தொண்டித் துறைமுகத்திற்கும் மதுரை நகரத்திற்கும் அப்போது சாலைகள் அமைக்கப்படவில்லை. ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்கள் கூட நொடிப்பாதைகளில் தான் போக வேண்டும். அந்தப் பாதையின் ஓரத்தில் நான்கு பாதைகள் ஒன்று சேரும் சந்திப்பில் திருமாஞ்சோலை என்னும் ஊருக்குப் பக்கத்தில் ஒரு அழகான மாளிகையில் விருந்து நடைபெற்றது. இன்று அந்த மாளிகை இடிந்து கிடக்கிறது. தொண்டியிலிருந்து மதுரை போகும் பெருஞ்சாலையில் 'ஒற்றைப் பூவரசு' என்று சொன்னால் மோட்டார்காரர்கள் அந்த மாளிகை கு அருகில் இறக்கிவிடுகிறார்கள். நாலு பாதைகள் ஒன்று சேரும் அந்தச் சந்திப்பில் அந்தக் காலத்தில் ஒரு பூவரசு மரம் இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், மரமே இல்லாத அந்தப் பொட்டலுக்கு ஒற்றைப் பூவரசு' என்று பெயர் வரக் காரணம் இல்லை. கானாடுகாத்தானைச் சேர்ந்த குமரப்பர் விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்த வரவேற்பாளர்களில் முக்கியஸ்தராக இருந்தார்.

விருந்து முடிந்தது. வந்திருந்தோரை அறிமுகம் செய்து வைக்கும் கட்டம் வந்தது. அப்போது மாளிகை வாசலில் ஒரு கோச்வண்டி வந்து நின்றது.

அந்தக் கோச் வண்டியிலிருந்து நடுத்தர வய துடைய மனிதர் ஒருவர் இறங்கி வந்தார். அவர், கைகளிலே தங்கக் காப்புகளை அணிந்திருந்தார். விரல் களில் மோதிரங்கள் ஜொலித்துக்கொண்டிருந்தன. அவரைப் பெரிய வியாபாரி என்று எண்ணிக்கொண்ட குமரப்பர் வேகமாக முகப்பிற்கு வந்து கரம் கூப்பி வரவேற்றார். பிரபுக்களும் பெருந்தனக்காரர்களும் குழுமியுள்ள இடத்தில் தனக்கு அவ்வளவு பெரியவரவேற்புக் கிடைக்குமென்று அவர் எதிர்பார்க்கவில்லை. வெட்கப்பட்ட அந்த விருந்தாளி மாளிகைக்குள் நுழையு முன்னரே குமரப்பருக்குத் தன்னை அறிமுகப் படுத்திக் கொள்ளத் துடித்தார்.

"நான்தான் ஆவுடையார் கோயில் கங்கை முத்து நட்டுவனார். என்னுடைய சிஷ்யை திருமயம் ரஞ்சி தத்தை சரபோஜி முன்னிலையில் ஆடவைத்துப் பார்க்க வந்திருக்கிறேன். அதற்கு நீங்கள் அனுமதி வாங்கித் தரவேண்டும்" என்று விருந்தாளி குமரப்பரிடம் கேட்டுக் கொண்டார்.

"நல்லவேளை, விருந்து முடியப்போகும் நேரத்தி லாவது வந்து சேர்ந்தீர்களே; அந்தப் பெண் வந்திருக் கிறதா?"—குமரப்பர் வாஞ்சையோடு கேட்டார்.

"அதோ குழந்தை வண்டியிலிருக்கிறது" என்று கூறிக் கையைத் தட்டினார் நட்டுவனார். புகை நீக்கி வரும் நிலவைப்போல், மெல்லிய திரையை விலக்கிக் கொண்டு ரஞ்சிதம் கோச் வண்டியை விட்டு இறங்கி

வந்தாள். அவள் தலையிலே ஒரு கட்டு மல்லிகைப்பூ இருந்தது. இனிய நாதத்தைக் கிளப்பும் சிறிய வெள்ளி மணிகளைக் கொண்ட சிலம்புகளைக் கால்களில் அணிந்திருந்தாள். மெல்லிய பூப்பாதத்தை எடுத்து வைத்து மிதித்து வந்தாள். ஒரு அடிக்கும் மற்றொரு அடிக்கும் இடைப்பட்ட நேரம் அவளுடைய நடையை நாட்டியமாக்கித் தாளம் பிடித்துக் கொடுத்தது. அன்னத்தைப் போல் நடக்கிருளா, அகம்பிடித்த குதிரை போல் நடக்கிருளா?-அப்படி இருந்தது அவள் நடை. தளுக்கி, மினுக்கி நடந்தாள். தலையை உயர்த்தி நடந்தாள். விழிகளிலே கவர்ச்சி இருந்தது; மருட்சி இருந்தது. குறும்பும் நாணமும், வதனங்களின் நீரோட்டமும் அவளுடைய அழகைப் பன்மடங்காகப் பெருக்கிக் காட்டின. மானுய், மயிலாய் மாளிகைக்குள் நுழைந்தாள். சீமான்களும், சீமாட்டிகளும் நிறைந்திருந்த அந்தச் சபாமண்டபத்தில், ரஞ்சிதம், மல்லிகைத் தோட்டத்தின் ரோஜா மலரைப்போல்-வெண் மணற் பரப்பில் செம்பவளச் சரத்தைப்போல் தனித்து விளங்கிளுள். சபை அவளை விழுங்க நினைத்தது. சரபோஜி அவளோடு பேசத் துடித்தான். சித்திரத்தைப் போல், பத்தரைமாற்றுத் தங்கத்தால் செய்த பதுமையைப் போல், நித்திரையில் வந்து நெஞ்சம் குலைக்கும் தேவ கன்னியைப்போல் மண்டபத்தில் வந்து அமர்ந்திருக்கும் ரஞ்சிதத்தை-அவளின் அழகை-அங்க சிருஷ்டியை அரித்துத் தின்றுவிடுவதைப் போல் அங்கு வந்திருந்த சீமான் வீட்டுப் பெண்கள் முறைத்து முறைத்துப் பார்த்தார்கள். ரஞ்சிதம் குனிந்த தலை நிமிரவில்லை. மணப் பெண்ணுகத் தலை கவிழ்த்துக் கிடந்தாள். அருகிலே அவளது ஆசான் கங்கைமுத்து அமர்ந்திருந்தார்.

குமரப்பர் எல்லோரையும் சரபோஜி மன்னருக்கு அறிமுகம் செய்து வைத்துக்கொண்டு வந்தார்.

"ரஞ்சி, ராஜா பக்கத்திலே வந்துவிட்டார். எழுந்து நில், அவரைச் சேவிக்க வேண்டும். கலை வாணச் சக்கரவர்த்தி அவர். எழுந்து நில் கண்ணு!" என்று கங்கை முத்து நட்டுவனுர் ரஞ்சிதத்தின் கன்னத்தைத் தொட்டு நிமிர்த்திஞர்.

கங்கைமுத்து அவளைக் குழந்தைபோல் எண்ணியதால், பள்ளிச் சிறுமியைப் போல் நடத்தியதால், அவளது கன்னத்தை அவர் தொடும்போது ஒரு பெண்ணைத் தொடுகிருேம் என்ற உணர்ச்சி அவருக்கு இல்லை. ஆனுல் அவரைப்போல் அப்படி ஒருமுறை அவளது கன்னத்தைத் தொடுவதற்கு அந்த மண்டபத்தில் எத்தனை பேர் துடித்தார்கள் தெரியுமா?

சரபோஜி எதிரிலே வந்துவிட்டான். குவிந்து கிடந்த பூவிதழ்கள் விரிந்து மலர்வதைப்போல் ரஞ்சிதம் நிமிர்ந்து பார்த்தாள். விழிகளை உயர்த்திக் கரங்களைக் கூப்பி வணங்கிஞள்.

மன்னன் சிரித்தான். அது பவ்யமான சிரிப்பு. 'பரத நாட்டியக் கலையின் பாதாளம் வரை சென்று விட்டு வந்தவன் நான்' என்று சிரிப்பால் சொன்ஞனே என்னவோ—அப்படி நளியாமல் சிரித்தான் சரபோஜி.

"பெண்ணே!"

"உம்!"

"உன் பெயரை நான் அறியலாமா?"

"ரஞ்சிதம்!"

"ஊர்?"

"திருமயம்!"

"அரங்கேற்றம் ஆகிவிட்டதா?"

"இல்லை!"

"மகாராஜாவின் சந்நிதானத்தில் ஆடவைக்கக் குழந்தையை அழைத்து வந்திருக்கிறேன். நான் குரு; பெயர் கங்கைமுத்து!"—என்று நட்டுவனர் குறுக்கிட்டார்.

"பயிற்சி முற்றுப் பெற்று விட்டதா? எத்தனை ஆண்டுகளாகப் பயிற்றுவிக்கிறீர்?"

"சிறுமியாக இருக்கும்போது குழந்தை என்னிடம் வந்துவிட்டது. எனக்குத் தெரிந்த வித்தைகள் எல்லாம் குழந்தைக்கும் தெரியும்"— நட்டுவனர் சொன்னர்.

மன்னன் ரஞ்சிதத்தின் பக்கம் திரும்பினன். ரஞ்சிதத்தின் கண்களிலே நீர் அரும்பி நின்றது. முகம் சிவந்து காணப்பட்டது. சரபோஜி அவளது தாடையைத் தொட்டு உயர்த்தினன்.

"ஏன் அழுகிருய்? பயப்படுகிருயா?"—மன்னன் அன்போடு கேட்டான்.

"இ...ல்...லை!"—தயங்கித் தயங்கிப் பதில் சொன்னுள் அவள்.

நட்டுவனர் குறுக்கிட்டார்: "அரங்கேற்றத்தைத் தன் தாயார் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று அழுகிறது."

மன்னனல் அதற்கு ஆறுதல் கூறமுடியவில்லை. "அழாதே பெண்ணே உன்னுடைய கலையால், ஆட்டத்தால், அதனல் கிடைக்கும் புகழால் கடந்தவைகளை மறக்க முயற்சி செய்! என்னைப் பார்! எத்தனையோ

மன்னர்கள் மகுடம் சூட்டிக் கொள்கிறார்கள். நாட்டை யாளுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் இல்லாத கலை உணர்வு எனக்கு மட்டும் ஏன் இருக்கிறது? நான் கலைஞரின் மகனா? கலை கற்றேனா? இல்லை. உன்னைப் போல் நானும் பந்தபாசத்தில் சிக்கித் தவித்தவன் தான். மகன் மண்ணாளுவதை மாதாபிதாக்கள் கண்டுகளிக்க முடியவில்லையே என்று நானும்தான் கண்ணீர் வடித்தேன். எங்கெங்கோ மருந்து தேடினேன். கிடைக்கவில்லை. ஒருமுறை தென்னாட்டு நாட்டியத்தைக் காணும் பேறு எனக்குக் கிடைத்தது. நான் சிறையில் அனுபவித்த துன்பத்தை-தாய் தந்தையரைப் பிரிந்திருந்த வேதனையை அந்த ஆட்டம் மறக்க அடித்தது. அதிலிருந்து எனக்கு ஆட்டக்கலை என்றால் உயிர். கவலை வரும்போதெல்லாம் நாட்டியத்தைக் கண்டு கவலைகளை மறக்கிறேன். பெண்ணே, நீ ஆடல் கற்றவள், புகழும், செல்வமும் உன்னைத் தேடிவரும். கவலை மறந்து கலையைப் பரப்பு! அழாதே! அழுதால் கண் கலங்கும், இதயம் கசங்கும்; அதனால் முதுமை விரையக் கூடும். வா! அரங்கத்தில் ஏறு! ஆடு! உன் ஆசான் பாடட்டும்!'' என்று அவளைக் கைப்பற்றி அழைத்து மேடையில் ஏற்றினான் சரபோஜி.

சரபோஜி ஆசனத்தில் அமர்ந்தான். சபை நிமிர்ந்து உட்கார்ந்தது. கங்கைமுத்து தாளத்தைக் கையிலெடுத்து மேளத்தைத் தட்டினார். தாம்...தித்... தா, தை... தத்...தை, என்று ரஞ்சிதம் அபிநயத்தைத் தொடங்கினாள். சபை குலுங்கியது. தஞ்சைப் பெருநிலத்தில் எத்தனையோ ஆட்டக்காரிகளின் ஆட்டங்களை யெல்லாம் சரபோஜி கண்டிருக்கிறான். புகழ் பெற்ற ஆசான்களின் சிஷ்யைகளெல்லாம் சரபோஜியின் அவையிலே ஆடியிருக்கிறார்கள். வர்ணம்

பிடிக்கத் தெரிந்தவர்களுக்குப் பதம் பிடிக்கத் தெரிவதில்லை; பதத்தை அழகாகப் பிடித்துக் காட்டுகிறவர்கள் சப்தம் பிடிக்கையில் 'கோட்டை' விட்டு விடுகிறுர்கள் என்று அடிக்கடி கவலைப்படும் சரபோஜி, ரஞ்சிதத்தின் ஆட்டத்தில் பம்பரமாய்ச் சுழன்று விட்டான்.

"பெண்ணே, ஜக்கினி ஆடத்தெரியுமா?"

"பேரணி கூடத் தெரியும் பிரபு!" -ஆடிக்கொண்டே அவள் சொன்ஞள்.

"துருவபதம்?"

'துருவபதம் என்ன, தேசி, நவபாதம், குறவை எல்லாம் தெரியும்?"—சிரித்துக்கொண்டே சொன்ஞள். அவளுக்கு வெறி வந்துவிட்டது. சுருள் கத்தியை எடுத்து வீசிஞள். சபை பிரமித்தது. மண்டபம் சுற்றுவது போல் அவளுக்குத் தெரிந்தது. சரபோஜி அயர்ந்து விட்டான். அப்போது சபையில் 'அய்யோ' என்ற குரல் கேட்டது. அது அவள் செவியில் படவில்லை.

"ரஞ்சிதம்!" என்று கத்திஞன் மன்னன்.

அவள் ஆட்டத்தை நிறுத்தவில்லை. திடீரென்று நிறுத்திஞல் விழுந்துவிட நேரிடும் என்று அவளுக்குத் தெரியும்.

"ரஞ்சிதம்! போதும்! போதும்!" என்று மன்னன் மறுபடியும் உரக்கக் கூவிஞன்.

ஆட்டத்தை நிறுத்த முயன்ருள்.

சுழன்று கொண்டே அரங்கினின்று உருண்டாள். எல்லோரும் அவளைச் சூழ்ந்து கொண்டார்கள். அவளுக்கு நெற்றியில் இலேசான காயம். கரங்களிலே சில

கிறல்கள். குமரப்பர் கையில் ரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு ரஞ்சிதம் மயக்கம் தெளிந்து எழுந்தாள்.

"அவருக்கென்ன கையெல்லாம் ரத்தம்?" என்ருள்.

"எவருக்கு?" அலட்சியமாகக் கேட்டார் நட்டுவஞர்.

எல்லோரும் குமரப்பரைச் சூழ்ந்தார்கள். ரத்தப் பெருக்கு நிற்கவில்லை. ரஞ்சிதம் அவரருகில் வந்தாள். அவர் முகத்தைப் பார்த்தாள். அவரும் பார்த்தார். அவளது முகத்திலே அனுதாபம் தெரிந்தது. அதை ஏற்றுக் கொண்டதைப் போல் அவர் பதிலுக்கு இள நகை புரிந்து ரத்தம் கொட்டிய கையைத் தூக்கிக் காண்பித்தார். "ஐயோ!" என்று பரிதாபத்தோடு கூவிஞள் ரஞ்சிதம். ஆம்; குமரப்பரின் இடது கையில் சுண்டு விரலையே காணேம்! துண்டிக்கப்பட்டு விட்டது. அவளுக்கு உடம்பு சிலிர்த்தது. ஆவேசம் கொண்டு அவள் சுருள் கத்தியை வீசும்போது அவரது விரல் துண்டிக்கப் பட்டிருக்கிறது என்பதை அவள் உணர்ந்தாள். சபையில் அந்தக் கலவரம் ஒடுங்குவதற்கு ஒரு நாழிகையாகி விட்டது.

மன்னன் சரபோஜி ரஞ்சிதத்தின் ஆட்டத்திலேயே இலயித்திருந்தான். நெளிவது கூடத் தெரியாமல் ஊரும் பச்சைப் பாம்பைப்போல், புயலிலே சிக்கி அலை மோதும் விரிந்த வாழை இலையைப்போல் அவள் மண்டபத்திலே, அனுயாசமாக ஆடியதைக் கண்ட சரபோஜிக்கு அவளை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. சபையைப் பார்த்துப் பெருமூச்சு விட்டான். தன் கழுத்தில் அணிந்திருந்த விலையுயர்ந்த

முத்துமாலை ஒன்றை அவளுக்குப் பரிசாக அளித்தான். ரஞ்சிதம் தலைதாழ்த்தி அந்தப் பரிசைப் பெற்றுக் கொண்டாள். அவள் பரிசைப் பெற்றுக் கொண்டு திரும்புகையில், "பெண்ணே, இது என் பரிசல்ல; தஞ்சையின் ராஜாங்கப் பரிசு. எந்த நேரத்திலும் தஞ்சைப் பெரு நிலத்தில் எந்த விழாவிலும் மரியாதை பெறுவதற்குத் தகுதி பெற்றவள் என்பதற்கான அத்தாட்சி இந்த முத்துமாலை" என்றான் சரபோஜி. முத்துப்பல் காட்டி மோகனப் புன்னகை வீசி மன்னரின் ராஜ மரியாதையை ஏற்றுக்கொண்டாள் ரஞ்சிதம். பரிசைப் பெற்றுக்கொண்டு படிகளை விட்டு இறங்குகையில் அவளது விழிகள் பரபரவென்று சிதறி ஒரு கணத்தில் குறிவைத்து நின்றன. அந்தக் குறி பிரபுக்களின் வரிசையில் பட்டுப் பீதாம்பரத்தோடு அமர்ந்திருந்த குமரப்பரைத்தான் பாய்ந்தது.

ஆடற்கலையால் ரஞ்சிதம் மணம் பெற்றாள். புகழ் பெற்றாள். பொருள் குவித்தாள். தமிழகிலம் அவளது ஆடலைக் காணத் தவித்துப் புலம்பியது. ரஞ்சிதத்தின் ஆட்டத்திற்கு, கலையுணர்ந்த மக்கள் மத்தியில் அபரிமிதமான மரியாதை வளர்ந்தது.

ஜமீன் மாளிகைகளிலே ஆடினாள். சமஸ்தானாதிபதிகளின் முன்னிலையில் ஆடினாள். கல்யாண மண்டபங்களில் ஆடினாள். கலையரங்கங்களில் ஆடினாள். அழகிகளின் தரிசனங்களுக்குப் பரந்து திரியும், வாலிபர்களின் இதயங்களிலெல்லாம் ஆடினாள். ஆனால் அவள் இதயத்திலே ஆடியது யார்?

அன்பொழுகப் பேசி ஆட்டப்பிரியன் சரபோஜியின் முன்னிலையில் ஆடிக்காட்டி புகழ்க்கொடி நாட்ட உற்ற துணை புரிந்த குமரப்பர், அவள் உள்ளத்தில் ஆடினார்.

அவள் மற்றவர்களுக்கு நிலவாக ஒளி சிந்தினாள், நட்சத்திரமாக மின்னினாள், தேனருவியாகத் தோன்றினாள். அவள் மற்றவர்களைக் காணும் போதெல்லாம் குமரப்பரையே எண்ணிக்கொண்டாள். அவரது நினைவு வரும்போதெல்லாம் தன்னுடைய சுண்டு விரலைப் பார்த்துக் கொண்டாள். பத்தாண்டு காலமாகப் பயிற்சி பெற்று அரங்கேற்ற நாளன்று தன் ஆட்டம் ரத்தப்பலி கண்டு விட்டதே என்று அவள் அடிக்கடி விசனப் பட்டாள். அதற்காகக் குமரப்பரிடம் கூட மன்னிப்புக் கேட்கவில்லையே! அவர் யார்? எந்த ஊர்? இப்படி அவள் நினைத்து கண்ணீர் வடித்திருக்கிறாள்.

தன்னுடைய மனநிலையைக் கங்கைமுத்து நட்டுவனாரிடம் துணிந்து கூறிவிடுவது என்றுகூட அவள் தன் உள்ளத்தைப் பல தடவை தெம்புபடுத்திக் கொண்டிருக்கிறாள். ஆனால் அவரைக் காணும்போது அந்தத் துணிவு காற்றாய்ப் பறந்துவிடுகிறதே என்னசெய்வது? பேசத் தெரிந்த நாள் முதல் கங்கை முத்துவின் வளர்ப்புக் குழந்தையாக அவள் வாழ்ந்து வருகிறாள். அவளுடைய அன்னை—செங்கமலத்திற்குக் கூட அவர்தான் ஆசான் என்றால் ரஞ்சிதம் அவரிடம் பயப்படாமல் இருக்க முடியுமா?

"என்னுடைய ரஞ்சிதத்தை மணஞ் செய்து கொள்ள இந்தப் பகுதியிலே ஆள் இல்லை; ஒரு ராஜ குமாரன்தான் ஏற்றவன்"—என்று கங்கைமுத்து பல முறை அவளது காதில் படும்படி பேசியிருக்கிறார். இப்படியிருக்கும்போது எப்படிக் கேட்பாள் குமரப்பரைப்பற்றி! இள நெஞ்சு! பிரேமைக்கும், கண்ணில் படும் அழகிய தோற்றங்களுக்கும் எளிதில் இளகும் வாலிபப் பருவம்! ரஞ்சிதம் உள்ளுக்குள்ளேயே வெதும்பிச் செத்தாள்,

வெய்யிலை விரும்பும்போது மனிதர்கள் மழையை விரும்புவதில்லை. மழை அவசியப் படும்போது அவர்களுக்கு வெய்யில் கடுமையாகத் தோன்றுகிறது. ரஞ்சிதத்திற்கு மல்லிகைப்பூ என்றால் உயிர், தலையிலே வாங்கிக் கட்டிக்கொள்வாள். படுக்கையில் தூவி விடுவாள். படங்களுக்கெல்லாம் மல்லிகை மாலையே போடுவாள். ஆனால் அந்த அரங்கேற்றத்திற்குப் பிறகு அவள் மல்லிகையே வைத்துக்கொள்வதில்லை.

ஏனென்றால் அன்றையதினம் மல்லிகைதான் சூடியிருந்தாளாம். அதன் பிறகு அந்த மல்லிகையைப் பார்த்தால் அந்த அரங்கேற்றமும் குமரப்பரின் நினைவும் வந்து அவளது இதயத்தைத் துளைக்கிறதாம். அதனால் அவள் மல்லிகையைச் சூடிக்கொள்வதில்லை என்று முடிவு செய்துவிட்டாளாம். இந்த முடிவைக் கங்கைமுத்து எப்படி அறிவார்? ஒருநாள் அவர் ஒரு பந்து மல்லிகைப் பூவைச் சுமந்துகொண்டு மகிழ்ச்சியோடு வீட்டுக்குள் புகுந்தார்.

"ரஞ்சி, மல்லிகைப்பூ! நீ சூடிக்கொண்டு வெகு நாளாச்சே! இந்தா தலை நிறைய வைத்துக்கொள்!" என்றார்.

"மல்லிகைப்பூவா? ஊஹூம்! நான் மாட்டேன். அது இப்போது ஜன்ம விரோதி!"

"அட பைத்தியமே! மல்லிகைப்பூவுக்கும் உனக்கும் என்ன?"

"பகை இருப்பதால்தான் நான் வேண்டாம் என்கிறேன்" என்று தளதளத்த குரலில் கூறினாள்.

"ரஞ்சிதம்! ரஞ்சிதம்! இது யார் வாங்கி வந்தது தெரியுமா?"

இதை யார் கொண்டுவந்தால் என்ன! எனக்கு மல்லிகைப்பூ பிடிக்காது என்றால் பிடிக்காதுதான்'' என்று செல்லமாக உதட்டைப் பிதுக்கிக்கொண்டு கூறினாள் ரஞ்சிதம்.

நட்டுவனார் கங்கைமுத்து ரஞ்சிதத்தை விடுவதாக இல்லை.

''கண்ணு, இந்தப்பூ நம்ப இவர் கொண்டு வந்தார். அவர் பின்னாடியே வந்துகொண்டிருக்கிறார்,'' என்று அவளருகில் வந்து அவளது மடியில் போட்டார்.

மல்லிகைப்பூ அவளுக்கு மயக்கத்தை யூட்டியது. ரஞ்சிதம் பூப்பந்தை எடுத்து வாசற்பக்கமாக வீசினாள். வீட்டுக்குள் வந்த குமரப்பரைக் குறிவைத்து எறிந்ததைப் போல், அவள் வீசிய மல்லிகைச் சுருள் குமரப்பரின் முகத்தில் விழுந்தது. ஆம், ரஞ்சிதம் பூப்பந்தைக் கோபமாக வீசுவதற்கும், குமரப்பர் ரஞ்சிதத்தின் வீட்டிற்குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது. ரஞ்சிதம் திகைத்துப் போனாள். முகம் வியர்த்துவிட்டது. கைகளைப் பிசைந்தாள். நட்டுவனார் கங்கைமுத்து முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டார். நெஞ்சில் முள் தைத்தவளைப் போல் ஒரு கணம் துன்புற்ற ரஞ்சிதம், அடுத்த விநாடியே குளுமையையும், குறும்பையும் முகத்திற்கு வரவழைத்துக் கொண்டு ஆசை பொங்கப் பேசத்தொடங்கினாள்.

''எப்போது வந்தீர்கள்?...காயம் ஆறிவிட்டதா?... அன்று மன்னிப்புக் கேட்கக்கூட நேரமில்லை. என்னால் உங்களுக்குப் பெருத்த நஷ்டம்''—தலை குனிந்தபடி ரஞ்சிதம் பேசினாள். சவ்வாதுப் பொட்டு மணம் பரப்ப, ஜரிகை வேட்டியும், சந்தனவர்ணச் சட்டையும் கவர்ச்சி

யிட்ட சமுத்திலே கனத்த தங்கச்சங்கிலியும், விரல்களிலே வைர மோதிரங்களும் மின்ன ரஞ்சிதத்தைத் தரிசிக்க வந்த குமரப்பர் நினைவிழந்தவரைப்போல் பதில்பேசாமல் தடுமாறினார். முதலாளியிடம் மன்னிப்பை எதிர் பார்க்கும் தொழிலாளியைப்போல் அவள் நின்றாள். அறிந்த பள்ளிப் பாடத்தை ஆசான் கேட்கும்போது குழம்பி நிற்கும் மாணவனைப்போல் குமரப்பர் தோன்றினார். நிலைமை நட்டுவனாருக்குப் புரிந்தது. ரஞ்சிதத்தின் அன்னை செங்கமலத்தின் காலத்திலிருந்து அவர் எத்தனை முகங்களைப் பார்த்திருக்கிறார். எத்தனை பேருடைய உறவுக்கும் முறிவுக்கும் காரணகர்த்தாவாக விளங்கி இருக்கிறார்! அவருக்கா குறிப்புத் தெரியாது! வேகமாக உள்ளே போய்விட்டுச் சிறிய நேரம் கழித்து வெளியில் வந்தார். "வந்த காலோடு நிற்கிறீர்களே! உள்ளே போய் உட்காருங்கள். ஏம்மா, நீயும் இப்படியே நிற்கிறாயே ஏன்? உனக்குக் கால் நோகவில்லையா?" என்றார்.

ரஞ்சிதம் முன்னே சென்றாள். குமரப்பர் பின் தொடர்ந்தார்.

ஆடும் மயில் பொறித்த சதுரச்சலவைக் கற்கள் பதித்த அழகிய கூடம், ரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு வெள்ளித்தட்டில் துளிர்வெற்றிலை காய்ந்த சருகு போன்ற கொட்டைப்பாக்குச் சீவல், ரோஜா நிற வாசனைச் சுண்ணம்பு, ஏலக்காய், கிராம்பு முதலியன வைக்கப்பட்டிருந்தன. பட்டுறை கொண்ட தலையணைகள் மூன்று இணைந்து கிடந்தன. சுவரில் அழகான படங்கள் - நிர்வாணப் படங்கள் தொங்கிக்கொண்டிருந்தன. அலையிலே மிதந்துவரும் வெண்சங்கைப் போல், எழில் ததும்பும் மாதரசிகளின் அரைகுறை அங்கசிருஷ்டிகளோடு கூடிய கவர்ச்சி மிகுந்த ஓவியங்

கள் அரபிக் குதிரையின் வாலேப்போன்ற கார்கூந்தல் கொண்ட கட்டழகுக் காரிகையை கைவண்ணத்தால் ஊஞ்சலில் அமர்த்தி, அழகு பார்த்த ரவிவர்மாவின் அற்புதமான சித்திரங்கள் அந்த அறையை அலங்கரித்தன. ஒரு பக்கம் திரௌபதை துயில் இழக்கும் படம்! இன்னொரு பக்கத்தில் மேனகை கொடுத்த கனியன்ன குழந்தையை முனிவர் விசுவாமித்திரர் வேண்டாமென்றுரைக்கும் காட்சி விளக்கம்! அந்த அறை, கருத்தைக் குழப்பி, பருவத்திற்கு அறை கூவல் விடும் சல்லாப மண்டபமாக விளங்கியது.

முன்னே சென்ற ரஞ்சிதம் கம்பளத்தருகே போய் திரும்பிப் பார்த்தாள். அந்தப் பார்வை, குமரப்பருக்கு வரவேற்பிதழை வாசித்தளித்து, அமரும்படி கட்டளையிட்டது. குமரப்பர் அமர்ந்தார்; பக்கத்தில் அவள் அமர்ந்தாள். வெளியிலே இருந்தபடி நட்டுவனர் கங்கைமுத்து "போய் வரட்டுமா ரஞ்சி!" என்று கூவினர். "இரவு சாப்பாட்டுக்கு வந்து விடுங்கள்" என்று ரஞ்சிதம் அறையில் இருந்தபடியே சொன்னாள்.

குமரப்பருக்கு இதெல்லாம் புதிது. பணக்காரர்களின் விருந்துகளில் கலந்து பழரசம் சுவைத்துப் பரம்பரை கௌரவத்தைக் காத்துவந்த குமரப்பர், அப்போது தான் முதன் முதலாக அறிமுகமாகாத ஒரு வீட்டுக்குப் போயிருக்கிறார். வெற்றிலேபாக்குப் போட்டால் மாடு முட்டும் என்று சின்னக் குழந்தையாக இருக்கும்போது அவரது அன்னேயார் பயமுறுத்தியதை மறக்கவில்லே. ரஞ்சிதம் வெற்றிலேயை மடித்து அவர் கையிலே கொடுக்கும் போது, குமரப்பர் அன்னேயின் அன்றைய மிரட்டலே எண்ணிப்பார்த்தார். நாட்டு வைத்தியர் கொடுக்கும் மருந்தை, முகத்தைச் சுழித்துக்

கொண்டு சாப்பிடும் நோயாளியைப் போல் அவள் கொடுத்த வெற்றிலை மடிப்பை குமரப்பர் வாயில் அதக்கிக் கொண்டார். ரஞ்சிதத்திற்கு அது வேடிக்கை யாக இருந்தது. மெல்லச் சிரித்தாள்.

புடவையால் வாயைப் பொத்திக் கொண்டாள்.

"ஏன் சிரிக்கிருய்?" ரகசியமாகக் கேட்டார் குமரப்பர்.

"நீங்கள் பயப்படுவதைப் பார்த்துச் சிரிக்கிறேன்" என்ருள் ரஞ்சிதம்.

அவர்கள் பேச்சையும் நடையுடைகளையும் யாரோ சிலரி ஒளிந்திருந்து பார்த்துக் கொண்டிருப்பதைப் போல் இருவரும் நடந்துகொண்டார்கள். காற்று சில் லென்று வீசியது.

"ரஞ்சிதம்?"

"இம்!"

"தாசி வீட்டுக்கு இதுதான் எனக்கு முதல் தடவை. நான் பயப்படுகிறேன்."

"இது தாசி வீடல்லவே! என் தாயார் தாசி. என் பாட்டி தாசி! நான் தாசியல்ல. அப்படி இருக்க நான் விரும்பவில்லை. தாசித்தொழிலைச் சிலர் வருவாய்க்காக நடத்தினுர்கள். வேறு சிலர் குலத்தொழிலாக மதித் தார்கள். அதனுல் தாசிப் பெண்கள் யாருடைய தனிப் பட்ட அன்புக்கும் பாத்திரமாக முடியவில்லை; தாசிப் பெண்களுக்கும், தனிப்பட்ட யார் மீதும் பற்று, பாசம் இருந்ததில்லை"—ரஞ்சிதம் வார்த்தைகளைத் தொகுத் துக் கொண்டே போனுள்.

"இவ்வளவு சின்ன வயதில் இதெல்லாம் எப்படி உனக்குத் தெரிந்தது?"

"கல்லாமல் குலவித்தை பாதி என்பார்களே, அது உங்களுக்குத் தெரியாதா? தாசிகளின் உடல் மட்டும் கெட்டு விடுவதில்லை. இருதயமும் பாழாகி விடுகிறது. அவர்களுக்கு யார் மீதும் இரக்கம் பிறப்பதில்லை. மனப் பூர்வமாக அவர்கள் மற்றவர்களை நேசிக்க முடியாது. ஒரு தினத்திற்கு ஒரு சிறு பகுதியை வேடத்திற்கு ஒதுக் கினுல் இருதயம் கெடுவதற்கு வழியில்லை. எந்த நேரத்திலும், இருதயத்தை அதனது இருப்பிடத்தி லிருந்து மாற்றிக் கொண்டே இருக்க வேண்டுமானுல் இருதயம் கெடுவதைத் தவிர வேறு வழியில்லை. முதல் நாள் தன்னுடைய இல்லத்தில் பன்னீர் தெளித்துப் பரிமள கந்தம் பூசி வரவேற்கப்பட்டவரை, மறுநாள் தெருவிலே பார்த்தால் ஓர் அந்நியனைப் பார்ப்பதைப் போல் பார்த்துவிட்டுப் போவார்கள் தாசிகள். அந்த வாழ்க்கையையா நான் பின்பற்றுவேன்! எனக்கு என் தாயார் தேடி வைத்த சொத்து இருக்கிறது. நாளுகை உடம்பை வளைத்துக் கற்றுக்கொண்ட ஆடற்கலை இருக் கிறது. யார் என்னை நம்புகிருர்களோ, அவர்களோடு நான் வாழ்க்கை நடத்துவேன். பொன்னும், பொருளும் எனக்குத் தேவையில்லை. கண்ணுக்கு நேரான கணவன் வேண்டும். அவரை மகிழ்விக்க எனக்குத் தெரியும். ஆனுல் என்னை மகிழ்விக்க அவர் தெரிந்து கொண் டிருக்க வேண்டும்."

இனிய குரலில், வீணை வாசிப்பதைப்போல் ரஞ்சிதம் மூச்சு விடாமல் பேசிக்கொண்டே போனது, குமரப்பருக்கு ஒரு புதிய ஏட்டைப் படிப்பது போன்று இருந்தது.

இருவரும் பேசிக்கொண்டே இருந்தார்கள். நேரம் இருண்டு விட்டது. பக்கத்தில் இருந்த குமரப்பரின் முகம் இருட்டில் மறைந்த பிறகுதான் விளக்கு ஏற்ற

மறந்ததை அவள் நினைத்துக் கொண்டாள். வீட்டின் இன்னொரு பகுதிக்குப் போய் விளக்கேற்றிக் கொண்டு வந்தாள். அது மெழுகு திரி விளக்கு. திரி இளகுவது போல் இரண்டு உள்ளங்களும் இளகி ஓடிக்கொண்டிருந்தன.

"சாப்பிட வேண்டாமா? மீன் குழம்பு?"-ரஞ்சிதம் அழைத்தாள்.

"தேவைப்படும்போதெல்லாம் திருமயத்தில் மீன் கிடைக்குமா?"

"நல்ல மீன்கள் எப்போதாவதுதான் கிடைக்கும். இன்றைக்குக்கூட நம் வீட்டில் கெழுத்தி மீன் குழம்பு! உபாத்தியாயர் தேடிப் பிடித்து வாங்கிக் கொடுத்து விட்டுப் போயிருக்கிறார். இப்போதுதான் எனக்குச் சமையற்காரி சொன்னாள். இம்! எழுந்திருங்கள்" என்று அவர் கையைப் பிடித்துத் தூக்கினாள். இடித்துப் பிசைந்த மாவைத் தொடுவதுபோல் அவள் கரம் குமரப்பருக்கு அவ்வளவு மெதுவாக இருந்தது. பிடித்த கரம் பிடித்தபடி இருவரும் உள்ளே போனார்கள்.

பொழுது புலர்ந்தது. ஓடிக் களைத்த நண்டுகள், ஆற்று மணலில் புதையுண்டு கிடப்பதைப்போல் பட்டு மெத்தையில் அந்த இளம் ஜீவன்கள் இரண்டும் சுருண்டு கிடந்தன.

நட்டுவனார் கதவைத் தட்டினார். குமரப்பர் கதவைத் திறந்தார்.

"அதிகாலையில் போகவேண்டும் என்றீர்களே! குதிரை தயார்; வாசலில் நிறுத்தியிருக்கிறேன்" என்றார் நட்டுவனார். ரஞ்சிதம் அயர்ந்து கிடந்தாள். மல்லிகைப் பூக்கள் உதிர்ந்து விதைத்துக் கிடந்தன.

"ரஞ்சிதம் இன்னும் எழுந்திருக்கவில்லையே! சொல்லிவிட்டுப் போக வேண்டாமா?" என்றார் குமரப்பர்.

நட்டுவனார் ரஞ்சிதத்தைத் தட்டி எழுப்பினார்.

அவள் அவரது கையைப் பற்றி கன்னத்தில் வைத்துக் கொண்டாள். நட்டுவனாருக்கு அவள் உள்ளம் புரிந்தது. எண்ணம் தெரிந்தது. மனத்துக்குள்ளேயே சிரித்துக் கொண்டார்.

"ரஞ்சி விழித்துப் பாரேன். எங்கே கண்ணைத் திற!" என்று செல்லமாகக் கேட்டார் நட்டுவனார்.

ரஞ்சி விழித்தாள். நட்டுவனாரின் கையை அவள் பிடித்துக் கொண்டிருப்பது அப்போதுதான் தெரிந்தது. 'குபுக்' என்று சிரித்துவிட்டாள். தேக்கு மரப் பதுமை போலிருந்த அவள், தோகை வர்ணப் புடவை உடுத்திக்கொண்டு வீட்டு முகப்புவரை வந்து வழியனுப்பினாள்.

நட்டுவனார் குமரப்பரோடு ஊர்க் கடைசி வரை பேசிக் கொண்டு போனார். குதிரை ரஞ்சிதத்தைப் போல் மெதுவாக நடந்து சென்றது.

நட்டுவனார் குமரப்பரை வழியனுப்பி விட்டு வீடு திரும்புகையில், அவர் முகத்திலே உற்சாகமில்லை. பிரபு வீட்டுச் செல்லபிள்ளை தன்னுடைய ரஞ்சிதம் வீட்டுக்கு வந்தது பற்றிப் பெருமையாக நினைத்துப் பூரித்தவர் மனதில் மலர்ச்சி இல்லை.

ரஞ்சிதம் கொடுத்து வைத்தவள், வாழப் பிறந்தவள். இங்கிதம் தெரிந்து நடந்து கொள்வாளானால் மங்கள வாழ்க்கை பெறுதல் நிச்சயம்—என்று மூதல்

நாள் இரவு முழுதும் பெருமை அடித்துக் கொண்டிருந்தார். ஆனால் அவர் குமரப்பரை வழியனுப்பிவிட்டு வரும்போது அந்த மனக்கோட்டைகள் தவிடுபொடியாகச் சிதறிப் போயிருந்தன. ஏன்? மஞ்சு விரட்டில் பிடிபட்ட மாட்டைப்போல் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தார்.

ரஞ்சிதம் குளித்து முழுகிக் கூந்தலைக் கோதிக் கொண்டிருந்தாள்.

நட்டுவனாரைக் கண்டதும் ஆவலோடு அவரருகில் வந்தாள்.

"போய்விட்டாரா? எப்போது வருவதாகச் சொன்னார்? குதிரை மறைந்த பிறகுதானே வந்தீர்கள்! என்ன சொன்னார்? உபசரிப்பில் குறைசொல்லவில்லையே!"

நட்டுவனார் ஒன்றும் பேசவில்லை. அவர் கண்கள் கலங்கின. புருவங்கள் துடித்தன.

"குறை சொல்லவில்லை. உனது வரவேற்பிலே அவருக்கு அளவு கடந்த திருப்தி; ஒரு தாசி வீட்டில் இவ்வளவு முறையோடு காரியம் நடப்பது ஆச்சரியப் படக் கூடியது என்றார். உனக்கு இவ்வளவு சொத்து இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லையாம். நீ ஜமீன் தாரினியைப் போல் வாழ்க்கை நடத்துகிறாயாம். மனதில் பட்டதை யாருக்கும் பயப்படாமல் தெரிவிக்கிறாயாம்! உன்னுடைய குழைவும், நெளிவும் கூனிக் குறுகிப்போன கிழவனையும் நிமிர்ந்து பார்க்க வைக்கிறதாம். நீ பேரழகியாம்!"—படிப்படியாகச் சொல்லிக்கொண்டே போனார் நட்டுவனார்.

"அவ்வளவுதானா? அப்புறம் என்ன சொன்னார்? அன்றைய ஆட்டத்தைப் பற்றிச் சொன்னாரா?"

"சொன்னார்! ரஞ்சிதம் இந்திரலோகத்தில் பிறக்க வேண்டியவள் என்று சொன்னார்."

ரஞ்சிதத்திற்கு மயிர் சிலிர்த்தது. ஒரு தரம் உடலைத் தடவிக் கொண்டு தனக்குத் தானே கர கோஷம் செய்து கொண்டாள்.

நட்டுவனாருக்குத் துக்கம் தாளவில்லை.

"ரஞ்சிதம்!" என்று உரக்கக் கத்தினார்.

ரஞ்சிதத்திற்குத் தூக்கி வாரிப்போட்டது. இவ்வளவு நேரம் நட்டுவனார் சொன்னதெல்லாம், வெறும் பொய் என்று அவள் நினைத்துவிட்டாள். நட்டுவனாரையே கூர்மையாகப் பார்த்தாள். நட்டுவனாரின் கண்கள் பனிபடர்ந்த ரோஜா மலரைப்போல் நனைந்திருப்பதை அப்போதுதான் கண்டாள்.

"ரஞ்சிதம்!" நீ துள்ளிக் குதித்து விளையாண்ட காலத்திலிருந்து பழகிய அற்புதமான கலையை, அவர் மதிக்கவில்லை. நாடு புகழ்கிறது உன் ஆட்டத்தைக் கண்டு. நடன சிங்காரி என்று தமிழகம் பாராட்டுகிறது. ஆனால் குமரப்பர், அதை மதிக்கவில்லை ரஞ்சி!"—நட்டுவனார் தேம்பித் தேம்பி அழுதார்.

"ஐயா! என்ன சொல்கிறீர்கள்? மூடி மறைத்துப் பேசி என்னைச் சித்திரவதை செய்யாதீர்கள். ஆடிப் புகழ் பெற்றேன். தாசி என்று என்னைத் தேடி வந்தவர்களையெல்லாம், ஓடிப்போங்கள் என்று திருப்பினேன். என்னுடைய ஆட்டம் குமரப்பருக்குப் பிடிக்கவில்லையா? என்னைக் காட்டிலும் ஆடற் கலையில் வல்லவளை அவர் சந்தித்திருக்கிறாரா? நீங்கள் வாயை மூடிக் கொண்டிருந்தீர்களா? உங்களுக்குத்தானே இந்த அவமானம்! அரங்கு அமைத்து அந்தச் சித்தராங்கியை

அங்கே அழைத்து வரச்சொல்லாமலா வந்தீர்கள்!"-ரஞ்சிதம் வெடித்துப் பேசினுள்.

"ரஞ்சிதம்! புரியாமல் பேசாதே! அவர் உன்னைப் போல் அகிலத்தில் ஆட்டக்காரி இல்லையென்கிருர்; இனிப் பிறக்கவும் முடியாதென்கிருர். அவளுக்கு ஆட்டம் கற்பித்த உங்களுக்குச் சிலைகூட வைப்பேன் என்கிருர். ஆனல்......!"

"ஆனல் என்ன! ரஞ்சிதம் இனிமேல், அரங்களிலே ஆடாக்கூடாதென்கிருர். கோயில் திருவிழாக்களில் சதிர் கூடாதென்கிருர். கோயில் மானியத்தை இழக்கச் சொல்கிருர். இல்லையா?"

நட்டுவனருக்குத் தலை வெடித்து விடுவதுபோலிருந்தது. கண்களை விரித்துப் பார்த்தார்.

"ஆம் ரஞ்சிதம்! நீ ஆடக்கூடாதாம்! வீட்டுக்குள் ஆடி அவரை மகிழ்விக்கத்தான் இனி உன் ஆட்டம் பயன்பட வேண்டுமாம்! வீதிக்கு வந்தால் அவருக்குப் பிடிக்காதாம். நீ இதற்கு உடன்பட்டால் அவர் உன்னைத் துணைவியாக்கிக் கொள்ளத் தயாராம்! சொத்துச் சுகத்தை எல்லாம உன் பெயருக்கே எழுதி வைப்பாராம்! மாளிகை எழுப்புவாராம்! இல்லாவிட்டால்......?"— நட்டுவனர் தேம்பித் தேம்பி அழுதார்.

"இல்லாவிட்டால்!···இல்லாவிட்டால்?"

"வரமாட்டார். கலை உன்னேடு! புகழ் உன்னேடு! அவரும் அவர் பணமும் அவரோடு! அவ்வளவுதான்!"

"அவ்வளவுதான்! அவ்வளவுதான்! என் வாழ்க்கையும் அவ்வளவுதான்! தலை தெறிக்கக் கதறினுள் ரஞ்சிதம்.

"ரஞ்சிதம்!"

"ரஞ்சிதம்தான் பேசுகிறேன். மன்னிக்கவேண்டும். கலை கற்றேன். அதனுல் புகழ் பெற்றேன். மணம் பெற்றேன், செல்வம் இருக்கிறது சாகும் அளவிற்கு! நான் காசுக்காகத் தெருக்களில், கோயில்களில் ஆடத் தான் வேண்டுமா? அழகு மின்னும் பருவத்தில், ஆடிக் கொண்டே இருந்தால் என் வாழ்க்கை என்னுவது? பொருள் சேர்ப்பதல்ல வாழ்க்கை? புகழ் சம்பாதிப் பதற்கல்ல பெண்கள் பிறந்தது! வாழவேண்டும்!"

"ரஞ்சிதம்! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட் டதா?"

"வாழவேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது."

"கலையை வாழவைக்கும் பணக்காரனை நான் தேடித் தருகிறேன்."

"பணக்காரன் எனக்கு வேண்டாம். எனக்குக் கண வன் வேண்டும். ஊருக்கு அளிக்கும் கலையை, என் கண வருக்கு மட்டும் நான் அளிக்கத் துணிந்துவிட்டேன்."

"ரஞ்சிதம் எனக்குத் துரோகம் நினைக்கிருய்!"

"இல்லை, தங்களை இருந்தது இருந்தபடி சுகமாக வாழவைக்க நினைக்கிறேன்."

"சண்டாளி!" என்று கதறி, 'பளார்' என்று அவள் கன்னத்தில் அறைந்தார் நட்டுவனுர்.

"ஐயோ!" என்று கதறி கதவில் போய் மோதினுள் ரஞ்சிதம்.

கண்ணுடிக் கிண்ணத்தைப்போல் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்ட ரஞ்சிதம், இப்படி ஒரு நாளைக்கு தன்னுலேயே அடித்து வீழ்த்தப்படுவாள் என்று, நட்டுவனுர் எதிர்பார்க்கவில்லை,

"துரோகி! பத்து வருடங்களாகப் பாடுபட்டுச் சொல்லிக்கொடுத்த குருவையே, அவமதிப்பதென்ருல் உனக்கு எவ்வளவு திமிர் இருக்கும்...நன்றிகெட்டவள்! ரஞ்சிதம்! நீ வாழமாட்டாய். தாசிகளின் இறுதிக் காலம் ஊசிப் போன பதார்த்தத்தைப்போல் நாருமல் போகாது என்பார்கள். நீயும் அப்படித்தான் போகப் போகிருய்" என்று கர்ஜித்தார் கங்கைமுத்து. சொத்தை இழந்தவரைப் போல் அவர் துடித்தார்.

அப்போது முகப்புக் கதவுதட்டும் சத்தம் கேட்டது. நெற்றியில் வடிந்த ரத்தத்தைத் துடைத்துக் கொண்டே கதவைத் திறந்தாள் ரஞ்சிதம்!

"ஆ! அத்தான்!" என்று கதறினுள்.

குமரப்பர் பலத்த ரத்தக் காயத்தோடு ஒரு வண்டியில் இருந்து தூக்கிவரப்பட்டார்.

அந்தக் காட்சி ரஞ்சிதத்தின் இருதய ஓட்டத்தை இழுத்துப் பிடித்தது. கால்களை நடக்கவொட்டாமல் பின்னச் செய்தது. மாலை வெய்யிலைப் போன்ற அவளது மஞ்சள் நிறக் கன்னத்தில், துடைக்கத் துடைக்க, அறுத்த பவளச் சரத்தைப்போல் ரத்தம் சொட்டுச் சொட்டாக உருண்டு கொண்டு இறங்கியது. அவசரத்தில் அதை அவள் முகமெல்லாம் இழுகிக் கொண்டாள். குமரப்பரைத் தூக்கி வந்த போக்கு வண்டிக்காரர்கள் அவரை வீட்டுக்குள் தூக்கி வந்து கட்டிலில் போட்டுவிட்டு வெளியே வந்தார்கள். ரஞ்சிதம் அவர்களைப் பின்தொடர்ந்து முகப்புக்கு வந்தாள்.

"ஐயா அவருக்கென்ன நேர்ந்தது? எதிரிகள் யாரும் வழிமறித்துஅடித்து விட்டார்களா? சொல்லுங்

களய்யா? ஒன்றும் சொல்லாமல் தூக்கிவந்து போட்டு விட்டுப் போகிறீர்களே, அவருடைய குதிரை எங்கே?"—ரஞ்சிதம் வண்டிக்காரர்களைக் கேட்டாள்.

"பாவம் நாங்கள் இல்லாவிட்டால் உங்கள் வீட்டுக்காரரை நீங்கள் உயிரோடு பார்த்திருக்க மாட்டீர்கள். வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது மாதிரி அவருடைய குதிரையே அவரைத் தூக்கி எறிந்துவிட்டது. குதிரையா அது? காண்டா மிருகம்! ஒரே தூக்கா, அவரைத் தூக்கிப் புதருக்குள் தள்ளிவிட்டது. உடம்பெல்லாம் முள்! இன்னும் ஏதாவது இருக்கும், போய்ப் பாருங்கள்!" என்று வண்டிக்காரர்கள் சொன்னார்கள்.

"ஐயோ, அத்தான்" என்று கதறிக்கொண்டு ரஞ்சிதம் உள்ளே ஓடினாள்.

குமரப்பர் அங்கே வேதனை பொறுக்க முடியாமல் புலம்பிக் கொண்டு கிடந்தார். ரஞ்சிதம் அவரருகில் அமர்ந்து தேம்பித் தேம்பி அழுதாள். பேச முடியாத நிலையில், வேதனையையும் தாங்கிக்கொண்டு அவளது கண்ணீரைத் துடைத்தார் குமரப்பர். அப்போது கண்ணீர் கலந்த ரத்த ஒழுக்கை அவள் கன்னத்தில் கண்டார். துணுக்குற்றவராய் காயத்திற்குக் காரணத்தைக் கை ஜாடையால் கேட்டார். அவள் பதில் பேசவில்லை. கண்ணீர் சொட்டச் சொட்ட குமரப்பரின் கரங்களை கண்களில் ஒத்திக் கொண்டாள்.

குமரப்பர் மிகுந்த வேதனைக்கிடையே பேச முனைந்தார்.

"ரஞ்சிதம்!"

அவள் தேம்பினாள்.

"என்னால் உங்களுக்கு நஷ்டம் என்று நேற்றுத்தான் சொன்னாய். இப்போது என்னால் உனக்கு எவ்வளவு

கஷ்டம்! அன்னையின் பாசத்தையும், மனைவியின் பிரிவாற்ருமையையும் உன்னிடத்திலே காண்கிறேன் -ரஞ்சிதம்'' என்று கண்கலங்கச் சொன்னார் குமரப்பர்.

ரஞ்சிதம் வேதனைகளையெல்லாம் ஒரு நொடியில் மறந்துவிட்டாள். குமரப்பர் 'அவளை' மனைவி என்று சொன்னதில் ரஞ்சிதம் அவ்வளவு இன்பத்தைக் கண்டாள். ஆடவர்களை மிரட்டி, அடக்கி அடிமைப்படுத்தும் ஆரவல்லி-சூரவல்லியைப் போல் தர்பார் நடத்தி வந்த தாசி குலத்தில் பிறந்த ரஞ்சிதம், ஒருவருக்கே சொந்தமான உண்டியில் பணமாக மாறவேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்த நாள் வந்து விட்டதை எண்ணி புளகாங்கிதமடைந்தாள். இருதயத்திலே பாய்ந்த அந்தக் குளிர்ச்சி, முகத்தில் படருமுன் கண்களிலே பின்னிக்கிடந்த சோகத்தின் சாயல் மறையுமுன், அவளுடைய தேம்பலையும் ஒதுக்கிக் கொண்டு இதழவிழ்த்து முறுவல் பூத்தாள். இளம் வெய்யில் அடிக்கும்போது துளிர்மழை தூறுவதுபோல் சிரிப்பும் அழுகையும் மாறி மாறிப் பாவனை காட்டின.

தாது உதிரும் மலரிதழ்கள் விரிவதுபோல் அவள் வாய் திறந்து பேசினாள். அவளது செந்தளிர் நிற அதரம், இளங்கிளை போன்ற கரங்கள், அங்கமெல்லாம் பொங்கி நிற்கும் இளமை—அப்படியே குமரப்பரை உணர்விழக்கச் செய்துவிட்டன.

''இத்தனை துன்பங்களையும் மறந்து இன்று நான் பூரித்திருக்கிறேன் அத்தான். வாழ்க்கை வளம் இருந்தும், வயதின் பொலிவிருந்தும், எங்கே குலத்தொழிலுக்கு அடிமைப்பட்டுவிடப் போகிறோமோ என்று எண்ணி நொந்தேன். 'உன்னையும் மீறி நீ எப்படி அடிமைப்படமுடியும்' என்று கேட்பீர்கள்; உண்மை

தான். நான் தாசிமகள் என்று யாரும் மணம் புரிந்து கொள்ளத் துணியாவிட்டால், இவ்வளவு சொத்திருந் தும், சுகமிருந்தும் ஆஸ்ரம வாழ்க்கையைத் தானே நான் மேற்கொள்ள வேண்டும்! ஆடவர்கள் கெட்ட காரியங்களைச் செய்யத் துணியுமளவிற்கு நல்ல காரியங் களைச் செய்யத் துணிவதில்லை. இந்தத் தெற்குச் சீமை யில் பேரும் புகழும் பெற்ற ஒரு தாசியின் மகளை ஏற்றுக்கொள்ளத் துணிந்ததற்காக நான் எதையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறேன். நான் கௌரவமாக வாழவேண்டும் என்று துடிக்கிறேன். என்னைப் போன்ற பெண்களின் மத்தியில் எனக்கு சம அந்தஸ்து வேண்டும் என்று தவம் கிடக்கிறேன். குடும் பங் கெடுப்பவளாய் மற்றவர்கள் என்னைக் கணக்கிடக் கூடாது என்பதே என்னுடைய சாகாத பேராசை! கை கொடுக்க வந்தீர்கள். தலைவணங்கி மெய்யுறவு பூணத் தயாராக இருக்கிறேன். நல்ல பெண்கள் ஆலமரத்து நிழல் போன்ற விரிந்த இதயம் படைத்தவர்கள். அவர்கள் கணவன்மார்களுக்குக் காலமெல்லாம் உழைக்கத் தயங்க மாட்டார்கள். அத்தான், என்னைப் பாருங்கள். என் முகத்தைப் பாருங்கள். களங்கம் சிறி தும் இல்லாதவள். பலபேரைப் பார்த்திருக்கிறேன். ஆனால் யாரிடமும் மனதை நழுவவிட்டதில்லை. பார்க் கப் பதினாயிரம் பொன் தருவதற்குக்கூட பிரபுக்கள் இருக்கிறார்கள். பொன்னை—பொருளை கண்கெட்ட பிறகுகூடத் தேடிக்கொள்ள முடியும். வாழ்க்கை அப்படியல்ல—என்பதை அறிந்துதான் யுவராணியைப் போல், பர்வதச் சுனையில் மிதக்கவிட்ட பொன் மீனைப் போல் ஆடவர் அண்டாமல் வாழ்கிறேன். பத்து வருஷ காலம் பயின்ற ஆட்டக்கலையை என்னுடைய வாழ்க்கையைவிடப் பெரிதென நான் நினைக்கவில்லை.

சில பேர் வாழ்க்கையையே பணயம் வைக்கிருர்கள். அவர்களை வையகம் வாழ்த்துகிறது; அதில் தவறில்லை. ஆனல் என்னைப் பொறுத்தவரையில் கலை, என் வாழ்வை மட்டுமல்ல, எனக்குப் பிறகு என்னுடைய குடும்பத்தில் உருவாக இருக்கும் புதிய சமுதாயத் தையே புதைகுழிக்கு அனுப்பக்கூடியதாக இருக்கிறது. அத்தான், உங்கள் விருப்பத்தை நான் மீறமாட்டேன். ஆட்டக்கலை எனக்கு வேண்டாம். குடும்பக்கலைதான் எனக்குத் தேவை!''

—காற்றில் கனி உதிர்வதுபோல் ரஞ்சிதம் வார்த்தைகளை மடமடவென்று கொட்டிக் கொண் டிருந்தாள்.

''ரஞ்சிதம்! ஆடுகிறவர்களையும், பாடுகிறவர்களை யும் உலகம் புகழ்கிறது; ஆனல் அவர்கள் நல்லவர்கள், ஒழுக்கமானவர்கள் என்று கருதும் அளவிற்கு உலகம் இன்னும் பக்குவப்படவில்லை. அதனல்தான் நான் கங்கைமுத்துவிடம் அப்படிச் சொன்னேன். அதற்காக நீ ஒரு தத்துவப் போதனையே செய்துவிட்டாயே!'' என்று மெதுவாகச் சொல்லி அவள் கன்னத்தில் தட்டினர் குமரப்பர்.

ஆள் நடமாட்டமே இல்லாத பயங்கரமான தீவி லிருந்து தப்பித்து வந்துவிட்டவளைப் போல் ரஞ்சிதம் பெருமூச்சு விட்டாள்.

அதுமுதல் குமரப்பர், ரஞ்சிதத்தின் வீட்டுக்கு வருவதும் போவதுமாக இருந்தார். என்ருவது ஒரு நாளைக்கு ரஞ்சிதத்தின் விருந்தாளியாக இருக்காமல் விடப்போவதில்லை என்று எண்ணி இறுமாந்திருந்த செட்டிநாட்டு சிங்கார வாலிபர்களெல்லாம் நாடி தளர்ந்து போனர்கள். அவர்களுக்கு அவள்மேல்

இருந்த பிரியம், பொருமை வடிவெடுத்து குமரப்பர் மேல் பாயத் தொடங்கியது. பணத்தைக் கொட்டிக் கொடுத்து, ஒரு பரதநாட்டியப் பேரொளியையே ஆட விடாமல் அணைத்து விட்டான் என்ற கெட்ட பெயர் குமரப்பருக்குக் கிடைத்தது. இத்தனை இடையூறுகளுக்கிடையே குமரப்பரும் ரஞ்சிதமும் ஆறுமாத காலம் ஆடிப்பாடி, கூடிக்குலவி, சோலைக் கிளிகளைப் போல், செங்கரும்புத் தோட்டத்து மதயானைகளைப் போல் இன்புற்றிருந்தார்கள்.

திடீரென்று சுமத்ரா தீவிலிருந்து குமரப்பருக்கு ஓலை வந்தது. அவரது கணக்கப்பிள்ளை கூராண்டான் செட்டியார் எழுதிய ஓலை அது. சுமத்ரா தீவில் யானைத் தந்தத்திற்கு நல்ல கிராக்கி இருப்பதாகவும், அடுத்த கப்பலில் லட்ச ரூபாய் பெறுமானமுள்ள யானைத் தந்தம் கொண்டு வந்தால் ஐந்து லட்ச ரூபாய்க்கு விற்கலாம் என்றும் கூராண்டான் செட்டியார் எழுதியிருந்தார்.

ஓலை கிடைத்து இருபத்தைந்து நாட்களுக்குப் பிறகு குமரப்பர் சுமத்ராவுக்குப் புறப்பட்டார். பத்து மாதங்களாகியும் அவர் தாய்நாடு திரும்பவில்லை. ரஞ்சிதம் உளம் வெதும்பி உருகினாள். அத்தானுக்கு அழைப்பு விடுத்தாள். அந்தக் கடிதம்தான் குமரப்பரைக் குழப்பி எடுத்து வேடிக்கை பார்த்தது. கடிதத்தைப் படித்துவிட்டு அவளுடைய படத்திற்கு எதிரே உட்கார்ந்து கடந்தகால நிகழ்ச்சிகளை நினைத்துக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த குமரப்பர் சுய நினைவு பெற நெடுநேரம் பிடித்தது.

## 2

ரஞ்சிதம் ஒவ்வொரு நாளும் குமரப்பரிடமிருந்து ஓலையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். சமீப காலத்தில் சுமத்ராவிலிருந்து தமிழகத்திற்குக் கப்பல் வர இருக்கிறதா என்று வெளிநாட்டுத் தொடர்பு கொண்டிருந்தவர்களுக்கெல்லாம் ஆள் அனுப்பிக் கேட்டபடி இருந்தாள். அவள், இதயம் எதிர்பார்க்கும் பதிலை எங்கிருந்தும் பெறவில்லை. அவளை வளர்த்து ஆளாக்கிய கங்கைமுத்து நட்டுவனுர் அவளருகில் இல்லாதது அவளுக்குப் பெருங்குறையாகத்தான் இருந்தது. நிழலைப்போல் இருந்து, அவள் நினைக்கின்ற காரியங்களையெல்லாம் செய்துமுடித்துத் தந்துகொண்டிருந்த கங்கைமுத்து ஒரு வருஷ காலமாக அந்த ஒரு நாள் நிகழ்ச்சிக்குப் பிறகு அவளுடைய வீட்டுப்படியே ஏறவில்லை. ஆளனுப்பி அவரை அழைத்து வந்துவிட அவளுக்கு அளவு கடந்த விருப்பம். நன்றி கொன்றவள் என உலகம் நிந்திக்குமே என்று அவள் அஞ்சி நெஞ்சுருகினுள்.

ஒருநாள் அந்தி மயங்கும் வேளை நட்டுவனுர் கங்கைமுத்து வழக்கமாகத் தடவிக் கொள்ளும் சந்தன அத்தர் மணத்தது.

ரஞ்சிதம் ஜன்னல் திரையை விலக்கிக்கொண்டு தெருப்பக்கமாகப் பார்த்தாள். கங்கை முத்து தேக்கு மரத்தேரைப்போல் ஊர்ந்து வந்துகொண்டிருந்தார். அவர் தன்னைத் தேடித்தான் வருவார் என்று ரஞ்சிதம் நினைக்கவில்லை. தாயம் போடுவதற்கு-சொக்கட்டாங் காய் ஆடுவதற்கு அவருக்கு எத்தனையோ வீடுகள் அந்தத் தெருவில் இருந்தன. எந்த வீட்டிற்குள் அவர் நுழைந்தாலும் வரவேற்று உபசரிக்க ஏராளமான

பெண்கள், அவரிடம் ஆட்டம் பயிலாத பெண்கள், அடி, உதை, குட்டு வாங்காத இளந்தாசிகள் திருமயத்தில் இல்லாமல் இல்லை. பெரும் பெரும் பணக்காரர்களெல்லாம் வாய்விட்டுக் கூடச் சொல்லக் கூசும் தாசிகளின் பெயர்களையெல்லாம் நட்டுவனார் கங்கைமுத்து அலட்சியமாகவும் அதிகாரத்துடனும் அழைத்துப் பேசுவார். வேலை ஏவுவார். திரவியத்தைப் பெற்றுக்கொண்டு 'தித்திக்கும் செங்கரும்பே' என்று பிரபுக்களை வர்ணிக்க வைக்கும் வைரவிழி மனிதாமணிகளை, கங்கைமுத்து கருங்குரங்கு, காட்டெருமை, கூனல், கிழவி, குறுமுயல், ஒட்டச் சிவிங்கி என்று பட்டப்பெயர் இட்டு அழைப்பார். அவர் என்ன தான் திட்டினாலும் அவர்கள் சினம் கொள்ளமாட்டார்கள்; சிந்தை நோவதுமில்லை. எந்தத் தாசி வீட்டுக்கு எவ்வளவு பெரிய பணக்காரன் வந்திருந்தாலும் கங்கைமுத்து பயப்படுவதில்லை. உள்ளே போவார் 'சின்னகுட்டி' என்று கூப்பிடுவார். வீட்டுக்கு வந்திருக்கும் செல்வந்தரின் பிடியிலே இருந்தாலும், மடியிலே இருந்தாலும் அவர்கள் திமிறிக்கொண்டு அறைக்கு வெளியே ஓடிவந்து விடுவார்கள். கங்கைமுத்து சிரித்துக்கொண்டே அவர்களின் உதட்டைக் கிள்ளுவார். கன்னத்தில் தட்டுவார். 'சமையல் என்ன' என்று கேட்பார். 'மலையாள அவியல் என்பாள்' அவள். 'கோழி ரசம் இல்லையா' என்பார் பதிலுக்கு! 'பால் கறக்கும் பசுவுக்கு பருத்திப்பால் இல்லாமலிருக்குமா?' — என்பாள் அவள். 'சீ! போக்கிரிப் பெண்ணே!' என்று அவள் முதுகில் தட்டிக்கொடுத்து விட்டுப் போவார்.

தேவதாசிகள் நிறைந்த அந்தத் தெருவுக்குள் இவ்வளவு மரியாதையையும், அபிமானத்தையும் பெற்ற கங்கைமுத்து ஒரு வருஷ காலமாக ரஞ்சிதத்தையே

மறந்திருந்தார். அன்று திடீரென்று வீட்டுக்குள் நுழைந்தார். ரஞ்சிதத்தின் உடல் நடுக்கமுற்றது. என்ன செய்வதென்று அறியாது திணறினள். ஆசனத்தை எடுத்துப் போட்டாள். கங்கைமுத்துக்கே கண் கலங்கியது. ரஞ்சிதம் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டாள்.

"ரஞ்சிதம்!"—தளதளத்த குரலில் நட்டுவனர் பேசினர்.

ரஞ்சிதம் பதில் பேசாமல் கண்ணீரைத் துடைத்தாள்.

"ஒரு முக்கியமான விஷயமாக உன்னிடம் வந்திருக்கிறேன். காலம் போன காலத்தில் எனக்குக் கைகொடுப்பாய் என்று நம்பித்தான் வந்திருக்கிறேன், காலம் இப்போது உன்னுடையது. நீ எதையும் செய்யலாம். நான் உன்னுடைய ஆசான். நன்றியுள்ள மாணக்கர்களுக்கு நான் மூன்ருவது தெய்வம். இதோ பார், எனக்கு வெண் குஷ்டம் படர ஆரம்பித்துவிட்டது. அதை நினைத்து நினைத்து நான் கண்ணீர் வடிக்கிறேன். என் குடும்பத்தைப்பற்றி நான் பெரிதும் கவலைப்படுகிறேன். எனக்கோ இரண்டு மனைவிகள். ஒருத்தி கொடுமைக்காரி, இன்னொருத்தி செலவாளி. ரஞ்சிதம் நான், உன்னிடம் பொருள் கேட்க வரவில்லை. சேதுக் கரைச் சங்கிலே சேனைப்பால் புகட்டிய காலத்திலிருந்து நான் உனக்குச் சேவை செய்திருக்கிறேன். இதற்குச் சாட்சி வேண்டியதில்லை. நன்றி மறவாத செங்கமலத்தின் செல்வக் குமாரி நீ என்றும் மறக்கமாட்டாய் என் தொண்டை என்ற நம்பிக்கை எனக்கு இருப்பதால் தான் கோபதாபங்களையெல்லாம் மறந்து வீடுதேடி வந்திருக்கிறேன். உனக்கும் மனம் இளகுகின்றதா ரஞ்சிதம்!"—கங்கைமுத்து தாழ்ந்த குரலில் பேசினர்.

"பொல்லாதவள் என்று பெயர் எடுக்க நான் எப்போதுமே விரும்பியதில்லை. அதுவும் என்னால் செய்ய முடிந்த உதவியை உங்களுக்குச் செய்யாவிட்டால் சுற்றத்தார் என்னைத் தூற்றமாட்டார்களா?"—கண்களைத் துடைத்துக்கொண்டே ரஞ்சிதம் பதில் சொன்னாள்.

"செய்ய முடியாத உதவியைச் செய்யும்படி நான் உன்னை வற்புறுத்தவில்லை ரஞ்சிதம். நீ நினைத்தால் நிறைவேறக்கூடியது. நீ மட்டும் இந்த உதவியைச் செய்தால் எனக்கும் லாபம், உனக்கும் கீர்த்தி; என்னுடைய குடும்பமும் செழிக்கும்; வறுமையும் ஒழியும்!"—மறுபடியும் நட்டுவனார் பேசினார்.

"பணம் வேண்டுமானால் நான் தருகிறேன். தேவைப்படும் போது கேட்டனுப்புங்கள் கொடுத்தனுப்புகிறேன். இதற்காக ஏன் மனதை வாட்டிக் கொள்ளவேண்டும். கங்கைமுத்து பணக் கஷ்டத்தால் தொல்லைப்படுகிறார் என்றால் பார்க்கிறவர்களுக்குக் குறைவாகத்தான் தெரியும். எனக்கு அது புரிகிறது."—ரஞ்சிதம் கனிவோடு சொன்னாள்.

"எவ்வளவு நாளைக்கு நீ கொடுத்துக் கொண்டிருக்கப் போகிறாய்? யாராயிருந்தாலும் எவ்வளவு நாளைக்குத்தான் மனம் வரும்? வந்த அன்று வாழை இலை, அடுத்த நாளைக்கு தையல் இலை, மூன்றும் நாள் கையிலே என்று கேள்விப் பட்டதில்லையா? நாளடைவில் அன்பும் மரியாதையும் குறையும். எதற்கு இதெல்லாம்! நான் கற்றுக்கொடுத்த வித்தை எனக்குப் பயன்படாமற் போகாது என்ற நம்பிக்கையில் கேட்கிறேன். அடுத்த மாதம் எனக்காக என்னோடு இராமநாதபுரம்வரை வரவேண்டும். அங்கு விஜயரகுநாத சேதுபதியின் மாளிகையில் ஒரு நாட்டியப் போட்டி இருக்கிறது. அதில் வெற்றி பெற்ற நாட்டியக்காரிக்கு ஆயிரம்

வராகன் பரிசு தருகிறார்கள். அதுமட்டுமல்ல, வெற்றி பெற்ற நாட்டியக்காரியின் ஆசானை விஜயரகுநாதர் ஜமீன் வித்வான்களில் ஒருவராக ஏற்றுக்கொள்கிறார். மாதம் ஐநூறு ரூபாய் சம்பளம். ரஞ்சிதம், தமிழ் நாட்டில் உனக்கு மிஞ்சியவள் யாருமில்லை. நீதான் வெற்றி பெறுவாய்; உன்னால் நான் பெருமை பெறு வேன்''—கங்கைமுத்து இதை வெளியிடும்போது தன்னை யும் அறியாத ஒரு அதிர்ச்சியோடு சொன்னார். அவளை ஆட்டிவைத்தவர், அதிகாரம் செய்தவர் அன்று ஏனோ பயந்தார். மனிதன் ஒரு உண்மையை உணர்ந்தும் அதற்கு நேர் விரோதமான செயலில் ஈடுபடும்போது நெஞ்சம் பணிகிறது; பலவீனம் அடைகிறது. ரஞ்சிதம் ஆடமாட்டாள் என்பதை அவருக்கு மனம் உணர்த் தியது. ஏதோ ஒரு குருட்டு நம்பிக்கை அவரை அவளிடம் தள்ளி வேடிக்கை பார்த்தது.

ரஞ்சிதம் நட்டுவனாரின் வேண்டுகோள் கேட்டுத் திடுக்கிட்டாள். மயக்கம் வருவது போல் இளங்காற்றில் வளைந்து நிமிரும் நாணலைப் போல் ஒடிந்து நிமிர்ந்து அறைக்குள் ஓடினாள். நெடுநேரமாகியும் திரும்பி வர வில்லை. நட்டுவனார் ஜன்னல் வழியாகப் பார்த்தார். பஞ்சணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அவள் விம்மி, விம்மி அழுவது தெரிந்தது. கங்கைமுத்தருக்கு தன் முயற்சி தோல்வி கண்டு விட்டதில் அளவுகடந்த வருத்தம். தூணோடு தூணாய்த் துக்கித்து நின்றார்.

இரண்டு நாழிகைகளுக்குப் பிறகு அவருக்கு ஏதோ யோசனை தட்டுப்பட்டுவிட்டது.''நன்றி கெட்டவள்!இரு உன்னையும் பார்த்துக் கொள்கிறேன். இந்தக் கடைசி முயற்சியும் தோற்று விட்டால் கங்கை முத்துதான் உனக்கு பரம்பரை விரோதி!'' என்று முணுமுணுத்துக் கொண்டே நட்டுவனார் வெளியில் கிளம்பினார்.

ரஞ்சிதம் அன்று முழுதும் உணவு கொள்ளவில்லை. நித்திரையும் பிடிக்கவில்லை. மனம் குழம்பியிருக்கும் போது உடம்புக்கு எதுவும் பிடிப்பதில்லை. பசி வந்தால் பத்தும் பறந்துவிடும் என்கிறார்கள். பசியையும் மிஞ்சியது கவலை. எதை எதையெல்லாமோ விரட்டி விடுகிறது பசி. அந்தப் பசியையும் மதிப்பதில்லை கவலை.

இரவெல்லாம் தூங்காமல் இருந்த ரஞ்சிதம் அதிகாலையில் சற்றுக் கண் அயர்ந்தாள். வழக்கமாக எழுந்திருக்கும் நேரத்தை யெல்லாம் தாண்டி அவள் தூங்கிக் கொண்டேயிருந்தாள். வேலைக்காரி தட்டி எழுப்பினாள். அவள் எழுந்திருக்கும் போதே வெளிமுற்றத்தில். யாரோ இரண்டு ஆடவர்களின் பேச்சுக் குரல் கேட்டது. அதில் ஒன்று நட்டுவனாரின் குரல், மற்றொன்று அவளுக்குப் பழக்கமான குரலாக இருந்தது. ஆனால் நினைவில்லை. ரஞ்சிதம் முகத்தைத் துடைத்துக் கொண்டு நீராகாரத்தைக் குடித்துவிட்டு வெளியில் வந்தாள். கங்கைமுத்து நட்டுவனாரும் கோபாலகிருஷ்ண பிள்ளையும் பேசிக்கொண்டிருந்தார்கள். கோபாலகிருஷ்ண பிள்ளையைப் பார்த்ததும் அவளுக்கு அடிவயிற்றில் தீப் பற்றியது போலிருந்தது. நெடுநாட்களுக்குப் பிறகு ரஞ்சிதத்தைப் பார்க்கும் கோபாலகிருஷ்ண பிள்ளை சுகதுக்கங்களையெல்லாம் விசாரித்தார். ரஞ்சிதத்தின் குடும்பம் வாழ்ந்தால் தனக்குத்தான் பெருமை என்று சொல்லிக் கொண்டார். ரஞ்சிதம் மரியாதையோடும் அன்போடும் சுவரில் சாய்ந்து புடவை முந்தானையைப் பின்னிக்கொண்டு நின்றாள். இடையிலே சமையற்காரி குறுக்கிட்டு "பலகாரம் தயாராகி விட்டது. பரிமாறட்டுமா?" என்றாள். நட்டுவனாரும் கோபால கிருஷ்ண பிள்ளையும் கொஞ்சம் பிகு பண்ணினார்கள். ரஞ்சிதம் விடவில்லை. பலகாரம் பரிமாறச் சொன்னாள்.

கோபாலகிருஷ்ண பிள்ளை வெற்றிலைக் காவியேறிய பற்களைத் துலக்க மடியிலே வேப்பங்குச்சியோடு வந்திருந்தார். அந்த வேலையை அவர் தொடங்கினார், ரஞ்சிதம் வெள்ளிச் செம்பில் வெந்நீர் கொண்டுவந்து வைத்தாள். முகம் துடைக்கத் துண்டு கொண்டு வந்தாள். அவள் காட்டிய பணிவும் அன்பும் மரியாதையும் அவரைத் திணறடித்தன. எதிர்த்தால் சிலர் அடிமையாவார்கள்; புகழ்ந்தால் போதும் சிலருக்கு— எந்த உதவியும் செய்வார்கள். ஆனால் கோபால கிருஷ்ணர் குழம்பினார். தான் சொல்லவந்த சேதியை எப்படிச்சொல்லுவது என்றுதெரியமால் விழித்தார்.

"ரஞ்சிதம்!"

"என்ன வேண்டும்? குளிக்கிறீர்களா?" என்று மான்போல் துள்ளிக் குதித்து ஓடிவந்து கேட்டாள்.

"கங்கை முத்துவுக்குக் கை கொடம்மா! அவர் உன்னை வளர்த்தவரில்லையா? அதை நினைத்துப் பார்க்க வேண்டாமா?" என்றார் கோபாலகிருஷ்ணர்.

அணைந்த தீ அவள் நெஞ்சில் மீண்டும் பற்றியது. கையிலிருந்த நெய்க்கிண்ணத்தை நழுவவிட்டு விட்டாள்.

கோபாலகிருஷ்ணர் திரும்பிப் பார்த்தார். ரஞ்சிதம் அந்த இடத்தில் இல்லை. அறைக்குள்ளே ஓடி விட்டாள். கோபாலகிருஷ்ணர், முகம் கழுவிவிட்டு உள்ளே போனார். ரஞ்சிதம் கட்டிலில் கிடந்தாள்.

"ரஞ்சிதம்!"

அவள் எழுந்து உட்கார்ந்தாள்.

"ஜமீன் மாளிகையில் ஒரு நாளைக்கு ஆடிவிட்டால் நம்ம தரம் குறைந்தாவிடும்! குமரப்பர் கோபித்துக்

கொள்வாரே என்கிருய், இல்லையா? நீ என்ன பணத் திற்காகவா ஆடுகிருய்! குருவுக்குத் தட்சணை வாங்கிக் கொடுக்கிருய். இது பாபமில்லையே! துரோகமில்லையே! தோகைமயிலைப் போல் நீ இருக்க விஜய ரகுநாதரிடம் வேருெருத்தி பரிசு பெற்ருல் உனக்கு அவமானம் இல்லையா? நன்ருக யோசித்து பார் ரஞ்சிதம்! கங்கை முத்து மெத்தக் கடினப்பட்டு வாழ்க்கை நடத்துகிருர். எனக்காக நீ ஒப்புக்கொள்ள வேண்டும் ரஞ்சிதம். தட்டக்கூடாது'' என்று கோபாலகிருஷ்ணர் கட்டிலில் உட்கார்ந்து கொண்டு சொன்ஞர்.

''என்னை மன்னிக்க வேண்டும். வேறு எந்த உதவி வேண்டுமாஞலும் செய்கிறேன். உங்கள் சொல்லை நான் ஒருபோதும் தட்டமாட்டேன். என் அன்னையார் சொன்ன வாக்குறுதி 'நமது பரம்பரை அழியும்வரை கோபாலகிருஷ்ணருக்குத் துரோகம் செய்யக்கூடாது' என்று சொன்னதுதான். அதை நான் நிறைவேற்றத் தவற மாட்டேன். உங்களுக்குத் தெரியாத யோசனை யில்லை. நாட்டியமே ஆடுவதில்லை என்ற உறுதியோடு குமரப்பர் என்னை மணந்தார். அதை மீறிஞல் துரோக மில்லையா! அவர் என்னை மதிப்பாரா? என் வாழ்க்கை படுசூரணமாகி விடாதா? நான் வாழ்க்கையின் முதற் கட்டத்திலே நின்றேன். மகரந்தம் உதிராதமலர் நான். ஜமீன் மாளிகையில் ஆடினேன்; ஜமீன்தார் பாரட்டி ஞர் என்று குமரப்பருக்குத் தெரிந்தால் அவர் என் படி வாசம் ஏறமாட்டார். பிடி சாம்பல் ஆகும் வரை என் வாழ்வு அஸ்தமித்தது என்றுதான் அர்த்தம். என் மீது எனக்கில்லாத அக்கரை தங்களுக்குண்டு. நீங்களே இப்படிச் சொன்ஞல் நான் யாரிடம் சொல்லி நோவது! என் ஆசானுக்கு எவ்வளவு பணம் வேண்டுமாஞலும் தருகிறேன் என்று சொன்னேன். அவரோ நான்

ஆடியே தீரவேண்டும் என்கிறார். பணம் சேர்க்கும் காலம் என் அன்னையோடு முடிந்துவிட்டது. நான் வாழத் துடிக்கிறேன். எனக்குப் பிறகு எனது சந்ததியினர் சமுதாயத்தில் சம அந்தஸ்துப் பெறவேண்டும் எனக் கனவு கண்டு கொண்டிருக்கிறேன். அன்பு கூர்ந்து அதைக் கெடுத்து விடாதீர்கள்.''

''சின்னக் குழந்தை மாதிரி பேசுகிறாய்; நீ ஆடினால் கௌரவம் கெட்டுவிடுமா என்ன?''

''உண்மைதான். ஆடுகிறவர்களை, ஆடும்போது புகழும் மக்கள், அவர்கள் ஆடி முடிந்து வீட்டுக்குப் போன பிறகு மதிப்பதில்லை. ஆடுகிறவர்களும் நல்ல பெண்கள்தான் என்று மதிக்கும் காலம் இன்னும் வரவில்லை.''

''உன் அன்னைகூட என் சொல்லை இப்படி அவமதித்தது இல்லை ரஞ்சிதம்!''

''அவர்கள் இப்படி ஒரு சூழ்நிலையில் அகப்பட்டுக் கொண்டதில்லை. அவர்கள் காலம் வேறு. இந்தக் காலம் வேறு.''

''கடைசியாக என்னதான் சொல்கிறாய் நீ!''

''என்னைக் கொன்றுவிடக்கூட அனுமதிக்கிறேன்...! இதற்குமேல் என்னை என்ன சொல்லச் சொல்கிறீர்கள்?'' என்றாள் ரஞ்சிதம்.

கோபாலகிருஷ்ண பிள்ளைக்கு மனதில் சுருக்கென்று தைத்தது.

''ரஞ்சிதம்! இந்தக் கோபால கிருஷ்ணன் உங்கள் குடும்பத்திற்குச் செய்த உதவிகளையெல்லாம் மறந்து விடாதே! ஒரு ஜமீனையே அரித்துத் தின்ற கரையான்

என்னும் அபகீர்த்தியைப்பெற இருந்த உன் அன்னை செங்கமலத்தின் மானத்தைக் காப்பாற்றியது யார் என்று யோசித்துப் பார்! அது உனக்குத் தெரியாத கதை இல்லை. பலபேர் உனக்குச் சொல்லியிருப் பார்கள்." என்ற ஆணவக் குரலோடு கிருஷ்ண பிள்ளை வெளியேறினார். பரிமாறிய பலகாரம் ஈ மொய்த்துக் கிடந்தது. கொட்டிய நெய் வழிந்தோடியது. ரஞ்சிதம் சிலையாக நின்றாள்.

முப்பதாண்டுகளுக்கு முன் சிவகெங்கை ஜமீனுக் கும் ரஞ்சிதத்தின் அன்னைக்கும் நடந்த வழக்கு அவள் நினைவுக்கு வந்தது.

இது செங்கமலத்தின் காலம். செட்டி நாட்டின் வட புலத்தில் அவள் 'குட்டிராஜ்யம்' நடத்திக்கொண் டிருந்தாள். பேர் பெற்ற அழகி. ஊர் மயங்கும் நடையுடையாள்; கார் கூந்தல் புரள, கமலமுகம் ஒளி பரப்ப கட்டிப் பொன் வார்த்தைகளை உருக்கி உதிர்க் கும் தங்கமகள், மஞ்சள் நிறம். வற்றாக்குளத்தின் பொற்றாமரையில் வண்டு இருப்பதுபோல் அவள் நெற் றியில் திலகம், மன்மதருக்கு அது அங்குசம். நகை வியாபாரி தராசைத் துடைத்துத் துடைத்துப் பாது காப்பதைப் போல் செங்கமலம் உடலைப் பாதுகாத் தாள். திருமயத்தில் அவள் பேரரசியாய், பெண் வள்ள லாய், பொன் கொழிக்கும் சுக வாழ்வின் இணையற்ற தலைவியாய்ப் புகழேணியின் உச்சிப் படியில் நின்று கொடிகட்டி ஆண்டாள். இத்தனைக்கும் அவள் ஒரு தாசி.

அரண்மனை போன்ற மாளிகை, உழைத்துக் களைத் துச் சேர்க்காமல், உண்டியல் பணத்தைக் கொண்டு

எழுப்பியதைப் போல் மிக எளிதில் அவள் அந்த மாளி கையை எழுப்பினாள். செல்வந்தர்களுக்கும் சீமையை ஆட்டிப்படைக்கும் அதிகார வெறியர்களுக்கும்தான் செங்கமலத்தின் பேட்டி கிடைக்கும். அவள் பேசினால் போதும் என்று பெருமூச்சு விட்டுக் கொண்டு முகப்புத் திண்ணையில் காத்துக்கிடந்த இலட்சாதிபதிகள் கூட அப்போது வாழ்ந்தார்கள். செட்டிநாட்டு மண்ணில் ஒரு சீமானின் அந்தஸ்துக்குச் செங்கமலத்தின் உறவு ஒரு எடைக்கல்லாக இருந்தது. பதினாறு வயதில் சம்பா திக்கத் தொடங்கியவள் இருபது வயதுக்குள் ஜமீன் தாரிணியைப் போல் மாறிவிட்டாள். வெளியில் வருவ தில்லை. உறவினரைப் பார்ப்பதில்லை. ஆலயத்திற்குச் செல்வதையும் நிறுத்திவிட்டாள். வாடிக்கையாக வந்துகொண்டிருந்த பிரபுக்கள் எல்லாம் மூடிய கதவு திறக்கப்படாதது கண்டு விசனமுற்று வீடு திரும்பி னார்கள். பவிசு வந்துவிட்டது என்று பந்துக்கள் பொறு மினார்கள். எத்தனை நாளைக்கு இந்தப் பாராமுகம்— என்று வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டார்கள். சுகவாசிகளுக்குத் தொல்லை எதிரிகளிடமிருந்து வருவ தில்லை. சுற்றத்தார்களிடமிருந்துதான் தொடங்கு கிறது.

செங்கமலத்தின் காலத்தில் சிவகெங்கை ஜமீன் சீரும், சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தது. ஜமீன்தார்கள் மகாராஜா பட்டம் பெற்ற இடங்களில் சிவகெங்கையும் ஒன்று. அந்தக் காலத்தில் சிவகெங்கை ஜமீன்தாருக்குப் பிரதம ஆலோசகராகவும், அந்தரங்கக் காரியதரிசி யாகவும் சோமண்ணா என்பவர் பணிபுரிந்து வந்தார். அவருக்கு ஜமீனில் நல்ல செல்வாக்கு இருந்தது. ஜமீன் தாரின் அனுமதியின்றி எதுவும் செய்ய அவர் அனு மதி பெற்றிருந்தார். குணசாலி, அறிவாளி. அதனால்

தான் அதிகாரம் இருந்தும் யாரையும் அட்க்கி ஆளாமல் அன்பினுல் அணைத்து ஆண்டார்.

ஒருமுறை அவர் ஜமீன் காரியமாகப் புதுக் கோட்டை சென்று வரும்போது அவரது கோச்சு வண்டி, வில் ஒடிந்து திருமயத்திற்கு அருகே குப்புறக் கவிழ்ந்தது. மாலை நேரம். மாளிகையின் மேல்மாடத்தி னின்று இதைக் கவனித்த செங்கமலம் வீட்டுக் வேலைக் காரர்களை அனுப்பிப் பார்த்துவரச் சொன்னுள். சோமண்ணு இலேசான காயத்தோடு செங்கமலத்தின் மாளிகைக்கு அழைத்து வரப்பட்டார். சோமண் ணுவைத் தெரியாதவர்கள் செட்டி நாட்டில் இல்லை. எசமான் சோமண்ணு என்ற பட்டப்பெயரைப் பெற்ற சிவகெங்கை ஜமீனின் செல்லப்பிள்ளையைப் பற்றி செங்கமலம் கேள்விப் படாதிருக்க நியாயமில்லை.

செங்கமலம் சோமண்ணுவை வரவேற்ருள்; பணி விடை புரிந்தாள். மருத்துவரை அழைத்து வரச் சொல்லி ஆள் அனுப்பினுள். மருத்துவருக்குப் பதி லாகக் கோபால கிருஷ்ண பிள்ளை வந்தார். அவர் வீட்டு வைத்திய முறைகளைச் சொன்னுர்.

மறுநாட்காலை, ஜமீனுக்குத் தகவல் கொடுக்கப் பட்டது. அன்று மாலையே ஒரு பெருங்கூட்டம் சிவகெங் கையிலிருந்து திருமயம் வந்தது. செங்கமலத்தின் மாளிகை நிறைகொள்ள வில்லை. வந்தவர்களுக்கெல் லாம் வடித்துப் போட்டாள். தங்குமிடம் தந்தாள். திருமயம் மக்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. கதவு திறக்கப்படாத செங்கமலத்தின் வீட்டில் கல்யாண அமளி!

சோமண்ணு செங்கமலத்தைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிருர், பார்த்ததில்லை. அன்று அவருக்கு அந்த

வாய்ப்பும் கிடைத்தது. பார்த்தார், பேசினார். அவள் கரத்தால் சுவைதரும் பால் அருந்தினார். பழச்சுளை சாப்பிட்டார். அவளோ விலைமாது. காசுக்கு கண் வீசிய காலம் போய், ஆசைக்கு ஒரு ராஜாவைத் தேடிக் கொள்ளும் கட்டத்தில் அவள் நின்றாள். அவரோ சிவகெங்கை ஜமீனின் பேரதிகாரி. நடுத்தர வயது. அலெக்சாண்டரின் குதிரையைப் போல் எடுப்பான தோற்றம். செங்கமலத்தின் நடையும் இடையும் அவரது உடம்பெல்லாம் பாய்ந்து நரம்பெல்லாம் தாக்கியது. அவளுடைய கண்ணடிக் கன்னத்தில் உமிழ்நீர் இரங்குவதைப் பார்த்தார். சிட்டுக்குருவி ரத்தத்தில் தொட்டு எடுத்த துண்டுகளைப் போலிருந்த அவளது உதடுகள் அவருக்குச் சூடூட்டின. இரவெல்லாம் புரண்டு, புரண்டு படுத்தார். அவருக்குப் பத்தடித் தூரத்தில் அவள் படுத்திருந்தாள். சோமண்ணா தூக்கம் பிடிக்காமல் அலட்டிக் கொள்வதை அவள் கவனித்துக் கொண்டிருந்தாள். எழுந்து வந்து விசிறக்கூட அவள் எண்ணினாள். கண்ணின் கருவிழியிலே அடங்கிக் கிடக்கும் அற்புதமான சக்தியைக் காட்டிலும், அதி அற்புதமான சக்தி பெண்ணின் இருதயத்திலேதான் புதையுண்டு கிடக்கிறது. ஆடவர்கள் கடுகைப் பெரிதாக்கிக் காற்றிலே பரப்பி விடுவார்கள். பெண்களால் உலகத்தைச் சுருட்டிக்கூட உள்ளத்தில் மறைத்துக் கொள்ள முடிகிறது. அகத்தின் அழகை முகத்தில் காட்டுவார்கள்; ஆனால் அடக்கம் வழுவி அறிய மாட்டார்கள். வலிய வந்து சுகம் தேடும் எளிய போக்கை வெறுப்பது பெண் குலத்திற்கே அமைந்த வைரக் குணம்.

சன்னல் வழியே நிலா வெளிச்சம் வந்துகொண்டிருந்தது. நாய், பூனை, கிளி எல்லாம் தூங்கின. ஆனால்

செங்கமலம் தூங்கவில்லை. சோமண்ணு தூங்கவில்லை. கிளி, கூண்டுக் கதவு திறக்கக் காத்துக்கிடந்தது. பூனை பால்பானை உடைய எதிர்பார்த்து நின்றது!

அடுத்த நாள் காலை சரி செய்யப்பட்ட கோச்சு வண்டியில் சோமண்ணு சிவகெங்கை பயணமானுர். வெளிக் கதவு திறந்து புற்றரைவரை வந்துவழியனுப்பி வைத்தாள் செங்கமலம். அந்நிய நாட்டு ராணியைப் பார்ப்பதுபோல் திருமயத்து மக்கள் வைத்த விழி வாங்காமல் பார்த்தார்கள். குப்பை மேட்டில் கண்ட கரையான் புற்றைக் குறி வைத்து ஓடும் மயிலைப் போல் அவள் குடு குடுவென மாளிகைக்குள் ஓடி விட்டாள்.

ஜமீன் சோமண்ணுவுக்கு அவள் செய்த உதவி யைப் பெரிதெனக் கருதிப் பூரித்தாள். தலைமகனுக்குத் திருமணம் முடித்த அன்னையைப்போல் அவள் நிம்மதி பெற்ருள். தேடிய பொருளைக் காக்க, பெருமீன் வரு மளவும் வாடிய கொக்கைப்போல் காத்திருந்த அவ ளுக்குச் சோமண்ணு வருகை, சொப்பனத்தில் ஆண்ட வனே காட்சி தந்ததாகப்பட்டது. தனக்குள்ளே பேசிக் கொண்டாள். வேலைக்காரர்களுக்கெல்லாம் காரணமில்லாமல் பணம் கொடுத்தாள். அன்பு காட் டிஞள். நெடுநாட்களாகப் பூட்டிக்கிடந்த பள்ளியறை யைக் கூட்டி முடித்தாள். பட்டு விரித்த மெத்தையை உதரி விரித்தாள். மொட்டவிழா மலர்களை வாங்கித் தூவிஞள். கொண்டாட்டம் தாங்கவில்லை. கிளிக்கு வைக்க வேண்டிய பிசைந்த பழத்தை நாய்க்கு வைத் தாள். நாய்க்கு வாங்கிய பச்சை மாமிசத்தை கிளிக் குக் கொடுத்தாள். துன்பம் பெருகிஞல் இதயம் துவளு கிறது. மனிதன் கஞ்சஞகிருன். உவகை மிஞ்சிஞல் பைத்திய நிலைபெற்று ஏழையும் வள்ளலாகி விடுகிருன்.

செங்கமலம் மகிழ்ச்சிப் பெருக்கால் பேதலித்து அலைந்தாள். மனிதன் புதையல் கிடைத்தால் மகிழ்கிறான். போரில் வென்றால் சிரிக்கிறான். ஆனால் பெண்கள் வாழ்வு கிடைத்தால், அதற்கு ஊன்றுகோல் கிடைத்தால், அவமானம் துடைக்கப்பட்டால் குதூகலமடைகிறார்கள்.

ஒரு வாரத்திற்குப் பிறகு ஜமீன் சோமண்ணாவிடமிருந்து அன்பளிப்பாக செங்கமலத்திற்கு ஒரு பண முடிப்பு வந்தது. அது ஜமீன் அதிகாரப் பூர்வமான முத்திரை பெற்று வந்தது. செங்கமலம் அதை வாங்க மறுத்தாள். ஜமீன் குமாஸ்தாக்கள் அவளை விடவில்லை. "இது ஜமீன் பரிசு! மறுத்தால் மகாராஜா கோபிப்பார்" என்று மிரட்டினார்கள். இருதயத்திற்குத் தொடர்பில்லாத சிரிப்பை முகத்திற்கு வரவழைத்துக் கொண்டு, சம்பிரதாய முறைப்படி இருகையேந்தி அதனைப் பெற்றுக்கொண்டு, "ஐயனை வரவேற்க அடியாள் காத்திருப்பதாக எசமானிடம் கூறுங்கள்" என்று தகவல் அனுப்பினாள்.

காலம் கனிந்தது. சோமண்ணா மாதம் ஒரு முறை திருமயம் வந்தார். தங்கினார். தாசி என்ற நிலைமாறி, செங்கமலம் சோமண்ணாவின் வைப்பாட்டி என்ற பட்டம் பெற்றாள். திருமயத்திலே அவளுக்கு மரியாதை வளர்ந்தது. அந்தஸ்து மேலும் உயர்ந்தது. கொலை வழக்கு, கொள்ளை வழக்குகளுக்குக்கூட பஞ்சாயத்தார்களில் ஒருத்தியாக அவள் அழைக்கப்பட்டாள்.

ஒரு நாள் இரவு எதிர்பாராத விதமாக ஜமீன் கோச்சு வண்டி வாசலில் வந்து நின்றது. செங்கமலம் உள்ளிருந்து ஓடி வந்து கதவைத் திறந்தாள். மகாராஜா பாணியில் உடையணிந்த ஒருவர் கம்பீரமாக

வண்டியிலிருந்து இறங்கினர். செங்கமலம் விழித்தாள். மகாராஜாவே வந்துவிட்டார் என்று எண்ணிக்கொண்டு மரியாதையோடு உள்ளே அழைத்துப் போனுள்.

"செங்கமலம் நீ தானே!"—வந்தவர் கேட்டார்.

"ஆமாம் பிரபு! பரிசுகூடப் பெற்றிருக்கிறேன்."

"என் மைத்துனர்தான் மகாராஜா. நான் சிவகெங்கை திவான், மேகவர்ணத்துரை என் பெயர்" என்ருர் அவர்.

செங்கமலம் ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "எங்கே இவ்வளவு தூரம்! புதுக்கோட்டை பயணமா?" என்ருள்.

"இல்லே உன்னைத் தேடித்தான் வந்தேன். நெடுநாள் விருப்பம். மகாராஜா ஊரில் இல்லாத நேரம் பார்த்து வந்தேன். உன்னைப்பற்றி சோமண்ணு நிறையச் சொல்லியிருக்கிருர்."

"சொல்லியிருப்பார். உங்களைப்பற்றியும் அவர் என்னிடம் சொல்லியிருக்கிருர்."

"அப்படியா? என்ன சொன்ஞர்?"

"நீங்கள் மிக நல்லவர்களாம்! பிரம்மச்சாரி என்று கூடச் சொன்ஞர்!"

"செங்கமலம் நீ குறும்பாகப் பேசுகிருய்! பெண்கள் இப்படித்தான் பேசவேண்டும்! என்னதான் அழகிருந்தாலும் நளினமில்லாத பெண்களை எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. வா...என் அருகில் உட்கார்!"—தேனில் மூழ்கிய வண்டைப்போல் குழைந்து, குழைந்து பேசிஞர்.

"மன்னிக்கவேண்டும். நான் இப்போது சம்பாதிப்ப தில்லை. எசமான் சோமண்ணாவின் வைப்பாட்டி" என்றாள்.

திவானின் விழிகளில் படர்ந்திருந்த இன்ப ஒளி ஜுவாலையாக மாறியது.

"செங்கமலம்!"—அனல் தெறிக்கக் கூவினார்.

"வருந்துகிறேன். காலத்தைத் தவற விட்டுவிட்டீர்கள்." அன்பாகச் சொன்னாள் செங்கமலம்.

செங்கமலத்தின் இந்தப் பதில் மேகவர்ணத்துரையின் மேனியை உலுக்கியது. சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு வண்டியைப் பூட்டும்படி கோச்சு வண்டிக்காரனுக்குக் கட்டளையிட்டார். பட்டுச்சால்வையை உதறித் தோளில் போட்டுக்கொண்டு எழுந்தார். செங்கமலம் உள்ளே போய் ஒரு வெள்ளிக் கோப்பையில் பால் கொண்டு வந்து கொடுத்தாள்.

திவான் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை. சுட்ட கத்திரிக்காயைப்போல் முகத்தைச் சுருங்க வைத்துக் கொண்டு வெளியில் வந்துவிட்டார். அவர் வெளியில் போய் வண்டியிலேறிய பின் செங்கமலம் மாடிக்குப் போனாள். மேல் தளத்திலிருந்து பார்த்தாள். கோச்சு வண்டி வளைந்து, வளைந்து மேடு பள்ளங்களில் ஏறி இறங்கிப் போய்க் கொண்டிருந்தது.

மார்கழி மாதம், எங்கும் பனி படர்ந்திருந்தது. குளிர் ஆட்டிப்படைத்தது. எல்லோர் உடம்புகளிலும் சோம்பல் பூத்து நின்றது. காலைச் செவ்வானம் தங்க நிறத்தை வெள்ளி மயமாக்கு முன் எழுந்து பழக்கப் பட்ட செங்கமலம், அயர்ந்து தூங்கிவிட்டாள். வேலைக் காரி எழுப்பிய பிறகுதான் விழித்தாள். எழுந்த செங்

கமலத்திடம் வேலைக்காரி ஓர் ஓலையைக் கொடுத்தாள். அந்த ஓலை சோமண்ணா எழுதியது. செங்கமலம் அப்போதுதான் முதல் முதலாக அவர் கையெழுத்தைப் பார்க்கிறாள். அன்புடன் அந்தக் கடிதத்தைக் கண்ணில் ஒத்திக் கொண்டாள். ஆனால் அந்தக் கடிதத்தில் இருந்தது என்ன?

அன்புள்ள செங்கமலம்,

நலம், எனக்குப் பதிலாகக் கடிதம் வருகிறது. நன்றியோடு உழைத்த என்மீது சிவகெங்கை மகாராஜாவுக்கு இப்போது நம்பிக்கையில்லை. அரச வம்சத்தைச் சார்ந்தவர்கள் எதையும் ஆராய்ந்து பார்ப்பதில்லை என்று படித்திருக்கிறேன். ஆராய்வதற்குக்கூட அவர்களது இருதயம் துன்பப் படக்கூடாது என்பதற்காகத்தான் மதிமந்திரிகளை நியமித்தார்கள் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன்—உண்மைதான். என்னுடைய உழைப்பை இருபதாண்டு காலமாக சிவகெங்கைச் சீமையின் வளர்ச்சிக்கு எருவாக வைத்தும் பயனில்லை. இன்று நான் குற்றக்கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கிறேன். சிவகெங்கை ஜமீன் திகைக்கிறது. எளியவர்களுக்குத் துணைவனாகவும், வலியவர்களில் நல்லவர்களுக்கு வழிகாட்டியாகவும் இருந்த என்மீது மகாராஜா குற்றம் சுமத்தியிருக்கிறார். குற்றத்திற்கான காரணம் புரியவில்லை. வரவு செலவுகளைக் கண்ணாடி போல் வைத்திருக்கிறேன். வருஷத்திற்கு வருஷம் ஜமீனுக்கு வருமானத்தைக் கூட்டிக் காட்டியிருக்கிறேன். கொடியவர்களைக் கொட்டத்திற்குள் அடைத்திருக்கிறேன். ஆனாலும் மகாராஜா என்னைக்குற்றவாளி என்கிறார். என் இருதயத்திலே மாசில்லை. முகத்திலே களங்கமில்லை. விழிகளிலே திரையில்லை. நடத்தையிலே

ரகசியமில்லை. ஆனாலும் நாளைக் காலை, என்னைத் தெய்வமென்று வழிபட்டவர்கள் முன்னிலையில் ஜமீனின் விசாரணைக் குழுவின் கேள்விகளுக்கு நான் பதில் சொல்ல கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இது யார் வைத்த தீவினையோ நான் அறியேன். உண்மை என் பக்கம் இருக்கிறது. ஆகவே நீதியும் என் பக்கம் தான் இருக்கும்.

சகியே, என் வரவிற்காகக் காத்திருப்பாய். கனி வரைகளைக் குவித்திருப்பாய், ஆடை ஆபரணங்கள் பூண்டு, சந்தனம் பூசி, சாவ்வாதிட்டு, அஞ்சனம் தீட்டிய கருவிழிகளை மேகம் நீக்கவரும் நிலவைப்போல் சன்னல் திரை நீக்கி செலுத்திக்கொண்டிருப்பாய். வருத்தப்படாதே.

நான் நிரபராதிதான். ஜமீனுக்குத் துரோகம் நினைக்காதவன்தான். இருந்தாலும் சரியாகவோ, தவறாகவோ நான் குற்றவாளி என்று ஜமீன் கூறி விட்ட பிறகு அந்தப் பதவியில் நீடித்திருக்க எனக்கு விருப்ப மில்லை. நாளைக் காலை சூரிய உதயத்திற்குமுன் என்னு டைய கௌரவமான பதவியை ராஜினமாச் செய்ய உத்தேசித்து விட்டேன். மகாராஜாவின் அந்தரங்க, ஆலோசகன் என்ற பொறுப்பிலிருந்து விலகி, சிவகெங்கை ஜமீனில் ஒரு சாதாரண பிரஜையாக விசாரணைக் கூடத்திற்குப் போகிறேன். விசாரணை முடிந்து தீர்ப்புத் தெரிவிக்கப் பட்டபின் உன்னைச் சந்திக்கிறேன். கலங்காதே. நீ அல்லலுறுவாய், தொல்லைப்படுவாய் என்பதற்காகத்தான் தகவலை உனக்கு முன்கூட்டி தெரிவிக்கிறேன். நான் நம்பிக்கை மோசம் செய்ய மாட்டேன்.

பிரியமுள்ள,
சோமண்ணு

செங்கமலத்திற்கு ஒன்றும் விளங்கவில்லை, ஓலை கொண்டு வந்தவனை அருகிலழைத்து விபரம் கேட்டாள். வந்தவன் அழுதான்; நொந்தது அவள் உள்ளம்.

மறுநாள் மாலை வரை, விசாரணையின் விபர மறியத் துடித்துக்கொண்டிருந்தாள். இரவு ஒன்பது மணிக்குமேல் அவளுக்குச் செய்தி கிடைத்தது.

''எசமான் சோமண்ணு ஜமீன் சொத்துக்களைத் திருமயத்தி லுள்ள செங்கமலம் என்ற தாசிக்குத் தருகிறார்.'

''ஜமீன் கௌரவத்தைப் பாதிக்கின்ற வகையில் மகாராஜா வினுடைய அந்தரங்கக் காரியதரிசியாக இருக்கின்ற சோமண்ணு அந்தத் தாசி வீட்டுக்கு அடிக்கடி போய் வருகிறார்.''

—இவை இரண்டும் தான் சோமண்ணுமீது சுமத்தப் பட்ட குற்றங்கள் என்பதை செங்கமலம் அறிந்தாள். அவளுக்குக் கண் கலங்கியது. தன்னால், தகுதிவாய்ந்த பொறுப்பிலிருக்கும் ஒருவருக்குத் துயரம் விளைந்தது என்பதை எண்ணி அவள் பொருமினாள். மறுநாள் காலை செங்கமலத்திற்கு மற்றொரு திடுக்கிடும் தகவலொன்று கிடைத்தது. என்ன அந்தத் தகவல்?

ஜமீன் மாளிகை!

தன்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றங்கள் பொய்ச் சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டால்—அதன் மூலம் தனக்குத் தண்டனை கிடைத்தால் என்ன செய்வது என்றுகூட சோமண்ணு கவலைப்படவில்லை. கீர்த்தியுடன் வாழ்ந்த தன்னுடைய வாழ்க்கையில் ஒரு புள்ளி ஏற் பட்டு விட்டதே என்பதை எண்ணியே அவர் வருந் தினார். அவருடைய அழுகுரல் இருதயத்திற்குள்ளேயே ஒலித்தது.

மறுநாள் விசாரணை மண்டபத்திற்கு அதிகாரிகள் வந்தார்கள். சோமண்ணு, அவரால் எழுப்பப்பட்ட மாளிகைக்குள் சுதந்திரக் கைதியாக வந்தார். இராமன் காடேகும்போது கிளிகள் அழுதன, பூனைகள் அழுதன என்பார்கள். சிவகெங்கையில், சோமண்ணுவின் நிலை கண்டு மனிதர்கள் அழுதார்கள். நல்லவர்களின் இல்லங்கள் மூடிக்கிடந்தன. ராஜ வீதிகள் பொலிவிழந்து காணப்பட்டன.

விசாரணை மண்டபத்தில் மகாராஜாவிற்கு அருகில் மேகவர்ணத்துரை அமர்ந்திருந்தார். நீதிமான்கள் தலை கவிழ்ந்திருந்தார்கள். மகாராஜா முதல்நாள் கேட்ட கேள்விகளையே கேட்டார்.

"சோமண்ணு!"

"மகாராஜா!"

"திருமயம் செங்கமலம் வீட்டிற்குச் சென்றதை நீங்கள் மறுக்கிறீர்களா? அதனால் ஜமீன் கௌரவம் பாதிக்கப்படவில்லை என்று சொல்லுகிறீர்களா?"

"திருமயத்தில் செங்கமலம் என்ற தாசியே இல்லை என்கிறேன். இந்தப் பொதுச்சபையின் நீதிமான்கள் எனது வாக்குமூலத்தைக் கவனிக்க வேண்டுகிறேன். தாசி வீட்டுக்குச் செல்வது ஜமீனுக்கு இழுக்குதான். அதை உணருகிறேன். ஆனால் இந்தப் பொய் வழக்கை எதிர்க்கிறேன். என்மீது மாசு கற்பிப்பதற்குத் தீயவர்களால் தொடுக்கப்பட்ட சதி வழக்கு இது. நேர்மைக்கும், நீதிக்கும் பேர்போன, சிவகெங்கை ஜமீன், இந்த வழக்கிலும் நடுநிலையிலிருந்து தீர்ப்பு வழங்கும் என்று எதிர்பார்க்கிறேன்."

மகாராஜா குறுக்கிட்டார்: "சோமண்ணு! திருமயத்தில் செங்கமலம் என்ற தாசி இருப்பதாக நிரூபிச்

கப்பட்டால், அவளுக்கும் உங்களுக்கும் உறவு இருப்பதாக மெய்ப்பிக்கப்பட்டால், குற்றத்தை ஒப்புக்கொள்வீரா?"

"ஜமீன் தண்டனையை ஏற்றுக்கொண்டு எனக்குப் பின்னுடி வரும் எனது சந்ததியார் எவரும் ஜமீன் உத்தியோகத்திற்குத் தகுதி அற்றவர்கள் என்பதை எழுதிக் கொடுக்கிறேன்" என்று தளதளத்த குரலில் சோமண்ணு கூறினர்.

சபை விசனமுற்றது. மகாராஜா எழுந்து பட்டுத் திரையை விலக்கிக்கொண்டு உள்ளே சென்ருர். அவரைப் பின் தொடர்ந்த மேகவர்ணத்துரை, சோமண்ணுவை அலட்சியமாகப் பார்த்தார். அந்தப் பார்வையில் நஞ்சு இருந்தது. கலங்கம் பின்னிக் கிடந்தது.

சோமண்ணு அதைப் புரிந்து கொள்ளாமலில்லை.

திருமயத்தில் செங்கமலம் என்ற தாசியே இல்லை— என்று விசாரணையின்போது சோமண்ணு சொன்னது செங்கமலத்திற்கு எட்டியது. திகைத்தாள்!

'ஏன் இவர் இப்படிச் சொல்ல வேண்டும். நான் தாசி என்று நிருபிக்கப்பட்டால் அவருக்குத் தண்டனை கிடைத்துவிடுமே, கௌரவம் பாதிக்கப்படுமே, நான் தாசி என்று மண்டலம் அறியுமே, மகாராஜாவின் சந்நிதானத்தில் கடல்போன்ற உண்மையை மறுத்துப் பேச இவருக்கு எப்படித்துணிவு வந்தது?'—செங்கமலம் இப்படியெல்லாம் குழம்பினுள். அப்போது யாரோ கதவைத் தட்டினர்கள். செங்கமலம் கதவைத் திறந்தாள்.

வழக்கமாகக் கம்பீரத்துடன் கொஞ்சமும் கலங்காமல் சோமண்ணு உள்ளே வந்தார். செங்கமலத்திற்கு நம்பிக்கையில்லை. ஆள் மாராட்டமோ என்றுகூட அஞ்சினுள். ஆனுல் அவரது கழுத்திலிருந்த மச்சம் அவளுக்கு நம்பிக்கை ஊட்டியது. பரபரப்புடன் ஓடி கம்பளத்தை விரித்தாள்; சோமண்ணு சிரித்தார்.

"எதிர்பார்த்திருக்க மாட்டாய். இதுதான் உலகம். நடக்க வேண்டுமென்று ஆசைப்படுவது நடப்பதில்லை. நடக்கக்கூடாது என்று வேண்டிக் கொள்வது நடைபெறுகிறது" என்று சொல்லிக் கொண்டு சோமண்ணு கம்பளத்தில் அமர்ந்தார்.

செங்கமலத்திற்குத் தத்துவங்கள் புரியவில்லை. வழக்கைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள். "விசாரணை என்ன ஆயிற்று? தீர்ப்பு என்றைக்கு? சாதகபாதகம் யார் பக்கம்?"—இந்தக் கேள்விகளையே திரும்பத் திரும்ப அவள் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"இந்த வழக்கு என்னை நிரபராதி என்று நிருபிப்பதோடு உன்னையும் சமுதாயத்தின் ஒரு பெரும் பழிச் சொல்லிலிருந்து விடுவிக்கப் போகிறது" என்ருர் சோமண்ணு.

"தாசிக்கு விடுதலை ஏது பிரபு? உலகம் உள்ள அளவும் தாசி குலத்திற்கு அபகீர்த்தி தானே"—செங்கமலம் சொன்ஞள்.

"தாசிகள் குடும்பப் பெண்ணுகி விட்டால்?"

"இந்த ஜென்மத்தில் நடைபெருத காரியம்!"

அப்போது கொல்லைக் கதவை யாரோ தட்டினுர்கள். கதவைத் திறக்க எழுந்த செங்கமலத்தைக் காதருகில் அழைத்து சோமண்ணு ஏதோ சொன்ஞர்.

செங்கமலத்தின் புருவங்கள் வளைந்தன. சிந்தித்த வண்ணம் போய் கொல்லைக் கதவைத் திறந்தாள். முப்பது வயதுடைய ஒருவர் உள்ளே நுழைந்தார். அவர் கொஞ்சமும் கூச்சமின்றி செங்கமலத்தோடு தாராளமாகப் பேசிக்கொண்டு வந்தார். செங்கமலத்திற்கு அவர் உறவினர், கேலி முறைக்காரர். பெயர் கோபாலகிருஷ்ண பிள்ளை.

சோமண்ணா, அவரை அப்போதுதான் முதல் முறையாகப் பார்க்கிறார். செங்கமலம் அவரைச் சோமண்ணாவிற்கு அறிமுகம் செய்து வைத்தாள். இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். செங்கமலம் சமையல் அறைக்குச் சென்றாள். சென்றவள் திரும்புவதற்கு நேரம் பிடித்தது. சோமண்ணாவும், கோபாலகிருஷ்ண பிள்ளையும் வழக்கு விபரம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். செங்கமலம் திரும்பும்போது சோமண்ணா அதிக மகிழ்ச்சியோடு காணப்பட்டார். இரண்டு வெள்ளிக் கோப்பைகளில் எலுமிச்சை ரசம் கொண்டுவந்து வைத்தாள் செங்கமலம்.

"செங்கமலம், கோபாலகிருஷ்ண பிள்ளை உனக்கு என்ன வேண்டும்?"—சோமண்ணா கேட்டார்.

"மாமா முறை"—செங்கமலம் சொன்னாள்.

"இந்த மாமா நாளையிலிருந்து உனக்குப் புருஷன்" என்றார்.

"உங்களுக்கு எப்போதும் கேலிதான்" என்றாள் செங்கமலம். கோபாலகிருஷ்ண பிள்ளை சிரித்தார். அந்தச் சிரிப்பு விபரமறியாத செங்கமலத்தின் இருதயத்தில் வேலாய்ப் பாய்ந்தது. சோமண்ணாவும் கோபாலகிருஷ்ண பிள்ளையும் பலமாகச் சிரித்தார்கள்.

மகாராஜாவும், மேக வர்ணமும் மூன்ரும் நாள் விசாரணைக்குப் போகத் தயாராக இருந்தார்கள். அது தான் கடைசி விசாரணை என்றும் அறிவிக்கப்பட்டிருந் தது. தாசியா, அல்லவா என்பதை நிரூபிப்பதற்குச் செங்கமலம் வரவழைக்கப்பட்டிருந்தாள். அன்பிற் கும், பண்பிற்கும் இருப்பிடமான சோமண்ணு பேரில் குற்றம் சுமத்தப்பட்டதை மகாராஜா விரும்பவில்லை தான். ஆனுல் குற்றம் சுமத்தப்பட்டவர் எவராக இருந்தாலும் விசாரிக்க வேண்டுமே என்பதற்காக விசாரணைக் குழுவைக் கூட்டினுர் அவர்.

மேகவர்ணம் ஏன் சோமண்ணு மீது குற்றம் சுமத்த வேண்டும்? இந்த வழக்கு ஏன் மேகவர்ணம் முன்னிலையில் நடக்கவேண்டும்? சோமண்ணுவிற்கும், மேக வர்ணத்திற்கும் என்ன பகை—மகாராஜாவிற்கு ஒன்றுமே புரியவில்லை. நல்லவர்கள் குற்றக்கூண்டில் நிற்கும்போது நீதிபதிக்கும் குழப்பம் ஏற்படத்தான் செய்கிறது.

விசாரணைக்குக் குறித்த நேரம் வந்துவிட்டது என்று காவலாளி தெரிவித்தான். எல்லோரும் மண்ட பத்திற்குப் பயணமாஞர்கள். மண்டபத்தில் மக்கள் குழுமியிருந்தார்கள். செங்கமலம் பால்நிறக் குதிரை வண்டியில் வந்திருந்தாள். அவளைப் பார்க்கப் பெண் கள் கூட்டம் நிறைந்திருந்தது.

மகாராஜாவும், மேகவர்ணத்துரையும் முகப்பு வழியாக மண்டபத்திற்குள் நுழைந்தார்கள். ஒதுப் புறத்திலிருந்த செங்கமலம் மகாராஜாவுக்கு வணக்கம் செலுத்திஞள். அவரைப் பின் தொடர்ந்த மேக வர்ணத்தைப் பார்த்துச் செங்கமலம் மெல்லச் சிரித் தாள். அவளுடைய முல்லைப் பற்கள் தும்மைப்பூ

அளவு வெளியில் தெரிந்தன. அந்தச் சிரிப் புக்காகத் தான் மேகவர்ணம் காத்துக் கிடந்தார். ஆனுல் அந்தச் சிரிப்பு இருதயத்தின் அடித்தளத்திலிருந்து அன்பு வடிவாய் ஒலித்த சிரிப்பா? இல்லை!

முன்னே சென்ற மகாராஜா செங்கமலம் சிரித் ததையும் அதற்குத் தன் மைத்துனன் பதில் புன்னகை புரிந்ததையும் மண்டபத்தின் முன் மாட்டப்பட்டி ருந்த கண்ணுடியில் பார்த்தார். அப்போதுதான் அவ ருடைய இருதயம் இது பொய் வழக்கு என்பதை ஏற் றுக் கொண்டது. நிரபராதி, குற்றவாளி என்று நிரு பிக்கப்படாமல் தடுக்க நெருப்புப் பாலத்தில் ஓடிக் கொண்டிருந்தது அவரது எண்ணங்கள்.

விசாரணை தொடங்கியது. சபையிலே நடனமாடி சவ்வாதுப் பொட்டுக்காரர்களின் 'சபாஷைப்' பெற் றவள், மயில்போல் ஆடுகிருள், குயிலைப்போல் பாடு கிருள். கிளியின் மூக்கு, கௌதாரியின் கண்கள் என்று பறவைகளையே உவமைக்கு அழைத்துப் புகழப் பட்ட செங்கமலம், அன்று பொதுமக்கள் முன்னிலை யில், அதிகாரிகளின் மத்தியில், கைதிமேட்டில் ஏற்றப் பட்டாள். அவளுடைய இருதயம் ஆட்டம் கண்டிருந் தது. முகம் சிவந்து கண்கள் பீதி அடைந்திருந்தன. மகாராஜா செங்கமலத்தை விசாரித்தார்.

செங்கமலம் சொன்னுள்:—என் பெயர் செங்க மலம். சொந்த ஊர் திருமயம். திருமணமாகி எட் டாண்டுகள் ஆகின்றன. இன்றுவரை குழந்தையில்லை.

சபை திகைத்தது. திவான் குறுக்கிட்டார்.

"உங்களுக்குக் கல்யாணமாகி விட்டதா?"

"ஆம். அப்பொழுதே தெரிவித்தேனே!"

"கணவருக்கு என்ன தொழில்?"—மேகவர்ணம் மறுபடியும் கேட்டார்,"

"தொழில் புரிய வேண்டிய அவசியமில்லை. நிலமும், சொத்தும் நிறைய இருக்கின்றன."

இப்பொழுது மகாராஜா குறிக்கிடுகிறார்: "உன் கணவன் பெயர்?"

"கணவர் பெயரை எப்படிச் சொல்வது?"

சபை நிமிர்ந்து உட்கார்ந்தது. வழக்கிலே விறுவிறுப்பு ஏற்பட்டுவிட்டது என்று அவர்கள் உணர்ந்தார்கள்.

"பெயரைக் கூறுவிட்டாலும் பெயருக்கேற்ற அடையாளத்தைக் கூறலாமல்லவா?"—மேகவர்ணம் கேட்டார் இப்படி.

"கூறலாம். கூறுகிறேன். மேகவர்ணம்..."

சபையில் பலத்த சலசலப்பு ஏற்பட்டது.

"மேக வர்ணமா? அவதூறு, அவதூறு! சாகசம் செய்கிறுள் சதிராட்டக்காரி"—சபை ஓயவில்லை.

ஆசனத்தில் அமர்ந்திருந்த மகாரரஜா, தந்தப் பிரம்பினுல் வெங்கலக் குறிச்சியில் தட்டி, "அமைதி, அமைதி" என்று இரைந்தார்.

சபையில் அமைதி நிலவியது. செங்கமலத்தைத் தொடர்ந்து பேசச் சொல்லும் பாவனையில் அவளைப் பார்த்தார்.

"சபை அவசரப்பட்டு விட்டது மகாராஜா. மேகவர்ணம் என்று நான் சொன்னது. இங்கு உள்ள எவரையும் குறிப்பிட்டு அல்ல. என்னுடைய கணவரின் பெய

ரால் புராணங்களில் ஆட்வருண்டு. அவரை, ஓவியர்கள் மேகவர்ணத்தால் தீட்டிக் காட்டுவார்கள். அதனுல் தான் என்னுடைய கணவரின் நிறத்தை முதலில் குறிப்பிட்டேன்...''

மகாராஜாவுக்குச் சிரிப்பு வந்தது. சிரிக்கவோ, அழவோ கூடாத மையக் கட்டத்தில் அவர் அமர்ந்திருந்தார். சபையோர் ஒருவரை யொருவர் பார்த்துப் புன்னகை பூத்தனர். சிலர் வாய்விட்டே சிரித்து விட்டனர்.

மகாராஜா மறுபடியும் செங்கமலத்தைப் பார்த்தார்.

செங்கமலம் சொன்ஞள்: ''சின்ன வயதில் வெண்ணெய் திருடி, கன்னிப்பெண்களோடு உறவாடி துஷ்டன் என்று பெயர் பெற்றவர்...பின்னலைப் பின் நின்று இழுப்பார்; வெண்ணெய்யைத் திருடியே வீடெல்லாம் இறைப்பார்...''

இப்பொழுது மேகவர்ணம் குறிக்கிட்டார். ''கதை வேண்டாம், உன் கணவரைச் சபையில் ஆஜர்படுத்த முடியுமா?''

''அழைத்தே வந்திருக்கிறேன்.''

மகாராஜா மணியை அடித்தார். சேவகன் சிரம் தாழ்த்தி நின்ருன். மாளிகைக்கு வெளியே நிற்கும் செங்கமலத்தின் கணவரை அழைத்து வரும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அடுத்த கணம் ஒரு நடுத்தர வயதினர் சபைக்கு வந்தார். மார்பிலே சந்தனம். நெற்றியிலே குங்குமம். கழுத்திலே கெவுடு, இடுப்பிலே பட்டு வேட்டி—இந்தக் கோலத்தில் அந்த மனிதர் சபைக்குள் புகுந்தார்,

மகாராஜா அவரை விசாரித்தார்.

அவர் சொன்னார்: "என் பெயர் கோபால கிருஷ்ணன். நான் என்னுடைய இருபத்தைந்தாவது வயதுவரை திருமயம் ஆலயத்தில் நாதசுரம் வாசித்துக் கொண்டிருந்தேன். சொத்தோடு, சுகத்தோடு செங் கமலம் எனக்குக் கிடைத்த பிறகு நான் அந்தத் தொழிலை விட்டுவிட்டேன். இப்போது நான் சுகவாசி. பணக்காரன். நிலப்பிரபு. இவற்றிற்கெல்லாம் மேலாக ஒரு அழகான பெண்ணின் கணவன்."

சபை பலமாகச் சிரித்தது. மகாராஜா கோபமாக ஆசனத்தைத் தட்டவே, அங்கு அமைதி மலர்ந்தது. மேகவர்ணம் எழுந்து செங்கமலத்தைப் பார்த்து, "கோபால கிருஷ்ணன் உன்னுடைய கணவன் என்ப தற்கு என்ன ஆதாரம்?"

"அவர் பூட்டிய மாங்கல்யம் இதோ இருக்கிறது!"

சபை பெருமூச்சு விட்டது. மகாராஜா முகம் விரிந்தது. மேகவர்ணத்தின் முகம் கோபத்தால் சிவந்து கருகியது.

மகாராஜா தீர்ப்பை வாசித்தார். சோமண்ணா நிரபராதி என்று பலத்த குரலிலே அவர் சொன்னார். அடக்கம் நிறைந்த ஒரு அழகான பெண்ணை, ஆயிரம் பேருக்கு மத்தியில் விசாரிக்க நேர்ந்ததைக் குறித்து கோபாலகிருஷ்ண பிள்ளையிடம் மகாராஜா சிவகெங் கைச் சீமையின் சார்பாக வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

சபை கலைந்தது. சோமண்ணா, செங்கமலத்திற்கும், கோபாலகிருஷ்ண பிள்ளைக்கும் அவரது மாளிகையில் விருந்து வைத்தார்.

நட்டுவனர், கங்கைமுத்துவிற்காக கோபால கிருஷ்ண பிள்ளை ரஞ்சிதத்திடம் சிபார்சு செய்ய வந்த போது இந்தக் கதையின் நினைவு அவளை வாய் திறத்து அழவைத்தது. அன்னையின் கௌரவத்தைக் காப் பாற்றிய கோபாலகிருஷ்ண பிள்ளை வேண்டுமா? அல்லது தன்னுடைய இருதயத்திலே குடிகொண்டிருந்த குமரப்பரின் சொல்லைக் காப்பாற்றுவதா? என்ற மனப் போராட்டத்தில் ரஞ்சிதம் தத்தளித்தாள்: மனச் சாட்சி அவளை உறுத்தியது. கதவைத் திறந்துகொண்டு ஓடி வந்தாள். கோபாலகிருஷ்ண பிள்ளை வேகமாக அவருடைய வீட்டிற்குப் போய்க்கொண்டிருந்தது அவளுக்குத் தெரிந்தது. ரஞ்சிதம் அவ்வரைத் திரும்ப அழைப்பதற்காகப் பின்தொடர்ந்தாள்.

திருமயத்தில் அந்தத் தெருவாருக்கு அது ஒரு வேடிக்கையாக இருந்தது. ஆனல் வாலிபர்களுக்கு விருந்தாக இருந்தது. காரணம், ரஞ்சிதம் பகலிலே வெளியில் வத்ததில்லை. அவளுடைய திருப்பாதம் தெருவிலே படிந்தது கிடையாது.

## 3

இது இராமனுதபுரம். விஜயரகுநாத சேதுபதி அவர்களின் மேற்பார்வையில் நாட்டியப் போட்டிக் குச் சிறப்பான ஏற்பாடுகள் துரிதமாக நடந்து கொண் டிருந்தன. தமிழகத்தின் பல பாகங்களிலிருந்தும் ஆடல் அழகிகள் இராமனுதபுரத்திற்கு வந்திருந்தார் கள். வந்தவர்கள் கொண்டுவந்த பரிசுகள், பட்டயங் கள் எல்லாம் அரண்மனை மண்டபத்திலிருந்த ஆடல் அரங்கில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. கலந்து

கொள்ள விண்ணப்பித்திருந்த கலையரசிகளின் பெயர் கள் நகர் முழுதும் விளம்பரம் செய்யப்பட்டிருந்தன. பெங்களூர் பானு, ஆரூர் அமிர்தம், புதுக்கோட்டை மீனு, குன்றக்குடி வள்ளிக்கண்ணு, முதலான பெயர் பெற்ற நாட்டிய நட்சத்திரங்கள் இராமனுதபுரத்திலே முகாமிட்டிருந்தனர். விடிந்தால் விழா. தெருவெல் லாம் தேரோட்டம்போல் கூட்டம். ஆடற்கலையையும், அழகுக் கலையையும் இணைத்துச் சுவைக்க, நெருக்கடி களுக்கு இடையிலே செட்டி நாட்டு இளைஞர் கூட்டம் அங்கே படையெடுத்திருந்தது. இலட்சக்கணக்கிலே வரவு செலவு செய்யும் வயோதிகச் செட்டியார்கள்கூட அங்கே வந்திருந்தார்கள். ஏலம் எடுக்க வரும் வியா பாரிகளைப்போல், பட்டுப்பைகளில் வெள்ளிக் காசுகளை நிரப்பிக்கொண்டு அவர்கள் தெருத் தெருவாகத் திரிந் தார்கள். பார்வைக்குப் பைத்தியக்காரர்களைப்போல் தோன்றினுலும், காரியத்தில் கண்ணுயிருப்பதுபோல் அவர்கள் தென்பட்டார்கள். உப்பரிகைகளில், உயர்ந்த மாடி வீடுகளில்—ஆங்காங்கே தங்கியிருந்த நாட்டியப் பேரழகிகளுக்கு அவர்கள் சாதாரணமானவர்களாகவே தென்பட்டார்கள்.

ரோஜாச் செடியில் முள் இருப்பதைப் போல், பணக் காரர்களிடம் கர்வம் இருப்பதைப் போல் அழகியிடம் அலட்சியம் தென்படுகிறது. ஓர் அழகிக்கு, ஒரு பரம் பரைக் கோடீஸ்வரனுக்கு இருக்கும் அகங்காரம் இருக் கிறது. அவள் உலகத்தைச் சுருட்டி முந்தானையில் வைத்திருப்பது போல் பேசுவாள். இராமனுதபுரத் திற்கு வந்த கலையரசிகள் அனைவருமே இதை நிரூபித் தார்கள். ஜடைவில்லையும், வைரக் கம்மலும் ஜொலிக்க அவர்கள் தெருவுக்குத் தெரு அல்லி தர்பார் நடத்தி னார்கள். திருமயம் ரஞ்சிதம் போட்டியில் கலந்து

கொள்ளவில்லை என்ற மகிழ்ச்சி, வந்த பெண்களின் இதயங்களில் தேனைப் பாய்ச்சியது. வெற்றி தனக்குத் தான், என்று ஒவ்வொருவரும் பேசிக்கொண்டார்கள்.

பொழுது புலர்ந்தது. நகரம் புதுக்கோலம் பூண்டது. அம்பாரி வைத்த யானையில் அழகு கொலுவிருக்க, விஜயரகுநாத சேதுபதி அழைத்துவரப்பட்டார். கலா ரசிகர்கள், ஜமீன் காரியக்காரர்கள், வெளிநாட்டு வாணிபத்தில் இணையற்ற 'கில்லாடிகள்' என்று பெயர் பெற்ற கீழக்கரை மரக்காயர்கள் அனைவரும் வாத்தியங்கள் முழங்க, வானவேடிக்கைகள் மின்னிடப் பவனி வந்தார்கள்.

விழா தொடங்கியது. போட்டி நடனங்கள் ஆரம்பமாயின. அமைதியான குளத்தில் மிதந்துவரும் மீனைப் போல் ஆடினாள் பெங்களூர் பானு. குளிர்ந்த நிலவு மேகத்தைத் துளைத்துவரும் வேளையில் எறிந்து விழும் நட்சத்திரத்தைப் போல் ஒளிவிட்டாள் ஆரூர் அமிர்தம். மின்னல் கொடியோ, கண்ணை ஏமாற்றும் பச்சைப் பாம்போ என்று ஐயுறும் வண்ணம் நெளிந்து, நெளிந்து ஆடிச் சபையோரின் உள்ளங்களை ஆடவைத்தாள் புதுக்கோட்டை மீனா. அவளுடைய ஆட்டமும் அதற்கேற்ற இசையும் சபையை அசைத்தன.

விஜயரகுநாத சேதுபதி இப்பேர்ப்பட்ட கலை வாழும் தென்னகத்தில் தான் பிறந்ததை எண்ணிப் பூரித்தார். நேரம் போவதை நாட்டிய மண்டபம் உணரவில்லை. எண்சாண் உடம்பை அடக்கியாளும் ஒருச்சாண் வயிறுகூட அன்று கலையை உணவாக்கி அயர்ந்து கிடந்தது.

இறுதியாக வள்ளிக்கண்ணு அரங்கமேறினாள். சபையிலே கையொலி எழுந்தது. சபையை வணங்

கினுள், ஆடினுள். மத்தளக்காரர் மத்தளத்தைத் தட்டினுர்; அந்த ஓசையில் புதிய தெம்பு இருந்தது. வள்ளிக்கண்ணு நெற்றியை உயர்த்தி ஒருமுறை சபை சோர்ந்து கிடப்பதை அவள் அறிந்தாள். தாளக்காரர் தனது இசைக்குப் புதுவேகம் கொடுத்தார். முரசு முழங்குவதைப் போல், படை அணிவகுத்துச் சென்று பகைவரின் கோட்டைக்குள் காலடி எடுத்து வைப்பதைப் போல் இருந்தது இசை ஒலி!

சபை நிமிர்ந்து உட்கார்ந்தது. இருதயம் இசைக்குக் கட்டுப்பட்டது என்று உணர்ந்த அவள், குழந்தையைக் கிள்ளிவிட்டு அழவைத்து, பின் தூங்க வைப்பதற்கு நீலாம்பரி பாடுவதைப்போல் குழைவுக்கும், நெளிவுக்கும் அடிஎடுத்து வைத்தாள். அவள் ஆடினுள். அங்கமெல்லாம் அபிநயம் பிடித்தன. அவளுடைய நளினப் பொன் மேனியின் ஒவ்வொரு ரேகையும் அசைந்து, அசைந்து கலைக் கூத்தாடியது. அல்லி மொட்டைப் போல் முகத்தைச் சுருக்குவதும், செந்தாமரை மலர்போல் இதழ்களை விரிப்பதும் அவளுடைய ஆட்டத்திற்குப் பொன்முடி அமைந்தது. சபை பலத்த கையொலி எழுப்பியது. விஜய ரகுநாத சேதுபதி வள்ளிக்கண்ணுக்குப் பரிசளிக்க முடிவு செய்தார். சபையில் அமைதி நிலவியது. வள்ளிக்கண்ணுக்குப் பரிசு கொடுக்கத் தீர்மானித்து விட்டதாகவும், அவளுக்கு நாட்டியம் பயிற்றுவித்த திருப்பரங்குன்றம் மீனுக்ஷி சுந்தர நட்டுவனுரை, ஜமீன் வித்வான்களில் ஒருவராக நியமித்திருப்பதாகவும் விஜய ரகுநாதர் சபையிலே தெரிவித்தார். சபையில் பேரொலி எழுந்தது. வள்ளிக்கண்ணு புன்முறுவலுடன் சபைக்கு வணக்கம் செலுத்தினுள். கையொலி ஓய்ந்து, விஜய ரகுநாதர் பரிசு வழங்கும் நேரம்—மண்டபத்தின்

முகப்பு வாயிலிலிருந்து இனிய சலங்கை ஒலி ஒன்று மிதந்து வந்தது. அந்த ஒலி சபையைக் கவர்ந்தது. எல்லோரும் முகப்பை நோக்கினர்கள். கனவில் வந்த கன்னியைப்போல் ஒரு யுவதி மெதுவாக நடந்து வந்தாள். அவளைப் பின்தொடர்ந்து ஒரு கிழவர் வந்தார். சபையில் மல்லிகை மணம் 'கம்' என்று வீசியது. வந்தவள், ஜமீன் தாருக்கு வணக்கம் சொன்னுள். ரகுநாதர் விபரம் கேட்டார்.

"ஆடவந்திருக்கிறேன். நேரம் கடந்ததற்கு மன்னிக்கவும். பெரிச்சிக் கோயில் என் சொந்த ஊர், 'அபரஞ்சி' என் பெயர்"—வந்தவள் குழைவாகச் சொன்னுள். அந்தப் பண்பில் திறமை ஒளிவிட்டது.

சபை பிரமித்தது!

சுமத்திரா தீவில் இருந்த குமரப்பருக்கு அங்கிருந்து தாய்நாட்டிற்குக் கப்பல் புறப்படும் தேதி அறிவிக்கப் பட்டது. குமரப்பர் எல்லையில்லா மகிழ்ச்சியில் மூழ்கினர். பேரழகை உருவாக்கிச் சித்திரத்தில் வரைந்து பிரமனுல் ஆக்கியவள் என் மனைவி—என்று தினந்தினம் நினைத்து, கடலுக்கு அப்பால் இருக்கிறோம் என்ற கவலையை மறந்து கிடந்த குமரப்பருக்கு, கப்பல் போகிறது என்ற செய்தி வாழ்க்கை வருகிறது என்று அறிவிப்பது போல் இருந்தது. பேரீச்சம்பழப் பணியாரத்தை நினைத்து, நினைத்து அலுத்துப்போய் புளியம் பழத்தில் ஆசை வைக்கும் தமிழர்கள் தீவு தேசங்களில் நிறைய வாழ்ந்த காலமது. ஆனல் குமரப்பர் ரஞ்சிதத்தைத் தாசியாகக் கருதவில்லை. வைப்பாட்டி என்று சொல்லிக்கொள்ள மாட்டார். உற்ருர் உறவினர் முன் ஏற்றுக்கொண்ட இல்லறச் செல்வியாய் அவளை மதித்தார்.

அவர் தாய்நாடு புறப்படுவதற்கு நான்கு நாட்களே இருந்தன. அன்று மாலை அவர் கடைத்தெருவுக்குச் சென்றார். முத்தும் பவளமும் வாங்கிக் கட்டினார். மகாராணிக்குச் சற்றும் குறைவில்லாத ஆடை ஆபரணங்களைச் சேகரித்தார். இரவு வந்தது; வீடு திரும்பினார். வீட்டிற்குள் நுழையும்போது முகப்பு வாசலில் தமிழ் நாட்டு செருப்பு ஒன்று கிடந்தது. குமரப்பருக்கு ஒரு சபலம்! செருப்பைக் கையிலே தூக்கிப் பார்த்து விட்டு கீழே போட்டார். தாய்நாட்டிலிருந்து யாரோ வந்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியில் உள்ளே போனார். அடுத்த தெருவில் கிராம்புக் கடை வைத்திருக்கும் மைதீன் பிச்சை ராவுத்தர் வந்திருந்தார். அவர் கீழக்கரையைச் சேர்ந்தவர். அன்று காலை வந்த கப்பலில் அவர் சுமத்ராத் தீவு வந்து சேர்ந்தவர். குமரப்பர் அவருக்கு நெருங்கிய நண்பராதலால் வந்ததும் அவரைப் பார்ப்பதற்குத் தமிழ்நாட்டுச் சிற்றுண்டிகளோடு குமரப்பரின் இல்லத்திற்கு வந்திருந்தார். குமரப்பர் அவரைக் கண்டு, கட்டித் தழுவி நாட்டு நலம் விசாரித்தார்.

மைதீன் பிச்சைராவுத்தர் தமிழ்நாட்டின் பெருமை கூறினார். மைசூர் தசராப்பண்டிகையின் கீர்த்தி சொன்னார். திருவாங்கூர் சித்திரைத் திருநாள் மகாராஜாவின் விழாவை எடுத்து விளக்கினார். குமரப்பருக்குத் தாய்நாட்டைப் பிரிந்திருந்த சோகம் எல்லா விழாக்களையும் நினைவுக்குக் கொண்டு வந்தது. இறுதியாக மைதீன் பிச்சைராவுத்தர், விஜயரகுநாதர் நடத்திய நாட்டியப் போட்டியையும் விவரித்தார். குமரப்பர் அதை மிக ஆவலுடன் கேட்டார்.

"பெரிச்சிக் கோயில் அபரஞ்சி என்பவள் கருத்துக்கினிய கானம் பாடி, கண்ணுக்கினிய நடனமாடினாள்,

எனக்கு வயது நாற்பது ஆகிறது. எத்தனையோ ஆட்ட பாட்டங்களைப் பார்த்திருக்கிறேன். இந்துப் புராணத்திலே மேனகை, ஊர்வசி என்கிருர்கள். கதைகளிலே மாதவி, வெள்ளையம்மா என்று சொல்லுகிருர்கள். அவர்களெல்லாம் இந்த அபரஞ்சியின் ஆட்டத்தில் ஆயிரத்தில் ஒரு பங்குதான்.''—ராவுத்தர் மனம் உருக உருகப் பேசினர். குமரப்பர் கண்கள் கலங்கின. நாசி அடைத்தது.

ராவுத்தர் தொடர்ந்தார்: ''அபரஞ்சிக்குப் பரிசு என்ன தெரியுமா? ஆயிரம் வராகன். அவளுடைய ஆசானுக்கு ராஜாங்க உத்தியோகம். அது மட்டுமா? இன்னும் பத்து வருஷகாலத்திற்குத் தமிழ்நாட்டுக்குக் கலாராணி என்ற பட்டத்தையும் அவளுக்கு விஜய ரகுநாதர் அளித்திருக்கிருர். அவளை வெற்றி கொள்வதற்கு யாருமில்லை என்ற முடிவில் அவளுக்குப் பச்சைப் புடவை அளிக்கப்பட்டிருக்கிறது.''

குமரப்பரால் இதற்குமேல் கேட்டுக்கொண்டிருக்க முடியவில்லை. ''போதும் போதும்'' என்று கூறிவிட்டு எழுந்து ரஞ்சிதத்தின் படமிருந்த அறைக்கு ஓடினர். ராவுத்தர் அவரைப் பின் தொடர்ந்தார்.

''கலைச் செல்வியே! என்னை மன்னித்துவிடு. பெயருக்கும், புகழுக்கும் அடிமைப்பட்ட பெண்கள் சமுதாயம் உன்னல் புனிதமடைகிறது. நீ புவனத்தில் பூவாமலர். பொன்முகத்து வைரமலர்.'' என்று கண்ணீர் சொரிய ரஞ்சிதத்தின் படத்திற்கு முன்னே குமரப்பர் புலம்பிக் கொண்டிருந்தார். மைதீன் பிச்சை ராவுத்தருக்கு அந்தப் படம் பெரும் குழப்பத்தை உண்டாக்கியது. எங்கோ பார்த்தமுகம். ஆனல் அவருக்கு நினைவில்லை. சிலையாக நின்ருர்.

கைகளில், தங்கக் காப்புத் தவிர வேறு அலங்காரம் ஏதுமில்லாமல் விளங்கினுள் ரஞ்சிதம். பெருமூச்சின் அனற்காற்றுப் பட்டு உதடுகள் சாம்பல் பூத்து நின்றன. களைப்பும், கவலையும் கண்களை வாட வைத்திருந்தன. சாணையில் தீட்டிய வைரம்போல், மெலிந்தும், மேனி சோர்ந்தும், அவள் இயற்கை ஒளி கொஞ்சமும் குன்ருமல் இருந்தாள்.

சுமத்ராத் தீவிலிருந்து குமரப்பர் புறப்பட்ட சேதி ரஞ்சிதத்திற்குத் தெரிந்தது. அளவிலா மகிழ்ச்சி அவளைத் தாளுகச் சிரிக்க வைத்தது. அத்தானுக்குத் தேன்குழல் தயாரித்தாள்; அதிரசம் சுட்டு அடுக்கி வைத்தாள். வந்தவர்கள் போனவர்களிடமெல்லாம் சேதி கூறி மனம் குளிர்ந்தாள். பட்டுப் புடவை கொண்டு வருவார், ஒட்டியாணம் செய்துவருவார், பெட்டி பெட்டியாய்ப் பொருள்கள் வரும் என்று அவள் உமிழ்நீர் கூட்டி நிற்கவில்லை. காட்டில் மலர்ந்த முல்லை, நிலவைப் பார்த்து ஏங்குவதைப் போல் அவளுடைய தசை நார்களெல்லாம் விசைபெற்றுக் கொப்பளித்துச் சுளித்து நின்றன.

பத்து நாட்களுக்குப் பிறகு, நாகப்பட்டணம் துறை முகத்திலிறங்கிக் குமரப்பர் திருமயம் வந்து சேர்ந்தார். ஊர் முழுதும் அவர் மாற்றம் கண்டார். சங்குபோல் பளிச்சென்று இருந்த ரஞ்சிதம் தேய்ந்த கடல் நுரைப்போல், கலைந்த மேகம்போல் தெரிந்தாள். அழகின் தரம் குறைந்திருந்ததை, அவர் பொருட்படுத்தவில்லை. கரிபோல் கருத்த பெண்ணை, அவளுடைய வைரக்குணம் அழகு பெறச் செய்கிறது. எருமையின் கொடூரத் தோற்றத்தை அதன் பால் மறக்கடிக்கிறது. குமரப்பர் ரஞ்சிதத்தின் குணத்தை

உணர்ந்தவர். அவளுடைய நிலையையும் கலையையும் தெரிந்தவரல்லவா?

"ரஞ்சிதம்!"

"என்னத்தான்!"

"ஏன் உருமாறி யிருக்கிறாய்! உம்!"

"இல்லையே! உள்ளபடிதான் இருக்கிறேன். உங்களுக்கு அப்படித் தெரிகிறது அத்தான்!"

"ரஞ்சி! பொய் சொல்லுகிறாய், நான் போகும் போது இப்படியா இருந்தாய்? சுண்டினால் ரத்தம் தெறிக்கும் பப்பாளிப்பழம் போலல்லவா இருந்தாய்? இப்போது கண்ணாடியைப் பார்! களையே இல்லை முகத்தில்! விலை மலிந்த வைரம்போல் இருக்கிறாய். எல்லா வசதிகளும் இருந்தும் ஏன் இப்படி நைந்து போனாய்! ரஞ்சி! உனக்கு என்ன கவலை?...சொல்லு ரஞ்சிதம். சுதந்திரம் இல்லையா? சுகக்குறைவா? என்ன குறை உனக்கு?"—குமரப்பர் அன்புடன் கேட்டார். ஆசையுடன் கேட்டார்.

"சொத்தும், சுகமும் உயிரைக் காக்கும். மனதுக்கு அமைதி வேண்டாமா அத்தான்!"—ரஞ்சிதம் பேசும் போது அவள் தொண்டை குளிர்ந்திருந்தது.

"சொத்தில் இல்லாத மன அமைதியை நீ எங்கே தேடுகிறாய்?"

"அமைதி உணவில் இல்லை. ஆடம்பரத்தில், அலங்காரத்தில் இல்லை. பெண்களுக்கு வாழ்வின் சுகம் எண்ணத்தின் இனிமையில்தான் இருக்கிறது. எனக்கு ஆடத் தெரியும், பாடத்தெரியும். பொன்னும் பொருளும், விண்ணும் மண்ணும் அதிரப் புகழும் சேர்க்க

மார்க்கம் தெரியும். இருந்தும் இதயத்தில் நிறை வில்லையே அத்தான். ஒரு பெண்ணின் வாழ்க்கை, அவளை நம்பி மட்டும் சுழல்வதில்லை. அவளுடைய குணம், அழகு மட்டும் அவளை வாழவைத்து விடுவ தில்லை. அவளுடைய படைப்பு, நீதி எல்லாம் கணவ னையும் ஒட்டிக்கொண்டிருக்கிறது. முதலைக்குப் பல மிருந்தும், அது தண்ணீரை நம்பிக்கொண்டுதானே இருக்கிறது. ஆனால் தண்ணீர், முதலையை நம்பிக் கொண்டா இருக்கிறது?"—ரஞ்சிதம் பேசுவது குமரப்ப ருக்குப் புரிந்தது. அவளுடைய பேச்சில் நியாயம் இருப்பதை அவர் உணர்ந்தார்.

பெண்கள் 'பரிதாபத்திற்குரியவள்' என்று பெய ரெடுத்தால்தான் சமூகத்தில் வாழ முடிகிறது. ஆட வர்கள் அதற்கு எதிர்மறை! 'பொல்லாதவன்' என்று பெயர் வாங்கவேண்டும். 'பரிதாபப் பட்டத்தை' அவர்கள் பலவீனமாகக் கருதுகிறார்கள்.

ரஞ்சிதம் அவள் பெறவேண்டிய பெயரைப் பெற்று விட்டாள். அவளுடைய கண்ணீர் குமரப்பரின் இத யத்தைக் குடைந்தது.

"ரஞ்சிதம்!"

"இ...ம்!"

"நாட்டியம் நினைவிருக்கிறதா?"

"அபிநயம் பிடித்துப் பார்க்கவில்லை அத்தான்?"

"எனக்கு உன் ஆட்டத்தைப் பார்க்க வேண்டும் போல் தோன்றுகிறது! ஆடலாமா?"

"வேண்டாம்! மறந்தவை மறந்தே போகட்டும்! ஏன் புதிய சபலம்?"

"ரஞ்சிதம்! வனத்தில் மயில் வாழும்போது, விட்டிலுக்கும், வண்டுக்கும் கொண்டாட்டம் நடத்தியிருக்கிறார்கள். ரஞ்சிதம் உன் ஆட்டத்தைச் சுவைக்க தமிழ் நாட்டுப் பிரபுக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பைத் தரப் போகிறேன். ஆம் ரஞ்சிதம்!"

"அத்தான்! ரஞ்சிதத்தை ஆடச்சொல்கிறீர்களா?"

"ஆம் ரஞ்சிதம்! நீதான் ஆடப்போகிறாய்! இராமனாதபுரம் விஜயரகுநாத சேதுபதியின் முன்னிலையில் ஆடப்போகிறாய். ரஞ்சிதத்தின் வாழ்நாளில் வேறொரு பெண் வெற்றி கொள்வதை உன் அத்தான் சகிக்க மாட்டேன். நீ ஆடத்தான் வேண்டும்! நீ ஆடத்தான் வேண்டும்."—குமரப்பர் உணர்ச்சியோடு கூவினார்.

ரஞ்சிதம் மயங்கிச் சோர்ந்தாள். குமரப்பர் அவளை மார்பில் அணைத்துக்கொண்டு ஊஞ்சலுக்கு வந்தார்.

"என் மனைவி ரஞ்சிதம் பொன் மயில் சாயல்! அவள் கண் மலர் ஒவ்வொன்றும் அபிநயம் பேசும். மீண்டும் ஒரு நாட்டியப் போட்டி ஏற்பாடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்" என்று குமரப்பர் எழுதிய கடிதத்தை விஜய ரகுநாதர் பார்த்தார்; சிரித்தார். விருந்தைச் சுவைக்கவா ஜமீன்தார்கள் மறுப்பார்கள்! காசை இறைத்துக் களிப்பை வாங்கும் பெருந்தனக் காரர்களல்லவா அவர்கள்!

போட்டிக்கு ஏற்பாடுகள் நடைபெற்றன. மண்டலம் முழுதும் போட்டித் தகவல் பிரகடனப்படுத்தப் பட்டது. எங்கும் தோரணங்கள்! வரவேற்பு வளைவுகள்! விஜயரகுநாதர் நாட்டியக் கலைக்குப் புத்துயிர் ஊட்டுவதாக நகரிலே பேசிக் கொண்டார்கள்.

குமரப்பர் அளவிலா மகிழ்ச்சி கொண்டார். அழகியின் கணவன் என்பதிலேயே பெருமை கொள்ளும் ஆடவர்கள், ஒரு கலையரசியின் இதயக் காவலனாகிவிட்டால் அவர்களின் குதூகலத்தை, கொக்கரிப்பை அளவிட முடியுமா? உலகமே அவர்களின் உள்ளங்கைக்குள் இருப்பதாக நினைப்பார்கள்!

குமரப்பருக்கு உச்சி குளிர்ந்தது. ஓடினார் வீட்டிற்குள்! பாடிக்கொண்டே பூத்தொடுத்த வண்ணமிருந்தாள் ரஞ்சிதம்...

"ரஞ்சிதம்! ரஞ்சிதம், நம்முடைய சவாலை விஜய ரகுநாதர் ஒப்புக்கொண்டு விட்டார்; ஜமீனிலிருந்து ஓலை வந்துவிட்டது. அடுத்த வெள்ளியன்று போட்டி! உடம்பு பத்திரம்! இல்லத்தை விட்டு அகலாதே! சொன்னது கேட்க ஆள் வைக்கிறேன். ரஞ்சி, ஜமீன் பதக்கம் முக்கியமல்ல! இந்தத் தலைமுறையில் ரஞ்சிதம்தான் தென்னாட்டின் நடன கலா ராணியாக விளங்க வேண்டும்." என்று உணர்ச்சி மிகுதியில் வார்த்தைகளைக் கொட்டினார் குமரப்பர். ரஞ்சிதம் அமைதியாக இருந்தாள்! முகத்தில் எந்த அறிகுறியும் பிறக்கவில்லை. சிரித்தாள். அந்தச் சிரிப்பில் வழக்கமான கவர்ச்சியைக் காணோம்! குமரப்பர் இதைத் தன்னடக்கம் என்று கருதி யிருப்பார். கலையின் முதிர்ச்சி என்று கூட எண்ணியிருக்கக் கூடும்!

இரண்டு நாட்களுக்குப் பிறகு, விஜயரகுநாதரிடமிருந்து, குமரப்பருக்கு அவசர அழைப்பொன்று வந்தது. குமரப்பர் புறப்பட்டார். ரகுநாதர், குமரப்பரை அன்புடன் வரவேற்றார். விருந்து படைத்தார். எப்பேர்ப்பட்ட கோடீஸ்வரனுக்கும் தரப்படாத வர

வேற்ப்புத் தனக்குக் கிடைத்ததற்குக் காரணம், தான் ஒரு கலையரசியின் கணவன் என்பதால்தான் என்று குமரப்பர் உள்ளூர மகிழ்ந்தார்.

விருந்து முடிந்தது. விஜயரகுநாதரும், குமரப்பரும் சலவைக்கல் மாளிகைக்கு வந்தார்கள். விஜயரகுநாதர் பேச ஆரம்பித்தார்.

"உங்களுக்கு ஒரு பூரிப்பான தகவலைத் தெரிவிக்கப் போகிறேன்" என்றார்.

"மகிழ்ச்சிகரமான தகவலைத் தங்கள் மூலம் பெறுவதற்குக் கொடுத்து வைக்கவேண்டும்."

"அழகான பெண்கள் தமிழ் நாட்டில்தான் அதிகம். ஆனால் அவர்கள் அனைவரும் கலை பயில வருவதில்லை. கெட்டு விடுவார்கள் என்று பெற்றோர்கள் பயப்படுகிறார்கள்."

"கலை, ஒழுக்கத்தைக் கெடுத்துவிடும் என்ற தவறான எண்ணம் நம் நாட்டில் பரவி நிற்கிறது."

"ஒழுக்கம் உயிர் நாடிதான். ஆனால் கலைதான் கெடுக்கிறது என்று சொல்லமுடியாது...அதற்காகத் தான் நான் உங்களைக் கௌரவிக்கிறேன். அழகான பெண் கலை பயின்று அடக்கமாக வாழமுடியும் என்று தங்கள் துணைவி நிருபித்து விட்டார்கள். அது மட்டுமல்ல! தமிழ்நாட்டில் தங்கள் ரஞ்சிதத்தை வெல்ல இனி யாராவது பிறந்து வரவேண்டும். நேற்று இரவு தான் எனக்கு உண்மை தெரிந்தது. தகவலைக் கேட்டதும் நான் மயங்கிக் கிறுகிறுத்து விழுந்துவிட்டேன்"— விஜயரகுநாதர் மது குடித்தவரைப்போல் புலம்பிக் கொண்டிருந்தார்.

குமரப்பர் விழித்தார். "சமூகம் தெரிவிப்பது அடியேனுக்கு விளங்கவில்லையே!" என்றார் பணிவாக.

விஜயரகுநாதர் சிரித்தார். பலமாகச் சிரித்தார். இடி முழக்கம்போல் அந்தச் சிரிப்பொலி எதிரொலித்தது.

**"நான் நடத்திய நாட்டியப் போட்டியில் பெரிச்சிக் கோயில் அபரஞ்சி என்ற பெயரில் ஆடிப் பதக்கம் பெற்றது தங்கள் ரஞ்சிதம்தான் குமரப்பரே!"** என்றார் பலமாக!

"ஜமீன்தார்! உண்மையாகத்தான் சொல்கிறீர்களா? குலதெய்வத்தின் பேரில் ஆணையாகச் சொல்லுங்கள் ஜமீன்தார்! என் ரஞ்சிதம்தான் ஆடினளா?" என்று குமரப்பர் குதித்தார். கைகொட்டிச் சிரித்தார்.

"உண்மைதான், குமரப்பரே, உண்மைதான்! என் ஜமீனின்மீது ஆணையாகச் சொல்கிறேன். அன்று ஆடியது ரஞ்சிதம்தான் என்று, ஆட்டி வைத்த நட்டுவனரே தெரிவிக்கிறார்" என்றார் விஜய ரகுநாதர்.

"ரஞ்சிதத்தின் ஆசான் கங்கைமுத்து நட்டுவனரல்லவா!"

"ஆம், ஆவுடையார் கோயில் என்று பொய் சொல்லி ஆட்டிவித்தாராம்!......"

"ஏன் இந்த ஆள் மாறாட்ட வேலைகளைச் செய்ய வேண்டும்!" என்று களங்கமில்லாமல் கேட்டார் குமரப்பர்.

"நீங்கள் சுமத்ராத் தீவிற்குப்போகும்போது, ரஞ்சிதம் இனிமேல் நாட்டியம் ஆடக் கூடாதென்று கட்டளையிட்டதின் விளைவுதான் இந்தத் தீவினைகளெல்லாம்" என்றார் ஜமீன்தார்.

குமரப்பர் சிரித்தார். அவர் முகத்திலே ஒரு மின்னல் தோன்றி மறைந்தது.

"ஆடக் கூடாதென்றது உண்மை தான். அதற்காக இப்படிப்பட்ட போட்டிகளிலும் கலந்து கொள்ளக் கூடாதென்று சொன்னேன். பைத்தியக்காரி!......" குமரப்பர் பேசிக்கொண்டிருக்கும்போது கங்கைமுத்து நட்டுவனார் மாளிகைக்குள் நுழைந்தார்.

"தம்பி. என்னை மன்னிக்கணும். ரஞ்சி எவ்வளவோ மறுத்தாள். நான் தான் அவள் காலில் விழுந்து ஆடச் செய்தேன், ரஞ்சி குழந்தை! இளம் மனம்! கோபித்துக் கொண்டு விடாதீர்கள். நேற்றுத்தான் ஜமீன் கவனத் திற்குக் கொண்டு வந்தேன்" என்று கண்கலங்கக் கேட்டுக் கொண்டார் கங்கைமுத்து.

மறுநாள் காலை, விஜயரகுநாதரின் பிரத்தியேகப் பதக்கத்துடன் கௌரவப் பட்டயமும் பெற்றுக் கொண்டு ஜமீன் கோச்சு வண்டியில் குமரப்பர் திரு மயத்திற்குப் பயணமானார். ரஞ்சிதத்திற்குக் கிடைத்த புகழ் பெரிதா? ஆடக்கூடாதென்று அவளுக்கு விதித்த கட்டுப்பாடு பெரிதா என்ற எண்ணப் போரில் அலை மோதிக் கிடந்தார் குமரப்பர். வழி நெடுக, இதற்கு முடிவுகட்டும் பெரும் பணியில் ஈடுபட்டார். ரஞ்சிதத் தின் அழகும் கவர்ச்சியும், அவளைச் சுற்றி மொய்க்கும் புகழும் அவளுக்குப் பூட்டும் கால் விலங்கைத் தவிடு பொடியாக்கிவிடும் என்பதை அவர் உணர்ந்தார்.

கோச்சு வண்டி திருமயத்தை நெருங்க, நெருங்க ரஞ்சிதத்தின்பால், குமரப்பருக்கு இருந்த அன்பு, பக்தி வடிவம் பெறத் தொடங்கியது. கலா சேவகி என்று அவருடைய இருதயத்தில் உருவம் பெற்றிருந்த ரஞ்சிதம் இப்போது கலாராணியாகி விட்டாள்.

வண்டி வீட்டு வாசலில் நின்றது. தொண்டனைப் போல், அடியானைப்போல் ஜமீன் பரிசுகளைத் தூக்கிக் கொண்டு ஓடினார்; ''ரஞ்சி! ரஞ்சி'' என்று கதறிக் கொண்டு ஓடினார்: ரஞ்சி வீட்டில் இல்லை. வீடு திறந்து கிடந்தது. யாரும் இல்லை. ரஞ்சிதம் அன்பாக வளர்த்த வெள்ளைப்பூனை பட்டினியால் சோர்ந்து போய் பள்ளி யறைப் பஞ்சணையில் படுத்திருந்தது. பட்டுத் தலை யணைக்குப் பக்கத்தில் முடங்கல் ஒன்று இருந்தது. அதில்...

அன்புள்ள அத்தானுக்கு,

விஜயரகுநாதரைப் பார்க்கப் போன நீங்கள் தாங் கொணுக் கோபத்தோடு வருவீர்கள் என்று எனக்குத் தெரியும். சுமத்ராத் தீவிற்குப் போகும் போது நீங்கள் எனக்கு விதித்த கட்டளை 'நீ இனி மேல் ஆடலரங்கு களில் ஆடக்கூடாது' என்பதாகும். எவ்வளவோ கட்டுப்படுத்திப் பார்த்தேன்; என் வாழ்நாளில் இன்னொருத்தி ஆடற்கலைக்குப் பரிசு பெறுவதை என் மனம் அங்கீகரிக்கவில்லை. தங்களுக்குத் தெரியாமல் ஆடிப் பரிசு பெற்றுவிட வேண்டும் என்பதற்காகவே, எங்கள் உறவினரில் பேர் போன பெரிச்சிக்கோயில் அபரஞ்சி அவர்களின் பெயரால் ஆடி கீர்த்தியும், பரிசும் பெற்றேன். தங்களது ஆர்வத்தால் இப்படி ஒரு மறுபோட்டி வருமென்றே, அதில் என் தவறு அம்பலமாகுமென்றே நான் நினைக்கவில்லை. எது எப்படி இருந்தும் என்ன பயன்! நான் தங்கள் கட் டளையை மீறிவிட்டேன். எனக்கு ஆடத் தெரிந்ததால் தானே இந்த இடர்ப்பாடுகளெல்லாம் வந்து சேர்ந்தன என்பதை எண்ணி இனிமேல் எனது கால்களும், கை களும் எந்தவித உபயோகத்திற்குப் பயன்படக்

கூடாது என்று தீர்மானித்து உடம்பை அலங்கோல மாக்கும் விஷ எண்ணெய் தயாரித்துக் குடித்து விட்டேன். எனக்காக யார் அழுதும், வருந்தியும் பயனில்லை. புகழோடு வாழ்ந்து, புகழோடு சாகிறேன். தாசிகள் பிறப்பதில்லை; அவ்வாறு ஆக்கப்படுகிறார்கள் என்பதனை நான் நிலைநாட்டி விட்டதாகவே நினைக் கிறேன். இந்த வெற்றி எனக்குப் பெரும் வெற்றி!

நான் அழகாக இருக்கும்போது கண்டு களித்தீர் கள்; என் உடம்பு கெட்டழிந்த பிறகு, உருக்குலைந்த பிறகு நீங்கள் பார்க்கக் கூடாது. சாகப் போகும்போது காணும் தோற்றம்தான் கடைசிவரை மனதில் ஊச லாடிக் கொண்டிருக்கும். அதனால்தான் நான் எங்கு போகிறேன் என்று இங்கு தெரிவிக்கவில்லை. உங்கள் இருதயத்தில் நான் நிரந்தரமான அழகியாகவே வாழ விரும்புகிறேன். நீங்கள் விஜயரகுநாதரைக் காணப்போகும்போது, நான் மல்லிகை சூடியிருந் தேன்; ரோஜா வண்ணப்புடவை உடுத்தியிருந்தேன். இந்தக் கடிதத்தைப் படிக்கும்போது, தங்களுக்கு இந்த உருவம்தான் மனதில் தெரியும். இந்த உருவமே நிலைக் கட்டும்!

தங்களடியாள்,
ரஞ்சிதம்

கைகேயியின் வரம் கேட்டு தசரதன் புலம்பினானும்; அண்ணன் காடேகிவிட்ட சேதி பரதனை உலுக்கிய தாம். இதெல்லாம் இராமாயணம்! ஆனால் உண்மை யில் குமரப்பர் இந்தத் துன்பங்களை யெல்லாம் அனுப வித்தார். பூமி பிளந்தால், தலை வெடித்தால் எப்படி இருக்கும் என்பதை அவர் கண்டார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, ஒரு துக்ககரமான செய்தி காட்டுத் தீபோல் பரவியது. குன்றக்குடிக்கு அருகாமையிள்ள ஒரு சிறு குன்றின் மீது வெந்துபோன சடலத்தோடு ரஞ்சிதம் இறந்து கிடக்கிருள் என்ற துயரச் செய்தி குமரப்பருக்கு எட்டியது. உறவினர் புடை சூழ ஓடோடி வந்தார். புல்பூண்டற்ற அந்தப் பாறையின் உச்சியில் சருகாகிப் போன வாழை இலையைப் போல் அவள் சுருண்டு கிடந்தாள். அவளைச் சுற்றி ஒரு பெரிய மயிலும், பல குஞ்சுகளும் நின்று கொண்டிருந்தன.

மயிலைப்போல் ஆடி, மாநிலத்தில் பெயரீட்டியவள், அன்று மயில்களின் காவலில் மாண்டு கிடந்தாள். குமரப்பர் தாரை, தாரையாகக் கண்ணீரைக் கொட்டினர். இராமனுதபுரத்திலிருந்து ரஞ்சிதத்திற்கு விஜயரகுநாதருடைய ஜமீன் மரியாதை வந்தது. ஊரெல்லாம் திரண்டு ஓலமிட்டுக் கதறி, சந்தனக்கட்டையில் அவள் சடலத்தை ஏற்றிச் சாம்பலாக்கினர்கள்.

ரஞ்சிதத்தின் நினைவாக, குமரப்பர் அந்தப் பாறையில் நூறு மயில்களை வாங்கிவிட்டார். அவள் மயிலைப்போல் ஆடினுள் என்பதற்கா, அல்லது மயில்கள் அவளைக் காவல் காத்தன என்பதற்கா என்று அவர் தெரிவிக்கவில்லை. இன்றும் அந்தக் குன்று "மயிலாடும் பாறை" என்றே அழைக்கப்படுகிறது.

"மயிலாடும் பாறை" காரைக்குடியிலிருந்து மதுரை செல்லும் நெடுஞ்சாலையில் ஏழாவது கல்லில் இருக்கிறது.

---

## சுயமரியாதைச் சுடர்!

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பாக னேரி—பட்டமங்கலம் என்ற இரு கள்ளர் நாடு களின் உறவு முறையைப் பற்றியது. இரு நாட்டினரும் இந்தக் கதையை தங்கள் தங்கள் குடும்பக் கதையாகக் கருதிக் கொண்டிருக் கிறார்கள். இந்தச் சம்பவங்களால் இருநாட் டினருக்கும் நீண்ட பல ஆண்டுகளாகக் கொள் விணை-கொடுப்பிணை கூட இல்லாமல் இருந்து வந்தது. இன்றைய அரசியல் எழுச்சியும், சமூக விழிப்புணர்ச்சியும் இரு சாராரையும் நெருங்க வைத்திருக்கின்றன. ஒரே மொழி, ஒரே வகுப்பு, ஒரே சாதி—இருப்பினும் இரு சாராருக்கும் இடையே கொழுந்துவிட்டெறிந்த சுயமரியாதை உணர்ச்சிதான் இந்தச் சரித் திரத்திற்கு அடிப்படையாக அமைந்து விட்டது.

தென்னரசு

# செம்மாதுளை

## வாக்குமூலம்

இராமநாதபுர மாவட்டத்தில் கீர்த்தியுடன் வாழ்ந்து வரும் கள்ளர் வகுப்பாரிடையே நடைபெற்ற ஒரு கலவரத் தைப் பற்றிக் கேள்விப்பட்டேன். எப்போதாவது அதை நூல் வடிவாக்க வேண்டுமென்று அன்றே முடிவு செய்தேன். அந்த ஆசையின் தூண்டுதலால் அந்தக் கலகத்தைப்பற்றி, நிகழ்ச்சி நடைபெற்ற ஊரைச் சார்ந்த எனது நண்பர்கள், அவர்களின் வயோதிகப் பெற்றோர் முதலியோரிடம் விசாரித்தேன். அறிந் தவற்றைச் சொன்னார்கள். குறித்துக் கொண்டேன். இன்னும் கண்கூடாக விளங்கும் சில அழியாச் சின்னங்களைக் காட்டினார்கள். பூரித்துப் போனேன். எழுதுவதற்கு உற்சாகம் பிறந்தது. அதன் பிறகு கள்ளர்கள் பற்றிய நூல்கள் பலவற் றைத் தேடிப் பிடித்து புரட்டிப் பார்த்தேன். அதில் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் எழுதிய 'கள்ளர் சரித்திரம்' என்ற நூல் எனக்குப் பெரிதும் பயன் பட்டது.

திரு. நாட்டார் அவர்கள் அகநானூற்றுச் செய்யுளை முன் வைத்து, வேங்கடமலையில் வசித்தோரும் அஞ்சா நெஞ்சு படைத்தவருமாகிய கள்ளர்கள் 'கள்ளர் பெருமகன் தென்னன்' என்ற பாண்டியனால் தென்னாட்டுக்கு அழைக்கப்பட்டனர் என்றும், படைத் தலைவர்கள், தந்திரிமார் என்று இவர்கள் அழைக்கப்பட்டனர் என்றும் சுட்டிக் காட்டியிருக்கிறார். கள்ளர்கள் நிறைந்திருந்த நாடுகளில் கள்ளர்களே தலைவர்

களாக இருந்தமையால் அந்த நாடு கள்ளர் நாடு என வழங்கப்பட்டிருக்கின்றது. கள்ளர்களுக்கு நாட்டார் என்னும் பொதுப் பெயர் இன்றும் வழங்கிவருவது இதற்குச் சான்ருகும்.

ஈதர்ஸ்டன் என்பார் எழுதிய 'தென்னிந்திய சாதி வகுப்பு வரலாறு' என்னும் நூலில் வரும் மதுரைக் கள்ளர் நாடுகளில், கதையில் முக்கிய அங்கம் வகிக்கும் பாகனேரி நாடும் இடம் பெற்றிருக்கிறது. இந்த நாடு இப்போது சிவகங்கைக் கோட்டத்தின் வடகிழக்குத் திசையில் காலூன்றி நிற்கிறது.

திரு. எஸ். குமாரசாமி மேல்கொண்டார் அவர்கள் எழுதிய ஒரு செப்புப் பட்டயத்தில் வரும் கள்ளர் நாடுகளில் பட்டமங்கல நாடு இடம் பெற்றிருக்கிறது. பாகனேரிக்கு இந்தக் கதையில் எவ்வளவு பங்குண்டோ அந்த அளவு பங்கு பட்டமங்கலத்திற்கும் உண்டு. இந்த நாடு இப்போது திருப்புத்தூர் கோட்டத்தின் தென் பகுதியாக விளங்கி வருகிறது. அந்தந்த நாடுகள், இயங்கிவரும் முறையைப் பார்த்தால் தங்களுக்கென வகுக்கப்பட்ட ஒரு சமூகச் சட்டத்திற்கு அவர்கள் தலைவணங்கிச் சேவை புரிகிருர்கள் என்பது தெளிவாகப் புரியும்.

கள்ளர் நாடுகளில் ஒவ்வொரு ஊர்களிலும் கள்ளர் குலத்தவரில் ஒருவரோ பலரோ தலைவராக இருப்பார்கள். அவர்களுக்கு அம்பலகாரர் என்று சிறப்புப் பெயர் தரப்படும். நாட்டுக் கூட்டங்களில் அந்த அம்பலகாரர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். நாட்டுக் கூட்டத்தின் தீர்ப்பு எவராலும் மீற முடியாத சக்திபெற்றதாக விளங்கிற்று. அத்தகைய கட்டுப்பாடு மிக்க ஒரு வகுப்பாரிடையே நடைபெற்ற பெருங் கலவரத்தின் உண்மையான சரித்திரம்தான் இந்நூல். மிகுந்த கவனம் கொண்டு எழுதப்பட்ட பாடப் புத்தகம் என்றுகூடச் சொல்வேன்.

சரித்திரக் கதை எழுதும் போது எவ்வளவு மகிழ்ச்சி பிறக்கிறதோ அந்த அளவுக்குப் பயமும் பிறக்கிறது. அந்த நேரத்தில், கதையை எழுதும் எழுத்தாளன், ஒரு பொதுச்

சொத்தைக் கூடுதல் குறைச்சலின்றி சகோதரர்களுக்குப் பிரித்துக் கொடுக்கும் பஞ்சாயத்தார் நிலையில் நின்று பெருமூச்சு விடுகிறுன். கதையிலே சம்பந்தப்படாதவர்கள், கதையைப் படித்துவிட்டுச் சொல்லழகைக் குறிப்பிட்டுப் பாராட்டுவார்கள்; பொருளழகைச் சுட்டிக் காட்டித் தட்டிக் கொடுப்பார்கள். ஆனல், அந்தக் கதையில் வரும் சம்பவங்களுடனே, அல்லது கதாபாத்திரங்களுடனே ஈடுபாடுடையவர்கள் எங்காவதிருந்தால், எங்கே குறையிருக்கிறது என்றுதான் பார்ப்பார்கள். இதையெல்லாம் எண்ணித்தான், மிகவும் அக்கறை எடுத்துக் கொண்டு, நடந்ததை நடந்தபடி எழுதத் துணிந்தேன். அதனல் எனக்கு ஒரு பக்கம் சாதகமும் ஏற்பட்டிருக்கிறது; இன்னெரு பக்கம் பாதகமும் ஏற்பட்டிருக்கிறது. நடந்ததை நடந்தபடி எழுதியிருப்பதால் தகராறுக்குக் காரணமானவர்கள் யார், குற்றம் யார் பக்கம், என்பதை வாசகர்களையே தீர்மானித்துக் கொள்ளச் செய்ய முடிந்தது. இது எனக்குச் சாதகமாய்ப் போய் விட்டது. ஆனல், உண்மையைக் கூட்டாமல் குறைக்காமல் சொல்லியிருப்பதால் சில கதாபாத்திரங்கள் என்ன ஆனர்கள் என்பதைத் தெளிவாக விளக்க முடியவில்லை. நாவல் படித்துச் சுவை கண்டோர் இதை ஒரு குறையாகத்தானே கருதுவார்கள். இது எனக்குப் பாதகமல்லவா!

இந்தக் கதை, மருது பாண்டியருக்கும் வெள்ளையருக்கும் போராட்டம் நடந்து கொண்டிருந்த காலத்தில்—அதாவது இரண்டு தலைமுறைகளுக்கு முன்பு நடந்திருப்பதாக நிகழ்ச்சிகள் நமக்குச் சொல்கின்றன. மிகப்பெரிய யுத்தம் ஒன்று வெள்ளையருக்கும் மறவர் திலகங்களான மருது சகோதரர்களுக்கும் நடந்து கொண்டிருக்கும் போது, பாகனேரியிலும் பட்டமங்கலத்திலும் நடைபெற்ற இந்தத் தகராறு ஒரு உள்நாட்டுக் குழப்பமாகவே கருதப்பட்டதால் முக்கியத்துவம் பெருது போய்விட்டது.

இன்று அரசியல் துறையில் தலைதூக்கி நிற்கும் இரண்டு நாடுகளுக்கிடையே இப்படியொரு வெட்டுக் குத்து அன்று

நடந்திருக்குமா என்று நினைத்துப் பார்க்க முடியவில்லைதான். ஆனால் நடந்திருக்கிறது. அதற்குச் சான்றாக 'பட்டமங்கலத்துப் பிள்ளையார்', 'குருதி வழிப்பொட்டல்', 'கத்தப்பட்டுச் சிலை' முதலியன இன்றும் சாகாத சாட்சிகளாக ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்றன. அவைகளை நேரில் சென்று பார்க்குந் தோறும் பார்க்குந் தோறும் எங்கிருந்தோ வந்து ஒரு புத்துணர்ச்சி நம்மைத் தட்டி யெழுப்பி விடுகிறது. கண்கள் சிவக்கின்றன; நெஞ்சு கொதிக்கிறது; ''ஒரே வகுப்பாரிடையே இப்படியா போரிட்டுக் கொள்வது!'' என்று நம்மையும் அறியாமல் சொல்லிவிடத் தோன்றுகிறது.

வாளுக்குவேலி, வைரமுத்தன், ஆதப்பன், கல்யாணி, சுந்தராம்பாள், வடிவாம்பாள்—இவர்கள், கதையைப் படிப்போர் உள்ளங்களில் மறையாத உயிர்ப் படங்களாகி விடுகின்றனர்.

கதாநாயகி கல்யாணி, பவளம் போன்ற தித்திக்கும் முத்துக்களை உள்ளடக்கிக் கொண்டிருக்கும் செம்மாதுளை போன்றவள். புறத் தோற்றத்தால் உள்ளெண்ணத்தை விளக்கிக் காட்ட அவளுக்கு ஆற்றலில்லை. வினயம் துளியும் இல்லாதவள். விடிந்தால் கண்ணீர் வடிப்பதே அவளுக்குத் தொழிலாகிவிட்டது. அவள் இன்றும் பாகனேரி மங்கையர்க்கு ஒரு தீப ஜோதியாக விளங்குகிறாள். மீளாத்துயரில் சிக்குண்டோர் சாகாப் புகழ் பெற்றுவிடுகிறார்கள். கல்யாணி அதற்கு அத்தாட்சி. வாழ்க அவள் புகழ். அந்தப் புகழ்விளக்கின் கண்ணீர்க் காதையை வரைய எனக்குத் துணைநின்ற எனதருமை நண்பர் பாகனேரி உ. பில்லப்பன் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனி நீங்கள் தொடரலாம்! அதோ சூரியன் மறைந்துவிட்டான்! சுற்றிலும் இருள் சூழ்ந்துவிட்டது.

அன்பன்,

எஸ். எஸ். தென்னரசு.

ஊர் உறங்கிவிட்டது. மேகத்தில் மிதந்து வந்த இளநிலவின் குளிர்ந்த ஒளி, தடாகத்தில் சிற்றலையில் பட்டு, மெல்லிய வெள்ளிக் கம்பிகளாக இளகி ஓடுவது போல் தோன்றியது. அகல விரிந்து அறிஞர்களின் இதயங்களுக்கு உதாரணமாக விளங்கிய குளத்தங் கரை ஆலமரத்தில் குடித்தனம் நடத்திய பறவைக ளெல்லாம் கண்மூடிப் பெருமூச்சு விட்டுக் கொண் டிருந்தன. பாகனேரி நாட்டில் பிரசித்தி பெற்று விளங்கிய பில்லாத்தா கோயில் அகல் விளக்குகள் கூட அணைந்து விட்டன. அந்த விளக்கின் நெய்த்திரியி லிருந்து கிளம்பிய முறுகல் வாடைமட்டும் தூங்கும் பாகனேரிக்குத் துப்பட்டியாகப் போர்த்திக் கொண் டிருந்தது. இந்த நாட்டில் பரம்பரை பரம்பரையாக இருந்து வரும் 'சில்' வண்டுகள் வேறு 'கிய்' யென்று கத்திக் கொண்டிருந்தன.

ஊருக்கு அப்பால் ஒரு கல் தொலைவிலிருந்த ஒரு காரை வீட்டின் உச்சி மாடத்தில் மட்டும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. மஞ்சள் துணியை விரித்தாற் போல் செதுக்கப்பட்ட பாதையொன்று பில்லாத்தா கோயிலிலிருந்து தொடங்கி, அந்தக் காரை வீட்டின் வாசலைத் தொட்டுக் கொண்டிருந்தது. கும்பினியார் தென்னாட்டை ஆக்ரமிக்க முயற்சி செய்து வந்த காலத்தில், கள்ளர்களின்பரிபாலனத்தில் இருந்து வந்த ஒரு சிற்றூரில் ஒரு கல் தூரத்திற்கு அப்படி ஒரு பாதை அமைக்கப்பட்டிருந்ததென்றால் அந்தக் கோட்டைக்கு உடையவனைச் சாமான்யனென்று சொல்லிவிட முடியுமா?

கழுத்திலே தோல் வளையங்கள் தொங்க, இரண்டு வேட்டை நாய்கள் வாசற்படியில் தலை சாய்த்துக் கிடந்தன. வேலும் அம்பும் தாங்கிய இருவர் அடி அளப்பதுபோல் அந்த வீட்டைச் சுற்றிக் காவல் புரிந்து கொண்டிருந்தார்கள். உச்சி மாடத்தில் உலாத்திக்கொண்டிருந்த வாளுக்குவேலித்தேவனின் முகத் தோற்றத்தை, எரிந்து கொண்டிருந்த அந்தச் சிறு விளக்கு தெளிவாக்கிக் கொண்டிருந்தது. புருவங்களின் நெளிவும், புஜங்களின் விம்மலும், தேவன் ஏதோ தீராக்கோபத்திலிருக்கிறுன் என்பதை உணர்த்திக் கொண்டிருந்தன. தொட்டில் குழந்தைபோல் தூங்கும் பாகனேரியை ஒருமுறை நினைத்துப் பார்த்துவிட்டு, சினங்கொண்ட புலி போல் மாடத்திலே உலாத்திக் கொண்டிருக்கும் வாளுக்குவேலியைப் பார்த்தால், தலைவன் வந்து விட்டான், இனிப் பயமில்லை யென்று எண்ணித்தான் பாகனேரி இப்படிக் குறட்டைவிட்டுத் தூங்குகிறது என்றுதான் எவருக்கும் தோன்றும். உண்மையும் அதுதான். விஜய நகரப் பேரரசின் பிரதிநிதியாக மதுரையை ஆண்ட நாயக்க மன்னரின் அரசாங்கத்தைச் சேர்ந்த மாமல்லன் என்ற மல்யுத்த வீரனை வாளுக்குவேலியின் தம்பி கருத்த ஆதப்பன், வெற்றி கொண்டு விட்டான் என்பதற்காக மதுரை மன்னன் ஏற்பாடு செய்திருந்த பாராட்டு விழாவுக்குப் போய்விட்டு அன்று காலைதான் வாளுக்கு வேலி பாகனேரி திரும்பியிருந்தான். தம்பிக்குக் கிடைத்த கீர்த்தியையும், தரப்பட்ட வெள்ளிக் கேடயங்களையும் எண்ணி எண்ணிப் பூரித்துக் கிடந்த அவன் உள்ளத்தில் அன்று இரவு கவலையும் கோபமும் குடியேறிவிட்டன. முகத்திலே இருந்த களிப்பு, கனலாக மாறியிருந்தது. 'இப்படைத் தோற்கின் எப்படை ஜெயிக்கும்?' என்ற

வீர வரிகளேயே போர்க்குரலாக முழக்கமிட்டுப் பழகிய மறவர் தலைவன், மதுரை விட்டுப் பாகனேரி சேர்ந்த சில நாழிகைகளுக்குள்ளேயே சிந்தை நொந்தான்—சினவிழி பெற்றான் என்றால்......?

அகிலத்தைக் கட்டியாளக்கூடிய வல்லமை யிருந்தாலும், அவன் இதயத்தையும் குடைந்து கூடாக்கும் கவலையும் அதே அகிலத்தில் எங்கோ ஒரு புதரில் இருக்கத்தான் செய்கிறது. தீநாக்கைச் சுழற்றிக் கொண்டு நெஞ்சுக்கு நேராகப் பாய வந்த எத்தனையோ வேங்கைகளை அரண்மனை சிறுவயல் காட்டில் குத்திக் கொன்றிருக்கிறான் வாளுக்குவேலி. பல பேரைக் கொன்று, பல எருதுகளைத் தின்று சுற்று வட்டாரத்தையே பீதிகொள்ள வைத்திருந்த பதினாறடி வேங்கையொன்றைத் தம் தம்பியின் உதவியால் இரண்டு மணி நேரம் போரிட்டு வீழ்த்தி, எதிரிகளையும் நிலை கலங்க வைத்திருக்கிறான். ஆனாலும் வாள் கோட்டைத் தலைவன் அன்றைய தினம் சிந்தித்தான்—இதற்குப் புஜபலத்தைப் பிரயோகித்து என்ன பயன் பெற முடியும் என்று சந்தேகித்தான்! அப்படி என்ன கவலையோ தேவனுக்கு?

அதுவரை கல்லாய்ச் சமைந்திருந்த மரங்கள் கொஞ்சம் அசைய ஆரம்பித்தன. குளிர்ந்த காற்று வீசத் தொடங்கியது. தேவன் வழக்கமாகப் போட்டுக் கொள்கிற பச்சைக் கம்பளியைத் தோளில் போட்டுக் கொண்டு, நீள அரிவாளுடன் கீழே இறங்கி வந்தான். தேவனின் காலடி ஓசை கேட்டு, கோட்டைக் காவலர்கள் எழுந்து நின்றார்கள். நாய்கள் வாலாட்டிக் கொண்டு தேவனிடம் ஓடிவந்து குதித்தன.

"டே கவுதாரி!"—தேவன் கவலை தோய்ந்த குரலில் காவல்காரனை அழைத்தான்.

கவுதாரியும், சின்னக் கோழியும் ஓடிவந்து குற்ற வாளிகளைப்போலக் கைகட்டி நின்றார்கள். பத்து வருஷ காலமாக விசுவாசத்துடன் கோட்டைக்காவலர் களாகவே வேலைபார்த்து வரும் அவர்கள் இருவருக்கும் தேவன் கொடுத்த பட்டப் பெயர்கள்தான் கவுதாரி என்பதும், சின்னக்கோழி என்பதும்! அவர்களும் அந்தப் பட்டப் பெயர் சொல்லி அழைப்பதையேதான் விரும்பினார்கள். ஏன்? "இவர்கள் இருவரும் சுறுசுறுப் பானவர்கள். அதனால்தான் அந்தப் பெயர்களை அவர் களுக்குக் கொடுத்திருக்கிறேன்" என்று தேவன் அடிக் கடி விருந்தாளிகளிடம் சொல்வதுண்டு. தேவன் மதுரைக்குப் போயிருந்த சமயத்தில் கோட்டையில் ஏதும் திருட்டுப் போய்விட்டதோ என்று அஞ்சிய காவலர்களுக்குப் பயத்தினால் உள்ளம் அடித்துக் கொண்டிருந்தது மேலும், எப்போதுமே நெற்றி மட்டக்கம்போடு வெளியில் வரும் தேவன் அன்று திருப்பாச்சேத்தி நீண்ட அரிவாளுடன் வாசலுக்கு வந்திருந்தான்.

"ஏண்டா கவுதாரி!"

"எசமான்!"

"இந்த ஓலை எப்ப வந்தது?"

"நேத்திக்கு நடுச் சாமத்துக்கு வந்துதுங்க! ரொம்ப ரகசியமுன்னு சொன்னாங்க. கல்யாணி நாச்சியாரு பேரைச் சொல்லித்தானுங்க ஓலையைக் குடுத்தாரு."

"வழக்கப்படி ஆளுக்கு அடையாளக் குறி பார்த் துக் கொண்டாயா?"

"கன்னத்திலே ஒரு ஆறாத புண்ணு. கழுத்திலே ஒரு கரும்புள்ளி. அவ்வளவுதானுங்க!"

"பேரு கேட்டாயா?"

கவுதாரி ஒன்றும் பேசவில்லை. ஆனால், மன்னித்து விடும்படி அவன் விழிகள் கெஞ்சின.

"மடையன்! மடையன்!!" என்று கடிந்து பல்லைக் கடித்துக்கொண்டே தேவன் மறுபடியும் உச்சி மாடத்திற்குப் போய்விட்டான். இப்போது முன்னைக் காட்டிலும் வேகமாக, புறங்கையைக் கட்டிக்கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

கன்னத்தில் வடு, கழுத்தில் கரும்புள்ளி—இந்த இரண்டு அடையாளங்களும் தேவனைக் குழப்ப ஆரம்பித்தன. நடப்பதும், நிற்பதும், கைகளைப் பிசைவதுமாக இருந்தான். முடிவு காண முடியாத அவனது குழப்பம், ஓலை கொண்டுவந்தவனின் பெயரைக் கேட்டு கொள்ளாத காவலர்களின் பேரிலேயே அதிகக் கோபத்தை ஊட்டிக் கொண்டிருந்தது.

"கவுதாரி!" என்று உச்சிமாடத்திலிருந்தபடியே கூவினான்.

"வந்துட்டேனுங்க!" என்று துடித்துக்கொண்டே உள்ளே ஓடினான் கவுதாரி!

"ஓலை கொண்டுவந்தவன் வாலிபனா, நடுத்தர ஆசாமியா?

"சின்ன மீசை கூட வச்சிருந்தாருங்க!"

தேவனுக்குக் குழப்பம் வளர்ந்தது. அருமைத் தங்கை கல்யாணியின் அழகுருவம் அவன் மனத்திரையில் வந்து நின்றது. தேவன் ஒரு கணம் மெய்மறந்து நின்றான். மூன்றாவது முறையாக ஓலைச் சுருளை விரித்துப் படித்தான்.

அன்புள்ள பெரியண்ணாவுக்கு,

நீண்ட யோசனைக்குப் பிறகு இந்த ஓலையை எழுதத் துணிந்தேன். பட்டமங்கலத்து வைரமுத்தருக்கு வாழ்க்கைப்பட வேண்டுமென்ற எனது ஆசையை நிறைவேற்றி வைத்தீர்கள். தங்கையின் விருப்பத்தை பூர்த்தி செய்யும் தமையனைப் பெற்றிருக்கிறது கள்ளர் தேசம் என்று நாட்டவர் பெருமைப்பட்டார்கள். ஆனால் என் தலையில் நானே மண்ணை வாரி இறைத்துக் கொண்டேன் என்பது இப்போதுதான் புரிகிறது. கொட்டும் தேள்களும், கொடிய நாகங்களும் இழையும் மரணக்கிணற்றில் என்னையுமறியாமல் தடுமாறி விழுந்துவிட்டேன்.

ஏழைப் பெண்களின் இதயங்களைக் காட்டிலும் எட்டுச் சுவர்களுக்குப்பால் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் செல்வக் குடும்பத்துப் பெண்ணின் இதயம் மெல்லியதாகத்தான் இருக்கிறது. நல்லது கெட்டதுகளை ஆராயும் திறன் பணக்கார உள்ளத்திற்கு அறவே இல்லை அண்ணா. போன வருஷம் கீழ்க்கோட்டைத் திருவிழாவுக்குப் போயிருந்தபோதுதான் வைரமுத்தரை நான் முதன் முதலாகப் பார்த்தேன். வாட்டசாட்டமான உருவம். அவரைச் சுற்றி ஒரு வாலிபப் படை. அவரைப்பற்றிச் சிறு பிள்ளையிலிருந்தே நான் கேள்விப் பட்டிருந்த கதைகளெல்லாம் அப்போது என் மனக்களத்தில் அணிவகுத்து நின்றன. செல்வத்தாலும், செங்களத்தில் போராடி ஜெயம் பெற்றதாலும் புகழ் சேர்த்துக் கொண்டவர்களின் தனிப்பட்டக் கெட்ட குணங்களை மறைத்து வைப்பதையே பெருந்தொண்டாக நமது தேசம் கருதிக் கொண்டு வந்திருக்கிறது. அது போலவே வைரமுத்தரின் வீரப்

பிரதாபங்களுள் அவருடைய வீம்பும், வெறிக் குணங்களும் புதையுண்டு போயிருந்தன. அஞ்சாத நெஞ்சுடைவர், அபக்கியாதி சிறிதும் பெற்றறியாதவர், அடலேறு வம்சத்தின் முன்னோடி என்றெல்லாம் பாகனேரி நாட்டிலேயே பலர் புகழ்வார்கள் வைர முத்தரை! அந்தப் புகழ்மாலையின் நறுமணத்தில் மயங்கிப் போனேன்!

நான் மட்டுந்தானா? என்னைப் பார்ப்பதற்கு மாதக் கணக்கில் எதிர்பார்த்து இருந்தவரைப் போலல்லவா அவர் விழிகள் என்மீது மொய்த்துக் கிடந்தன! நடந்து கொண்டே அவர் திரும்பித் திரும்பிப் பார்த்தார்; நான் நின்று கொண்டே தலை குனிந்து குனிந்து நிமிர்ந்தேன். நமது வண்டியில் கட்டியிருந்த முன் திரையில் எழுதப்பட்டிருந்த நமது வீட்டு விலாசம் என்னை வாளுக்குவேலியின் தங்கச்சி என்று அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தது. அந்த ஒரு நாள் சந்திப்பு என் வாழ்வையே கருக்கி விடும் என்பதை நான் எப்படி உணரமுடியும்? சமமான அந்தஸ்து, இணையுள்ள ஆள்கட்டு என்று எண்ணித்தான் நீங்களும் ஒப்புதல் தெரிவித்தீர்கள். ஆனால். பழி தீர்த்துக் கொள்ளத்தான் பட்டமங்கலத்தார் பாசவலை வீசினார், பாகனேரியில் பெண்ணெடுத்தார் என்பது இப்போதுதானே புரிகிறது!

நான் கொலு வைத்து விளையாடிய காலத்திலேயே 'கல்யாணி மீது யாரும் சுடு சொல் வீசக் கூடாது' என்று கட்டளை பிறப்பித்திருந்தீர்கள். அனல் மூச்சுப் பட்டாலும் வெந்து போகும் அனிச்சம்பூ போன்ற என் மனம் இப்போது பட்டமங்கலத்தில், படும் துயரத்தைப் பார்த்தால் உங்களது வைர நெஞ்சு எப்படிக்

கொதிக்கும் என்பதை என்னல் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியவில்லை. கூந்தலைப் பிய்ப்பதும், குமட்டில் இடிப்பதும், கழுத்தைப் பிடித்துத் தள்ளுவதும் இங்கே தினசரிக் கூத்தாகி விட்டன.

வாய்க்கு ருசியாகச் சமைக்கத் தெரிவில்லையாம் எனக்கு. "வாளுக்கு வேலி தங்கைதானே— கூழுக் காய்ச்சித்தானே பழக்கப்பட்டிருப்பாய்! நாலுவகைக் கறி சமைத்து நல்ல கஞ்சி குடித்திருந்தால் தெரியும்" என்று இடித்துப் பேசுகிருர். எப்படிச் சகிப்பேன் இதையெல்லாம்? முடியுமா என்னல்? பாற் சோறும், பழச்சாறும் நாங்கள் போடும் பிச்சை உணவு என்று பதில் சொன்னல் கணவனை எதிர்த்துப் பேசுகிருள் என்று சமுதாயம் பழிக்கும்."

—இந்த இடத்தில் படிக்கும்போது தேவனின் கண்கள் கொதித்தன. முகத்தைச் சுழித்து ஏறிட்டுப் பார்த்தான். கொந்தளித்துக் கிடந்த அவனது மனதின் அலை ஓசை, சிவந்து குருவி ரத்தமாகியிருந்த அவனது விழிகளில் பிரதிபலித்தது. ஒருகணம் சிலையாக நின்ருன். பின் ஓலையைத் தொடர்ந்தான்:

"ஏதோ ஒரு ரகசியத்தை மனதில் மறைத்து வைத்துக் கொண்டுதான் வைரமுத்தர் நம் வீட்டில் சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கிருர் என்றே எனக்குப் படுகிறது. இல்லாவிட்டால் பாகனேரி மஞ்சுவிரட்டைப் பற்றியே ஏன் அவர் அடிக்கடி கிண்டிக் காட்ட வேண்டும். அதில் என்னதான் நடந்ததோ? சிறுமி நான்! நமது தொழில் வம்புச் சண்டைக்கு வருவது தான் என்கிருர். ஏச்சையும் பேச்சையும் தாங்க முடியாமல் வீட்டின் எங்காவது ஒரு மூலையில் அழுது கொண்டிருந்தால் ஓடி வந்து மிதிக்கிருர்; கிள்ளுகிருர்!

இப்படித்தான் போன வெள்ளிக்கிழமை ஒரு தகராறு நடந்தது. "என்னை எவ்வளவு வேண்டுமானாலும் பேசுங்கள்; என் அண்ணனைப் பேசாதீர்கள்" என்று என்னையும் அறியாமல் சொல்லிவிட்டேன். அவ்வளவு தான்! பல்லைக் கடித்துக்கொண்டு கையிலிருந்த திறவு கோலை எறிந்தார். என் கன்னத்தில் ஒரு ரத்தக் காயம் ஏற்பட்டுவிட்டது. அந்த வடு இன்னும் காயவில்லை."

இப்போது தேவனுக்குச் சந்தேகம் தீர்ந்துவிட்டது. கன்னத்தில் வடு என்று கவுதாரி சொன்னது அவனை உறுத்திக் கொண்டிருந்தது. கல்யாணிதான் ஆண் வேடத்தில் வந்திருக்கிருள் என்று தேவன் தீர்மானித்துக் கொண்டான்.

அன்று இரவு முழுவதும் அவன் தூங்கவில்லை. எப்படித் தூங்குவான்? ஊசிமுனையளவு கவுரவத்திற்கு மாசு ஏற்பட்டாலும் எண்ணி எண்ணி உடலை வருத்திக் கொள்ளும் கள்ளர் குலத்தின் தீபச் சுடராக விளங்கிய வாளுக்கு வேலி, தன் தங்கைக்குத் தீராத மனவேதனை என்பதை அறிந்த பிறகு அவன் மனம் துயில் கொள்ள எப்படித் துணியும்?

இரவு விழிப்பும், இடைவிடாத சிந்தனையும் தேவன் முகத்தில் எண்ணெய் படியச் செய்தன. ஓலையைச் சுருட்டி இடுப்பில் செருகிக்கொண்டு உலாத்த ஆரம்பித்தான். பாகனேரிக்கும் பட்டமங்கலத்திற்கும் பல முறை போய்த் திரும்பும் தொலைவு, அன்று இரவு தேவன் உலாத்தியிருக்கிருன். நேரம் போனதே அவனுக்குத் தெரியவில்லை. எண்ணமெல்லாம், கல்யாணியின் துயரை எப்படித் தீர்ப்பது என்பதிலேயே பின்னிக் கிடந்தன. வாளுக்கு வேலியின் பழக்கமான குணம், வைரமுத்தனைத் தீர்த்துக் கட்டிவிடத் தூண்டியது. ஆனால் கல்யாணியின் விதவைக் கோலம், சினந்து

திறனும் அவனது தசைக் கட்டிகளைச் சாந்தப் படுத்தியது. பாவம், எந்த முடிவும் காணுமல் அயர்ந்து போய், கயிற்றுக் கட்டிலில் சாய்ந்தான்.

'கட்டுச் சண்டைக்காக' தேவன் வளர்த்து வந்த வெள்ளைச் சேவல் கூவியது! விடியப்போகிறது என்று அப்போதுதான் தெரிந்துகொண்டான் தேவன்.

சிடுசிடுத்த முகத்தோடு கீழே இறங்கி வந்தான். களைப்பும் கோபமும் இருமுனைத் தாக்குதல் நடத்தி, தேவனின் முகப்பொலிவையேமாற்றி வைத்திருந்தன. கவிதாரியும், சின்னக் கோழியும் அப்போதுதான் தோட்டத்துப் பக்கமாய் போய்விட்டு முகப்புக்குவந்து கொண்டிருந்தார்கள். தேவன் இறங்கி வந்ததைக் கண்டதும் கவுதாரி அவனருகில் வந்து இன்னெரு ஓலைச் சுருளைக் கொடுத்தான்.

கேள்விக்குறிகள் முற்றுகையிட்ட முகத்தோடு தேவன் அந்த ஓலையைப் பிரித்தான். கல்யாணியை வைரமுத்தன் அங்கஹீனம் செய்து விடுவானே என்ற கவலைதான் வாளுக்குவேலிக்கு! ஆனுல் ஓலையில் என்ன எழுதப்பட்டிருந்தது?

> மதிப்பிற்குரிய மைத்துனருக்கு வைரமுத்தன் எழுதியது. இவடம்க்ஷேமம். அவடம் க்ஷேமமறிய மிக்க ஆவல். இப்பவும் அடுத்த ஞாயிற்றுக்கிழமை எங்களூரில் நடக்க இருக்கும் புரவியெடுப்புத் திருவிழாவுக்கு வந்து சேரவேண்டியது. கல்யாணியும் தங்களைப் பார்க்க மிகுந்த ஆவல் உள்ளவளாயிருக்கிருள்.
>
> இப்படிக்கு,
> வைரமுத்தன்;
> பட்டமங்கலம்.

தேவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனுல், எங்கோ தனக்கு விரோதமாக, சதி முளைவிட்டிருக்கிறது என்று மட்டும் அவன் முடிவு செய்து கொண்டான். கல்யாணியின் திருமணத்தன்று பட்டமங்கலம் போனவன், மறுமுறை போவதற்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தும் தேவன் தட்டிக் கழித்துவிட்டான். இந்த முறை அவனுல் தட்டிக் கழித்துவிட முடியுமா?

பச்சைக் கொடி கிழிந்தது!

வைரமுத்தனைத் தெரியாவிட்டாலும் அந்தப் பகுதியில் அவனுடைய மஞ்சு விரட்டுக் காளையைப் பார்க்காதவர்கள் இருக்கமாட்டார்கள். அவ்வளவு பிரசித்திபெற்ற மூர்க்கத்தனமான காளை. தை மாதம் மூன்ரும் தேதி திருப்பத்தூரை அடுத்திருக்கும் சிருவயலில் ஆரம்பமாகும் மஞ்சு விரட்டிலிருந்து, ஆனி மாதம் பாகனேரியில் நடைபெறும் மஞ்சு விரட்டுவரை ஒன்றுவிடாமல் கலந்துகொண்டு பிடிபடாமல் பலரைக் குத்திக் காயப்படுத்தி "குடல் பிடுங்கி" என்று பேர் பெற்றுவிட்டது வைரமுத்தனின் கருமயிலைக் காளை. 'தொழு' திறக்குமுன்பு மஞ்சு விரட்டுக்கு வந்திருப்போர் அத்தனை பேரும் பட்டமங்கலத்துக் கருமயிலை வந்திருக்கிறதாவென்று விசாரித்து நேரில் போய்ப் பார்க்காதிருக்க மாட்டார்கள். ஒரு சிலர் அந்தக் காளை மீதுள்ள பற்றுதல் காரணமாக, 'மேலோகத்து ரிஷப வாகனமோ' என்று புகழ்ந்து தங்களையுமறியாமல் கையெடுத்துக் கும்பிட்டு விடுவார்கள். ரத்தினம் போன்ற குங்குமப் பொட்டு—கொம்பைச் சுற்றிச் சாயத்துண்டு—மணப் பெண்ணுக்குக் கட்டுவதுபோல நெற்றிப் பட்டயம்—எகிப்து நாட்டுக் கோபுரத்தைப் போன்ற திமில்—சிவாஜியின் ஏறெடுத்த பார்வை—அப்பப்பா!

இரும்புக் குண்டு உருண்டோடுவதைப் போன்ற அந்த மாட்டினுடைய ஓட்டம் தெற்குச் சீமையில் மறக்க முடியாத சரித்திரக் குறிப்பாயிருக்கிறது. அந்த மாட்டைத் தட்டிக் கொடுத்து, கண்ணுக்கு கண்ணுகப் பாது காத்து வந்தான் வைரமுத்தன் என்கிறபோது, அந்தக் காளையினுல் அவனுக்கு ஏன் புகழ் கிடைத்திருக்காது! ஆம்! அந்த வீரக்காளை வைரமுத்தனுடைய நெஞ்சு உரத்திற்கு எடைக் கல்லாக விளங்கியது.

வைரமுத்தன் கைக்கு அந்தக் காளை வந்ததிலிருந்து எந்த மஞ்சு விரட்டிலும் அதன்மீது எவரும் கை போட்டதில்லை என்று சொல்லுவார்கள். ஏன், வைர முத்தனே பல இடங்களில் சவால் விட்டிருக்கிருன்.

தமிழ் நாட்டில் ஒரு மஞ்சு விரட்டில் பிரகடனப் படுத்துகிற ஒரு அறிக்கை தமிழ் நாடு முழுதும் தெரி விக்கப்பட்டுவிட்டதாக அர்த்தமாம்! ஏனென்ருல் தமிழ் நாட்டைச் சேர்ந்த அத்தனை வாலிபர்களும் மஞ்சு விரட்டில் கலந்து கொள்வார்களாம்! அதனுல் தான் வைரமுத்தன் சிருவயல் மஞ்சு விரட்டில் நெஞ் சுரத்தோடு ஒரு தகவலை வெளியிட்டான். தன்னுடைய காளையைப் பிடிப்பதற்குத் தமிழ் நாட்டில் ஆளில்லை என்பதற்கு அறிகுறியாக இனி மேற்கொண்டு காளை யின் இரு கொம்புகளுக்கிடையே பச்சைக் கொடி கட்டிப் பறக்க விடப்படும் என்று தண்டோராப் போட்டான். அதன்படி பட்டமங்கலம் கருமயிலை பச்சைக்கொடி கட்டி பல்லாயிரக் கணக்கான வாலிபர் களின் ஊடே ஊடுருவிப் பாய்ந்தது. வரட்டும் பார்க் கிறேன் என்று கச்சை கட்டி நின்ருேர்கூட காளையின் கம்பீரத்தைப் பார்த்து, அவர்களையும் அறியாமல் சந்தோஷ ஆரவாரம் செய்யத் தொடங்கினுர்கள்,

காளை, வெற்றியோடு களம் தாண்டி கண்மாய்கள் கடந்து பட்டமங்கலம் திசை நோக்கிப் புறப்பட்டது.

வாளுக்குவேலி மஞ்சு விரட்டுக்கு வராமலில்லை— வந்திருந்தான் தட்டு வண்டியில்; வைர ஊசி என்று பலரால் அழைக்கப்பட்ட பந்தய மாடுகளைப் பூட்டிக் கொண்டு சிறுவயலுக்கு வந்திருந்தான். வைரமுத்தனின் காளை பச்சைக்கொடி கட்டி வரப்போவதும் அவனுக்குத் தெரியும். தமிழ் நாட்டு வாலிபர்களைத் துடிப்புள்ள அந்தக் காளை துச்சமென மதித்து வருவதையும் அவன் நெடுநாட்களாக அறிவான். ஆனாலும் என்ன செய்வது! சிலம்பாட்டத்தில் கை பிசகி நரம்பு விலகி முட்டைத் தோல் போர்த்திய கையோடு வாளுக்கு வேலி மஞ்சு விரட்டுக்கு வந்திருந்தான். தண்டோராச் செய்தியைக் கேட்டான். துடித்தான். தேவனுடைய வாழ்நாளில் கண்டிராத அவமானமென்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். நொண்டிக் கையோடுகூட 'பார்க்கிறேன் ஒரு கை'யென்று பத்தடி தூரம் தாவி ஓடி வந்தான். அருமைத் தம்பி கரியான் என்ற கருத்த ஆதப்பன் வழி மறித்து அண்ணனை மீட்டிப் பார்த்தான். அதுவரை தம்பியின் சொல்லைத் தட்டியதே கிடையாது ஆனால் அன்று அவன் சொல்லையும் மீறி மாடு வரும் திக்கைநோக்கிக் கிளம்புவதற்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தான் தேவன்.

மனிதனுடைய இதயம் எப்படியோ அன்புக்கு மட்டும் கட்டுப்பட்டுவிடுகிறது. சக்தியற்றவர்கள்கூட, தன்னை அவமானப்படுத்தும் சவாலுக்குப் பதில்கூறத் துணிந்துவிடுகிறார்கள். ஆனால், நல்ல எண்ணத்தோடு கூடிய அன்புச்சவால், தோள் தட்டிக் கிளம்புவோரையும், வாள் தூக்கி வரிப் புலிகளாக மாறுவோரையும்,

சாந்தப்படுத்தும் 'மாய' சக்தி அன்பிடம் தானிருக்கிறது. இல்லாவிட்டால் அறிமுகமாகாத ஒரு பெண் குறுக்கிட்டு தேவனைத் தடுத்தவுடன் அவன் தன் முயற்சியைக் கைவிடுவானா? ஆம், சினந்து கிளம்பிய தேவன் வாளுக்கு வேலியை அவனுடைய வண்டிக்குப் பக்கத்தில், வண்டியை அமர்த்திக்கொண்டிருந்த ஒரு இளம் பெண் குறுக்கிட்டு, கெஞ்சிக் கேட்டுக்கொண்டதற்காகச் சாந்தம் பெற்று மாட்டைப்பிடிக்க வேண்டுமென்ற வைராக்கிய எண்ணத்தை ஒத்தி வைத்தான். சூழ்ந்து நின்றவர்களுக்கு இந்தச் சம்பவம் பெருத்த வியப்பைக் கொடுத்தது.

முன்பின் பார்த்திராத அந்தப் பெண் யார்? அவனுக்கே தெரியாது. ஒரு அழகான பெண்—அதுவும் நாடறிந்த வாளுக்கு வேலியை நெருங்கி மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறாளே என்ன காரணம்? இந்தச் சந்தேகம் தேவன் இதயத்தையும் குழப்பிக்கொண்டிருந்தது. தமிழ் நாட்டுத் தாய்மார்களுக்குள்ள பொதுவான இரக்க சிந்தை என்று முடிவு கட்டுவதற்கும் தேவனுக்கு மனம் வரவில்லை. எங்கோ பழகிய ஒரு வாசனை அந்தப் பெண்ணிடமிருந்து வந்துகொண்டிருந்தது. கடந்துபோன நிகழ்ச்சிகளையெல்லாம் நினைவுக்குக் கொண்டுவந்து பார்த்தான் தேவன். பக்கத்தில் நின்ற வண்டியைப் பார்த்தான். பேர்பெற்ற திருப்புத்தூர் வில் வண்டி அது. வண்டித் திரைகளைப் பார்த்தான். நீலப்பட்டுத் துணியில் "மாதவன் துணை" என்று எழுதப்பட்டிருந்தது. புரியவில்லை தேவனுக்கு.

அந்தப் பெண் தன்னையும் அறியாமல் உந்தப்பட்ட உணர்ச்சியின் செயலாக எப்படியோ தேவனைத் தடுத்து நிறுத்திவிட்டோம் என்ற பெருமிதத்தோடும்,

அதே நேரத்தில் வெட்கத்தோடும் வண்டிக்குள் அமர்ந்து திரைகளை அவிழ்த்துவிட்டாள். ஆனாலும், அவளுடைய பளிங்கு விழிகள் இடைவெளியின் வழியாகத் தேவனையே வட்டமிட்டன என்பதை அவன் அறியவில்லை. களங்கமில்லாத வீர உள்ளம்!

* * *

சிறுவயலில் தை மாதம் ஆரம்பித்த வேட்கை தேவனின் உள்ளத்தில் தினந்தோறு கூடுகட்டிக் கொண்டேயிருந்தது. ஆனி மாதம் பிறந்ததும் பட்டமங்கலத்துக் கருமயிலைக்கு, பாகனேரி மஞ்சு விரட்டுக்கு வரும்படி பாக்கு வைத்தான். தமிழ் நாட்டில் அது ஒரு முறை. மாடுகூட அழைத்தால்தான் வரும்! அதன்படி வைரமுத்தன் பாகனேரி மஞ்சு விரட்டுக்கு வந்திருந்து, பச்சைக் கொடியுடனேயே காளையை அவிழ்த்து விட்டான். காளை, மைதானத்தின் ஓரம் வருகின்ற வரையில் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்து விட்டு அமைதிபெற்று, மஞ்சு விரட்டு கோரிக்கைகளில் பங்கு பெற்றான், வைரமுத்தன். எந்த மஞ்சு விரட்டுக்குப் போனாலும் வைரமுத்தன் பத்து சதை துண்டு, மணிக்கொத்து, நெற்றிப்பட்டயம் இவைகளுக்குக் குறையாமல் கொண்டுவருவான். மாடு பிடித்துப் பேர் பெற்றவர்களில் அவனும் ஒருவன். அந்த வெற்றி பாகனேரியிலும் அவனுக்குக் கிடைத்தது. மாலை ஆறு மணிக்குத் தன்னுடைய மாட்டின் பிடி கயிற்றைச் சுற்றிக் கழுத்திலே போட்டுக்கொண்டு, மஞ்சு விரட்டில் கிடைத்த துண்டுகளைத் தலையில் சுற்றியபடி பட்டமங்கலம் திரும்பினான். அங்கே அவனுக்கு ஒரு சோகச் செய்தி காத்திருந்தது!

பத்து ஆண்டுகளாக வைரமுத்தனுடைய கீர்த்தியைப் பாடி வந்த கருமயிலைக் காளை, பாகனேரி மஞ்சு

விரட்டில் ஊருக்குக் கடைசியில் பிடிபட்டுவிட்டதாக பட்டமங்கலத்தின் முகப்பிலேயே அறிந்தான். அவன் முகத்தில் ஈயாடவில்லை; ஒரே குழந்தையைச் சாகக் கொடுத்தவனைப் போல் ஓடோடி வந்தான் வீட்டுக்கு! தாயார் மாணிக்கவல்லி தாங்கொணாத் துயரத்தில் சிக்கித் தவித்துக்கொண்டிருந்தாள். வீட்டின் வாசற் படியில் சொட்டுச்சொட்டாக ரத்தம் வடிந்திருந்தது. வீரன் வந்து விட்டானா என்று கேட்டுக்கொண்டு வைர முத்தன் உள்ளே நுழைந்தான். பேச முடியாத நிலையில் விக்கலுக்கும் விம்மலுக்குமிடையே அந்த வயோதிகத் தாய், மாட்டுக் கொட்டத்தைக் கை நீட்டிக் காண்பித்தாள். தாங்க முடியுமா அவனால்! அவனுடைய வீரன், மணியிழந்து, ஒளிவீசும் நெற்றிப் பட்டயம் இழந்து, பச்சைக் கொடியையும் இழந்து, கருநாகத்தைப் போன்ற வாலையும் அல்லவா இழந்து வந்திருக்கிறான்! எப்படித் தாங்குவான் வைரமுத்தன்? கால்வாய்ச் சண்டைகளுக்கே கழுத்தைத் துண்டித்து விடக் கிளம்பும் முன் கோபி, தன்னுடைய கண்ணின் கருவிழி புண்ணாக்கப்பட்டு வந்துள்ளதென்றால் சகிப்பானா கள்ளகுல வாலிபன்! ஆனால், சகித்துக்கொண்டான்; நீதிக்குக் கட்டுப்பட்ட தமிழ் மறவர் குலத்தில் பிறந்தவனல்லவா அவன்!

* * *

வாளுக்குவேலியினுடைய வேட்கை அடங்கியது. காளையைப் பிடித்தோம் என்ற வெற்றிச் செய்தியை வைரமுத்தனுக்குத் தெரிவித்தான். வாலிபப் பட்டாளத்தையே ஏளனம் செய்து வந்த அந்தக் காளையினுடைய வாலை அடிக்கடி பார்த்துப் பார்த்து வெற்றிச் சிரிப்புச் சிரித்தான். அந்த வாலைப் பார்க்கும்போது எல்லாம் இன்னொரு உருவம் அவன் மனக் கண்முன்

தோன்றித் தோன்றி மறைந்தது. "யார் அந்தப் பெண்? பலபேர் முன்னிலையில், சிறுவயல் பொட்டலில் எப்படித் துணிந்து என்னைத் தடுத்தாள்? ஒரு வேளை கல்யாணிக்குத் தெரிந்தவளோ?"—இப்படியெல்லாம் தேவன் நினைத்தான். முடிவு காணமுடியாத அவனுடைய ஏக்கத்தை, காளையை மடக்கிவிட்டோம் என்ற மகிழ்ச்சி மறைத்துவிட்டது.

இந்தச் சம்பவங்கள் நடைபெற்ற மறு ஆண்டு தான் தங்கை கல்யாணியின் விருப்பத்திற்கிணங்க அவளை அதே வைரமுத்தனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். அழகான மனைவி என்றுகூடப் பாராமல் தன்னுடைய அந்தஸ்துக்கு இழுக்கு ஏற்பட்டதை மறைப்பதற்காகத் தமிழ் நாட்டுக் கள்ளர் குலத்தில் எத்தனையோ அமுதவல்லிகளை அலங்கோலம் செய்திருக்கிறார்கள். பாவம் கல்யாணி! வாளுக்குவேலி காளையைப் பிடித்ததோடுமட்டுமல்லாமல், வாலையும் அறுத்துமல்லவா கேவலப்படுத்திவிட்டான் என்று எண்ணித்தான் வைரமுத்தன் புது நிலவு கல்யாணியின் இளமையை அவளுடைய கண்ணீரிலேயே கரைக்க நினைத்தானோ என்னவோ! இல்லாவிட்டால் காரணமில்லாமல் கல்யாணியிடம் அடிக்கடி பாகனேரி மஞ்சு விரட்டைப் பற்றியே பேசி அவளுடைய தெளிந்த உள்ளத்தைச் சல்லடையாக்க ஏன் முயற்சிக்க வேண்டும்!

போன மச்சான்!

வாளுக்குவேலியும் அவன் தம்பி கருத்த ஆதப்பனும் பட்டமங்கலம் வந்து சேர்ந்தார்கள். அவர்களோடு உறவினர் சிலரும் வந்திருந்தார்கள். மைத்

துனன் வீட்டார் மரியாதைக் குறைவாக நினைத்து விடக்கூடாது என்பதற்காகத் தங்கைக்குப் பட்டுப் புடவை—மைத்துனனுக்குச் சரிகை வேஷ்டி,—பர்மாவி லிருந்து கொண்டுவரப்பட்ட மரவகைச் சாமான்கள்— சேதுக்கரை சங்குமாலை, கொம்பு திருகிய செம்மறிக் கடா இவைகளோடு போயிருந்தான் வாளுக்குவேலி!

பாகனேரிக்கும் பட்டமங்கலத்திற்கும் ஏழு கல் தூரம்தான். பிற்பகல் உணவுக்குப் பிறகு, வண்டி கட்டிப் புறப்பட்ட வாளுக்குவேலி அந்தி சாய்வதற்குள் பட்டமங்கலம் சேர்ந்தான். நேராக மைத்துனன் வீட்டுக்குப் போகாமல் அழைப்பு வரட்டும் அதன் பிறகு போகலாமென்று நினைத்து ஊர் ஓரத்தில் ஒரு கண் மாய்க் கரையில் இறங்கியிருந்தான்.

அந்தி சாய்ந்து நிலம் மறையும்வரை, வைரமுத்த னிடமிருந்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. ஆதப்பன் எப்போதுமே அவசரக்காரன்—துடிப்பான். தோள்களைத் தட்டுவான். அங்குமிங்கும் நடப்பான். பல்லைக் கடிப்பான். இந்தக் கோபம் அன்றும் வந்து விட்டது அவனுக்கு. வாளுக்குவேலியின் பக்கம் வந்தான். "என்னண்ணு! இன்னும் ஒருவரையும் காணும்? ஒருவேளை அழைப்பாக வந்த ஓலை போலி யாக இருக்குமோ? வந்து நாலு நாழிகை யாகிவிட்டது. தப்புக் கொம்புச்சத்தம் எதுவும் கேட்கவில்லையே"— ஆதப்பன் வழக்கம்போல் வார்த்தைகளை அடுக்கினான்.

வீரத்தையும் விவேகத்தையும் உள்ளடக்கி அமைதி யோடு, "பொறு தம்பி, அவர்களுக்கு எவ்வளவு வேலையோ! புரவி எடுப்பு என்றால் சாமான்யமா? அதுவும் வைரமுத்தர் பட்டமங்கல நாட்டில் நாட்ட

மானவர். மெதுவாகத்தானே கவனிக்க வேண்டும்''— என்று சாந்தப்படுத்தினுன் வேலி.

ஆதப்பன் அடங்கவில்லை. ''அப்படி என்ன நாம் கடைகெட்டுப் போனேம்? சம்பந்தப்புரமென்றால் சாமான்யமா?''

''மிக வேண்டியவர்களிடம் சாதாரணமாக நடந்து கொள்வது, தமிழ் நாட்டிற்கு ஒரு தனிப் பண்பாகி விட்டது. அடிக்கடி, நமது வெள்ளைப்பரங்கி வர்த்தி யார் சொல்வாரே, சோழன் வைத்த விருந்தில், யாருக்கோ ஒரு அரசருக்கு, பந்தியில் இடமில்லை என்பதற்காகச் சாப்பிட உட்கார்ந்திருந்த ஔவையாரை மன்னன் எழுந்திருக்கச் சொல்லிவிட்டான் என்று. அதைக்கூடவா மறந்துவிட்டாய்! ஔவையார் அதை அவமானமாகக் கருதவில்லையே! அதுமாதிரிதான் வைரமுத்தர், நம்மிடத்திலும் நடந்து கொண்டிருக்கிறார் தம்பி......''—வாளுக்குவேலி பின் பக்கமாகத் திரும்பிப் பார்த்தான். ஆதப்பனைக் காணவில்லை. கண்மாய்க் கரையின் இறக்கத்தில் யாரோ ஒரு முகம் தெரியாத ஆசாமியுடன் ஆதப்பன் பேசிக்கொண்டிருப் பதைக் கண்டான். தனக்குத்தானே சிரித்துக் கொண்டு உள்ளன்போடு 'மூர்க்கன், மூர்க்கன்' என்று முனங்கினான் வாளுக்குவேலி. அதற்குள்ளாக ஆதப்பன் வேலியின் பக்கத்தில் வந்து விட்டான்.

''என்ன ஆதப்பா! யாரவன்? சொக்கநாதபுரத்துப் பெரிய கருப்பன் மாதிரியல்லவா இருக்கிறது'' —வாளுக்குவேலி ஆவலோடு கேட்டான்.

''பெரிய கருப்பனுமில்லை, சின்னக்கருப்பனுமில்லை! அப்போதே சொன்னேன், அவசரக்காரனென்றீர்கள்.

என்ன ஆகிவிட்டது தெரியுமா?''—ஆதப்பன் கனல் கக்கினன்.

''ஏன் ஆத்திரப்படுகிருய்? எவன் என்ன செய்து விட முடியும் நம்மை? வீட்டிலே காயும் புலித் தோல் களைப்பார்த்தால்கூட எதிரி கலங்கிச் செத்துவிடு வானே! நடந்ததைச் சொல்''—வேலி மெதுவாகக் கேட்டான்.

''என்ன இருக்கிறது? விருந்துக்கு அழைத்து, நம் முகத்திலே கரிபூச நினைத்தாராம் வைரமுத்தர்! பட்ட மங்கலம் நாடே 'ஜே, ஜே'ப் போடுகிறது. வேட்டு முழக்கம், ஊரைக் கிடுகிடுக்க வைக்கிறது. இல்ல மெல்லாம், விருந்தாளிகள் நிறைந்திருக்கிருர்கள். வைரமுத்தர் வீட்டில் உலையே வைக்கவில்லையாம்! நெஞ்சு வேகிறது''—ஆதப்பன் கர்ஜித்தான்.

''கல்யாணி என்ன ஆனுள்?''—அப்போதுகூட கல்யாணியின் கவலைதான் வாளுக்குவேலிக்கு.

ஆதப்பனுக்குக் கவலையும் துக்கமும் மேலிட்டு கண்கள் சிவந்து, ''கல்யாணி! அவள்தான் இந்தச் சோகச் செய்தியைச் சொல்லியனுப்பி யிருக்கிருள். அவளால் துன்பத்தைத் தாங்க முடியவில்லையாம்...'' ஆதப்பன் சொல்லி முடிக்கவில்லை. வாளுக்குவேலியின் முகம் சேரன் செங்குட்டுவனின் முகத்தைப் போல், ஈச்சங்காய் நிறம் பெற்றது. இதயத்தில் இடி இடித்தது. கண்களினின்று மின்னற் கொடிகள் பறந்தன. வேலித் தேவன் ஒன்றும் பேசவில்லை. அவனுடைய அமைதிக் குறி, அடுத்து வீசவிருக்கும் பெரும் புயலுக்கு முன் அறிவிப்பாகயிருந்தது.

''ஆதப்பா வண்டியைப் பூட்டு'' என்று சொல்லிக் கொண்டே வேலி எழுந்தான். பட்டமங்கலத்து வீதி

யையே கூர்மையாகப் பார்த்துக்கொண்டிருந்த ஆதப்பன், வேலியின் பக்கம் திரும்பி, "கல்யாணி?" என்ருன்.

"கல்யாணியா? ஏன்? அவள் புருஷன் வீட்டில் இருக்கிருள்."

வேலியின் இந்தச் சாதாரணமான பதில் ஆதப்பனைச் சித்திரவதை செய்தது. கல்யாணியின் தலை பிளவுகள் பாய்ந்து ரத்தம் அதிலிருந்து வடிவது போன்ற நினைவுச் சித்திரங்கள் ஆதப்பனின் மனதில் தோன்றி மறைந்தன. கலங்கிய கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டான். ஆனல் குமுறிக்கொண்டிருந்த நெஞ்சைக் குளுமைப்படுத்த அவனல் முடியவில்லை.

* * *

"காளையை மடக்கினர்கள்! வாலையும் அறுத்தார்கள்! அவர்களைப் பழி வாங்காது விடுவதா? பைத்தியக்காரர்கள்! பட்டமங்கலத்தான் பாவை மோகத்தால்தான் கல்யாணியைத் திருமணம் செய்துகொண்டதாக நினைக்கிருர்கள்"—இந்தப் பேச்சுத்தான் வைரமுத்தனுக்குக் கொஞ்ச காலமாக ஒரு சூத்திரமாகவே இருந்து வந்தது. கல்யாணியின் அழகு முகத்தைக்கூட அவன் அன்போடு பார்ப்பதில்லை. ஊரெல்லாம் வர்ணிக்கும் அவளுடைய அடக்கத்தைப் பற்றி! ஆனல் உரிமைப்பட்ட வைரமுத்தன் அவளை உதறித் தள்ளினன். வற்றக் காய்ச்சிய பாலில் வாசனைத் திரவியங்கள் போட்டு வாஞ்சையோடு கொண்டுவந்து கொடுப்பாள். அதை நாய்க்கு வைத்துப் பரிசோதிப்பான். வனிதை நெஞ்சுருகுவாள்! வைரமுத்தன் உள்ளத்தை இரும்பாக்கிக் கொள்வான். என்றைக்காவது கல்யாணி மஞ்சட் குளித்து மலர் சூடிவிட்டால் முத்தன் அன்று

முழுவதும் வீட்டுக்கே வரமாட்டான்; நோய்வாய்ப் பட்டுக் கிடக்கும் அவனது காலேயைக்கூட அன்று மறந்துவிடுவான்! மனேவியின் முகத்திலே சந்தோஷத் தைப் பார்ப்பதென்றால் அவனுக்கு அவ்வளவு கசப்பு!

சர்வ வல்லமை படைத்த சாம்ராஜ்யாதிபதிகளேக் கூடச் சபலம் எளிதில் வசப்படுத்திவிடுகிறது. ஆனால், வைரமுத்தனே வசப்படுத்திய சபலம் முடிவில் சக்தி யற்றுப் போய்விட்டது—பலமுறை! திடீரென்று எப்போதாவது கல்யாணியின் வனப்பைப்பற்றி வைர முத்தன் யோசிப்பான். தன்னேப் பாக்யசாலி என்கிறார் களே அது கல்யாணிக்குக் கணவனாக இருப்பதால் தானே என்று மூச்சுவிடுவான். நிலாக் காலத்தில் அவனேயுமறியாமல் பலமுறை கல்யாணியைத் தொட்டுப் பழகியிருக்கிறான். கன்னத்தைத் தடவித் தடவி இன்புற்றிருக்கிறான். அவளுடைய வழுவழுப் பான முகத்தைத் தடவிச் சுவைபெறும்போது, குயிலின் குரல் போன்ற இனிய பாடலே, இசைத்துறையில் ஞானம் பெற்ற ரசிகன் கண்களே மூடிக்கொண்டு ரசிப்பதுபோல் வைரமுத்தன் கண்களே அரைகுறையாக மூடிக்கொண்டு விடுவான். ஆனால் அந்த இன்பம் நீடிப் பதில்லே. கட்டுத்துறையில் வேதனேப்பட்டுக் கிடக்கும் அவனது காலே திடீரென்று ‘அம்மா’ என்று கத்தி விடும். முத்தன் உள்ளமும் மாறி விடும்! வெடுக்கென்று கல்யாணியைவிட்டு ஓடிவிடுவான். அப்போதெல்லாம் அவளுக்கு இந்தக் காலேயைக் கொன்று விடலாமா என்றுகூடத் தோன்றிவிடும்! பாவம்! மற்றொரு சமயம் இனி எப்போது வாய்க்கப்போகிறது என்று ஏங்கித் தவிப்பாள்! கணவன் தொட்டு மகிழ்ந்த கன்னத்தைத் தடவிப் பார்ப்பாள்! அதில் ஒரு இன்பம் அவளுக்கு! இந்தத் தனிச்சிறப்பைத் தமிழ்ப் பெண்களிடம்தானே

பார்க்க முடிகிறது! உடலுக்கும் உள்ளத்திற்கும் தொடர்புபடுத்தி வாழ்க்கைக்கே இலக்கணம் வகுத்தது தமிழகம்தானே! அதனுல்தான் தமிழ்பெண், கணவனிடம் உயிரை வைக்கிருள்; மஞ்சள் கயிற்றில் வாழ்க்கையை எதிர்பார்க்கிருள்.

* * *

மண் குதிரையின் அணி வகுப்பு, மைதானம் சேர்ந்தது. திருவிழாவுக்கு வந்திருக்கும் பாகனேரி மைத்துனர்களை அவமானப்படுத்த நெடு நாட்களாகத் திட்டம் வகுத்திருந்த வைரமுத்தன் அன்று அந்தப் பணியைத் தீர்த்துவிட நினைத்தான். வாளுக்கு வேலியை வீட்டுக்கு அழைத்துவந்து சாப்பாடு இல்லையென்று சொல்லிவிட வேண்டுமென்பது அவனது திட்டம். ஆனுல் அந்த ஆசையில் தீ வைத்தாற்போல் அவனுடைய பண்ணைக்காரன் ஓடி வந்து, "பாகனியாரு கோபமாப் போய்ட்டாருங்க" என்ருன். வைரமுத்தனின் ஏமாற்றம் வெறி உருவெடுத்தது. 'கல்யாணி!' என்று கத்தினுன். பதில் இல்லை. "ஏண்டி வைரமுத்தனை உங்க வீட்டுக் கிள்ளுக்கீரையினு நெனைச்சுக்கிட்டியா?" என்று பொரிந்துகொண்டே கொல்லைப் பக்கமாகப் போய்ப் பார்த்தான். வீடு வெள்ளை இரவு போல் நிசப்தமாக இருந்தது. எங்கே அவள்?

மனக்கவலை பிணியாக மாறி அந்த மாந்தளிர் மேனியை வதைத்துக் கொண்டிருந்தது. கம்பளியால் உடம்பைமூடிக்கொண்டு கோயில் வீட்டுக்குள் படுத்துக் கிடந்தாள். விண்ணுக்கும் மண்ணுக்கும் உயர்ந்த வீரனுலும் தமிழர் இல்லங்களில் கோயில் வீட்டுக்குள் ஆர்ப்பாட்டம் செய்ய மாட்டார்கள். கணவனுல் துன்புறுத்தப்படுவோருக்கும் மாமியாரின் சீற்றத்துக்கு ஆளாகும் பூங்கொடிகளுக்கும் அந்தக் கோயில் வீடுகள் தமிழ

கத்தில் அடைக்கலம் கொடுத்துக் காப்பாற்றியிருக்கின்றன. வெண்கலக் குத்துவிளக்கு எரிந்துகொண்டிருக்கும். அதன் முடியில் மரிக்கொழுந்து மாலையைச் சுற்றியிருப்பார்கள். சந்தனம், வெற்றிலை பாக்கு, குங்குமம் இவையெல்லாம் எப்போதும் ஒரு தட்டில் வைத்திருப்பார்கள். சரியாகவோ தவருகவோ அந்த அறையைத்தான் தமிழர்கள் பன்னெடுங்காலமாகக் கோயில்வீடு என்றும் அதுதான் அந்த வீட்டிலேயே புனிதமான இடம் என்றும் கூறி வந்தார்கள்.

கல்யாணி அந்த அறைக்குள்தான் முடங்கிக் கிடந்தாள். "அண்ணன் இருவரும் வருவர். அத்தான் அன்புடன் பழகுவார்" என்று எண்ணிக் கிடந்த தாமரைக்குள நெஞ்சத்தை வைரமுத்தன் கலங்கடித்து விட்டான். குளம் கலங்கி அதற்கு அழகு சேர்த்துக் கொண்டிருந்த தாமரைக் கொடிகளும் நைந்து போயிருந்தன. அவளுடைய விக்கல் சத்தம், தேடிக்கொண்டிருந்த வைரமுத்தனைக் கோயில் வீட்டுக்கு இழுத்து வந்தது.

"என்னடி நாடகம் நடத்துகிருய்? சீமான்கள் வருகைக்காக சிங்காரமெல்லாம் பலமாக இருக்கிறதோ! பசிக்குப் பனம்பழத்தைக் கூடச் சாப்பிடுவான், ஆனுல், பழிவாங்க நினைத்தால் சும்மா விடமாட்டான் வைரமுத்தன்! பாகனிப் பயல்களிடம் இதை மறந்திட வேண்டாமென்று சொல்லிவிடு. விருந்தாம்! வரவேற்பாம்! ஆசாமிகள் இருந்திருந்தால் என்ன செய்திருப்பேன் தெரியுமா? கோயிலிலே பட்டைச் சாதம் வாங்கிக்கொடுத்து ஊர் சிரிக்கவைத்திருப்பேன்."

—வைரமுத்தனின் இந்த வீம்புப்பேச்சை, கல்யாணி முகத்தை மூடிக்கொண்டே கேட்டுச் சகித்தாள்.

வலையில் அகப்பட்ட கலைமான் தானே அவள்! கொம்பில்லாத மானும் கௌரவத்தைத் துறந்த மனிதர்களும் எப்படியும் தப்பித்து விடலாம்! மானமும் மரியாதையும் தானே அவளுக்குப் பேச்சும் மூச்சும்! கணவனின் வேட்டு முழக்கத்திற்கெல்லாம் அவள் கண்மூடி மௌனியாகவே இருந்தாள்.

"ஏண்டி உனக்குத்தாண்டி சொல்கிறேன். ஊருக்கா பிரசங்கம் செய்யறேன்னு நெனைச்சே!" என்று எரிந்து விழுந்துகொண்டே கல்யாணி மூடியிருந்த போர்வையைத் தூக்கி எறிந்தான். அப்தக் கம்பளிப் போர்வை அந்தக் கோயில் வீட்டுக்குள் எரிந்து கொண்டுருந்த குத்து விளக்கைப் போர்த்திக் கொண்டது. விளக்கு அணைந்தது. முல்லையை மறைக்க மூடிய இருளுக்கு வகையுண்டு, முல்லையின் மணத்தை மறைக்க முடியுமா? கோயில் வீடு இருண்டுவிட்டது. ஆனல், கல்யாணி சூடியிருந்த முல்லைப்பூ வாடை இரவோடு இரவாகக் கலந்து வீடு முழுவதும் பரவியது.

"நல்ல நாள் பெரிய நாளைக்குக் கூடவா இப்படிக் குதிக்கவேண்டும்! அடுத்த வீடு, எதிர்த்த வீடுகளிலெல்லாம் இப்படியா நடக்கிறது!" என்று அன்பொழுக, பணிவு கொஞ்ச, படுத்துக்கொண்டே கேட்டாள் கல்யாணி.

பதிலில்லை.

கல்யாணி வைரமுத்தன் நின்ற இடத்தைக் கைகளால் தடவிப் பார்த்தாள். அவன் இல்லை.

இயத்தில் பொங்கியெழும் ஆத்திரம் பழிகொள்ளாமல் போவதில்லை. உடும்பைப் பதம்பார்க்க முடியாவிட்டாலும் ஒணானையாவது சந்தித்து விட்டுத்தான் போகப் பார்க்கிறது. வைரமுத்தன் வஞ்சந் தீர்த்துக்

கொண்டான் என்ற ஆத்திரம் தேவனை நிலைக்கொள்ள செய்யவில்லை. ஒழுங்காக ஓடிய மாடுகளை ஓங்கி அடிக்க வைத்தது. திருகி நிற்கும் மீசைக் கொத்தின் கொழுந்தை மேலும் மேலும் முறுக்கிவிடத் தூண்டியது. பட்டமங்கலத்தில் ஆதப்பன் துடித்தபோது—விட்டேனு பார் என்று வீறு கொண்டு எழுந்தபோது—பெருந்தன்மை சில நேரங்களில் கோழை என்ற பட்டத்தையும் சூட்டிவிடக் கூடும் என அவன் தர்க்கம் செய்தபோது—அமைதி அமைதி என்று சாந்தப்படுத்திக் கொண்டுவந்த தேவன் இப்போது கொதித்துப் போயிருந்தான். "விருந்துக்கு வருந்தி யழைத்தபின் வீடு தேடிப் போனவர்களை 'வா' என்று அழைக்க நாதி யில்லையே! தேவன் காலத்தில் தேவனுக்கே இந்த அபகீர்த்தி! கேவலம்! அவன் பிணத்தை என் வீட்டு ஒட்டுச் செடிக்கு உரமாகப் போட்டால்தான் என் மனம் ஆறும்"—என்று வேலித்தேவன் பலமுறை தன்னையு மறியாமல் பல்லைக் கடித்துக்கொண்டு கர்ஜித்திருக்கிறுன். பாகனேரிக்கும் பட்டமங்கலத்திற்கும் இடையிலே கொஞ்சதூரம் தான் என்ருலும் அதற்குள் ஐந்தாறு தடவை தேவனுக்கு மதம் பிடித்திருக்கிறது. ஆனுல், வழக்கம்போல தேவனைத் தடுத்து நிற்கும் கல்யாணியின் அன்பு முகம் அன்றும் அவனது தாங்கொணுக் கோபத்திற்குக் கல்லணை போட்டுவிட்டது. மருமகன் பிறப்பான், வேலும் வில்லும் கற்றுக் கொடுத்து அவனை வீரனுக்க வேண்டும் என்ற ஆசை அன்று வரை கூட வேலித்தேவனின் மனதைவிட்டு அகலவில்லை என்ருல் ஆசையின் எதிரே கௌரவம் எந்த மூலைக்கு?

அந்தி சாய்ந்து விட்டது. வேலியும் ஆதப்பனும் பாகனேரிக்குள் நுழையும்போது விளக்கு வைத்தாகி

விட்டது. கவுதாரியும் சின்னக் கோழியும் காவற் சட்டைகள் மாட்டிக்கொண்டு வாசற் சிப்பாய்களாக நின்றார்கள்.

*　　　*　　　*

யானைக்கு இளைக்கிற கொடுமையும் அரசனுக்குக் கொடுக்கும் தொல்லையும் பொதி சுமக்காது போகாது என்பார்கள். தேவனுக்குச் செய்யப்படும் இடையூறுகளும் அப்படித்தான். கன்னத்தில் குழிவிழ சக்கை போட்டுச் சிரித்துத்தான் பேசுவான். ஆனால், அந்தக் கன்னக்குழி எதிரேஇருப்போனுக்குத் தோண்டப்படும் புதைக்குழி என்பது அவனுக்குமட்டும்தான் தெரியும். வேண்டாதவர்களிடம் பேசும்போது வலிய வலியச் சிரிப்பை வரவழைத்துக் கொள்வதும் உற்ற துணைவர்களோடு பேசும்போது உரிமை காட்டிப் பாய்வதும் தேவனுக்கு கைகண்ட நடைமுறை நளினமாகி விட்டது. கள்ளர் நாட்டுப் பெரும் புள்ளிகளுக்குக்கூட இது புரிவதில்லை. சிரித்துப் பேசிவிட்டான் வேலி என்றால் அவர்களுக்குச் சிரசு கனத்துவிடும். வெட்டிக் கித்தாப்புகளைச் சுற்றியுள்ள குடிமக்களிடம் அள்ளித் தெளிக்க ஆரம்பித்து விடுவார்கள். எதையும் ரசிக்கும் ஏழைக் குடியானவர்களுக்கு உச்சி குளிர்ந்து விடும். ''நம்ம அய்யாவுக்கு வாளுக்கு வேலியார் தயவுகூட இருக்கிறதே?'' என்று ஒருவரை ஒருவர் கிள்ளிப் பேச ஆரம்பித்து விடுவார்கள்.

இராமநாதபுர மாவட்டத்தில் தேவன் எவருக்கும் புரியாத புதிராக இருந்தான். கொலையும், களவும், குடுமி பிடிச் சண்டையும் அந்த நாட்களில் அதிகமானாலும், தேவன் அவைகளில்கூட தரம் பார்த்துத் தான் மோதிப் பார்ப்பான். பாகனேரி நாடு அவனை

அந்த நிலைக்குக் கோபுரத்தில் ஏற்றி வைத்துவிட்டது. இவ்வளவு செல்வாக்கைச் சம்பாதித்து வைத்திருந்த அதேதேவன் தான்— இத்தனை கெடுபிடிகளுக்கும் மையப் புள்ளியாக வாழ்ந்த அதே தேவன் தான், தங்கை நெற்றிக் குங்குமம் அழிக்கப்பட்டு விடுமே என்பதற்காக—வாசமலர் அவளுக்குப் பாவப் பொருளாகிப் போய்விடுமே என்பதற்காக—அவளுடைய பிறவி அவளுக்கே பெருஞ் சுமையாக வந்துவிடுமே என்பதற்காக வைரமுத்தன் இழைத்த தீச்செயலை ஜீரணித்து அதை யானைக் கர்வமாக நெஞ்சில் ஒரு மூலையில் கட்டிப் போட்டுவிட்டான். அண்ணன்மார் இருவரையும் இவ்வளவு தூரம் தன் கணவன் கேவலப்படுத்தியும் அதையெல்லாம் இதயத்தில் தாங்கிக்கொண்டே குடும்பம் நடத்துகிருள் தன் சகோதரி என்பதிலே வாளுக்குவேலிக்கு ஒரு திருப்தி. தனிமையிலிருக்கும்போது அவன் விடும் பெருமூச்சு கல்யாணியின் இல்லறத்தைப் பற்றியதாகத் தானிருக்கும்.

இயலாமையை ஒப்புக்கொள்ளும் கட்டத்திலும், இன்ப நினைவின் இறுதி அத்தியாயத்திலும்தான் பெருமூச்சு சாத்தியமென்ருல் தேவன் விட்ட பெருமூச்சுகளுக்கு ஒருபோதும் இயலாமை காரணமாக இருந்தது இல்லை. எல்லாம் தங்கச்சியின் வாழ்க்கை இன்பத்தை நினைத்து பெருமிதங்கொண்ட நீள் முச்சாகத்தானிருக்கவேண்டும், இப்படிச் சிலநாள்! ஆனுல் ஆதப்பன் கோபம் அடங்கவே இல்லை.

திருக்கோஷ்டியூர் சுந்தராம்பாள்

திருக்கோஷ்டியூர் பாகனேரிக்குப் பக்கத்திலுள்ள ஒரு பிரசித்தி பெற்ற விஷ்ணுஸ் தலம். சிங்கப்பெருமாள் சத்துருவைச் சம்காரம் செய்த இடம் என்பார்கள் ஒரு

சிலர். நாராயணமூர்த்தி மாடோட்டி வேடத்தில் வந்து நிற்க இடம் கேட்டு, பின் இருக்க இடம் கேட்டு, முடி வில் படுக்க இடம்கேட்டுப் பள்ளிகொண்டு பெருமாள் எழுந்தருளியிருக்கும் புண்ணிய க்ஷேத்திரம் என்பர் வேறு சிலர். இப்படிப் பல கதைகளுண்டு, திருக்கோஷ்டியூரைப் பற்றி. இராமானுஜாச்சாரியார் சத்திரத்திலிருந்து, இங்கிலாந்து வணிக'ராஜாக்களை விரட்டியடித்த வீரர் மருது பாண்டியர் வரலாறுவரை திருக்கோஷ்டியூர் பல நூல்களில் இடம் பெற்றிருக்கிறது.

ஊர் கவர்ச்சிமிகுந்தது. அரண்மனைபோல் அழகான கோயில். கோபுரத்தின் உச்சியில் தங்கக் கலசம். மதிலோரத்தில் வில்வமரங்கள். கோயிலைச்சுற்றி நான்கு வசந்தவீதிகள். ஏராளமான பொருட்செலவில் எழில் மேவும் சிற்ப வேலைப்பாடுகளோடு செய்யப்பட்ட சித்திரத் தேர். அது மருது பாண்டியர்களால் செய்து வைக்கப்பட்டது. தெற்கு ரத வீதியில், சிவகங்கைச் சீமையின் ராணி வேலுநாச்சியார் வெள்ளையர் படையை எதிர்ப்பதற்கு அமைத்துக்கொண்ட கற் சாந்துக் கட்டிடம். அதைப்போலவே கீழ ரத வீதியில் ஒரு அந்தப்புரம். ஆலயத்தில் நடைபெற வேண்டிய ஆறுகால பூசைக்கு அன்றலர்ந்த மலர்கள் உடனுக்குடன்தேவைப்படும் என்பதற்காகக் கவனத்தோடுகண் காணிக்கப்பட்ட நந்தவனங்கள்! கோயிலுக்கு எதிரே ஒருபச்சைத் (நிறம்) தண்ணீர்க் குளம். திருப்பாற்கடல் என்று அதற்குப்பெயர். அதையொட்டி ஒருகல் மண்டபம்! தீர்த்த மண்டபம் என்பர் அதை. அந்தச் சிங்காரச்சிற்றூரிலிருந்து கூப்பிடு தூரத்திலிருப்பது தான் தாசி சுந்தராம்பாளின் மாதவமாளிகை. திருக் கோஷ்டியூர் கோயில் மூல விக்ரகத்திற்கு மாதவன் என்றும் ஒரு செல்லப் பெயர் உண்டு என்பதால்தான்

சுந்தரி அவளுடைய மாளிகைக்கு மாதவமாளிகை என்று பெயர் வைத்திருந்ததாகச் சொல்லுகிறார்கள்.

ஆள் மட்டத்திற்கு அழகான சுற்றுச் சுவர். சுவரின் உட்புறத்தில் மைசூர் பூச்செடிகள். மாலை வேளையில் காற்றாட இருக்க தென்னங் கீற்றுக் கொட்டகை—கொல்லைப் பக்கத்தில்! சின்ன நீர்த் தடாகம், அதில் எப்போதும் இரண்டு சிங்கார வெள்ளை வாத்துக்கள். ஆடவரின் கண்பட்டால் அரைக் கணத்தில் கல்லாவர் என்பார்களே தேவலோகக் கன்னியரைப் பற்றி, அவர்களைப் போலவேதான் சுந்தரியும் தன்னந்தனியளாய் அந்த மாளிகையில் ஏகாந்த வாழ்வை நடத்திக்கொண்டிருந்தாள்.

தேவதாசியா? அவள் புன்னகையைக் குத்தகைக்கு விடுபவளாயிற்றே, பொன்னுக்கும் பொருளுக்கும் தானே அவளுடைய மின்னல் விழிகள் பரிவு காட்டும்—என்று மற்றவர்கள் மத்தியில் 'பரிசுத்த' நாடகம் நடத்திக் காட்டிவிட்டு, பகலவன் அழகர்மலைச் சரிவுக்குப் போய் விட்டானா? பாவையவள் முத்துமீனா காத்திருப்பாளே என்று துடிக்கும் பகல் யோக்யர்கள் அப்போது திருக்கோஷ்டியூரில் மலிந்திருந்தும் அவர்களில் எவரும் சுந்தராம்பாளைப் பற்றிப் பேசுவதில்லை. பேச என்ன இருக்கிறது! பேசினால் அவளது அடக்கத்தைப் பற்றிப் பேசவேண்டும்; அவளுடைய தயாள சிந்தையைப்பற்றிப் பேசவேண்டும்; சேற்றில் முளைத்த செந்தாமரை என்று புகழவேண்டும்! நாற்றம் பிடித்த நடத்தைகளில் நாமத்தைப் பறிகொடுத்திருந்தால் தானே நாலுபேர் அவளைப் பற்றிப் பேசமுடியும்! காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலையில் மலர்ந்து தோன்றும் குணமுடைய பருவத்தின் எழுச்சியைக்கூட அடக்கி அடக்கி அயர்வு பெறும் நிலை பெற்றவள்

சுந்தரி. 'பேச்சுப் பெட்டி'களின் வாய்வீச்சுக்கு அவள் ஏன் பலியாகப் போகிறாள்! ஊரிலே உள்ள மற்றபெரிய மனிதர்களுக்குக் கிடைத்த அந்தஸ்து அவளுக்கும் கிடைத்தது. மிட்டா மிராசுகளுக்குத் தரப்பட்ட மரியாதையைப் போல், மிரட்டி வாழும் முரடர் களுக்குக் காட்டப்படும் பயபக்தியைப் போல், உள்ளூர் வாசிகள் சுந்தரிக்கும்தான் கௌரவம் கொடுத்தார்கள். ஊருக்குள் ஒரு சடங்கு என்றாலும், மெழுகுச் சீலை போர்த்தி முன்திரை பின்திரை போட்ட வில்வண்டி யில் வந்து மெல்லிய முக்காடுடன் அவள் இறங்கிப் போவதே ஒரு அலாதியாகத்தானே இருந்தது.

சந்தனக் கல் நெற்றியிலிருக்கும் ஜவ்வாதுப் பொட்டும், அந்தியில் மலர்ந்த அடுக்கு மல்லிகைப் பூவும் கடைவீதி மக்களுக்குச் சுந்தரியின் வரவு கூறி 'பராக்' சொல்லும் முன்னோடிகளாக இருந்தன. அவளு டைய வண்டி கடைவீதி வழியாகப் போகிறதென்றால் தராசு பிடித்திருக்கும் கைகள்கூட வலிவிழந்து சோர்ந்துவிடும். குலத்திலே தாசிதான் என்றாலும் இவ் வளவு கீர்த்தியை எப்படித்தான் சம்பாதித்தாளோ? வசதி பெற்றோர் கூட வளமான எண்ணப் பஞ்சத் தால், சாவதற் கென்றே பிறந்தவர்களாகி விடுகிறார் கள்; நுண்ணறிவு கொண்டவர்களும் ஊமைத் தனத் தால் 'என்ன மனிதர் இவர்' என்ற பட்டத்தைப் பெற்று விடுகிறார்கள். ஆனால் சுந்தரி? செல்வமும் நிறைந்திருந்தது அவளிடம், செல்வாக்கும் வளர்ந் திருந்தது! பட்டயமில்லையே தவிர திருக்கோஷ்டி யூருக்கு அவள் பட்டத்தரசியேதான்! ஆனால் அவள் முகத்திலே அடிக்கடி ஒரு சோகக் குறி தென்படுகிறதே ஏன், என்பதை மட்டும் யாரும் கவனிக்கவில்லை.

*          *          *

அன்றைய தினம் சுந்தரி முகங்குளிரக் காணப் பட்டாள். அவள் உடுத்திய நீல வர்ணப் புடவை மேகத்தைக் கிழித்துப் புடவையாக்கியது போலிருந் தது. தேக்குமர ஊஞ்சலிலே ரத்தினக் கம்பளம் விரித் திருந்தது. உத்திரத்தில் இணைக்கப்பட்டிருந்த ஊஞ்சல் சங்கிலியை நீண்ட பூச்சரம் இறுகப் பின்னிக் கிடந்தது. சந்தனக் கிண்ணம், பன்னீர்ச் செம்பு, வெற்றிலைப் பெட்டி இவை மூன்றும் ஒரு வெள்ளித் தட்டில் அலங் காரமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. உதடுகளில் இளங்காவி படிய, உலர்ந்த கூந்தலைக் கோதியபடி அந்தச் சலவைக்கல் கூடத்தில் உலாத்திக் கொண்டிருந் தாள் சுந்தரி. வீடு தேடிவரும் ஜமீன்தார்கள், தனவணிகச் சீமான்களுக்குக்கூட சுந்தரி இப்படிப்பட்ட விமரிசையான வரவேற்பு ஏற்பாடுகளைச் செய்ய மாட்டாள். அன்று அவளுடைய மாதவ மாளிகை அவ்வளவு சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. சுந்தரி, ஜன்னல் வழியாகத் தெருவைப் பார்ப்பதும், பின் முகத்தைச் சுழிப்பதுமாகவே இருந்தாள். "இந்தப் பாட்டி எப்போதும் இப்படித்தான். போனேம் வந்தோம் என்று எந்தக் காரியத்தையும் முடிபபதில்லை. ஆளைத் தவிக்க விட்டு வேடிக்கை பார்ப்பதிலே இந்தக் கிழம் கட்டைகளுக்கு என்னதான் சுகம் இருக்கிறதோ, சனியன்!" என்று பொடு பொடுக்க ஆரம்பித்தாள். அப்போது சமையல்காரி சிலம்பி உள்ளே வந்தாள்.

"பசுவம் பாலை என்ன செய்யறது மகளே!" என்று பரிவாகக் கேட்டாள். ஏழைகளுக்கு வசதியுள்ள இடத்தில் வேலை கிடைப்பதே கடினம். அபப்டிக் கிடைத்து விட்டாலும் எசமானர்களின் முகபாவ மறிந்து பேசும் முகஸ்துதிக் கலையில் அவர்கள் எப்படித் தேற முடியும்!

ஏக்கம் பிடித்த உள்ளமும், எதிர்பார்த்து ஏமாந்த விழிகளும் சுந்தரியை உருமாற்றி இரண்டு நாழிகைக்கு மேலாகிவிட்டது. அந்த வேளையில் வந்த அவளுடைய அன்பிற்குரிய வேலைக்காரி சிலம்பி மீது, கடித்துத் தின்னும் பாவனையில் பேசினாள். யாருக்கோ பிரியமாக வாங்கிவரச் சொன்ன பாலை, "அடுப்பில் ஊற்றித் தொலை" என்று அதிர்வேட்டுப் போட்டதுபோல் பதில் சொல்லி அனுப்பினாள். நெஞ்சு நிறைந்த ஆசை, சற்று நேரம் தாழ்த்தி நிறைவேறுவதைக்கூட மனித ஜாதி பொறுப்பதில்லை. வலிமைக் குறைவால் ஏற்படும் தோல்விக்குப் போலிக் காரணங்களைச்சொல்லி மனச் சாந்தி பெற்றுக் கொள்கிறார்கள்; எடுத்த காரியத்தில் வெற்றி பெறச் சக்தியிருந்தும் முறையான செயல் முறைகளைப் பின்பற்றாததால் ஏற்படும் தோல்விக்குச் சாந்தி சொல்லிக் கொள்ள மறுத்துவிடுகிறார்கள். மாறாக, பாய்கிறார்கள்; பல்லைக் கடிக்கிறார்கள்; நேத்திரம் கொதிக்கிறது; நெஞ்சு நெருப்பாகி விடுகிறது.

போன கிழவி வரவில்லையே என்று பொறுமினாள் சுந்தரி. அந்தி சிவந்து அம்புலியும் வந்துவிட்டதே என்ற கவலை அவளுக்கு. நேரம் செல்லச் செல்ல நம்பிக்கை பிரிந்துகொண்டு வந்தது. சிலம்பியைக் கூப்பிட்டு புதிய சமையல் எதுவும் செய்ய வேண்டாம் என்று சொல்வதற்காகச் சமையலறைக்குப் போனாள். அங்கே பால் முறுகி நெய் வாடை மூக்கைத் துளைத்தது.

"என்னடி பாலைப் பொங்கவிட்டு வேடிக்கை பார்க்கிறாயா?" என்றாள் சுந்தரி.

"இல்லையே! பாலை அடுப்பிலே தானே கொட்டியிருக்கேன்" என்றாள் சிலம்பி.

"சிலம்பீ!" என்று கத்தினள் சுந்தரி.

"நீங்கதானே சொன்னீங்க!" என்ருள் அந்தச் சூதறியாச் சேவகி.

சுந்தரிக்குச் சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. தலையிலடித்துக்கொண்டு கூடத்திற்கு நடந்தாள். அப்போது வாசலில் செருப்புச் சத்தம் கேட்டது. சுந்தரி கவனித்தாள். முகப்புக் கதவை யாரோ தட்டினர்கள். சுந்தரியைப் பின் தொடர்ந்த சிலம்பி முகப்புக் கதவைத் திறந்தாள். வெள்ளைக்கார உடையில் இரண்டு தமிழர்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.

"என்னவேண்டும் உங்களுக்கு? எங்கே இருந்து வருகிறீர்கள்?"—சிலம்பி கேட்டாள்.

"சுந்தரியம்மாளைப் பார்க்க வேண்டும்" என்ருன் ஒருவன்.

அதற்குள் இன்னெருவன், "இல்லை அந்த அம்மாளைக் கையோடு கூட்டிப் போக வேண்டும்" என்ருன்.

சிலம்பி சுந்தரியைப் பார்த்தாள். சுந்தரி அந்த ஆசாமிகளைப் பார்த்தாள்.

"நாங்கள் வெள்ளைக்காரக் கர்னல் துரையினுடைய ஆட்கள். அவர் மருது சகோதரர்களைப் பிடிப்பதற்குக் காட்டாம்பூருக்குப் பக்கத்தில் முகாமடித்திருக்கிருர். அவர்......அவர்......!"

"பைத்தியத்தை எப்படிப் படைத் தலைவராக அனுப்பினர்கள்?"—சுந்தரி கிண்டலும் கோபமும் கலந்த குரலில் கேட்டாள்.

"பைத்தியமா? இல்லை இல்லை! பழரசம் சாப்பிட்டா துரைக்கு......"

"......பைத்தியம் பிடித்துவிடுமோ?"

"உங்க மாதிரி யாராவது பக்கத்திலேயே இருக்கணும். அது எங்க துரைக்கு பழக்கமாகிப்போச்சு. ஊர் ஊருக்கு இதுதான் எங்களுக்கு வேலே."

இப்படி அவன் சொல்லிக்கொண்டிருக்கும்போதே இரண்டு முரட்டுக் கரங்கள் அந்த இரண்டுபேருடைய புரடிகளேயும் அழுத்திப் பிடித்தது. வெள்ளேக்காரர்களின் வேலேக்காரர்களேக் காட்டிலும் சுந்தரிதான் அதிகம் பயந்தவள். போனவர்களேக் காணவில்லேயே என்று அந்தப் பொல்லாத வெள்ளேத் துரையே வந்துவிட்டானே என்று துடித்துப் போனுள். யார் அந்த மூன்ருவது ஆசாமி என்றுகூடப் பார்க்காமல் முகத்தை மூடிக்கொண்டே மாடத்திற்கு ஓடிவிட்டாள். கீழே அந்த முரட்டு உருவம் வெள்ளேக்காரனின் எடுபிடிகளே மிரட்ட ஆரம்பித்தது.

"ஏண்டா நீங்களும் தமிழர்கள்தானு?"

"ஆமாங்க! என்ன இப்படி கேட்டுப்புட்டீங்க? எங்கப்பாதான் இராமநாதபுரம் சேனுபதிப்பிள்ளே! அவுங்கப்பா தான் இருக்காரே அவுருதான் எங்க துரைக்கி குதிரையெல்லாம் கொள்முதல் பண்ணிக்கிட்டு வர்ர வர்ணக்குமாரு பிள்ளே"—அவர்களில் ஒருவன் இப்படி அளந்துகொண்டே போனுன்.

"துரோகந்தான் செய்யத் துணிந்தீர்கள்; கொஞ்சம் வீரமாகவாவது துரோகம் செய்யக் கூடாதா? மறத்தி வயிற்றிலே பிறந்து இப்படிக் மானக் கேடான காரியம் செய்ய எப்படித்தான் உங்கள் மனந் துணிந்ததோ?" என்ருர் மூன்ருவது பேர்வழி.

எப்படியோ அந்த எடுபிடிகளுக்குச் சுனை தட்டி விட்டது. "ஏய்யா என்ன நெனைச்சுக்கிட்டே! கர்னல் துரைக்கிட்டே வேலை பார்க்கிறோம்! நெஞ்சிலே இருக் கட்டும்! வாடா போகலாம், போயி துரைகிட்டே சொல்லிப் பார்ப்போம்" என்று துள்ளிக் குதித்தான் ஒருவன்.

"போங்கடா! முறைகெட்ட காரியங்களைச் செய்தா முதுகுத்தோலை உரித்திடுவேன் என்று வாளுக்குவேலி சொன்னான் என்று உங்கள் துரையிடம் சொல்லுங்கள்! போங்கள்! திரும்பிப் பார்க்காதீர்கள்!"

"வாளுக்குவேலி! ஐயய்யோ பாகனேரித் தேவன்!" என்று சொல்லிக்கொண்டே பயந்து ஓடினார்கள் பரங்கி யரின் பாதந் தாங்கிகள்.

இந்தச் சத்தத்தைக் கேட்ட சுந்தரி வாத்தைப் போல் படிக்குப்படி நிதானித்து, மாடத்திலிருந்து மெதுவாக இறங்கி வந்தாள்; அவள் முகத்தைக் கவ்வி யிருந்த பயம் நீங்கவில்லை. தேவன் அதற்குள் அவனாக வீட்டுக்குள் போய் ஊஞ்சலில் உட்கார்ந்து விட்டான்.

அச்சமும் அயர்வும் பின்தொடர, "நமஸ்காரம்" என்றாள் குழைவோடு.

தேவன் மெதுவாகச் சிரித்தான்.

"சாயந்திரத்திலிருந்தே எதிர் பார்த்துக்கொண் டிருக்கிறேன்."

"மணிமுத்தாற்றில் வெள்ளம் போகிறது. அதனால் தான் தமாதமாகி விட்டது" என்று பதில் சொல்லிக் கொண்டே ஏதோ யோசித்த வண்ணமிருந்தான் வாளுக்குவேலி. சுந்தரியைப் பற்றி அவன் கேள்விப்பட் டிருக்கிறான். நேரில் பார்த்ததில்லை; ஆனால், அன்று

சுந்தரியைப் பார்த்ததும் எங்கோ பார்த்திருக்கிறோம் என்று யோசித்தான். சுந்தரியே தொடர்ந்தாள்.

"என்ன யோசிக்கிறீர்கள்? களைப்பாக இருப்பீர்கள். தேனீர் கொண்டு வரட்டுமா?"

"களைப்பொன்றுமில்லை......நீங்கள் இதற்குமுன் என்னைப் பார்த்திருக்கிறீர்களா?"

"பார்த்திருக்கிறேன், இரண்டு வருஷங்களுக்கு முன்னால்."

"பாகனேரித் திருவிழாவுக்கு வந்திருப்பீர்கள். இல்லையா?"

"இல்லை! எனக்கும் வயது இருபத்தி மூன்றாகி விட்டது. இதுவரை நான் பாகனேரியைப் பார்த்ததே இல்லை. அங்கே இருக்கிற தேவதையைக்கூட வரதையான தெய்வமென்று சொல்லுவார்கள்."

தேவனுக்குச் சந்தேகம் தீரவில்லை. மறுபடியும் முகட்டை அண்ணாந்து பார்க்க ஆரம்பித்தான்.

சுந்தரி ஓய்வு நேரங்களில் தமிழ் ஏடுகளைப் படித்திருந்தவள். ஓரளவு சிந்திக்கும் திறன் பெற்றவள். ஜாடை பேசுவதில் கைதேர்ந்தவள்.

"ஆண்கள் ஏராளமான விஷயங்களில் ஆவலைக் காட்டுகிறார்கள். அதனால்தான் ஒன்றுகூட அவர்களுக்கு நினைவுக்கு வருவதில்லை. பெண்கள் அப்படியில்லை. மனதுக்குப் பிடித்ததில் ஊன்றிக் கவனம் செலுத்துவார்கள். அதையே நினைத்துக் கொண்டிருப்பார்கள். வேண்டாததற்கும் தெரியாததற்கும் அவர்கள் மனதில் இடமே கொடுப்பதில்லை"—சுந்தரி ஆடவர்களிடம் இப்படி மனதுவிட்டுப் பேசி மூன்று வருஷங்களுக்கு

மேலாகிவிட்டன. பிறரிடம் பிரியம் காட்டுவதற்கே பயந்துபோய் பட்டுத்துணிக்குள்ளேயே மூடிக்கிடந்த வளல்லவா அவள்? அதே போலத்தான் தேவனும். இளம் பெண்களிடம் அவன் நெருங்கிப் பழகியதே இல்லை. அவனைச் சுற்றிப் பரவிக்கிடந்த செல்வாக்கு அவனுக்குப் பயம் காட்டிக்கொண்டே இருந்தது. முறையாகச் சம்பாதித்த புகழை இழந்துவிட மனமில்லாது, உள்ளத்திலே மூண்டெழும் ஆசைகளை வெதும்ப வைப்போரில் தேவனும் ஒருவன். அதனால்தான் சுந்தரியின் பருவப் பனி மண்டலத்தில் அகப்பட்டுக்கொண்டு தவித்தான். சிவகங்கைச் சீமையில் சுந்தரியின் அழைப்பு யாருக்கும் கிடைத்ததில்லை. யாரையும் அவள் பொருட்படுத்தியதில்லை. விரக்தி ஏற்பட்டவளைப்போல அவள் காணப்பட்டாலும், அவளுக்கென்ன உள்ள அந்தஸ்தை விட்டுக்கொடுக்கவில்லை.

இருவருக்குமிடையே சிறிது மௌனம் நிலவியது. விழி இரண்டு நிலம் நோக்கும்போது எதிர் விழிகள் எழில் நோக்கின.

''வந்ததிலிருந்து நான் யோசித்துக்கொண்டே இருக்கிறேன். என்னால் நினைவுக்குக் கொண்டுவர முடியவில்லை.''

''நான் சொல்லட்டுமா'' என்று சொல்லி, ஜன்னல் திரையை நீக்கிவிட்டு, கோயில் கோபுரத்தில் ஏற்றப் பட்டிருந்த விளக்கெண்ணெய் தீபத்திற்கு ஒரு நமஸ்காரம் போட்டாள். சுந்தரி ஜன்னல் திரையை நீக்கிய போது தேவனுக்கு ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. ஜன்னல் திரையில் 'மாதவன் துணை' என்று எழுதப்பட்டிருந்ததைப் பார்த்தான். எண்ணங்களை மூன்று வருஷங்களுக்கு முந்திய காலத்திற்குப் பின்னோக்கி

இழுத்தான். அடுத்த கணம் சுந்தரி பக்கம் திரும்பினன். "நீங்கள்தானே சிறு வயல் மஞ்சு விரட்டில் என்னைத் தடுத்தீர்கள்?"

"இல்லையே! மஞ்சு விரட்டு என்ருல் எனக்குப் பயமாயிற்றே!" என்று சிரித்துக்கொண்டே பதில் சொன்னுள் சுந்தரி.

உண்மையை ஒப்புக்கொள்வதைக் காட்டிலும் உண்மையை மறைக்க அவள் காட்டிய கண்ணுடிச் சிரிப்பு தேவனைத் திருப்திப்படுத்தியது. நெடுநாட்களாகத் தனக்குத்தானே போட்டுக்கொண்ட விடுகதைக்கு விடை கிடைத்துவிட்டது என்று மனச்சாந்தி பெற்ருன்.

"சுந்தரி!"

பதில் பேசவில்லை சுந்தரி. ஜன்னலுக்குப் பக்கத்தில் நின்று பெருமூச்சு விட்டாள். தன்னைப் பற்றி அவள் நினைத்துக் கொண்டிருந்ததெல்லாம் பஞ்சு பஞ்சாகப் பறந்து கொண்டிருந்தன.

தேவன் சுந்தரியின் பக்கம் திரும்பி உட்கார்ந்தான். அவள் ஜன்னலை விட்டு விலகவில்லை. நிமிர்ந்து பார்த்தான். அவனுடைய வீரம் அவளுக்கு எதிரே வாலைச் சுருட்டிக்கொண்டிருந்தது.

"சுந்தரி!" என்று மறுபடியும் அழைத்தான். அவனுடைய குரலிலே கனிவு இருந்தது; அளவு கடந்த ஆசை புரண்டோடி வந்தது.

சுந்தரி தன் மென்கரத்தால் செந்தாமரை முகத்தை மூடிக்கொண்டாள். மருதாணிச் சாறு கட்டி, முயல் ரத்தத்தைக் காட்டிலும் சிவப்பேறியிருந்த அவளுடைய வில்லை நகங்கள் ரத்தினம் பதித்தாற்

போலிருந்தன. தேவன் நடுக்கத்துடன் எழுந்துசென்று மூடியிருந்த பொற்கரத்தை எடுத்தான். கண்மையும் கண்ணீரும்கலந்து முகத்திலே கரி நீரைப் பூசியிருந்தன. முன்பின் பழகியிராத தேவனுக்கு எதிரே அவள் ஏன் அழுகிருள்? இரண்டறக் கலந்துவிட்டவளைப் போல் நடந்துகொள்கிருளே. தேவனும் தொட்டுப் பழகி, தோளோடு சேர்த்துக்கொள்கிருனே என்ற சந்தேகமும் வியப்பும், ஒளிந்து நின்று பார்த்துக்கொண்டிருந்த வேலைக்காரி சிலம்பியை மூக்கில் விரல் வைக்கத் தூண்டின.

"புரியவில்லை சுந்தரி. வலிய அழைத்தாய் வந்தேன். பொறுமிப் பொறுமி அழுகிருயே! கண்ணீரைக் காணவா காட்டாற்று வெள்ளத்தையும் கடந்து வந்தேன்! கதையென்ன நடந்தது? சொல்லு! களைந்தெறிகிறேன் ஆபத்தை! கோட்டையைப்போல் வீடு. கோமகளைப்போல் வாழ்வு! நாட்டையாளும் ராணி போல் அழகு! உனக்கென்ன துக்கம்?"—தேவன் அவளைத் தோளில் சாய்த்துக்கொண்டே ஊஞ்சலுக்கு வந்து அமர்ந்தான். அவன் மடியில் அந்த இளங்கொடி சாய்ந்து கிடந்தாள்.

"சுந்தரி!"

"இ...ம்!"

"கொஞ்ச நேரத்திற்குள் என் குலையையே துடிக்க வைத்துவிட்டாயே!"

"துயரத்தைச் சொல்லி சுமையை இறக்கிக் கொள்ள எனக்கு யார் இருக்கிருர்கள்! மூன்று வருஷங்களாகத் தேடித் தேடிப் பார்த்தேன். தோற்றமிருக்கிறவர்களுக்குத் துணிவு இல்லை. துணிவு பெற்றவர்கள் கூன் குருடர்களாக இருக்கிருர்கள்" என்று பேசிக்

கொண்டே தன் முகத்தை தேவன் மடியில் புதைத்துக் கொண்டாள். தேவன் அவள் முகத்தைத் திருப்பினன். ஜவ்வாது இளகி நெற்றி முழுக்க ஓடியிருந்தது.

"உன்னைப்பற்றி இந்த ஊரார் என்னதான் நினைக்கிருர்கள்?"

"நல்லவள். கேட்கும்போதெல்லாம் நன்கொடை தருவாள் என்று நினைக்கிருர்கள்!"

"நல்லவள் என்ற பட்டம்தானே பெண்களுக்குத் தேவை. அதைப் பெறமுடியாமல் எத்தனை பெண்கள் சருகாகிப் போயிருக்கிருர்கள்!"

"நல்லவள் என்ற பெயர் போதுமா? வாழ்க்கை வேண்டாமா! கெட்ட நடத்தைக்காரர்கள்கூட மற்றவர்களிடம் நல்ல பெயர் வாங்கிவிடலாம். ஆனல், வாழ்க்கை என்பது நம்மை நாமே சோதித்து அனுபவித்து முடிவு கண்டுகொள்வதாயிற்றே"—சுந்தரி பேசும்போது தொண்டை அடைத்து அடைத்துத் திறந்தது.

"நீதான் வாழப் பிறந்தவள், உன்னிடம்தான் உலகம் மண்டியிட்டுக் கிடக்கிறது என்று நினைத்தேன். பார்க்கப் போனல் நீ எதையோ பறிகொடுத்து ஏமாந்து போயிருக்கிறவள் போலல்லவா தோன்றுகிறது"—தேவன் அவளுடைய கூந்தலைக் கோதிக் கொண்டே பேசினன். அப்போது சுந்தரியின் முகம் கீழ்திசை அடிவானம்போல் அரைச் சிவப்பேறி பளிங்கு போலிருந்தது. பெண்கள் அழும்போது சிரித்தால், மகிழ்ந்தால், புன்னகை செய்தால் முகத்திற்கு எழில் கூடிவிடுகிறது. உதட்டிலே பிறக்கும் சிரிப்புக்கு முகத்தை மாற்றும் சக்தியில்லை. உள்ளத்திலே பிறக்கும் சிரிப்புக்குத்தான் அது உண்டு.

"சுந்தரி! சொல் சுந்தரி! உனக்குத் தீங்கிழைத்தவர்கள் யார்? உன் வாழ்க்கையை அலங்கோலப் படுத்தியவர்கள் எங்கிருக்கிறார்கள்? அவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்களா?"

"குறையில்லாமல் வாழ்கிறார்கள். குழந்தை குட்டிகளோடு வாழ்கிறார்கள்"—சுந்தரிக்கு மறுபடியும் கண் கலங்க ஆரம்பித்தது.

"அழாதே சுந்தரி! ஏன் அழவேண்டும்? என்ன வந்துவிட்டது இப்போது?"

"என்னுடைய கண்ணீர், என் துயரத்தைப் புரிந்து கொண்டவர்களுக்கு வேகமான நீர்வீழ்ச்சியாகப் படாதா என்றுதான் அழுகிறேன். பெண்களுக்கு இலவசமாகக் கிடைக்கும் ஆறுதல், கண்ணீர் ஒன்று தானே!"

"ஆமாம், தூக்கமும் கண்ணீரும்தான் எங்கேயும் மலிவாகக் கிடைக்கும் என்பார்கள். ஆனாலும் உன்னைப் போல் அழுகிறவர்களை நான் இதுவரை பார்த்ததே இல்லை!"

"உண்மைதான். பாயும் புலியைப் பார்த்திருப்பீர்கள். படமெடுத்தாடும் நாகத்தைப் பார்த்திருப்பீர்கள். நினைத்து நினைத்து அழும் மணிப் புறுவை எங்கே பார்த்திருக்கப் போகிறீர்கள்!"

தேவன் மிரட்டிப் பழக்கப்பட்டவன். எதிர்ப் பேச்சுப் பேசத் தெரியாத குழந்தைகளைத்தான் அவனுக்குக் கொஞ்சத் தெரியும். தூர்ப் பலாவின் சர்க்கரைச் சுளைபோன்ற வார்த்தைகளைப் பொழிந்து கொண்டே இருக்கும் சுந்தரியின் பேச்சுக்கு அவனால் சரியாகப் பதில் சொல்ல முடியவில்லை.

"சுந்தரி, கண்ணீரைத் துடை. கதையைச் சொல்லு. களைய முடியுமா துயரத்தை என்று பார்க்கிறேன்."

"கதை! என் கதையையா கேட்கிறீர்கள்? வேண்டாம் துரையே! புதைகுழியைத் தோண்டினுல் எலும்புத் துண்டுகள்தானே கிடைக்கும். அதனுல் பிரயோஜனம்?"

"உன் கதையை நான் தெரிந்து கொள்வதிலே உனக்கென்ன மனக் கஷ்டம்? என்னை நீ அன்னியன் என்று நினைக்கிருய்!"

"இல்லை! இல்லை! போன கதை போகட்டும், புதிய கதை தயாரிப்போம் என்கிறேன்! அதற்குள் கோபமா?"

"புதிய கதை! புலியடித்துப் பொழுது போக்கும் இந்தப் பொல்லாத கள்ளன், கிளியொத்த சுந்தரியோடு எப்படித்தான் எழுத முடியும் புதியகதையை!"

"புதிய கதை எழுத புலியடிக்கும் புகழ் வீரரைத்தான் நான் எதிர்பார்த்திருந்தேன். மையிருட்டு வந்தவுடன் மாடத்துப் பாலைக் குடித்துவிட்டு ஓடும் பூனை மனிதர்களால்தானே என் வாழ்வு சூன்யமாகி விட்டது!"

"இன்னும் சுற்றி வளைத்துக்கொண்டே இருக்கிருயே சுந்தரி!"—தேவன் சற்றுக் கொஞ்சலாகவே கேட்டான்.

சுந்தரி மெதுவாக எழுந்தாள். நீலப் புடவையைச் சரிசெய்து கொண்டாள். மெல்ல நடந்தாள். அந்த அன்ன நடை, தேவனுக்கு அன்பழைப்பு விட்டது. பின்தொடர்ந்தான். கொல்லைப் புறத்தில் கொடி

முல்லைப் பந்தலுக்கடியிலிருந்த சலவைக்கல் மேடையில் அமரும்படி தேவனுக்கு ஜாடை காட்டினாள்.

தேவன் உட்கார்ந்தான். சிலம்பி, வெள்ளித் தட்டில் துளிர் வெற்றிலையையும், சீவிய கொட்டைப் பாக்குச் சீவலையும் கொண்டு வந்து வைத்தாள். அவளுடைய நிழல் மறைந்தது. சுந்தரி தேவன் பக்கத்தில் அமர்ந்தாள். உலர்ந்துபோன உதடுகளுக்கு, இரண்டு துளிர் வெற்றிலைகளைப் போட்டு இளங்காவி பூசிக் கொண்டாள்.

"சுந்தரி!"

"இ...ம்!" சுந்தரியின் தொனியில் புதுப் பெண்ணின் தனித்தன்மை பிரதிபலித்தது. எப்படித்தான் சுந்தரிக்கு அது ஏற்பட்டது என்று தேவனுக்குப் புரியவில்லை. புதிய வீணையின் இனிய சாயலில் மெய் மறக்கும் கலாரசிகனைப்போல் சொக்கிப் போனான் தேவன். பொழுது புலர்ந்ததும் காம்பை அறுத்துக் கொள்ளப் போகும் நாளைய மலர்கள், பாதி மலர்ந்து புது மணத்தைச் 'சுடச்சுட'த் தெளித்துக்கொண்டிருந்தன. மோகன ராஜ்ஜியத்தின் மாணிக்கச் சிங்காதனத்தில் அமர்ந்திருந்த சுந்தரி, கூந்தலை அள்ளிச் சேர்த்து முன் பக்கமாகப் போட்டுக் கொண்டாள். தேவன் அவள் உதட்டின் அசைவையே ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

"அதோ தெரிகிறதே வீடு, அதுதான் எங்களுக்குப் பூர்வீகமான வீடு" என்று சொல்லி, தேவனின் கையாலேயே அந்த வீட்டுக்குக் குறி வைத்துக் காண்பித்தாள்.

"குட்டிச் சுவர்போல் தெரிகிறதே!"

"ஆமாம், குட்டிச் சுவர்தான். அந்தக் குட்டிச் சுவரின் ஒவ்வொரு செங்கல்லும் ஓராயிரம் கதைகள் சொல்லும். அத்தான், இந்தக் குட்டிச் சுவர், பல வீடுகளைக் குட்டிச்சுவராக்கிவிட்டுக் கடைசியாகத்தான் குட்டிச்சுவராகி யிருக்கிறது."

"என்ன சுந்தரி, கதைக்குள் கதையா? உன் கதை என்னவென்றால் உன் பாட்டி கதையை ஆரம்பித்து விட்டாயே!"

"பாட்டி கதையல்ல தலைவரே, என் அன்னையின் சரித்திரம்!"

"தாயாரையா இப்படிப் பேசுகிறாய்?"

"எப்படிப் பேசுகிறேன்! தொழில் நன்றாக நடந்தது எழில் மாடத்தில் வாழ்ந்தார்கள் என்கிறேன். குறையொன்றும் சொல்லவில்லையே!"

"இ...ம்! சொல்லு!"

"பர்வதம் என்றால் பத்துப் பதினைந்து வருஷங்களுக்குமுன் எங்கும் அடிபட்ட பெயர். என் தாயாருக்கு நான் மூத்தவள். எனக்கு இளையவள் ஒருத்தி. அவள் பெயர் வடிவாம்பாள். அன்னை பர்வதத்தம்மாள் கண்களை மூடியபோது இலட்ச ரூபாய் அளவில் எங்களுக்குப் பொதுச் சொத்து இருந்தது. வடிவு வயது பெறுதிருந்ததால் குடும்பத்தின் மேற்பார்வையை நானே ஏற்றுக்கொள்ள வேண்டியவளாக இருந்தேன். ஒரேசமையல், ஒற்றுமையாகத்தானிருந்தோம். ஒரே கண்ணாடியில் முகம் பார்த்துக் கொள்வதையும், ஒரே சாந்துக் கிண்ணத்துப் பொட்டையே இருவரும் நெற்றிக்கு வைத்துக்கொள்வதையும் பார்த்துப் பார்த்துப் பரவசப்பட்டார்கள் எங்கள் உறவினர்கள்.

புலமை பெற்ற ஒக்கூரை உங்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். அந்த ஊரில் பிறந்தவர்தான் அவர். என் வாழ்க்கைக்குத் தொடக்க விழா நடத்தியவரைத்தான் சொல்லுகிறேன். பெயர்...முருகப்பர். நான் சின்னவளாக இருந்தபோது என் கன்னத்தைக் கிள்ளி மகிழ்ந்தார். பருவமடைந்த பிறகு புருஷனாகவே வந்துவிட்டார். தாசிக்கு ஏது புருஷன் என்பீர்கள். என் விஷயத்தில் அந்தப் பொதுவான பழமொழி பொய்த்துவிட்டது. பதினாறு வயதிலிருந்து இருபத்திரெண்டு வயதுவரை அவர் என் பக்கத்திலேயே இருந்தார். என்பாலுள்ள அன்பு குறையுமே, ஆசை அழியுமே என்பதற்காக அவர் சுயஜாதியில் திருமணம் செய்து கொள்ளாதிருந்தார். நாட்டுக்கோட்டைச் செட்டியார் வகுப்பில் இதை ஒரு தியாகம் என்றே பலரும் கருதினார்கள்.

இளம் பெண்ணையும், பெண்ணோடு வரும் பெரும் பொருளையும் இழப்பது, துறப்பது தியாகம்தானே! புத்தருக்குத் திருமணம் செய்து வைத்துவிட்டால், அவர் புரட்சிப் போக்கை நிறுத்திக்கொண்டு, புவியாளும் பொறுப்பை ஏற்றுக்கொள்வார் என்றுதானே அவர் தகப்பனார் சுத்தோதனர் எண்ணினார். அந்தக் கதிதான் முருகப்பனுக்கும்! பெரிய இடத்தில் கலியாணம் செய்து வைத்துவிட்டால் முருகப்பர் திருக்கோஷ்டியூருக்குப் போகமாட்டார் என்று அவர் தந்தை திட்டமிட்டார். புத்தர் திருமணத்தை நடத்திய பிறகும் புரட்சியை வளர்த்தார். முருகப்பர் திருமணத்திற்கே ஒப்புக்கொள்ளவில்லை. என் வாழ்வு சுந்தரியிடம்தான் என்று சொல்லிவிட்டார். அப்போது தங்கை வடிவாம்பாள் பருவமடைந்த புதிது. தாசி வீட்டில் பிறந்துவிட்டாலும், என்னுடைய கண்டிப்

பான கண்காணிப்பில் இருந்ததால் வடிவாம்பாள் ஆடவர் முகத்தைத் தொழில் கண்ணேட்டத்தோடு பார்ப்பதற்குப் பழகவில்லை. பண்ணையார் வீட்டுப் பெண்ணைப்போல், அதோ இருக்கிறதே அந்தக் கீற்றுச் சவுக்கைக்குள்ளேயே இருந்தாள். மேலத் தெரு மின்மினி, மூலை மாடி சத்தியபாமா...இவர் களுக்கெல்லாம்கூட வடிவாம்பாளின் அந்தப்புரம் பிடிக்கவே இல்லை. என்ன செய்வது! அன்னையின் காலத்தோடு குலத்தொழில் அழிந்து போகட்டும் என்று எண்ணியதால் மற்றவர்கள் விரோதத்தை மட்டுமல்ல, உற்றவர்கள் எதிர்ப்பையும் சேகரித்துக் கொண்டேன்.

திருக்கோஷ்டியூர், குன்றக்குடி, விருலிமலை போன்ற ஊர்களில், தாசிவீட்டில் ஒரு பெண் பருவ மடைந்திருக்கிருள் என்ருல், நாடகத்தில் சிறப்பாக நடித்தவரைப்பற்றி நாடகம் பார்த்துவிட்டுப் போகிற வர்கள் தெருவெல்லாம் பேசிக்கொண்டு போவதைப் போலவே அந்தப் புதுப் பெண்ணைப்பற்றிப் பணக்கார வாலிபர்கள் பேசிக்கொள்வதுண்டு. அந்த வீட்டில் ஒரு புதிய சீமான் வரும்வரை பேச்சு ஓயாது, ஒழியாது; அது பிரச்சினையாகிவிடும். வடிவாம்பாள், வாலிபர்கள் மத்தியில் பிரச்சினையாகத்தான் மாறிவிட்டாள். என் னுடைய அடக்கமும், மௌனமும் சேர்ந்து தேடி வைத்திருந்த மரியாதை, என் வீட்டுக் கதவை மற்ற வர்கள் தட்டவிடாமல் பாதுகாத்தது.

கொடைக்கானல் மலைச்சரிவில் முருகப்பருக்கு ஒரு பழத்தோட்டமிருந்தது. நானும் அவரும் அதைப் பார்த்து வருவதற்காக ஒருமுறை போயிருந்தோம். வடிவாம்பாளையும் உடன் அழைத்தேன். "அத்தான் இருக்கிருர்; எனக்கு வெட்கமாயிருக்கிறது" என்ருள்.

அந்தப் பதில் ஒருவகையில் மகிழ்ச்சியைத்தான் தந்தது. தாசி வீட்டு யுவதி வெட்கத்தைப்பற்றிப் பேசுவதென்ருல் எளிதில் எதிர்பார்க்கக்கூடியதா? வடிவாம்பாள் பேசிஞள் அப்படி. சிலம்பியை அவளுக் குத் துணையாக வைத்துவிட்டு நாங்கள் மலைக்குப் போனேம். எந்தச் சிலம்பியை? இப்போது இருக் கிருளே இந்தச் சிலம்பியைத்தான். நாங்கள் திரும்பி வருவதற்கு ஒரு வாரம் பிடித்தது. ஆனல், போன போது இருந்த சுகம் வரும்போது இல்லை. அந்தக் குளிர் நிலத்துச் சீதோஷ்ணம் என் உடம்புக்கு ஒத்துக் கொள்ளவில்லை. லேசான காய்ச்சலோடு ஊருக்குத் திரும்பினேம். காய்ச்சல் எனக்கு மட்டுந்தான். அவருக்கு அல்ல.

ஊர் திரும்பி இரண்டு நாளாயிற்று. என் உடல் நலிவு கண்டு வடிவு, கலங்கிஞள். ஆறுதல் சொன்னேன். செத்துவிடமாட்டேன், சஞ்சலப்படாதே என்றேன். ஆனல், நாளுக்கு நாள் உடல்நிலை எனக்கு அச்சத்தை வளர்த்துக்கொண்டிருந்தது. எலும்பும் தோலுமாய்ப் போய்விட்டேன். மீண்டும் பிழைத்து எழுவேன் என்ற நம்பிக்கை போய்விட்டது.

சோகத்தால் முருகப்பரின் முகம் வீங்கிவிட்டது. பொறுமினர். கண்களைத் துடைப்பதும், மூக்கைத் துடைப்பதுமாகவே இருந்தார்.

ஒருநாள் அவர் என் அருகில் வந்து உட்கார்ந்தார். அவரோடு பேசக்கூட எனக்கு சக்தி இல்லை. திக்கித் திணறிச் சில வார்த்தைகள் பேசினேன்.

"அத்தான், தாசி வயிற்றில் பிறந்த என்னைத் தாரமாக ஏற்றுக்கொண்டீர்கள். மனதார வரவேற் கிறேன். உங்கள் மனங்கோணுமல் இதுகாறும் நடந்து

கொண்டேன். இனி எனக்கு நம்பிக்கை இல்லை அத்தான். உங்கள் மனைவி ஒரு கைமாறு செய்யப் போகிறாள். எத்தகைய சபலத்தாலும் உடைத்துவிட முடியாத வகையில் உறுதிப்படுத்திக்கொண்டுதான் இன்று உங்களிடம் வெளியிடத் துணிந்தேன். இந்தச் சுந்தரி, முருகப்பரின் மனைவியாகவே இதுவரை வாழ்ந் தாள். அவளுடைய ஆசை, முருகப்பர் சாகும்வரை காலஞ்சென்ற பர்வதத்தம்மாளின், மருமகளுகவே இருக்க வேண்டுமென்பதுதான். அதற்காகவாவது என் முடிவை மறுக்காதீர்கள் அத்தான். புத்தம் புதிய மலர், பூரிப்பால் ஒளிவிடும் வண்ணச்சிலை மேனி— வடிவைத்தான் சொல்லுகிறேன் அத்தான். அவளை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். உங்களுடைய பொற்பாதங்களை என்னுடைய கண்ணீரால் நனைத்துக் கேட்டுக் கொள்ளுகிறேன்; இன்று முதல் அவள் உங்கள் மனைவியாக இருக்கட்டும். என் ஜீவன் மறையுமுன் தங்கை வடிவு, வாழ்க்கை நடத்துவதை நான் பார்த்து விடவேண்டும்'' என்று முருகப்பரைக் கெஞ்சிக்கேட்டுக் கொண்டேன். முருகப்பர் வாய்விட்டு அழுதார்.

''நீ சாகமாட்டாய் சுந்தரி. கலங்காதே! கெடு மனங் கொண்டோருக்குத் துன்பம் வரும்போதுதான் அது வலிமைபெறுகிறது. உன்னைச் சுடும் துன்பத் திற்கு வலிவேது சுந்தரி?'' என்று எனக்குச் சமா தானம் சொன்னார் முருகப்பர்.

என் மனம் சாந்தி பெறவில்லை. வடிவாம்பாளை அழைத்தேன். அருகில் வந்தாள். அன்றுதான் அவள் முதல் முறையாக முருகப்பருக்கு எதிரே நின்றாள். ''அத்தானைப் பார் வடிவு!'' என்றேன். அவள் தலை யைத் தொங்கப்போட்டாள். ''வெட்கப்படாதே வடிவு. இனி எதுக்கு வெட்கம்? இருந்தது போதும்''

என்று சொன்னேன். அவள் குனிந்த தலை நிமிரவில்லை. தேள் கொட்டிய குடத்திலிருந்து தண்ணீர் கசிவது போல் வடிவாம்பாளின் கண்களிலிருந்து கண்ணீர் கசிந்தது. மெத்தக் கடினப்பட்டு படுக்கையில் எழுந்து உட்கார்ந்துகொண்டு வடிவாம்பாளின் கைகளைப் பிடித்து முருகப்பரின் கையில் கொடுத்தேன். மூன்று பேரின் கண்ணீரும் அன்று சங்கமமாகியது.

வடிவு வாழ்வைத் தொடங்கினாள். என் வாழ்வைத் தொடக்கி வைத்த அதே முருகப்பர், என் தங்கையின் வாழ்வையும் தொடக்கி வைத்தார். எங்கள் குடும்ப ஒற்றுமையைக் கண்டு திருக்கோஷ்டியூரே பெருமிதம் கொண்டது.

ஒரு மாதம் கழிந்தது.

இரவு நேரங்களில் நான் இருமிக்கொண்டே இருப்பேன். முருகப்பரும் வடிவாம்பாளும் என் பக்கத்திலேயே இருந்துவிட்டு, நான் தூங்கிய பிறகு படுக்கையறைக்குப் போவார்கள். சில நாட்களில் எனக்குத் தூக்கமே வருவதில்லை. இவர்கள் காத்திருக்கிறார்களே என்பதற்காக தூங்குவதுபோலப் பாவனை செய்வேன். நான் தூங்கிவிட்டதாக எண்ணி இவர்கள் படுக்கையறைக்குப் போவார்கள். எனக்காக இரண்டு இள இதயங்கள் ஏன் வதங்கவேண்டும்? இப்படியே இரண்டு மாதங்கள் ஓடிவிட்டன. நான்சாகவு மில்லை. பிழைக்கவு மில்லை.

ஒரு நாள் முருகப்பர் என்னிடம் வந்து "பிரசித்தி பெற்ற நாட்டு வைத்தியர் ஒருவர் வந்திருக்கிறார். சிவகங்கை ராணி வேலு நாச்சியாரிடம் நற்சாட்சிப் பத்திரம் பெற்றவர்; ஜமீன்தார் குடும்பங்களுக்குச்

சேவை செய்கிறவர். அவரை வரவழைத்திருக்கிறேன். குணமாகிவிடும்" என்ருர். எந்த வைத்தியமும் இனிப் பலிக்காது என்பதே எனது தீர்க்கமான முடிவாக இருந்தது. ஆகவே, யார் வந்தாலும் முடிவு ஒன்றுதான் என்ற எண்ணத்தில் எல்லாவற்றிற்கும் மௌனம் சாதித்தேன். வந்த வைத்தியர், தொண்ணூறு நாட்களுக்கு மருந்து சாப்பிடவேண்டுமென்ருர். நான் மறுத்தாலும் முருகப்பர் விட்டால்தானே! ஒவ்வொரு நாளும் வைத்தியரோடு வருவதும் போவதுமாக இருந்தார் முருகப்பர். ஒருநாள் அவரிடம், எங்கே வடிவு என்று கேட்டேன். அவளுக்குத் தலைவலி என்ருர் முருகப்பர். அதிலிருந்து ஒருவாரம் வடிவு வரவே இல்லை. எட்டாவது நாளன்று வழக்கம்போல் முருகப்பர் வைத்தியரோடு வந்தார். வடிவு வர வில்லையா என்று கேட்டேன். நாளைக்கு அழைத்து வருகிறேன் என்ருர். ஆனல், மறு நாள்? முருகப்பர் கூட வரவில்லை; வைத்தியர் மட்டுந்தான் வந்தார். முருகப்பரும், வடிவும் வரவில்லையா என்று வைத்தியரிடம் கேட்டேன். அவர்கள் ஒக்கூருக்கு நாடகம் பார்க்கப் போவதற்குப் புறப்பட்டுக்கொண்டிருக்கிருர்கள் என்ருர் வைத்தியர். என்னைக்காட்டிலும் வடிவு பேறு பெற்றவளாகிவிட்டாள் என்று நான் பெருமைப் பட்டேன். இத்தனை வருஷகாலமாக முருகப்பரின் சொந்த ஊருக்குப்போக எனக்குக் கிடைக்காத வாய்ப்பு அவளுக்குக் கிடைத்தது என்பதற்காக என்ஞல் மகிழாமல் இருக்கமுடியவில்லை.

நாடகம் பார்க்கப்போன அவர்கள் மறுநாள் பகல் திரும்பிவிட்டதாகச் சிலம்பி சொல்லத்தான் எனக்குத் தெரியும். வந்தவர்கள் என்னை வந்து பார்க்கவில்லை. வைத்தியர்தான் வந்துபோனுர்.

புதிய வைத்தியரிடம் சிகிச்சை பெறத் தொடங்கி ஐம்பது நாட்களுக்குப் பிறகு, உடம்பில் அங்கங்கே தேங்கி நின்ற அசுத்த ரத்தம் ஊர்வதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது. வரண்டு கிடந்த தொண்டையில் ஈரம் தங்கியது. யார் வந்து என்னைப் பார்க்காவிட்டாலும் பரவாயில்லை, தேவைப்படும்போது சிலம்பியைக் கூப்பிடவாவது தொண்டை வந்ததே என்ற திருப்திதான் எனக்கு.

என் பேச்சுக் குரல் அவர்களுக்கு நாராசமாகப் பட்டிருக்கும் போலிருக்கிறது. ஏனென்றால், அவர்கள் முகப்பிலேயே இருந்தார்கள். முகத்தைக்கூட அவர்கள் காட்ட விரும்பவில்லை.

ஒருநாள் இரவு எல்லோரும் படுத்த பிறகு, சிலம்பியைக் கூப்பிட்டு விஷயங்களை விசாரித்தேன். முருகப்பர் மீதும், வடிவாம்பாள்மீதும் எனக்குக் கோபம் பிறக்கும் படியான சில சம்பவங்களைச்சொன்னாள். அவளுக்கென்ன தெரியும்! பாவம்! உலகத்தில், கற்றோரில் நல்லவர்கள் ஒரு சிலருக்கு மட்டுமேயிருக்கும் களங்கமில்லாத உள்ளம், கல்லாத பெரும்பான்மையினருக்கு இருக்கிறது. சிலம்பி அதற்கு உதாரணம். அவளுக்கு என்மீதுள்ள பாசத்தால் உள்ளதை உள்ளபடி சொன்னாள். அப்போது வைத்தியர் வந்துவிட்டார். சிலம்பி பேச்சை நிறுத்திக்கொண்டாள். ஆனால், வைத்தியர் பேச்சை ஆரம்பித்ததும், சிலம்பி விட்ட இடத்திலிருந்து தொடங்குவது போலிருந்தது. "சுந்தரி, வடிவாம்பாளுக்கும் முருகப்பருக்கும் தனிக் குடித்தனம் நடத்தவேண்டுமென்ற எண்ணம் இருக்கும் போலிருக்கிறது" என்று தொடர்ந்தார். எனக்குச் சுளீர் என்று பட்டது. என் கண்களுக்கு மட்டுமல்லாமல் என் காதுகளுக்கும் ஸ்பரிச உணர்ச்சிகளுக்கும் விருந்

தாளியாக இருந்த முருகப்பர் பிரிந்துபோக விரும்பு கிருர் என்ற சேதி என்னுடைய அங்கத்தை யெல்லாம் தீயில் போட்டு வாட்டி வேகவைத்தது. "வைத்தியரே, அவர்கள் ஏன் போகவேண்டும்? ஊருக்குள்ளே எங்களுக்கு இன்னொரு வீடு இருக்கிறது. நானே அந்த வீட்டுக்குப்போய் விடுகிறேன். அவர்கள் தாராளமாக இந்தப் பங்களாவில் குடியிருக்கட்டும்" என்று சொன்னேன்.

வைத்தியர் மறு நாள் வரும்போது "அவர்கள் அந்த வீட்டுக்குப் போகிருர்களாம்" என்ருர். "அதிலும் எனக்குத் தகராறு இல்லை. தாராளமாகப் போயிருக்கட்டும். ஆனுல், வடிவாம்பாளுக்கு மட்டும் ஒன்று சொல்லுங்கள். முருகப்பரை அவள் வசப்படுத் திக் கொண்டுவிட்டதாக எண்ணுவாள். அது தவறு. நான்தான் முருகப்பரை அவளுக்குக் கொடுத்தேன் என்பதை மட்டும் அவளுக்குச் சொல்லிவிடுங்கள்" என்றேன்.

நல்ல நாள் பார்த்து வடிவாம்பாளும் முருகப்பரும் நாகபாசத்தார் தெருவிலுள்ள பழைய வீட்டிற்குக் குடிபோய் விட்டார்கள். நாகபாசத்தார் தெரு என்பது ஒரு தெருவின் பெயரா என்பீர்கள். ஆம், தெருவின் பெயர்தான். தேவதாசிகள் இருக்கும் பகுதிக்கு அந்தப் பெயரைத்தான் ஜமீன்தார்கள் வைத்திருக்கிருர்கள். தேவஸ்தான வரவு செலவுக் கணக்கில் கூட இந்தப் பெயர்தான் குறிக்கப்பட்டிருக் கிறது. இந்தப் பெயரை மாற்ற யாரும் இன்னும் தயாராகவில்லை.

சுந்தரி கதையை முடிக்கவில்லை. அப்போது சிலம்பி வந்தாள். அவள் எதற்காக வருகிருள் என்பதை

அறிந்துகொண்ட சுந்தரி, "சாப்பிடத்தானே! இலை யைப்போடு! இல்லை, இல்லை! வெள்ளித் தட்டைக் கழுவி வை! தடுக்கை எடுத்து விரி! போ!" என்று சொல்லி யனுப்பினுள். சுந்தரியின் சோகக் கதையை கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த வாளுக்குவேலி இடையிடையே பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்தான். நெடுநேரம் அவன் பேசாதிருந்ததால் அவன் தொண்டை அடைத் திருந்தது. இரண்டு முறை செருமிக்கொண்டு கதையைத் தொடர்ந்து கேட்சத் தயாராளுன். சுந்தரி தொடர்ந்தாள்:

"அதோ மங்கலாக ஒரு கூந்தப்பனை மட்டும் தெரி கிறதே, அது, வடிவாம்பாள் வீட்டுக் கொல்லையில் இருக்கிற மரம் தான். என் அன்னை சிறுமியாக இருந்த போது அந்த மரமும் நன்ருக இருந்ததாம். மரங்களைப் போல் மனிதர்களுக்கும் முதுமை தட்டாதிருக்குமாளுல் உலகத்தில் என்னென்ன அனர்த்தங்கள் விளையுமோ?

ஒற்றுமையாக வாழலாம், உலகத்திற்கு அது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கட்டும் என்றுதான் எண்ணி னேன். அந்த ஆசை செத்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன. என்னிடம் எவ்வளவு அன்பு வைத்திருந் தாரோ அவ்வளவு அன்பை அவள்மீதும் வைத்திருந் தார். வீட்டில் புழங்குவதற்கு வெள்ளியிலேயே பாத்திரங்கள் செய்து கொடுத்தார். அவள் பெயரால் கோயிலிலே உள்ள அம்மனுக்கு வைரத்தோடு வாங்கிக் கொடுத்தார். அவளுடைய வீம்புக்காக, எனக்கு என்னென்ன சாமான்கள் வாங்கிக் கொடுத்தாரோ அத்தனையும் அவளுக்கும் வாங்கிக் கொடுத்தார். தாசி விரும்பும் பொருளையும் சொரிந்தார், ஒரு குடும்பப் பெண் எதிர் பார்க்கும் அன்பையும் வழங்கினுர். ஆனுலும் வஞ்சிக்கப்பட்டாரே! அந்தக் கதையை

நினைக்கும்போதுதான் இந்த உலகத்தை ஏன் கடல் கொண்டு போய் விடக்கூடாது என்று தோன்றுகிறது.

முருகப்பர், அவர் தந்தைக்கு ஒரே மகன். நாட்டுக் கோட்டைச் செட்டியார் குடும்பங்களில் ஒரே குழந்தை என்றால் அந்தக் குழந்தை மீதுதான் பெற்றோர்கள் உயிரையே வைத்திருப்பார்களே! அவர் தந்தை எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தார், முருகப்பரைத் திருமணம் செய்துகொள்ளச் சொல்லி. முருகப்பர் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. அவருடைய தகப்பனாருக்கு ஒரு யோசனை தென்பட்டது. முருகப்பருக்குப் பணம் கொடுப்பதை நிறுத்திவிட்டார். அப்போதாவது தன் மகன் வீட்டிலே விளக்கேற்றி வைக்க ஒரு வணிகர் குலத்திலகவதியைக் கொண்டுவந்து விடமாட்டானா என்ற சபலம்தான் அவர் தந்தைக்கு!

முருகப்பருக்குப் பணமுடை தட்டிவிட்டது. செலவு செய்த கரம் செல்வமின்றித் தவித்தது. வலக்கரத்தில் இருந்த வைர மோதிரத்தை இடக் கரம் கழற்றியது. இடக்கரத்துத் தங்க மோதிரத்தை வலக்கரம் கழற்றியது. மோதிரங்கள் கைமாறின. கழுத்துச் சங்கிலியும் இடுப்புச் சங்கிலியும் வட்டிக் கடையின் வசீகரப் பொருள்களாகிவிட்டன.

தகப்பனார் அவர்மீது காட்டிய கோபமும் கசப்பும், முருகப்பருக்கு வடிவாம்பாள்மீது மோகத்தை வளர்த்தது. கிழமை ஒரு தடவை ஒக்கூருக்குப் போவதையும் நிறுத்திவிட்டார். அல்லும் பகலும் வடிவாம்பாள் சன்னதியிலேயே முகாமடித்தார். ஒவ்வொரு முறையும் ஊரிலிருந்து வரும்போதெல்லாம் புதுப் புதுப் பொருள்களை எதிர்பார்த்து எதிர்பார்த்து இச்சையைப் பூர்த்திசெய்து கொண்டிருந்த உள்ளம்,

வெறுங்கையோடு கூடிய நிரந்தர விருந்தாளியான பிறகு அவரை எப்படி விரும்பும்? விரும்பக் கூடாது என்று சொல்ல மாட்டேன். வடிவாம்பாளின் நெஞ்சு அப்படிப் பழகிப்போன நெஞ்சு என்று சொல்கிறேன்.

பொருளைக் கொட்டிப் புத்தியைப் படித்துக் கொண்டவர்களும், நிறையப் படித்துப் புத்திசாலி களானவர்களும் எதிரியின் முகரேகையில் ஒரு கோடு மாறியிருந்தாலும் அவர்களுடைய குறிப்பைத்தெரிந்து கொண்டு விடுகிறார்கள். அதிலும் தாசியின் எண்ணத் தைத் தெரிந்து கொள்ளவா முருகப்பருக்கு நேரம் பிடிக்கப் போகிறது! இன்ன கிழமையன்று வருகிறேன் என்று வழக்கமாகச் சொல்லிவிட்டுப் போகிறவர். கடைசி முறையாக ஒருநாள், "போய் வருகிறேன் வடிவு" என்று சொல்லிவிட்டுப் போனார். இதுவரை இந்த ஊருக்கு வரவேயில்லை. ஒரு வருஷத்திற்கு மேலா யிற்று அவர் இங்கு வந்துபோய்!" சுந்தரி இந்தக் கட்டத்திற்கு வந்தபோது வாளுக்குவேலித்தேவன் ஒரு குறுக்குக் கேள்வியைப் போட்டான்.

"இப்போது முருகப்பர் என்ன ஆனார்?" வேலித் தேவன் கேட்டான்.

"அவர் இப்போது புத்தி சுவாதீனமில்லாதிருப்ப தாகக் கேள்வி!"

தேவன் அனுதாபத்தோடு ஒரு பெரு மூச்சை விட்டான். அதோடு, "வடிவு கதி என்னாயிற்று?" என்றும் கேட்டான். "அவள்தானே! இருக்கிறாள். தளுக்கும் மினுக்கும் குறையவில்லை. இப்போது, வேறு யாரோ வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். பட்டமங் கலமாம்! கள்ளர் வீட்டைச் சேர்ந்தவராம். அவர் பெயர் வைரமுத்து என்று சிலம்பி சொன்னாள்" என்று

சுந்தரி சொன்னுள். அப்போது, சிலம்பி வந்து "சாப்பாடு பரிமாறியாச்சு" என்ருள். தேவன் ஒரு கணம் சிலையாகி உயிர் பெற்ருன்.

"நீங்களும் கள்ளர் தானே! பட்டமங்கலத்து வைர முத்தரை உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே!" என்று கூறினுள் சுந்தரி.

"தெரியும்! பழக்கமில்லை" என்று எப்படியோ சமாளித்துக்கொண்டு பதில் சொல்லி விட்டான் தேவன்.

இருவரும் எழுந்து உள்ளே போனுர்கள். தேவனுக்குச் சுந்தரி சாப்பாடு பரிமாறினுள். தேவனின் எண்ணமெல்லாம் சிதறிக் கிடந்ததால் சாப்பாட்டைச் சுவைத்துச் சாப்பிட முடியவில்லை அவனுல். மென்று கொண்டே இருந்தான்.

"சுவையில்லையா சாப்பாட்டில்! வைத்த கறி வைத்தபடி இருக்கிறதே!"—சுந்தரியின் குரலில் நிலாம்பரி ராகம் கலந்திருந்தது.

சில பெரிய மனிதர்கள் எவ்வளவு பெரிய மனத்தாங்கல்களையும் மறைத்துக்கொண்டு விடுகிருர்கள். வேறு சிலர் சின்னக் காரியங்களைக்கூட விரிவாக்கி மனதை அலட்டிக் கொண்டிருப்பார்கள். அன்பு ததும்பப் பேசி, ஆசை பொங்க நடந்து கொள்ளும் சுந்தரியிடம் அவனுடைய மனக்கவலையைக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை. பிரியமாகப் பேசினுன். நெடு நாள் பழக்கப்பட்டவனைப்போல நடந்துகொண்டான்.

இத்தனை காலமும் இல்லாமல் திடீரென்று தன்னை அழைத்து வரச்செய்து விருந்து நடத்துவது ஏன் என்று தான் முதலில் அவனுக்குப் புரியாமலிருந்தது. ஆனுல், சுந்தரியின் கதையைக் கேட்டபிறகு ஒருவாறு அவன்

தெரிந்துகொண்டான். வெகு நாட்களுக்கு முன்பு அரும்பு விட்ட எண்ணத்தை அடக்கி அடக்கி, யோசித்து யோசித்து, பின் துணிந்து, இந்த முடிவுக்கு வந்திருக்கிருள் சுந்தரி என்பது மட்டும் தேவனுக்குத் தெளிவாக விளங்கிவிட்டது. புருஷன் துணையிருந்த போதும் பவ்யமாக வாழ்ந்தாள்; புருஷன் கைவிட்ட பிறகும் அந்த இடைவெளியில் களங்கம் பூசிக்கொள்ள வில்லை; இனி வேமுெருவரோடு வாழ்ந்தாலும் ஊர் தூற்ருது என்ற நம்பிக்கை அவளைத் தைரியசாலியாக்கி வைத்திருந்தது. இல்லாவிட்டால் சந்தனப் பொட்டுக் காரர்களும், ஜரிகை வேட்டி ஆசாமிகளும் மிராசுதார் கள்—முதலியார்கள் என்ற பட்டத்திற்குள் மறைந்து கொண்டு குட்டிராஜ்யம் நடத்தும் திருக்கோஷ்டியூரில் சுந்தரி சமமான அந்தஸ்தை எப்படிப் பெற்றிருக்க முடியும்? ஊரிலே ஒரு காரியமென்ருல் சுந்தரியின் கை யொப்பமும் அல்லவா முக்கியமாகத்தேவைப்பட்டது!

ஊர் நித்திரை கொண்டது. ராஜகோபுரத்து எண்ணெய் விளக்கு அணைந்துவிட்டது. கொஞ்சும் புருவும்,பஞ்சவர்ணக்கிளியும் ஒரேகூட்டில் அடைந்தது போல் தேவனும் சுந்தரியும் ஒரே தலையணையில் தலை சாய்த்தார்கள். மெல்லிய திரை போன்ற கொசுவலை தொங்கவிடப்பட்ட மெத்தையில் அவர்கள் துயில் கொண்டது கண்ணுடிப் பாத்திரத்திற்குள் வைக்கப் பட்டிருக்கும் மாம்பழமும், ஆப்பிளும் போலத்தோன் றிற்று.

இருட்டிய பிறகு தேவன் வந்தான், இன்ப நிலவில் பேசிக் கொண்டிருந்தான், இரவு முழுவதும் அங்கேயே தங்கினுன்—இது மனித ஜாதியைப் பொறுத்த மட்டில் சாதாரணமான சம்பவங்கள் தான். ஆனல், தேவனைப் பொறுத்தவரையில்— சுந்தரியைப் பொறுத்தவரையில்

எளிதில் நடந்துவிடக் கூடியது அல்ல. கண்ணாரக் கண்டேன் என்று சொன்னால்கூட திருக்கோஷ்டியூரில் யாரும் நம்பவே மாட்டார்கள். தேவனை வரவேற்கத்தக்க அந்தஸ்து சுந்தரிக்கு உண்டு. சுந்தரி விரும்பத்தக்க அந்தஸ்து தேவனுக்கும் உண்டு. ஆனால் தேவன் வருவானா? சுந்தரி ஒப்புக்கொள்வாளா? அதைத்தான் ஊரார் நினைப்பார்கள்! கொஞ்சநாள் அப்படித்தான் நினைத்தார்கள்! முருகப்பர் இருந்த இடத்தைத் தேவன் முற்றுகையிட்டான். ராஜா இல்லாத கோட்டைபோல் இருந்த சுந்தரியின் உள்ளத்துக் கோட்டைவாசல் தானாகத் திறந்துகொண்டது. கொலுவிருந்தான் தேவன்.

காலை அரும்பியது. கதிரொளி கோபுரத்துக் கலசத்தைப் பகல் விளக்காக்கியது. கசங்கிய மல்லிகையும், உதிர்ந்த ரோஜா இதழ்களும் கட்டிலுக்கடியில் பரவிக் கிடந்தன. கொசுவலையின் ஒரு பகுதி தூக்கி விடப்பட்டிருந்தது. தேவன் படுக்கையில் இல்லை. புரண்டு படுக்கும்போது விழித்துப் பார்த்த சுந்தரிக்குத் தூக்கிவாரிப் போட்டது. பாதி ராத்திரியிலேயே போய்விட்டான் என்று நினைப்பதற்கில்லை. தலையணையின் வலப்பக்கத்தில் தேவன் தலை பதிந்திருந்த இடம் அதுவரை மேவாமல் இருந்தது. சோம்பல் நீக்க முகத்தைத் தேய்த்தாள். கன்னத்தில் ஈரம் தட்டுப்பட்டது. தானாகச் சிரித்துக்கொண்டாள். புதிய வாழ்வு தொடங்கிவிட்டதாக அவள் நினைத்தாள்! புளியங்கொம்பைப் பிடித்திருப்பதாகப் பெருமைப்பட்டுக் கொண்டாள். ஊரில் அவளுக்கிருந்த மரியாதை ஒரு படி ஏறிவிடும் என்று கணக்கிட்டு வைத்தாள். இரவின் இன்பமும், உள்ளத்தின் பரிபூரண மலர்ச்சியும், அவளுடைய முகத்திற்கு ஒரு புதிய பொலி

வைத் தந்திருந்தன. முகப்புக்கு நடந்தாள். அவள் அணிந்திருந்த வெள்ளிக் கொலுசு, குழந்தைகளின் கிலுகிலுப்பை நாதத்தை எழுப்பியது. கைவளைச் சத்தம் கர்னுடக சங்கீதத்தை நினைவுக்குக் கொண்டு வந்தது.

தேவன் ஊஞ்சலில் இருந்தான். அவன் மடியில் ஒரு ஓலைச் சுருள் கிடந்தது. எதிரே காவல்காரக் கவுதாரி கைகட்டி நின்ருன். சுந்தரி அருகில் நின்று கொண்டு சிக்கலாகிக் கிடந்த கூந்தலுக்குள் அவதிப் பட்டுக் கொண்டிருந்த பூச்செண்டை விடுவிக்கும் திருப் பணியில் முனைந்தாள். பதம் குறையாத அவளது ஊசி விழிகள் அந்த ஓலைக்குக் குறி வைத்தன.

அண்ணுவுக்கு

தங்கை கல்யாணி தாங்கொணுத் துயரத்தோடு பாகனேரி சேர்ந்தாள். இனியும் பொறுக்க எனக்குத் துளியும் விருப்பமில்லை.

அன்புத்தம்பி,
கருத்த ஆதப்பன்.

சுந்தரி பார்த்தும் பார்க்காதவள் போல், "நீரா காரம் கொண்டு வரட்டுமா?" என்ருள்.

"இல்லை சுந்தரி, இப்போது என் வயிறு எதையும் ஏற்காது. வருத்தப்படாதே. அடுத்த வாரம் வருகிறேன்."

"ஏன், தவறென்ன நடந்தது! சொல்லுங்கள். திருத்திக் கொள்கிறேன். கோபிக்காதீர்கள்" என்று கவலையோடு பதில் சொன்னுள் சுந்தரி.

"ஐயோ! உன்னையா சொன்னேன். குடும்பத்திலே ஒரு தகராறு. அது களபலியில்தான் போய் நிற்கும் போலிருக்கிறது. தம்பி துடிக்கிருன். நான் சமாதானப்

படுத்திக் கொண்டு வருகிறேன். ஆனல், என்னையும் நெருப்பாக்கிவிட நினைக்கிருர்கள்.''

''யாரவன், கானகத்துச் சிங்கத்தைக் கண் சிமிட்டி அழைப்பவன்?''

''அவனு?......அதுவும் ஒரு புலிதான் சுந்தரி. சிங்கம் வலிமையுள்ள மிருகமானலும் புலி அதற்குப் பயந்ததாகச் சரித்திரம் இல்லையே! வெள்ளிக்கிழமை என்னை எதிர்பார்.''

''மறந்துவிட மாட்டீர்களே!''

''நானு? என் மீசை என் கௌரவத்திற்கு அடையாள மென்ருல், என் கண்கள் உன் நினைவுக் குறிகள் சுந்தரி. மறவன் வாக்கு கல்லின்மேல் உளி வெட்டுக்கள்.''

தேவன் புறப்பட்டான் அவன் வண்டி மறையும் வரை ஜன்னல் திரை ஒரு பக்கம் விலகியே இருந்தது.

பொன்னி கழுத்தில் தாலி!

வைரமுத்தனின் மாடு நாளுக்கு நாள் மெலிந்து கொண்டே போனது; தீனி செல்லவில்லை. அசை போடவும் சக்தியில்லை. அதைப் பார்த்துப் பார்த்துக் கலங்கினன் வைரமுத்தன். வைத்தியர்களே வகையற்றுப் போய், ஏவல், சூன்யம் என்று கதைத்தார்கள். பலவீனப் பட்ட நெஞ்சு எதையும் ஒப்புக் கொண்டு விடுகிறது. மாட்டு வைத்தியர்களைத் தேடி அலைந்த வைரமுத்தன் மந்திரவாதிகளைத் தேட ஆரம்பித்தான். அலைச்சல்தான் மிச்சமாயிற்று. நோய் வாய்ப்பட்டு இருபதாவது நாள், காளை இறந்துவிட்டது. ஊரில் ஒரு பெரிய மனிதர் இறந்தால் எவ்வளவு அனுதாபம்

பிறக்குமோ அந்த அளவுக்கு அன்று பட்டமங்கலம் சோகமாகக் காட்சி தந்தது. வைரமுத்தன் தேம்பித் தேம்பி அழுதான். உறவினர்களும் நண்பர்களும் அவனைச் சமாதானப்படுத்திய முறையைப் பார்த்தாலே முத்தன் அந்தக் காளைமீது எவ்வளவு பற்று வைத்திருந்தான் என்பது தெரிந்து விடும். மொத்தத்தில் வைரமுத்தன் இல்லத்தில் குறிப்பிடத் தகுந்த ஒரு ஜீவன் மறைந்து விட்டதாகவே ஊரார் கருதினர்கள்.

அயர்ந்து, மறந்து, தன் கணவன் தன்பால் அன்பு காட்டும்போது 'அம்மா' என்று குரல் எழுப்பி கொழுநனின் கோபத்திற்குத் தூபமிட்ட காளை, கண்ணை மூடி விட்டது என்று கல்யாணி அலட்சியமாக இருந்துவிடவில்லை. அவள் இளகிய சுபாவமுடையவள். விஷப் பூச்சிகளைக் கொன்ருல்கூட தனக்குப் புண்ணியம் கிடைக்காது, புருஷனின் அருள் கிடைக்காது என்று அடிக்கடி எண்ணிக் கொள்பவள். காளை இறந்து விட்டது என்றதும் அவளுந்தான் துக்கப்பட்டாள். வைரமுத்தன் சொல்லாமலே, தினசரி அந்த மாடு கட்டியிருந்த கொட்டடியில் விளக்கேற்றி வைத்தாள். ஐந்தாண்டு காலமாக அந்த வீட்டுக்கே ஒரு அம்சத்தைத் தேடித் தந்து கொண்டிருந்த காளை இறந்ததும் இல்லம், பொதுக்கூட்டம் நடைபெற்று முடிந்த மைதானம் போல் 'வெறிச்' சென்றிருந்தது. அந்தக் காளைதான் கல்யாணியின் வாழ்க்கையை அலங்கோலம் செய்தது என்ருலும், அந்தக் காளைதான் அவளுக்கும் அவனுக்கும் இடையே ஓடிய நெருப்பாருக இருந்தாலும் அவள் காளையின் பிரிவை எண்ணிப் பெரிதும் துக்கித்தாள். புருஷன் வருத்தப்பட்டால் பெண் ஜாதியும் வருத்தப்பட வேண்டும் என்ற பழைய சம்பிரதாயத்தின் அடிப்படையில் அவள் கண்ணீர் வடிக்கவில்லை.

உணர்ந்து வருந்திஞள். பெருந்துயர் கொடுத்தோரை யும் பேணிக் காக்கும் தமிழகத்துப் பெண்மை கல்யா ணியைக் கண் கலங்க வைத்தது.

வைரமுத்தன் இப்போது அதிகமாக வீட்டுக்கு வருவதில்லை. காளை இருந்த போது இல்லத்தில் சிறிது நேரம் தங்குவதுண்டு. அதன் முதுகைத் தடவிக் கொடுப்பதுண்டு. அது இறந்த பிறகு ஊரின் பொதுச் சவுக்கைதான் அவனுக்குப்பொழுதுபோக்குமிடமாகப் போய்விட்டது. அந்தக் காலத்தில் பட்டமங்கலத்து நாட்டாருக்கும், திருக்கோஷ்டியூர் கோயிலுக்கும் நெருங்கிய உறவு இருந்து வந்தது. அந்த உறவு 'சிரஞ் சீவி' வரம் பெற்றது என்பார்கள். திருக்கோஷ்டியூர் கோயிலிலே தேர், திருவிழா என்ருல் பட்டமங்கலத் தார் ஒப்புதலும் ஒத்துழைப்பும் இன்றியமையாதன வாகி விட்டன. தேரோட்டத்திற்குக் காப்புக் கட்டி விட்டால் அதிலிருந்து பத்து நாட்களுக்குப் பட்டமங் கலத்து நாட்டார் திருக்கோஷ்டியூருக்குப் போவதும் வருவதுமாகத்தானிருப்பார்கள். அந்த வருஷத்தில் வைரமுத்தனுக்கும் அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டது. அம்பலகாரப் பட்டம் பெற்றவர்களுக்குத் துணைபுரியப் போன பெரிய குடும்பத்தைச் சேர்ந்த வாலிபர்களில் வைரமுத்தனும் ஒருவனுகி விட்டான். தேரோட்டத் திற்கு நாட்டாண்மை செய்யும் நேரங்கள் தவிர, பாக்கி நேரங்களில் அம்பலகாரர்கள் அவரவர்களுக்குத் தெரிந்த இடங்களில் பேச்சுக் கச்சேரி நடத்துவது வழக்கம். தாயம் ஆடுவார்கள், தரையைத் தோண்டி 'மானுப்புள்ளி' விளையாடுவார்கள். கிழடு தட்டிய பழுத்த அம்பலகாரர்கள் கேலி முறை கொண்டாடி 'அன்ெருரு நாள் கொலுவிருந்த' ஐம்பது வயது தாசி கள் வீட்டில் கொட்டமடிப்பது முண்டு. வைரமுத்தன்

இளைஞன். திண்ணைப் பள்ளிக்கூடத்தில், சேர்ந்த புதிய பாலகனைப் போல் விழித்துக் கொண்டிருந்தான். திருக்கோஷ்டியூர் சிறிய ஊர்—சிங்காரிகளின் வாசஸ் தலம்! ஆனால், உளுத்துப் போன சம்பிரதாயக் கொள்கைகள் அங்கு மலிந்து கிடந்தன. கோயிலும் அதையொட்டிய தேவதாசிகளும் தான் அந்த ஊருக்கு ஜீவ நாடிகள்.

வைரமுத்தன், ஓய்வு நேரத்தில், நாட்டார்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த சத்திரத்தில் தங்கினான். கோயிலிலே கொத்து வேலை செய்தோரையும், வெள்ளித் தீவட்டி பிடிக்கும் மிராசு பெற்றிருந்தவர்களையும் துணைக்கு வைத்துக் கொண்டு பொழுதைப் போக்கிக் கொண்டிருப்பான். சில நேரங்களில் பிரபல மஞ்சு விரட்டைப் பற்றிப் பேச ஆரம்பித்து விடுவான். கொத்தனார்கள் முகங்கோணாமல் கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

அன்று கோயிலிலே எட்டாந் திருநாள். சிவகங்கை ஜமீன்தார் மண்டகப்படி. வெண்கலத்தில் செய்த வெட்டுங் குதிரை வாகனத்தில் 'சாமி' வெளி வீதியில் பவனி வரும். அன்றைய திருநாள் தான் சிறப்பானது. விருந்தினர்களெல்லாம் அன்றே திருகோஷ்டியூருக்கு வந்து விடுவார்கள்.

நவரத்தினம்பிள்ளை அந்த ஊரிலேயே ஒருபிரபலஸ்தர். வாழ்ந்து கெட்டவர். ஜமீன்தார்களின் தோளில் தொங்கிச் செவியைக் கடிக்கத் திட்டமிட்டுக் குப்புறக் கவிழ்ந்தவர். ஆனாலும் பழைய பெருங்காயக் கிண்ணம் போல அவருக்கு ஊரில் கொஞ்சம் செல்வாக்கிருந்தது. ஒழிந்த வேளைகளில் சத்திரத்துக்கு வருவார். வைரமுத்தனோடு பேசுவார்; அவனோடு உலாத்தப்போவார்.

நவரத்தினம் பிள்ளைக்கு வடிவாம்பாள் வீட்டில் எப்போதும் வரவேற்புண்டு. அழைப்பில்லாமல் போவார், சாப்பிடுவார், அங்கேயே தூங்குவார். மாலையில் தேனீர் குடித்து விட்டு வீடு திரும்புவார். அப்படி என்ன அவருக்குச் செல்வாக்கு? முருகப்பரின் வருகை தடைப்பட்ட பிறகு, ஜமீன்தார்கள் வடிவாம்பாள் வீட்டுக்கு 'தரிசனம்' தந்து கொண்டிருந்தார்கள். அந்த இடைவேளையில் வடிவாம்பாளின் வீட்டை வாடிக்கையாக்கிக் கொண்டவர் பிள்ளை.

எட்டாந் திருவிழா அன்று வடிவாம்பாள் வீட்டுக்கு ஏராளமான விருந்தினர்கள் வந்திருந்தார்கள். குன்றக்குடி, விருலிமலை, நாட்டரசன் கோட்டை, இளையாத்தங்குடி, திருக்கோகர்ணம் முதலிய ஊர்களைச் சேர்ந்தவர்கள் தான் அந்த ஊர் திருவிழாக்களில் தவறாது கலந்து கொள்பவர்கள்.

நவரத்தினம் பிள்ளை வடிவாம்பாள் வீட்டுக்கு வந்தார். ஒரே விருந்தாளிகள் கூட்டம். குழந்தை குட்டிகளின் அட்டகாசம் தலைதூக்கி நின்றது.

"வடிவு!"—பிள்ளை கூப்பிட்டார்.

"யாராது? மாமாவா?" என்று மாடியிலிருந்தபடியே கேட்டுக்கொண்டு இறங்கி வந்தாள் வடிவு.

"என்ன ஆளைக் காணோம்?" என்று அவளே பேச்சை தொடங்கினாள்.

"பொழுது விடிஞ்சா கோயில் பக்கம் போயிடுறேன். ராத்திரிக்குத்தானே வீட்டுக்கு வர முடியாது" என்றார் பிள்ளை.

"எப்படி மாமா நீங்க ஒரே இடத்திலே இருக்கீங்க! உங்களுக்கு அது பிடிக்காதே!"

''பிடிக்காதுதான். என்னபண்ணித் தொலேயிறது! வேலேக்குப் போகாட்டி நாட்டார் கோபிச்சுக்கிருங்க. அப்புறம் மிராசுக்கு ஆபத்து வந்திடும். அதுக்காக வாவதுபோகணுமே! ஆஞ ஒண்ணு! பொழுது போக்க ஒரு பிள்ளேயாண்டான் கிடைச்சாரு. தங்கப்புள்ளே. நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவருதான். நாட்டமான வருங்கூட!''

''அது யாரு மாமா! புதுசா இருக்குது? வீரக்காளே வைரமுத்தரைச் சொல்றீங்களாக்கும்!''

''அதெப்படித் தெரியும் ஒனக்கு! பட்டம் வேறே புதுசாச் சொல்றியே!''

''பேர் பெத்த மஞ்சிவிரட்டுக்காளே வச்சிருந்தாரே அவரைத்தானே மாமா சொல்றீங்க!...அவ்ரைப்பத்திக் கேள்விப்பட்டிருக்கேன். ஆளேப் பார்த்தது கிடை யாது மாமா! நீங்க அப்படி மனுஷர்களேயெல்லாமா விருந்துக்குக் கூட்டிக்கிட்டு வர்றீங்க!''

''பைத்திக்காரப் பொண்ணு இருக்கியே; நாஞ மாட்டேங்கிறேன். உங்க அக்காளுக்குத் தெரிஞ்சா என்னேக் கோவிச்சுக்குவாளேன்னு பார்த்தேன். நீ ஒத்துக்கும்போது எனக்கென்ன கண்ணு!''

''நம்ப வீட்டுக்கு வர்ரதுக்கு அக்காளென்ன தங் கச்சி என்ன! அவுங்களும் நம்பளுந்தான் ஒருத்தர வீட்டிலே ஒருத்தர் கை நனேச்சுக்கிறதில்லேன்னு போச்சே! இனி யாருக்கு பயம் மாமா? யாரும் யாருக் கும் படியளக்கல்லே!''—என்று வடிவு வார்த்தைகளேக் கொட்டிஞள்.

பிள்ளே இருக்கிருரே, அவர் ஊசி நுழையும் இடத் தில் ஒட்டகத்தை நுழைக்கப் பார்க்கும் பலே ஆசாமி. ஆளின் அசைவிலும் நெளிவிலும் அர்த்தம் பிரித்துப்

பார்ப்பதில் கைதேர்ந்தவர். வடிவாம்பாள் இவ்வளவு சர்க்கரையாகப் பேசியதைக் கண்டால் சும்மா விடுவரா? அன்று மாலையே அந்தி சாய்ந்ததும் வைர முத்தனை வடிவாம்பாள் வீட்டுக்கு விருந்தாளியாக்கி விட்டார். தேரோட்டத்தன்று சமைப்பதற்கென வைத்திருந்த வெள்ளை முயல் அன்று இரவே மரண தண்டனை பெற்றது. அன்று மாலைவரை உரித்தாகக் கவனிக்கப்பட்ட உறவினர்கள்கூட வைரமுத்தனின் வருகைக்குப் பிறகு ஒதுக்கித் தள்ளப்பட்டவர்களைப் போலானார்கள். "ஏ தென்றலே நீதெற்கே போகிறாயா அங்கே சந்தனக்கட்டையை விறகாக்கிச் சோறு பொங்குவார்களே, அந்த அழகிய பொதிய மலைத் தலை வணங்கிய பாண்டியனிடம், நான் வைத்த அன்பினால் என் கைவளை நழுவி விழுந்து விட்டதெனச் சொல்!" என ஏங்கிக் கிடந்த பாண்டிக் குமரிப்போல வாழ்ந்து வந்த வடிவாம்பாளின் இல்லத்திற்குப் பிரசித்திபெற்ற கள்ளர் செல்வன் வந்து விட்ட பிறகு அவளுக்கு உற வினர்கள் என்ன அவ்வளவு பெரியதாகிவிடப் போகி றார்கள்!

வைரமுத்தனுக்கு ராஜ உபச்சாரம் நடத்தினாள். வீட்டில் வதங்கும் செண்பக மலரைப்பற்றி அவன் கவலைப்படவில்லை. காந்திமதி முகத்துடைய கல்யாணி யின் கண்ணீர், வைரமுத்தனுக்கு வடிவாம்பாள் தெளிக்கும் வாசனை நீர்த்துளிகளாகப் பட்டன.

தேர் நிலைக் குத்தியது; திருவிழாவும் அழகாக முடிந்தது. ஆனால், வைரமுத்தன் வடிவாம்பாள் வீட்டுக்கு நிரந்தர விருந்தாளியாகி விட்டான். பிள்ளை போட்டமுடிச்சு அல்லவா? வடிவாம்பாள் வீடு என்று திருக்கோஷ்டியூரிலே வழங்கி வந்த சொல் இரண்டு மாத காலத்திற்குள் 'அம்பலகாரர் வீடு' என்று

மாறிவிட்டது. அவ்வளவு முக்கியத்துவம் பெற்று விட்டான் முத்தன். திருக்கோஷ்டியூர் பஞ்சாயத்து களில்கூட உரிமையோடு கலந்துகொண்டு நடுநிலே நின்று முடிவு கூற ஆரம்பித்தான்.

ஒருநாள் பட்டமங்கலத்திலிருந்து அவனுக்கு ஆள் வந்தது. பண்ணைக்காரப் பெருச்சாளிதான் வந்தான். தனக்கு உடல்நிலே சரியில்லேயென்றும் இரண்டு நாட் களுக்குப் பாகனேரியில் தங்கியிருந்துவிட்டு வரப்போவ தாகவும், அதற்கு முத்தனிடம் அனுமதி கேட்டுவரும் படி கல்யாணி பெருச்சாளியிடம் சொல்லியனுப்பியிருந் தாள்.

"தேவிக்கு ஊர் நோக்கம் வந்துவிட்டதாக்கும்! பெருச்சாளி! காலேயிலே நான் வருவதாகச் சொல்!" என்று சொல்லியனுப்பினுன் வைரமுத்தன்.

முத்தனின் இந்தப் பதில் கல்யாணியை எல்லேயற்ற இன்பத்திலாழ்த்தியது. "அத்தானுக்கு அன்பு வந்து விட்டது; அதனுல்தான் நான் பாகனேரிக்குப் போவதை அவர் விரும்பவில்லே" என்று எண்ணி எண்ணிப் பூரித்தாள் கல்யாணி. நல்ல ஆடவன் தனக்கு வாய்த்திருக்கும் மனேயாளே நேர்மையான எதிர்க்கட்சி யாகஎண்ணி அவள் கூறும் குறைகளேத் தானேதிருத்திக் கொள்கிருன். நல்ல மனேவி புருஷனே மகிழ்வித்துத் தானும் மகிழ்கிருள்; அதுதான் வாழ்வின் இன்பம் என்றும் முடிவு கட்டிவிடுகிருள். வைரமுத்தன் கல் யாணியை எதிர்கட்சியாகக் கருதவில்லே; எடுபிடி வேலேக்காக எங்கோ ஒரு தீவிலிருந்து கொண்டுவந்த இயந்திரமாகவே கருதினுன். ஆனல் கல்யாணி,புருஷன் வருகிருன் என மகிழ்ந்து, சீவி முடித்து சித்திரப் பொட்டிட்டு சிரித்த முகம் சேகரித்துக் காத்திருந்தாள்; வந்தான் முத்தன். 'அத்தான்'என்ருள், இதமாகப்

பேசுவான் என்று எண்ணி. பேசவாசெய்தான் முத்தன். இல்லை. பெரம்பெடுத்தான். பெருங் கோபம் கொண்டு சுழற்றினன். பெண்ணணங்கு துடித்தாள், துவண்டாள், "அத்தான்? அத்தான்!" என்று கதறினள். வதைத்ததோடு விட்டானு முத்தன்! வாய்ச்சொல்லும் வீசிவிட்டான்!

"ஊரிலே யாரடி நேசன்?" என்றும் கேட்டு விட்டான்.

பொறுப்பாளா தமிழச்சி! கொதித்தாள்! "போதும் அத்தான் போதும்! இந்தப் பொல்லாத கண்கள் பொறுக்கித் தந்த புருஷன் வாசித்தளித்த பட்டம் போதும்! புருஷன் வெறுத்தால் பிரிந்திருப்பாள் மறத்தி; ஆனல் புறம் பாய்ந்துவாழமாட்டாள். கண் காணுத் தூரத்தில் பூத்து மலர்ந்து, புதுமணம் வீசி, பின் கருகிச்சாகும் காட்டு முல்லையைப் போன்றவள் தமிழ்ப் பெண். கணவன் விழித்திருக்கக் கண்மூடி பூவாடைக் காரியாகப் புதைக் குழி சென்ருல் புவனம் அவளைப் பூஜிக்கும். ஆனல், கணவனுக்குப் பின் அவள் வாழ்ந்தால், செத்தவன் கட்டியதாலிக் கயிறு அவளுக்குத் தூக்குக் கயிருகும்! "கேவலமாகப் பேசாதீர்கள். வைரம் பாய்ந்த குடும்பத்தில் பிறந்தவள்! பாதுகாப்பில்லாத தோட்டத்தில் பளிங்கு விழிமானை விட்டுப் போனதை போல போய்விட்டீர்கள். மேலைவான் சிவந்ததும் மயானத்திற்குப் போய்விட்டு, காலைவான் சிவந்ததும் உயிர்பெற்று வருவதுபோல் இருக்கிறது என்வாழ்க்கை. எத்தனை நாளைக்கு இந்த இருட்டறைக் குடித்தனம்!"- கல்யாணி கெஞ்சினள். இத்தனை காலமும் அவளுடைய உதடுகள் தான் ரோஜாப்பூவை ஒட்டி வைத்ததுபோல இருந்தன. ஆனல், அன்று அவளுடைய கண்களுக்குப் பதில் இரண்டு செவ்வரளி மொட்டுகளைத் தைத்து

வைத்ததுபோல தோன்றிற்று. முகத்தை மூடிக் கொண்டே கண்களைத் தேய்த்துத் தேய்த்துக் ரத் தத்தைப் போல சிவக்கடித்துக்கொண்டாள். தூயவள் தேம்பலை முத்தன் எப்படிச் சக்தியுள்ளதென்று ஒப்புக் கொள்வான். தமிழ் நாடு அவனை ஆண் பிள்ளை என்று மதிக்காது போய்விட்டால்என்ன செய்வது! அதற்காக வாவது கல்யாணியின் அழுகையை அலட்சியப் படுத்த வேண்டுமல்லவா! 'விர்' என்று வீட்டை விட்டு வெளி யேறி விட்டான். அவனுச்குத்தான் இருக்கிறதே ஒரு பொது ஸ்தாபனம் -சவுக்கை! இந்த நாட்களில் பூங் காக்கள், வாசகசாலைகள் பயன்படுவது போலத்தான் அந்த நாட்களில் கள்ளர் நாட்டில் சவுக்கைகள் பயன் பட்டன. மனைவியை அடித்துத் துன்புறுத்திவிட்டு வரு பவர்கள்— மாதாவைத் திட்டி மடியிருக்கும் பணத்தை எடுத்துக்கொண்டு ஓடி வருபவர்கள்— சித்தியின் கொடு மைக்கு ஆளானவர்கள்— இவர்கள் அத்தனை பேருக்கும் ஊரின் மத்தியில் அமைந்திருக்கும் சவுக்கைதான் புக் கிடம் கொடுத்து உதவியிருக்கிறது. வைரமுத்தனும் விளக்கு வைக்கும்வரை சவுக்கையிலிருந்துவிட்டு இருட் டானதும் வீட்டுக்குப் போனன். பண்ணைக்காரப் பெருச்சாளி வாசலில் உட்கார்ந்திருந்தார்.

“ஏண்டா பெருச்சாளி, வெளியாத்தூரிலே கூத்தாமே போகலையா?”

“போகணும் எசமா. கஞ்சி குடிச்சுட்டுப் போக லாம்னு பார்த்தேன். நாச்சியாரைக் காணமே”—கள் ளர் நாட்டில் வீட்டுக்குடையவரின் மனைவியை நாச்சி யார் என்றுதான் கௌரவமாகச் சொல்லுவார்கள்.

“மகாராணி எங்கேபோயிட்டாங்க?” என்று கிண் டலாகக்கேட்டுக் கொண்டே வீட்டுக்குள்புகுந்து எல்லா இடங்களிலும் தேடினன் வைரமுத்தன். கோயில் வீடு,

கொல்லைப் புரம் எல்லாம் தேடினான். தூர்ந்து போய்க் கிடக்கும் கிணற்றில்கூட இறங்கிப் பார்த்தான். தூக்கிட்டுக் கொண்டாளோ என சமயலறைக்குள் சென்று பார்த்தான். நிலைப்படியில் அடுப்புக் கரியினால் ஐந்து வரிகள் எழுதப்பட்டிருந்தன.

வாழ்க்கைப் பட்டேன்; வதைப்பட்டேன்; வளம் கண்டேனில்லை! வருகிறேன். உங்களுடைய நினைவாக என் உடம்பெல்லாம் கசையடித் தழும்புகள் இருக்கின்றன. அதுபோதும் அத்தான்! விடை கொடுங்கள்!

—இந்த வாசகத்தை இரண்டு முறை படித்துப் பார்த்தான் வைரமுத்தன். மூன்றாவது முறை படிக்கும் போது அவன் தொண்டை கம்மியது. வேறு பக்கம் திரும்பிக் கொண்டான். அவன் திரும்பியதிசை, மாட்டுக் கொட்டம். வழக்கம்போல் அவன் குணம் மாறிவிட்டது.'தொலைந்தது சனியன்! விட்டது பீடை' என்று கணக்குத் தீர்த்தவனைப் போல தானாகப் பேசிக் கொண்டு முற்றத்திற்கு வந்தான். வெளிக் கதவு தாளிடப்பட்டிருந்ததால் சற்று நேரத்திற்குப் பிறகு அவனுடைய நாய் காலால் கதவைச் சுரண்டியது அவன் காதில் பட்டது. உள்ளத்திற்கும் உடலசைவுக்கும் தொடர்பில்லாதவனைப் போல உட்கார்ந்திருந்த வைரமுத்தன் தன்னையுமறியாமல் எழுந்து வந்து கதவைத் திறந்து விட்டு, மறுபடியும் அதே இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டான். உள்ளே புகுந்த நாய் ஓடோடி வந்து மடியிலே விழுந்து புரண்டது.

"சீ! பொன்னி! போ! போ!" என்று அடித்துத் துரத்தினான் முத்தன், பொன்னி போகவில்லை. அவன் காலடியில் படுத்துவிட்டது. அப்போது முத்தன்காலில் ஈரம் தட்டியது. விளக்கினடியில் போய்ப் பார்த்தான், காலெல்லாம் ரத்தம். ரத்தம் எப்படி வந்தது?

அவனுக்கே புரியவில்லை. விளக்கை பொன்னி கிடந்த இடத்துக்கு எடுத்துப் போனான். வீடு வருகிறவரை நிலைத்திருந்த பொன்னியின் உயிர் அந்தக் கணநேரத்தில் பிரிந்து விட்டது. அது செத்துக்கிடந்த காட்சி வீரனையும் குலை நடுங்க வைக்கக்கூடியதாக இருந்தது. அதன் காதுகள் இரண்டும் துண்டிக்கப்பட்டிருந்தன. வால் நறுக்கப் பட்டிருந்தது. அதன் கழுத்தில் கல்யாணியின் தாலி இறுகக் கட்டப்பட்டிருந்தது. திடீர்த் தாக்குதல் தீரனையும் திகிலடையச்செய்துவிடுமல்லவா! எதிர்பார்த்தது நடந்து விட்டதைப் போல் தலையை அசைத்துக் கொண்டு பொன்னியின் பக்கத்திலேயே உட்கார்ந்து விட்டான்.

முத்தன் சித்தம்!

ஓலை கிடைத்ததும் சுந்தரியின் வீட்டிலிருந்து கிளம்பினான் வாளுக்குவேலி. மான் வேகம் மழை வேகமாகப் பாகனேரி சேர்ந்தான். கொடியிறங்கிய கோட்டைபோல் பொலிவிழந்து கிடந்தது அவன் வீடு. காலடி ஓசைகேட்டு வாசலுக்கு வந்தான் ஆதப்பன். தேவன் சிறுத்தைப்போல் ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்துக்கொண்டு உள்ளே வந்துகொண்டிருந்தான்.

"அண்ணா! இனிப் பொறுக்கமாட்டான் ஆதப்பன். 'இம்' என்று சொல்லுங்கள் இமைப் போதில் அவன் சிரசைக் கொய்து வருகிறேன். தங்கையைப் பார்க்க முடியவில்லை அண்ணா! தங்கச்சிலைபோல் அனுப்பினோம். தகடு தகடாய்ப் பெயர்த்து அனுப்பியிருக்கிறான் கொடியவன்,"—ஆதப்பன் அனலாகக் கொதித்தான்; அரைக் கணமும் தாமதியேன் என்று முழங்கினான்,

"பொறு தம்பீ! கல்யாணியைக் கூப்பிடு, கதையைக் கேட்போம்! காலம் வரும்போது தலையைக் கொய்ய உன்னைத்தானே அனுப்புவேன். என் கரத்தால் அவன் சிரசை ஒருபோதும் கொய்ய மாட்டேன். என் கரம் புலியடிக்கும் கரம் "

வாளுக்குவேலி தம்பியைச் சமாதானப்படுத்தி விட்டு கல்யாணியின் வரவை எதிர் பார்த்துக்கொண் டிருந்தான். கல்யாணி வரவில்லை. உள்ளிருந்து, கல்யாணியின் உடன்வந்த நாய்தான்வந்தது. தேவன் எழுந்து உள் கட்டுக்குப் போனான். அங்கே கல்யாணி தூணில் சாய்ந்தபடி விம்மி விம்மி அழுது கொண்டிருந் தாள். தேவன் அவள் முகத்தை உற்றுப் பார்த்தான். கல்யாணிதானா என்று அவனுக்குச் சந்தேகம். முகமெல் லாம் கோடு கோடாய் ரத்தக் கட்டுகள். முதுகிலே கயிறு பின்னியதைப்போல் பிரம்படி. கூடாது இனி எனக் குப்பை மேட்டுக்குத் தூக்கியெறியப்பட்ட ஈயப் பாத்திரத்தைப் போல அவள் மேனி அடிபட்டுக் கன்னிப்போயிருந்தது.

தேவன் பெருமூச்சு விட்டுக்கொண்டு கல்யாணியை விட்டு அகன்றான். அண்ணனின் வாயசைவை நோக்கிக் கொண்டிருந்தான் ஆதப்பன்.

"ஆதப்பா!"

"தயாராகத்தானிருக்கிறேன்!"

"கூடவந்த நாய் எங்கே?"

"கொல்லைப் பக்கம் போயிருக்கிறது!"

"இழுத்து வா, அதை!"

ஆதப்பன் பொன்னி என்ற அந்த நாயை கயிற் றைப் பிடித்து இழுத்து வந்தான்.

"கல்யாணியைக் கூப்பிடு!"—தேவன் சிலைபேசுவது போல் உடம்பை அசைக்காமல் பேசிக்கொண்டு வந்தான்.

கண்ணீரோடு கல்யாணி அருகில் வந்தாள்.

"ஆதப்பா கல்யாணியின் கழுத்தில் கிடக்கும் தாலியைக் கழற்று!"

"அண்ணு!"—கத்தினுள் கல்யாணி.

"கல்யாணி! எனக்குத் தெரியும் எல்லாம். மூடு வாயை! நீ வாழ்ந்தது போதும்!"

ஆதப்பன் தாலியை அவிழ்த்தான். தேவன் ஜாடை காட்ட, தாலியை நாயின் கழுத்தில் கட்டினுன்.

"ஆதப்பா, கொதித்தெழும் உன் கோபக் கனலை தண்ணீர் ஊற்றி ஊற்றி அணைத்த உன் அண்ணன் கட்டளை இடுகிறேன்.—அந்த நாயின் காதுகளையும், வாலையும் அறுத்துப் பரணையில் தொங்கவிடு! நாயைக் கொல்லாமல் அடித்துத் துரத்து" என்று சொல்லி விட்டு மாடிக்குப் போய்விட்டான் தேவன். அண்ணன் கட்டளை! தம்பி செய்து முடித்தான். கல்யாணியின் அன்புக்குப் பாத்திரமாக விளங்கிய பொன்னி—பட்ட மங்கலத்தில் அவளுக்குப் பக்கத்துணையாக இருந்த பொன்னி—வாலை இழந்து, காதுகளை இழந்து, ரத்தம் சொட்டச் சொட்டப் பாகனேரி நோக்கி ஓடியது.

* * *

செத்த நாய்க்குப் பக்கத்தில் வைரமுத்தன் எவ்வளவு நேரம் உட்கார்ந்திருந்தான் என்று அவனுக்கே தெரியவில்லை. வெளியிலே வந்து பார்த்தான்; ஊரே தூங்கிக்கொண்டிருந்தது.

நாட்டுக் கூட்டம் போடவேண்டும்; கள்ளர்கள் மத்தியில் வாளுக்குவேலியை கைகட்டி நிற்கச் செய்யு

வேண்டுமென்பது வைரமுத்தனின் தணியாத ஆசை. ஆனால், கள்ளர் நாட்டின் விதிமுறை அவனுக்குக் கொஞ்சம் தடங்கலாக இருந்தது. நாட்டுக் கூட்ட மென்பது திருவிழாவுக்குக் காப்புக் கட்டுவதற்குமுன் கூடி, கடந்த கால நிகழ்ச்சிகளை ஆராயும் அதிகாரம் பெற்றதாகும். அவ்வாறு கூடும் நாட்டுக் கூட்டத்தில் தான் எல்லா வழக்குகளும் ஆராயப்பட்டு முடிவு பெறுவதுண்டு. ஆனால், பொன்னி தாலி கட்டி வந்த காலம்—நாட்டுக் கூட்டம் கூட்டவேண்டுமென்று வைர முத்தன் துடித்த காலம்—பட்டமங்கலத்தில் திருவிழா முடிந்த காலம்! அடுத்த கூட்டத்திற்கு வைர முத்தன் ஒரு வருஷ காலம் காத்திருக்க வேண்டியிருந்தது. பொன்னி கழுத்தில் தாலி கண்ட பிறகு பொறுப்பானு முத்தன் ஒரு வருஷத்திற்கு......?

பாகனேரித் தேரோட்டம்!

வைகாசித் திங்களில் திருக்கோஷ்டியூரில் நடை பெற்ற 'கஜேந்திர மோக்ஷம்' திருவிழாவுக்குப்போன வாளுக்குவேலி பதினைந்து நாட்களாகப் பாகனேரி வர வில்லை. ஆதப்பனுக்கு அண்ணன் பேரில் மட்டற்ற மரியாதை உண்டு. ஆகவே அவன் கிழமைக்கு ஒரு தடவை திருக்கோஷ்டியூருக்கு ஆளனுப்பிப் பார்த்து வரச் சொல்லுவதுண்டு. தேவனுக்கும் தன் தம்பி மீது அசையாத நம்பிக்கை.

ஆனிமாதம் நடந்துகொண்டிருந்தது. பாகனேரிப் பில்லாத்தா கோயிலுக்குக் காப்புக் கட்டவேண்டுமே! தேவன் இல்லாமல் நடைபெற முடியாதல்லவா! சுந்தரியிடம் சொல்லிவிட்டு பாகனேரி போய் அதற்கான காரியங்களைச் செய்துவிட்டு மறு வெள்ளிக்

கிழமையே தேவன் திருக்கோஷ்டியூர் திரும்பி விட்டான். தேவன் பக்கமிருந்தால் போதும். சுந்தரி தேவலோகத்தில் இருப்பதாகவே நினைப்பாள். அவள் உப்புக் கடல் ஒளி முத்து அல்லவா! தேவன் துணையிருந்தால் போதுமென்று கருதினளே யன்றி, அவன் வரும் போதெல்லாம் பொன்னும் பொருளும் கொண்டுவந்து கொட்டவேண்டுமென்று விரும்பவில்லை சுந்தரி.

பாகனேரித் தேரோட்டம் நெருங்கிக்கொண்டு வந்தது. திருவிழாவுக்குச் சுந்தரியையும் அழைத்துக் கொண்டு போவதாக இருந்தான் தேவன். கீர்த்தி பெற்ற ஆசைராஜாவின் பிறந்த ஊருக்குப் போகப் போவதை எண்ணி அவள் இன்பத்தில் திளைத்துக் கிடந்தாள்.

தேரோட்டத்திற்கு இரண்டு நாட்கள் தான் இருந்தன. தேவன் பட்டமங்கலத்துப் பகையை மறந்திருந்தான்.

பூ எடுக்கத் தோட்டத்திற்குப் போன சுந்தரி பாதியிலேயே திரும்பி வந்தாள்.

''தோட்டத்தில் பூக்கள் இல்லையா? போனதும் வந்ததுமாக இருக்கிறதே!''

''மல்லிகைப் பாத்தியோடு திரும்பிவிட்டேன் அத்தான். நீங்கள் இப்போதே பாகனேரிக்குப் புறப் படுங்கள்''—என்றுமில்லாமல் சுந்தரி அன்று அப்படி அன்பாகக் கட்டளையிட்டாள்.

தேவனுக்கு என்ன சொல்வது என்று தெரிய வில்லை.

சுந்தரி தேவனருகில் வந்து அவன் காதில் ஏதோ சொன்னாள்.

''உனக்கு யார் சொன்னது சுந்தரி?''

"சிலம்பி சொன்னாள். நேற்று இரவு அவள் வடிவாம்பாள் வீட்டுக்குப் போனாளாம். அங்கே வைர முத்தரும், அவரோடு வேறு சிலரும் இருந்தார்களாம். அவர்களுக்குள் இப்படிப் பேசிக் கொண்டார்களாம்!"

"அப்படியா சேதி! சரி, சுந்தரி வண்டியைப் பூட்டச் சொல்! ஆயுதங்களையும் எடுத்துக்கொடு! நீ திருவிழாவுக்கு வரவேண்டாம்! அடுத்த வருஷம் பார்த்துக் கொள்ளலாம்!" என்று சொல்லிவிட்டு உடனே பாகனேரிக்குப் பயணமானான் தேவன்.

நாளை விடிந்தால் தேரோட்டம். இரவு முழுதும் தேவன் தூங்கவில்லை. பட்டமங்கலத்தார் தேரோட்டத் தன்று கலகம் விளைவிக்கப் போவதாக சுந்தரி சொன்னது தேவன் மனதை உறுத்திக்கொண்டே இருந்தது. கத்தி, கம்பு சகிதமாக ஆட்களைத் திரட்டி வைத்திருந்தான் தேவன்.

விடியப் போகும் நேரத்தில் ஊருக்குள்ளிருந்து தீ! தீ! என்று கூக்குரல் கேட்டது. தேவன் துடித்தெழுந் தான்! "ஆதப்பா கிளம்பு!" என்று கட்டளையிட்டான். புற்றீசல்போல பாகனேரிப் படை கிளம்பியது.

"எங்கே தீ! யார் வீட்டில் தீ!" என்று கூவிக் கொண்டே ஆயுதந் தாங்கியோர் ஊருக்குள் ஓடினார்கள்.

வழியிலே ஒரு கிழவர்—அவர் பெயர் வேலுடையான். "சண்டாளர்கள் தேரில் தீவைத்துவிட்டார்கள்" என்று அழுதுகொண்டே சொன்னார்.

கிளம்பி வந்த படைக்குக் கோபம் வளர்ந்தது. தேர்நிலைக்கு ஓடினார்கள். சிற்பிகளின் கை வண்ணத் தால் செதுக்கப்பட்டிருந்த சிங்காரத்தேர்—நாளைக் காலை நாலு வீதியும் சுற்றிவர இருந்த கலைச் செல்வம்—

சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்தது. தீயை அணைக்க மக்கள் மண்ணை வாரி அடித்தார்கள். எண்ணை பிடித்த சிற்பங்களல்லவா! எப்படி அணையும் தீ!

"பட்டமங்கலத்துப் பிள்ளையார்"

தேர் தீப்பற்றி எரிந்த சேதி பட்டமங்கலத்திற்கு எட்டியது. விரோதம் காரணமாக மாட்டைக் கடத்திக் கொண்டு போவதும், மாட்டுக் கொம்புகளை ஒடித்துக் கொண்டுவந்து எதிரியின் வீட்டு வாசலில் போடுவதும், விளைந்து கிடக்கும் கதிர்களை நாசம் செய்வதும் கள்ளர் சீமையில் மிகச் சாதாரணம். ஆனால், விரோதம் காரணமாக தேருக்கு தீ வைத்ததை கள்ளர் நாடு முதன் முதலாக அப்போதுதான் சந்தித்திருக்கிறது. முதலில் பட்டமங்கலம் திகைத்தது; தேருக்குத் தீ வைத்தது வைரமுத்தன் தான் என்பதை அறிந்தபின் மிரண்டது. வெற்றி வீரர்களானாலும் குற்றக் கூண்டிலே நிற்கும்போது பலவீனமடைந்து விடுகிறார்கள். வைர முத்தன் பாகனேரிக்கே தீ வைத்திருந்தால் கூட அவனைத் தட்டிக் கொடுத்திருப்பார்கள். ஆனால், தேவியின் தேருக்குத் தீ வைத்தான் என்றதும் அனுதாபம் காட்டவேண்டியவர்கள்கூட 'வைரமுத்தன் அக்ரமஞ் செய்தான்' என நொந்து கொண்டார்கள்.

பட்டமங்கலம் திருவிழா நெருங்கிக்கொண்டு வந்தது. பாகனேரிக் கள்ளர்கள் நாட்டுக் கூட்டத்தில் முறையிடக்கூடும் என பட்டமங்கலத்தார் எதிர்பார்த்தார்கள். முறைப்படி திருவிழாவுக்கு முன்கூடும் நாட்டுக் கூட்டத்திற்கு ஏராளமான வழக்குகள் வந்தன. ஆனால், தேருக்குத் தீயிட்ட வழக்கு வரவில்லை. திருவிழாவுக்குக் காப்புக்கட்டு நடைபெற்றது.

நாளை விடிந்தால் திருவிழா. பட்டமங்கலத்துப் பிள்ளையார் கோயில் சிறப்பாக அலங்காரம் செய்யப் பட்டிருந்தது. தெருவெல்லாம் தோரணங்கள் கட்டப் பட்டிருந்தன. மூலைக்கு மூலை வாலிபர்கள் 'சடுகுடு' விளையாடிக் கொண்டிருந்தார்கள். வயதுப் பெண்கள் கூட கண்ணும்பூச்சி பொத்தி விளையாடினர்கள். திரு விழாக் காலங்களில் முறைப்படி ஊதவேண்டிய கொம்பு, இளமையான இருட்டில் அன்று ஏகாந்தக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தது. வளைந்து ஒலித்த அந்தக் கொம்பொலி, வைகை நதியின் கருமணல் நீரோட்டத்தை நினைவுறுத்திக் கொண்டிருந்தது. பெண்கள் சூடியிருந்த பூக்கள் பட்டமங்கலத்தையே கல்யாண வீடாகக் காட்டியது.

வைரமுத்தன் திருக்கோஷ்டியூருக்குப் போகும் சாலையில் தனிமையாக உட்கார்ந்து பொன்னியை நினைத்துப் பொங்கி எழுவதும், பின் சாந்தி பெறுவது மாக இருந்தான். சொக்கநாதபுரம், கருங்குளம், புதூர், கக்காட்டூர் முதலிய சிற்றூர்களிலிருந்து திரு விழாப் பார்க்கப் போய்க் கொண்டிருந்தவர்கள் கண் களில் படாத வகையில் வற்றி வரண்டு போயிருந்த கண்மாயின் உள்வாயிலில் உட்கார்ந்திருந்த வைரமுத் தனுக்கு ஊருக்குள்ளிருந்து ஒரு பெருங் கூச்சல் வருவது போல் கேட்டது. உற்றுக் கவனித்தான். "விடாதே பிடி! பிடி!" என்ற சத்தம் அவனை நோக்கி வருவது போல் பட்டது. இருட்டு! ஒன்றும் புலப்படவில்லை. கண்மாய்க் கரையைவிட்டு எழுந்து திருக்கோஷ்டியூர்ச் சாலைக்கு வந்தான். நாலைந்து பேர் வியர்க்க வியர்க்க ஓடிவந்து கொண்டிருந்தார்கள். முத்தன் அவர்களை நிறுத்தி விசாரித்தான். முத்தனைக் கண்டதும் அவர் களுக்கு ஒரு தெம்பு வந்தது. "கோயிலிலே இருந்த

பிள்ளையாரைக் காணோம்!'' என்றார்கள். முத்தனுக்கு நம்பிக்கையில்லை. நேராகக் கோயிலுக்குச் சென்று பார்வையிட்டான். பிள்ளையார் சிலை, இருந்த இடத்தி லிருந்து பெயர்த்து எடுக்கப்பட்டிருந்தது.

''மனிதனை மனிதன் சிறை வைப்பதுண்டு! மகேஸ் வரனைச் சிறை வைப்பதென்றால்!''—பட்டமங்கலமே மூக்கில் விரல் வைத்தது.

இந்தச் செய்தி பாகனேரிக்கு எட்டியது. கள்ளர் நாட்டில் கோயில் விக்ரகம் காணமற் போனதும் அது தான் முதல் தடவையாதலால் எங்கும் பெருத்த பர பரப்பு ஏற்பட்டுவிட்டது. கல்யாணிக்குக்கூட பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது. மேல் மாடத்திற்குப் போனாள். தேவனும் ஆதப்பனும் அடுத்தடுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். வேல்கம்பு, பிச்சுவா இவை வழக்கம்போல் பக்கத்திலிருந்தன. கல்யாணி தேவனை எழுப்பினாள். தேவன் எழுந்திருக்கவில்லை. பக்கத்தில் படுத்திருந்த ஆதப்பன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான். அவன் முகத்தில் களைப்புத் தட்டியிருந்தது. ஓர வாயின் வழியே வடிந்திருந்த வெற்றிலைக் காவி உலர்ந்து கரைபடிந்திருந்தது.

''அண்ணா! ஒரு தாக்கல் தெரியுமா?''

''என்ன கல்யாணி?''

''பட்டமங்கத்திலே பிள்ளையாரைக் காணோமாம்!''

''வேடிக்கையாக இருக்கிறதே! சாமியை எவனாவது தூக்கிப் போவானா?''

''போயிட்டானே!''

அப்போது கவுதாரி வேகமாக மாடிக்கு வந்தான்.

''என்னடா கவுதாரி, என்ன அவசரமாக வரு கிறாய்?''—கேட்டான் ஆதப்பன்.

"அதிகாலையிலே கோயில் பூசாரி வந்தாருங்க. வந்து, பில்லாத்தா கோயிலுக்கு எதிரே ஒரு பிள்ளை யாரு புதுசா இருக்குதே அது எப்படி வந்ததுன்னு கேட்டாரு. எசமா எந்திருக்கட்டும். கேட்டுச் சொல் றேன்னு சொல்லி அனுப்பிச்சிருக்கேன். அந்தப் புள்ளை யாருக்குக் கீழே 'பட்டமங்கலத்துப் பிள்ளையார்' ருன்னு கரித் துண்டிலே எழுதியிருக்குதாம்ல"—பயமும் பச்சாதாப மும் கலந்த தொனியில் கவுதாரி சொன்னான்.

"சரி போ! அண்ணன் எழுந்திருக்கட்டும்! கல்யாணி, உன்னை அலக்கழித்த பாவம், பட்டமங்கலத் தையே பிடித்துக் கொண்டது பார்த்தாயா?"

"போங்க அண்ணா! எனக்கு என்னமோ பயமாகத் தானிருக்கு! பட்டமங்கலத்தாரைப் பொல்லாதவர் என்பார்கள்!"

"கல்யாணி! கீழே போ! எல்லாம் எங்களுக்குத் தெரியும்!" என்று மிரட்டி அனுப்பிவிட்டான் ஆதப்பன். கல்யாணி மாடிப்படியில் இறங்கிக்கொண் டிருக்கும்போது, மேலே தேவனின் பேச்சுக்குரல் கேட்டது. அவள் நின்று கவனித்தாள்.

"ஆதப்பா நடந்ததைக் கல்யாணியிடம் சொல் லாதே! இளம் மனம்! மேலும், புருஷன்மீது பக்தி கொண்டவள்! பிள்ளையாரை நமது ஆட்கள்தான் தூக்கி வந்தார்கள் என்று தெரிந்தால் அவள் சாப்பிடக்கூட மாட்டாள்." என்று தேவன் படுத்துக்கொண்டே சொன்னது கல்யாணியின் காதில் விழுந்தது. அடுத்த கணம் மாடிப்படியில் 'தடதட' வென்று சத்தம் கேட்டது. ஆதப்பன் எழுந்தோடிவந்தான். கல்யாணி மயக்கமுற்று மாடிப்படியில் உருண்டு, சிறு சிறு காயங் களுடன் தரையில் சுருண்டு கிடந்தாள்,

'பட்டமங்கலத்துப் பிள்ளையார்' இரண்டு கள்ளர் நாடுகளுக்குமிடையே பெருத்த பகையை வளர்த்து விட்டார். 'கொள்வினை—கொடுப்பினை' கள்கூட அறுந்து போகும் அளவுக்கு விரோதம் முற்றிவிட்டது. நாட்டு அம்பலகாரர்களுக் கெல்லாம் செய்தி எட்டியது. உட் பகை பிறந்துவிட்டதே, ஊர் இரண்டு பட்டுவிட்டதே என வருந்தினர்கள் பிறநாட்டார்கள். வாளுக்கு வேலியோ, கருத்த ஆதப்பனோ இதுபற்றித் துளியும் கவலைப்படவில்லை. அவர்களுக்கெல்லாம் சேர்த்து கல்யாணி அழுதாள்! நிம்மதியிழந்தவளாய் நாட் களைக் கழித்தாள். அண்ணன்மார் பெருந்தவறு செய்து விட்டனர் என்று எண்ணி அவள் வேண்டிக்கொள்ளாத தேவதைகள் இல்லை. நெய்விளக்கு, நேரத்திர மலர்கள் எதெதோ வாங்கி வைப்பதாகக் கேட்டுக்கொண்டாள். அத்தான் ஒரு பக்கம்; அண்ணன்மார் ஒரு பக்கம்; சத்தான வாலிபப் பருவம் கருகி உதிர்கிறதே என்ற மனக் கலக்கம் இன்னொரு பக்கம்; கணவன் கண் ணெதிரே கைம்பெண்போல் வாழ்கிருளே என்ற 'தண்ணீர்த் துறை அரசியல்' ஒரு பக்கம்—கல்யாணி புலம்பினுள்! ஏக்கம் நிறைந்து, எழில் கரைந்தது.

*　　　　*　　　　*

ஜாதிக் கட்டுப்பாடு, நாட்டுக் கூட்டம் எதுவும் வாளுக்குவேலி—வைரமுத்தன் தகராறை அடக்கம் முடியவில்லை. வாழ்வா? சாவா? என்று போரிட்டு முடிவு செய்யத் தீர்மானித்தார்கள் இருசாராரும். வெள்ளைப் புறுவைப் பறக்கவிட நினைத்தவர்களெல் லாம் ஒதுங்கிக் கொண்டார்கள் அதிவிரைவில் மிகப் பெரிய ரத்தக் களறி ஒன்று நடைப்பெறப் போகிறது என்று ஒவ்வொருவரும் எண்ணிக்கொண்டே 'நமக்கேன் இந்தப் பொல்லாப்பு' என்று விலகிக்கொண்

டார்கள். விளக்கு வைக்குமுன் கதவைப் பூட்டுவதும், விடிந்து வெயில் வந்த பிறகு கதவைத் திறப்பதுமான நிலை கள்ளர் நாட்டில் கொஞ்ச காலம் அமுலி லிருந்தது. வாளுக்குவேலி, பட்டமங்கலத்துக் குழந்தை களுக்குப் "பூச்சாண்டி"யாகக் கற்பிக்கப்பட்டான். வைர முத்தனே பாகனேரிச் சிறுர்களுக்கு விரோதியாக அறி முகமானுன்.

"குருதி வழிப் பொட்டல்"

படைகள் மோத நாள் குறித்தாகி விட்டது. பாகனேரியில் களம் அமைந்தது. ஒரே பாசறையி லிருந்து வெவ்வேறு திசை நோக்கிப் பாயவேண்டிய கள்ளர்கள், எதிர்முகம் நோக்கிக் கச்சை கட்டினர்கள். அந்நியப் படையை நிர்மூலமாக்க வேண்டிய தென் திசை முன்னேடிகள் ஆர்த்தெழுந்து ஒருவரை ஒருவர் விழுங்குவது போல் களத்தில் குதித்தார்கள். பாகனேரி அழுதது! அது கேட்டுப் பட்டமங்கலம் துக்கித்தது! கள்ளர் தேசமே கண்கலங்கி நின்றது. யார் தோற்றுலும் கள்ளர் தானே தோற்பர் என்றுகூற ஒரு புலவர்கூட அப்போது இல்லை. இனத்தார் ரத்தத் தில் இனத்தார் நீந்துவதா என்று எடுத்துரைக்க எவரும் முன் வரவில்லை. ஒரே உலைக் களத்து வாட்கள் எதிர் நின்று ஊராய்ந்தன. உறவினர் அங்கங்களை உறவினர் பதம் பார்த்தனர். விறகுடைத்துப் போட் டதுபோல் கள்ளர் பிணம் குவிந்தது. வெற்றி என்ற இறுதி நிலைக்கு எப்படையும் வரவில்லை. மானுக்கும் மயிலுக்குமா சண்டை? நரிக்கும் ஓநாய்க்குமா பகை? வேங்கைக்கும் வேங்கைக்குமல்லவா கலகம்! அங்கே வெற்றி என்பது கல்லில் நார் உறிப்பதைக் காட்டிலும் கடினமாகத் தானே இருக்கும்!

போர் தொடர்ந்து நடந்தது. இரவு நேரங்களில் கள்ளர்படை தனித் தனிப் பாசறையில் ஓய்வு பெற்றது. எப்படியும் நாளையப் போர் இறுதிப் போராக இருக்கு மென்று இருசாராரும் நம்பினர். வைரமுத்தன் அந்த நான்காவது நாள் போரைத்தான் முழுதாக நம்பி யிருந்தான்.

நள்ளிரவு! பிண நாற்றம் மூக்கைத் துளைத்தது. சிறு வயல் காட்டிலிருந்த நரிகள் அனைத்தும் பாகனேரி புகுந்து 'குருதி வழிப்பொட்டலில்' குவிந்துகிடந்த பிணங் களைப் புரட்ட ஆரம்பித்தன! அமைதியான அந்த வேளையில் நரிகள் மனித எலும்புகளைக் கடித்து ஒடித்த ஓசை குடு குடுப்பை அடிப்பதுபோலிருந்தது. அந்த நேரத்தில், வளர்ந்த ஒல்லியான உருவம் ஒன்று பட்ட மங்கலப் படையின் பாசறைக்குள் நுழைந்தது. காவலன் தடுத்தான். வடிவாம்பாளின் கணையாழி யைக் காண்பித்து உள்ளே புகுந்தது அந்த உருவம். அரை நாழிகைக் கெல்லாம் அந்த உருவம் மூன்று பேர் பின் தொடர, வந்த வழியே திரும்பியது.

### சிலை மறவன்

மூன்றும் நாள் போர் முடிந்ததும் தேவன் அன் றிரவே திருக்கோஷ்டியூர் போய்விட்டான். உக்கிர மாகப் போர் செய்த அன்று இரவு போகம் செய்தால் தான் மீண்டும் புது வலிவு வரும் என்று நம்பி அதை நடைமுறைக் கொள்கையாகக் கொண்டு வந்த மாவீரன் அலெக்சாண்டரைப் பின்பற்றினுன் வாளுக்கு வேலி. கண்டிப்பும் விதி முறைகளும் நிறைந்திட்ட தமிழர் சமுதாயத்தில் பிறந்தவனுதலால், வாளுக்கு வேலி முறை கெட்ட செயலில் இறங்கப் பயந்தான். குதிரையைத் தட்டிவிட்டான். அந்த வெள்ளைக் குதிரை

மாதவ மாளிகை வந்து நின்றது. அன்றிரவு ஆங்கு தங்கினான். வெள்ளி முளைக்குமுன் எழுந்து போருடை பூண்டான். சுந்தரி நெற்றிக்குத் திலகமிட்டு, உடை வாளைக் கையில் கொடுத்து விடைகொடுத்து அனுப்பினாள்.

"எப்போது வருவீர்களத்தான்" என்று உருக்கமுடன் கேட்டாள்.

"வந்தால் வாகைசூடி வருவேன். செத்தால் களத்தில் வந்து பார்த்துக்கொள்" என்று சொல்லி விட்டுக் கிளம்பினான். சுந்தரியின் கண்களில் கண்ணீர் அரும்பு கட்டி நின்றது.

கீழ்வானம் சிவந்துவிட்டது. புலர்ந்துவிட்டதே பொழுது எனப் புரவியைத் தட்டினான் தேவன். குதிரையின் நாலுகால் சத்தம் இரண்டு கால் சத்தமாயிற்று. மின்மினிகளின் ஒளி மங்காத நேரம். இரவா பகலா என்று சொல்லமுடியாத பொழுதாக இருந்தது அந்த நேரம். பாதை மட்டுப்படவில்லை. எப்படியோ சரி செய்து கொண்டு குதிரையை முன்னிலும் வேகமாகத் தட்டினான். செஞ்சிக்குதிரையோ எனத் தேவன் குதிரை கால் கிளப்பிப் பறந்தது.

திருக்கோஷ்டியூர் மேலத்தெரு அயர்ந்திருந்தது. 'டடக் டடக்' என்ற ஓசையுடன் தேவனின் குதிரை ஊரைக் கடந்து விட்டது. இடிந்த கோயிலின் ஓரத்திலிருந்து கழுதை கதறியது. அதைத் தாண்டியதும் ஆற்றங்கரைப் பிள்ளையார் கோயிலில் மணியொலித்தது. இதையெல்லாம் வாளுக்குவேலி தனக்கு வெற்றி கிடைக்கப்போவதற்கான அறிகுறிகள் எனக் கருதினான்.

அடுத்து ஆறு குறுக்கிட்டது. அதைத்தான் மணி முத்தாறு என்பார்கள். 'கஜேந்திர மோட்சம்'—திரு விழா நடப்பதும் அந்த ஆற்றுக்குள்தான். சாகப் போகிற காலத்திலே இருக்கிற தம்பதிகள்கூட அந்தத் திருவிழாவன்று 'முதல் இரவு'த் தம்பதிகளைப்போலவே இன்பமாக இருப்பார்கள். தேவன் இரண்டு முறை சுந்தரியோடு அந்தத் திருவிழாவுக்கு வந்திருக்கிறான். விடிய விடியக் கேளிக்கைகளில் ஈடுபட்டிருந்திருக் கிறான். வெள்ளி நில வடிக்கும். பட்டு விரிப்பு விரித்து அதில் தேவனும் சுந்தரியும் கதை கதையாகப் பேசு வார்கள். தேவன் வீரக்கதை சொல்லுவான்; அவள் இன்பக்கதை கூறுவாள். சலிப்புத் தட்டும் போது சடுகுடு ஆட்டம் பார்க்கப் போவார்கள். பின், வரு வார்கள். சாப்பிடுவார்கள். எங்காவது ஒரு மூலையில் நாடகம் நடக்கும். சுற்று வட்டாரத்திலுள்ள ஜனங்கள் திரளாகக்கூடி நாடகத்தை ரசிப்பார்கள்.

மாதவி என்றால் மடிமேல் வா
கண்ணகி என்றால் கடந்து செல்

—என்று கோவலன் சொல்லும் கட்டத்தில் ஜனத் திரளே தேம்பி அழும். சுந்தரிகூட சில கட்டங்களில் மெய்மறந்து நின்றிருக்கிறாள். உண்மையில் கிராமத்து ஜனங்களுக்கு திருக்கோஷ்டியூர் கஜேந்திர மோக்ஷம்— திருவிழா சிலப்பதிகாரத்து இந்திரவிழா போலவே தெரியும்.

தேவனின் குதிரை அந்த இடத்தில் போய்க் கொண்டிருந்த போது அவனுக்கு இந்த நினைவுகளெல் லாம் வந்தன. சுந்தரியோடு உட்கார்ந்திருந்த இடம், அவளோடு அருகிலிருந்து சாப்பிட்ட இடம், அவளு டைய இலையிலிருந்து மாம்பழக் கீற்றை அவன் திருடித் தின்ற நினைவு—எல்லாம் அவன் நெஞ்சைக் குடைந்

தன. அதற்குள் குதிரை பைக்குடிப்பட்டிக்குள் போய் விட்டது. சோலைக்குள் மிதக்கும் கப்பலைப் போன்றது அந்தச் சிங்காரச் சிற்றூர். செழிப்பான தமிழ்க் கிராமம் அது. அப்போதுதான் கருகரு வென்று பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. வயதுப் பெண் களெல்லாம் முகம் தெரியுமுன் ஏரிக்கரைக்கு வந்து போய்க்கொண்டிருந்தார்கள். குதிரையின் குளம் பொலி அவர்களுக்கு மிரட்சியைக் கொடுத்தது. பாதையை விட்டு ஒதுங்கிக் கொண்டார்கள்.

தமிழகத்தில், அதிகாலையில் குதிரையின் மணி யோசை கேட்டால், 'அய்யனுர் நகர் வலம் வந்து போகிருர்' என்று தமிழ்த்தாய்மார்கள் பேசிக் கொள் வதுண்டு. தேவனின் குதிரைச் சத்தம் கேட்டதும் பைக் குடிப்பட்டிப் பாவையர்கூட அப்படித்தான் எண்ணி யிருப்பார்கள். இல்லாவிட்டால் பவ்யமாகவும் பக்தி சிரத்தையோடும் பாதையை விட்டு விலகி நிற்பார் களா?

தேவனின் குதிரை 'ஜல் ஜல்' என்று போய்க் கொண்டிருந்தது. குதிரையின் கண்கள் சிவந்து விட்டன. வாயில் வெண்நுரை தள்ளியது. கடிவாளத் தைப் பிடித்திருந்த தேவனின் கரங்கள் பவளம் போலாகிவிட்டன.

அடுத்து கத்தப்பட்டு என்று ஒரு குக்கிராமம். அந்தச் சிற்றூரைத் தாண்டியதும், எதிர்பாராதவகை யில் தேவனின் குதிரை ஒரு படுகுழியில் விழுந்து விட்டது. கிணறுபோல் ஆழமாகத் தோண்டி அதில் பஞ்சை நிறப்பி வைத்திருந்ததை இளங்காலை நேரத்தில் தேவன் எப்படி அறிவான்! படுகுழியில், பஞ்சுக்குள் புதையுண்ட தேவனுல் எழுந்திருக்க முடியவில்லை,

வளவு ஆழத்தில் கிடக்கிறோம் என்றுகூட அவனால் கணக்கிட்டுப் பார்க்க இயலவில்லை. மூக்குத் துவாரங்களெல்லாம் பஞ்சடைத்து, மூச்சு விடமுடியாமல் தான் வளர்த்த வெள்ளைக் குதிரையோடு அந்தக் குழிக்குள்ளேயே கண்களை மூடினான். அந்த வீர மறவன் சாகும் போது மேலே நின்று நாலைந்து பேர் சிரித்தது—கக்கை போட்டுச் சிரித்தது—'வெற்றி பட்டமங்கலத்திற்கே' என்று 'ஜே' போட்டுச் சிரித்தது அவன் காதில் விழுந்தது. "கோழைக்கு வெற்றி! அது இந்த நூற்றாண்டோடு போகட்டும்! சதிக்குப் பெருமை! அது வைர முத்தன் காலத்தோடு மக்கிப் போகட்டும்! கல்யாணி பட்டமங்கல நாட்டு உறவுக்குக் கடைசிப் பெண்! அவள் ஜாதி ரோஜா! வயற் காட்டில்—வளர்ந்திருக்கும் மலை முகட்டில், காலை, மாலை எந்நேரமும் வாள் கோட்டை நாட்டின் கீர்த்தி சொல்லிக் கைம் பெண்ணாகவே வாழ்ந்து சாகட்டும் அவள்! உறவு முறிந்தது!" என்று கத்திக்கொண்டே நாட்டை மறந்தான் வாளுக்குவேலி.

செய்தி பரவியது. பாகனேரி சாவு வீடாகியது. பெண்டிர், பிள்ளைகள், சாகக்கிடந்த குடுகுடு கிழவிகள், கண்ணொளி இழந்த வெண்மயிர் பாட்டர்கள் அத்தனை பேரும் தலைவனை விழுங்கிய சதிக்கிடங்கு நோக்கி விரைந்தனர். ஆயுதந் தாங்கிய அடலேறுக் கோலத்தில் ஆழ்குழியில் கிடந்த அஞ்சா நெஞ்சனை வெளியில் கொண்டு வந்தார்கள். சுந்தரி வைத்த திலகம் காயவில்லை. அவள் சீவி முத்துவிட்ட முடி அவிழவில்லை. கூட்டுக்குள் இருந்த வாள் கூட்டுக்குள் இருந்தபடி, இடுப்பில் சொருகிய கத்தி இடுப்பில் இருந்தபடி இராவணனோ இரணியனோ என உருவம் பெற்ற வாளுக்கு

வேலி பிணமாகக் காட்சி தந்தான், அவனுடைய கள்ளர் பெரும் படைக்கு!

தம்பி ஆதப்பன் அண்ணன் மீது புரண்டு புரண்டு அழுதான்; புலியடித்த கதைகளையும் அண்ணன் புகழ் சேர்த்த கதைகளையும் பாட்டாகச் சொல்லிச் சொல்லிப் புலம்பினான்.

'கணவனைத் துறந்த கட்டுக்கழுத்தி!' —கனசமத்துக்காரி கல்யாணி வடித்த கண்ணீர், கத்தப்பட்டு மணலை உப்பாக்கி உலர்த்தியது.

மடிந்த மறவன் மடிந்த இடத்திலேயே சிலைவடிவு பெற்றான். இன்றும் காணப்படும் அந்தச் சிலை, மறவனின் புகழ்பாடி நிற்கிறது. ஆண்டுக்கொருமுறை வாள் கோட்டை நாட்டார் அந்த ஆணழகன் சிலையை அலங்கரித்துப் பூரிக்கிறார்கள். வீர மரணம் எய்திய வேங்கை மாரபனை ஒரு கணம் நெஞ்சுக்குக் கொண்டு வந்து ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்கள். 'வாளுக்குவேலி எங்கள் வாரிசு! வாழப் பிறந்தும், குலத்திற்கு இழுக்குக் கூடாது என்பதிற்காக வாழாது மடிந்த புனிதவதி கல்யாணி எங்கள் வாரிசு'' என்று சொல்லிக் கொள் வதிலே பாகனேரி நாடு இன்றும் பெருமை பெறுகிறது.

நானூறு ஆண்டுகளுக்கு முன்பு உருவெடுத்த பகை இன்றுதான், 'உறவுமில்லை! பகையுமில்லை' என்ற நிலைக்கு மாறியிருக்கிறது. காலம், இரு கள்ளர் நாட்டையும் ஒன்றுபடுத்தி கல்யாணிகளைக் கொடுத்தும், கல்யாணிகளை எடுத்தும் புத்துறவு நிலவச் செய்யும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

வாழ்க கள்ளர் வீரம்!



இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள திருக்கோஷ்டியூரைச் சேர்ந்த தென்னரசு அவர்கள் கடந்த இருபது ஆண்டுகளாகத் தொடர்ந்து இலக்கியப் பணி புரிந்து வருபவர்.

நடைபெற்ற சம்பவங்களை வைத்துக்கொண்டு, கதை எழுதி வெற்றிபெற்ற இவர், இன்றைய அரசியலில் ஒரு தனி மதிப்புப் பெற்றுள்ளார்.

மக்களுக்குத் தொண்டாற்றுவதில் பேரார்வம் கொண்டு உழைத்து வரும் தென்னரசு அவர்களிடமிருந்து எழுத்துலகம் இன்னும் பல படைப்புகளை எதிர்பார்க்கிறது.